Sangathamil

# சங்கத்தமிழ்

குரல் – 73 | சர்வதேச மின் செய்தித்தாள் | மே 15 2024




**தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்**




























விளம்பரத் தொடர்புக்கு அழையுங்கள்: 437.345.4203

Sangathamil
சங்கத்தமிழ்
யாதும் ஊரே யாவரும் கேளிர்
சர்வதேச மின் செய்தித்தாள்

www.sangathamil.ca



## தேசிய தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களின் சிந்தனையிலிருந்து

**புயலாகச் சீண்டும் எதிரியின் அடக்குமுறை அழுத்தங்களை எல்லாம் மலையாகத் தாங்கி நிற்கும் எமது மக்களை நான் பாராட்டுகிறேன்.**






## சங்கத்தமிழ்

**தொடர்புகளுக்கு**

**தொலைபேசி**

**437 345 4203**

**மின்னஞ்சல்** (Email)

**sangathamilcanada@gmail.com**

**இணையத்தளம்** (Website)

**www.sangathamil.ca**

அனைத்து உரிமைகளும் சங்கத்தமிழ் வெளியீட்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த வெளியீட்டில் துல்லியமான தகவல்களை வழங்க ஒவ்வொரு முயற்சியும் செய்யப்படுகிறது. எந்தவொரு குறைபாடுகளுக்கும் பிழைகளுக்கும் சங்கத்தமிழ் வெளியீடுக்கும் பொறுப்பல்ல. விளம்பரங்களுக்கும் மற்றும் கட்டுரையின் உள்ளடக்கங்களுக்கும், விளம்பராதார் அல்லது எழுத்தாளர்கள் பொறுப்பாவார்கள்.

All the rights reserved to Shangathamil. Every effort is made to provide accurate information in this publication. Shangathamil is not responsible for any omission or errors. Advertiser or writers shall be responsible for the contents of the advertisements and articles.




# பிரிகேடியர் சொர்ணம்

காலப் பதிவுகள்



தமிழீழ விடுதலைப்புலிகளின் முதன்மைத் தளபதிகளில் ஒருவராக விளங்கிய யோசப் அன்ரனிதாஸ் என்று அழைக்கப்படும் பிரிகேடியர் சொர்ணம் அவர்கள், 15.05.2009 அன்று முள்ளிவாய்கால் பகுதியில் சிறீலங்காப் படையினருடனான மோதலின் போது வீரச்சாவடைந்துள்ளார்.

தமீழீழ விடுதலைப்புலிகளின் தொடக்ககால போராளியாக 1983 ஆண்டு தன்னை விடுதலைப்புலிகள் அமைப்பில் இணைத்துக் கொண்ட சொர்ணம் அவர்கள், இந்தியாவின் மூன்றாவது பயிற்சி பாசறையில் பயிற்சிபெற்று தமிழீழ தேசியத்தலைவர் அவர்களின் பக்கத்துணையாக நின்று செயற்பட்டார்,

இவ்வாறு தாயகத்தில் இந்திய படையினருடனான மோதல்களின் போது எதிரிக்கு பாரிய இழப்பினை கொடுத்த விடுதலை வீரனாக செயற்பட்ட செர்ணம் அவர்களை தமிழீழ தேசியத் தலைவர் அவர்களின் பாதுகாப்பு பணிகளில் ஈடுபட்டு தமிழீழ விடுதலைப்புலிகளின் படைத்துறையின் வளர்ச்சியில் அடுத்த நிலையாக படைக்கட்டுமானங்களை உருவாக்கும் செயற்பாடுகளில் முனைப்புடன் ஈடுபட்டார்.

இந்நிலையில் களத்தில் களமுனை போராளிகளை வழிநடத்தி போர் வியூகங்களை அமைப்பதில் தமிழீழ தேசியத்தலைவர் அவர்களுக்கு பக்கத்துணையாக நின்று திட்டங்களை தீட்டினார். இவ்வாறு விடுதலைப்புலிகளின் பெயர்சூட்டப்பட்ட வெற்றித்தாக்குதல்களில் எல்லாம் சொர்ணம் அவர்களின் திட்டமிடலும் கட்டளைகளும் வழிநடத்தல்களுடாகவே வெற்றிகளை பெற்றர்கள்.

இவ்வாறு விடுதலைப்புலிகளின் வளர்ச்சிக்கு ஏற்றால்போல் படை அணிகளின் பொறுப்பாளராக செயற்பட்ட சொர்ணம் அவர்கள் ஓயாத அலைகள் தாக்குதல்களின் கட்டளைத் தளபதியாக செயற்பட்டார். தமிழீழ விடுதலைப்புலிகளின் படைத்துறையின் ஆய்வாளராக செயற்பட்ட சொர்ணம் அவர்கள் பின்னர் திருகோணமலை மாவட்ட தளபதியாக செயற்பட்டார்.

பின்பு வன்னியில் மணலாற்றுப்பகுதி கட்டளைத் தளபதியா பொறுப்பேற்று திறம்பட செயற்பட்டு எதிரிக்கு பாரிய இழப்புக்களை ஏற்படுத்தினார். இவ்வாற விடுதலைப்புலிகளின் வலிந்த தாக்குதல்கள், எதிர்சமர்கள் அனைத்திலும் சொர்ணம் அவர்களின் கட்டளைகள் செயற்பட்டுக்கொண்டிருக்கும், இன் நிலையில்தான் சிறீலங்காப்படையின் இறுதிக்கட்ட போர் நடவடிக்கையில் விழுப்புண்ணினை தாங்கியவாறு கள முனைப் போராளிகளுக்கு கட்டளைகளை வழங்கிய சொர்ணம் அவர்கள்



## மூத்ததளபதி சொர்ணம்

திருகோணமலை எப்பொழுதும் அலை எழுந்து ஆர்ப்பரிக்கும் ஒரு அழகிய நகரம். தமிழினத்தின் தலை நகரம் என்னும் சிறப்பை பெற்று நிமிர்ந்து நிற்கிறது. இந்தத் தலை நகரந்தான் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு ஈடிணையற்ற போராளிகளை உவந்தளித்தது.

மானிப்பாயில் பிறந்த பொழுதும் திருமலை அரசடி வாழைத் தோட்டம் என்னும் ஊர்தான் இவரை சிறு பராயத்தில் இருந்து மாபெரும் வீரனாக வீரத்தை ஊட்டி வளர்த்த மண். தந்தை ஜோசப்புக்கும் தாய் திரேசம்மா (பரிபூரணம்) அவர்களுக்கும் மகனாக பிறந்தவன் தான் பிரிகேடியர் சொர்ணம். இவனது இயற்பெயர் அன்ரனிதாஸ். இவன் இளைமைக் காலத்திலேயே குறும்புத்தனம் மிக்கவனாகவும் உயர்ந்த கம்பீரமிக்க தோற்றமுடைய ஆற்றல் மிக்க சிறுவனாக வளர்ந்து வந்தான்.

பாடசாலையிலும் திறமையுடன் படித்து உயர் தரம் வரை சென்றான். உடற் பயிச்சியிலும், தற்காப்புக் கலையிலும் சிறப்புறச் செயற்பட்டு சிறந்த மாணவனாக திகழ்ந்தான். மாணவப் பருவத்தில் பொதுப் பணிகள், வேலைகள் என்றால் இவன் தான் முன்னிப்பான்.

இக்கால கட்டத்தில்தான் தமிழர்கள் வாழ்ந்த மண்ணை சிங்களவர் சிங்கள பூமியாக்க மும்முரமாக ஈடுபட்டிருந்த வேளையில் தமிழர்களுக்கு எங்கும் எதிலும் அநீதி, படுகொலைகள், கற்பழிப்புக்கள் இதைக் கண்டு சிறுவயதிலே கொதித்தெழுந்தான்.

திருகோணமலை புனித சூசையப்பர் கல்லூரியில் உயர்தரம் பயின்றுகொண்டிருந்த வேளையில் சிங்கள இராணுவத்தினரும் இனவாதிகளினதும் கொடூரங்களைக் கண்டு இவ் அநீதியை தட்டிக்க கேட்க வேண்டும் என்றால் போராடித்தான் ஆகா வேண்டும் என்று தன்னை போராட்டத்தில் இணைத்துக் கொள்ள விரும்பினான் அக்காலகட்டத்தில் பல்வேறு இயக்கங்கள் பல்வேறு வழிகளில் போராடிக் கொண்டிருந்தன. அதில் சரியான பாதையை தேர்தெடுப்பது என்பது அக்கால கட்டத்தில் மிகவும் சிக்கலான விடயம்.

ஆனால் தனது இலட்சிய போராட்டத்திற்கு சரியானது விடுதலைப் புலிகள் இயக்கம் தான் என்று 12.09.1983ல் தன்னை விடுதலைப் போராட்டத்தில் இணைத்துக் கொள்கிறான். எமது தேசியத் தலைவரின் செயற்பாட்டிற்கு ஊடாகச் சரியானதோர் முடிவெடுத்து எமது போராட்டத்தின் அத்திவாரக்கற்களாக திகழ்ந்த மூத்த தளபதிகளில் இவனும் ஒருவனாக நின்று போராட்டத்தை வளர்த்தெடுத்தான்.

சொர்ணம் என்ற பெயருடன் சமர்ப்புலி வளரத் தொடங்கியது. பயிற்சிக்காலங்களில் திறம்படச் செயற்பட்ட இவன் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, திருகோணமலை, மட்டக்களப்பு, மணலாறு மாவட்டங்களிலும் அதன் காடுகளிலும் எதிரியை திணறடித்தவன் இவ் மாவட்டங்களில் பெரும் காடுகளுக் கூடாக நீண்ட நடை பயணத்தை சோர்வின்றி மேற்கொண்டு போராட்ட பணிகளை திறம்படச் செயற்படுத்தினான். வேவு அணி, பதுங்கித்தாக்கும் அணி, விநியோக அணி, வழிகாட்டிகள் என காட்டிற்குள் பல அணிகளை உருவாக்கி கிழக்கு மாகாணத்தில் எதிரியின் தடைகளை எல்லாம் சவாலாக ஏற்று எதிர்த்து நின்று போராடி சாதனைகள் படைத்தவன்.

இவனது போரிடும் ஆற்றலையும் முடிவெடுக்கும் தன்மையையும் தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் இனங்கண்டு இதற்கமைவாக தலைவர் அவர்களால் கொடுக்கப்படும் கட்டளைகளுக்கு செயல்வடிவம் கொடுத்துக்காட்டிய கட்டளைத் தளபதியாகத் திகழ்ந்தான். “சொர்ணம் கதைக்கிறான் என்றாலே சிங்கள இராணுவத்திற்கு கதிகலங்கும்” அந்த அளவுக்கு தனது போரிடும் ஆற்றலை வளர்த்துக்கொண்டவன்.

இவ்வாறு இவன் வெற்றிவாகை சூடிய சமர்க்களங்களே அதிகம் ஆகாயக் கடல் வெளிச்சமர், மாங்குளம், தவளைப் பாய்ச்சல், மண்டைதீவு, மண்கிண்டி மலை, இதய பூமி, புலிப் பாய்ச்சல், சூரியக் கதிர், ஓயாத அலைகள் எனப் பல வெற்றிச் சமர்களை எல்லாம் வழிநடத்திய சமரக்களத் தளபதிகளில் இவனும் ஒருவனாகத் திகழ்ந்தான். இவன் படை ஒழுங்கு படுத்தும் சிறப்பை “புலிப்பாய்ச்சல்” நடவடிக்கையில் கண்டு வியப்படைந்தோம்.

ஜெயசிக்குறு படையினர் மீது திட்டமிட்ட தாக்குதல் மேற்கொள்ள பலமுறை தேசியத் தலைவரிடம் அனுமதி கேட்ட போதும் கிடைக்கவில்லை. ஜெயசிக்குறு படை ஒட்டிசுட்டான் வரை முன்னேறி நிலைகொண்டிருந்த வேளையில் தேசியத் தலைவர் அவர்களால் ஒட்டிசுட்டான், நெடுங்கேணி, கருப்பட்ட முறிப்பு போன்ற படைத்தளங்கள் மீது திட்ட மிட்ட தாக்குதல் மேற்கொள்வதற்கு தளபதி சொர்ணத்திற்கும், தளபதி ஜெயம் அவர்களுக்கும் அனுமதி வழங்கப்படுகின்றது. பல வருடங்களாக ஆமை வேகத்தில் நகர்ந்து வந்த ஜெசிக்குறு இராணுவ நடவடிக்கையை மூன்று நாட்களில் பழைய நிலைக்கு வீரட்டியடித்த பெருமை இந்த வீரத்தளபதி பிரிகேடியர் சொர்ணத்தையும் சாரும்.



இம்ரான் பாண்டியன் படையணியின் முதல் தளபதியாக விளங்கிய இவன் தலைவரை பாதுகாக்கும் பணியையும் பொறுப்பேற்றான். திறம்படச் செய்த வீரத்தளபதியுடன் தலைவர் அவர்களால் வளர்த்தெடுக்கப்பட்ட சிலர் துரோகம் இழைத்த போது தலைவருக்கு அருகில் நின்று துரோகத்தை துடைத்தெறிந்தவன். தலைவர் அவர்களின் நம்பிக்கைக் குரியவர்களில் இவனும் ஒருவன்.

இக்காலகட்டத்தில்தான் திருமணம் செய்யுமாறு தலைவர் அவர்கள் கேட்டுக்கொண்டார். அதன் படி ஜெனனி என்ற போராளியைத் திருமணம் செய்து 3 பிள்ளைகளை பெற்றெடுத்தார். தனது திருமணத்திற்கு தலைவர் அவர்கள் வருவார் என்பதால் தனது இடுப்பு வேட்டிக்குள் கைத்துப்பாக்கியை வைத்திருந்தபடி தாலி கட்டினான். அந்தளவுக்கு தலைவர் அவர்களின் பாதுகாப்பில் என்நேரமும் விழிப்பாக இருந்து தலைவர் அவர்களை ஆழமாக நேசித்தவர். எமது விடுதலைப் போராட்ட விழுமியங்களில் இருந்து என்றுமே அவர் தவறியதில்லை. எமது விடுதலை மரபையே வாழ்வாகக் கொண்டு வாழ்ந்து காட்டியவன். அதே போல் தனது போராளிகளையும் வளர்த்தெடுத்தான்.

"நான் சொர்ணமண்ணையோட நின்ற நான் என்றால்" வேறு எந்தத் தளபதிகளும் எந்தக் கேள்விகளும் இன்றி அவனுக்கு கடமை வழங்குவார்கள். அந்தளவுக்குப் போராளிகளை புடம் போட்டு வளர்த்த ஆற்றல் மிக்க தளபதியாவான். இயக்கத்தில் இக்கட்டான காலங்களில் எல்லாம் திறம்படச் செயற்பட்டு தடைகளை உடைத்தெறிந்த தளபதிகளில் இவனும் ஒருவன்.

இந்த வீரத்தளபதி கேப்பாபுலவிலும், தேவிபுரத்திலும் ஊடறுப்பு தாக்குதல்களை வழிநடத்தி நூற்றுக்கணக்கான இராணுவத்தை கொன்று சிங்கள படையை திணறடித்தான். தேவிபுர ஊடறுப்பு தாக்குதலில் விழுப்புண் அடைந்து தனது கால் இயலாத நிலையிலும் முப்படைகளையும் பொறுப்பெடுத்து இறுதி மூச்சு உள்ளவரை எதிரியோடு சண்டைபிடித்துக் காட்டிய வீரத்தளபதி. இவன் தமிழீழ விடியலுக்காகவும் தமிழ் மக்களின் சுபீட்சமான வாழ்விற்காகவும் 26 வருடங்கள் அயராது உழைத்த எமது கட்டளைத் தளபதி.

இவனது மூர்க்கமான சமரைக் கண்டு இராணுவம் கதிகலங்கியது. அதன் எதிர் தாக்குதலாக இராணுவம் பெருந்தொகையில் தமிழ் மக்களை கொன்றுகுவித்தது. மக்களுக்காகப் போரிடும் போது மக்களே இறக்கின்றார் என்ற போது இவனால் எதுவும் செய்ய முடியவில்லை.

எமது மண்ணினதும் மக்களினதும் விடிவிற்கான போராட்டத்தை நேசித்த இவனால் போராட்டத்தைக் கைவிட்டு சரணடைய முடியவில்லை. எனவே போராட்ட மரபுக்கேற்ப தனது இலட்சிய உறுதிப்பாட்டுடன் தன்னை தமிழீழ விடியலுக்காக 15. 05. 2009ம் நாள் தன்னை விதையாக்குகிறான்.

நன்றி: விதுரன்



## பிரிகேடியர் சொர்ணம் சொர்ணம் வாழ்வு



### ஓர் வரலாறு

தமிழீழத் தலைநகர் திருகோணமலை தந்த எங்கள் தானைத் தளபதி. தமிழ்த் தாயின் தமிழ்ப் பாலைப் பருகியவன். தமிழர்கள் உயிர்களுக்காக உள்ளம் துடித்தவன். தாய்மண்ணின் விடுதலைக் காற்றை மட்டுமே சுவாசிக்க நேசித்தவன். தமிழர்கள் படும் வதைகளில் விதையாகி வெடித்து வெளிவந்த வேங்கை. எங்கள் விலங்குகளைச் சிதறடிக்க விடுதலைப் புலியாகியவன். எங்கள் அன்னை பூமிக்காக அனைத்தையும் துறந்தவன். நெஞ்சில் விடுதலையெனும் நெருப்பேந்தியவன். அவன் வாழ்வில் அவன் உதடுகள் அண்ணன் என்ற சொல்லைத்தான் அதிகமாக உச்சரித்தது. தலைவனைத் தன் கண்ணுள் வைத்ததால் அவன் தலைவனின் கண்ணாகியவன். தானைத் தலைவனின் எண்ணக் கருவுக்கு உருவமைத்தவன்.

அவன்தான் புலிகளின் மூத்த தளபதி புகழ் பூத்த தளபதி சொர்ணம்.

தம்பியை வீட்டில் செல்லமாக அழைக்கும் பெயர்தான் தயாளன். தந்தை யோசப் தாய் திரேசம்மா (பரிபூரணம்) என்ன தவம் செய்தனரோ? ஒரு உலகம் போற்றும் மாவீரனை மகனாகப் பெற. தாய் திரேசம்மாவின் மடி அது ஓர் புலியுறங்கிய குகை.

திருகோணமலை அது எப்பொழுதும் அலையெழுந்து ஆர்ப்பரிக்கும் ஓர் அழகிய நகரம். எங்கள் தமிழீழத்தின் தலைநகர் எனும் சிறப்பைப் பெற்றது. அந்தத் தலைநகர் தன் பங்கிற்காக தானைத் தளபதியைத் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு உவந்தளித்தது. திருகோணமலை அரசடி அது அன்று திருமலை வாழ் சிங்களவரின் வயிற்றில் புளியைக் கரைக்குமிடம். சிங்களவரைப் பயத்தில் சிறுநீர் போகவைக்குமிடம். திருமலை அரசடி வாழைத்தோட்டம் அதுதான் தயாளனைப் பச்சிளம் குழந்தையாக பாலருந்தும் பாலகனாக பள்ளிச் சிறுவனாக பாடசாலை மாணவனாக தன் மடியில் சுமந்த மண். மலையென எழும் கடலலைகளை அன்றாடம் எதிர்த்து வாழ்ந்த குடும்பத்தில் பிறந்ததால் அலையையும் புயலையும் எதிர்த்து வளர்ந்தது அவர் வீரம்.

சிறுவயதிலேயே அவன் குறும்புகளுக்குக் குறைவில்லை. அது மட்டுமன்றி உடற்பயிற்சியிலும் தற்காப்புக் கலைகளிலும் சிறப்புப் பயிற்சிகள் பெற்றவர். அவர் நண்பர்கள் கூட்டத்தில் என்றும் அவர் தலை உயர்ந்து நிற்கும் கலகங்கள் வந்துவிட்டாலோ அவர் கரம் ஓங்கிநிற்கும்.

திருகோணமலை மாவட்டம் அன்று 80வீதம் தமிழ் மக்கள் வாழ்ந்த மண. அதைச் சிங்கள பூமியாக்க சிங்களவர் மும்மரமாகச் செயற்பட்டகாலம். தயாளன் சிறுவயதிலேயே துவேசம் கொண்ட சிங்களவர் முப்படைகள் பொலிசாலும் தமிழ் மக்கள் படும் வேதனைகளையும் கொடுமைகளையும் கொலைகளையும் கண்டு கொதித்தெழும்பியவன். இதனால் வெறிகொண்ட சிங்களத்தின் கண்கள் தயாளனைக் குறிவைக்கத் தொடங்கியது.

உண்மையாகவே எங்கள் தமிழ் மண்ணை எங்கள் தமிழீழ எல்லைகளைக் காக்கவேண்டுமென்றால் அது எங்கள் தலைவனால் அமைக்கப்பட்ட புலிகள் அமைப்பில்தான் இணையவேண்டும் என்பதை தம்பி தயாளன் தூரநோக்கோடு நன்கு அறிந்துகொண்டார். அவர் தன் விடுதலை வேட்கையை வீச்சாக்க திருகோணமலை அர்ச் சூசையப்பர் கல்லூரியில் பயின்ற உயர்தரக் கல்வியை இடைநிறுத்திக்கொண்டு 12.09.1983ல் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் இணைந்து கொண்டார்.

தானைத் தலைவனின் வழிநடத்தலில் புடம்போட்ட தங்கமாகப் புதுப் பொலிவு பெற்று புதுப் புலியாகி எங்கள் தேசத்தின் எல்லைகளுக்கு தன்னுயிரை வேலியாக்கினான். அவன் கரங்களில் சுமந்த கருவிகள் பகைவனின் பகைமுறித்தது. அவன் மனங்களில் தோன்றிய போராற்றல் பகைவனின் சதிமுறித்தது. தலைவன் கூறும் தத்துவங்களை எல்லாம் களத்திலே காரியமாக்கிக் காட்டிய கட்டளைத் தளபதி. கயமைத் தனங்களைக் கட்டவிழ்த்துவிட்ட சிங்கள இராணுவத்திற்கோர் சிம்மசொற்பனம்.

களத்திலே இவன் இறங்கிவிட்டால் இவன் கைகளில் வீரம் விளையாடும். புடைத்து நிற்கும் இவன் தோள்களிலே வெற்றிகள் புன்னகை பூக்கும். இவன் வெறுங்கையோடு வீதியில் வந்தாலும் எதிர்கொள்ளும் எதிரிகள் தலைதெறிக்க விழுந்தடித்து ஓடுவர். இவன் தலைவன் காட்டிய நெறியில் தவறியதில்லை இவன் வைத்த குறியும் தப்பியதில்லை.

அழகிய புன்முறவலும் அடங்காத புரட்சியுணர்வும் கொண்டவன் . பட்டத்து யானைபோன்று நெடிய கம்பீரத் தோற்றம். புதுயுகத்தின் அத்தியாயத்தை எழுதத் துடித்துநின்ற தானைத் தளபதி.

தமிழனின் விடிவிற்காய் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆக்ரோசமான போர் வியூகங்களைக் கண்டு அகமகிழ்ந்த அன்னைத் தமிழும் அரியணை ஏற ஆயத்தமானாள். ஆனாலும் உலகத்தின் துரோகக் கரம் ஒன்று பின்னால் தொடர்ந்ததை யாரறிவார்? இருபதற்கும் மேற்பட்ட உலகில் சக்திவாய்ந்த நாடுகள் முண்டுகொடுக்க இனவெறிகொண்ட சிங்களம் கூன் நிமிர்ந்து எமது சொந்தங்களை வெறித்தனமாய் வேட்டையாடி எங்கள் தேசத்தைச் சுடுகாடாக்கியது.

அன்று உன்னதமான தமிழீழத் தலைமைத் தளபதி வீழ்ந்துவிட்டான். ஆம் வீழ்ந்துவிட்டான். ஆளரவமற்ற இருட்புலத்திலே புதைக்கப்பட்டான். அவனுக்காக யாரும் கண்ணீர் சிந்தினார்களா?




தெரியவில்லை. யாரோ அவனைக் கல்லறைக்கு எடுத்துச் சென்றனரே. அவனின் புகழ்வாய்ந்த பெயர் கூறிட அங்கே சிலுவையோ சமாதியோ மண்டபமோ ஏது மில்லையே. அங்கு தலை சாய்ந்திருந்த புல்லிதழ்கள் அவனின் மரணத்தை அறிந்திருக்கும். முள்ளிவாய்க்கால் கரையை மோதிச் சீறியடிக்கும் அலைகளே அவன் மரணத்திற்குச் சாட்சி.

வல்லமை வாய்ந்த அவ் அலைகளால் கூட தொலை தூரத்திற்கு அந்தச் செய்தியை எம்மிடம் கொண்டுவர முடியாமற் போய்விட்டதே. இன்று ஆண்டுகள் ஆனபின்பும் நீ இறுமாப்போடு எழுந்து வருவாயென்று நான் எதிர்பார்த்தேனே. என் கனவுகள் பொடியானதே.

புறநானூற்றின் வீரத்தை புதிதாகப் பிறப்பித்த மாவீரன் விடுதலை தேடி வேகத்தோடு உயர்ந்து வீசியடித்த பேரலை இருபத்தாறு வருடங்களாக ஓயாது சுழன்றடித்த சூறாவளி ஓய்ந்து போனது. மரணித்துவிட்ட எங்கள் விடியலே பலவீனமான எம்

www.sangathamil.ca

இனத்தின் பலமான உயிராயுதமே எமது திமிரின் அடையாளமே எங்கள் இனத்தின் இன்றைய இன்னல் தீர்க்க இன்னொருமுறை எழுந்துவர மாட் டாயோ?

★★★

சொர்ணம் என்ற பேராற்றல் மிகுந்த அந்த வீரத் தளபதியைப் பற்றி ஓர் புத்தகமே எழுதும் அளவுக்கு அவர் தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்தில் தன் பங்களிப்பைச் செய்துள்ளார்... என்பதுதான் உண்மை! தலைவர் அவர்கள் ஒருபோதும் தலைக் கவசமோ, நெஞ்சுக்கு கவசமோ போராட்ட வேளையில் அணிந்ததில்லை. ஆனால் தலைவரின் கவசமே சொர்ணம் தான் என்பதை எதிரியும் நன்கு உணர்ந்திருந்தான்.

களத்தில் சொர்ணம் ஓர் தாக்குதலுக்கு தலைமை தாங்கிவிட்டா அந்த தாக்குதல் நிச்சயம் வெற்றி பெறும் என்பதை அந்தக் களத்தில் அவருக்கு கீழ் போராடிய போராளிகள் உணர்ந்திருந்த காரணத்தால் "முன்னேறு" என்னும் தளபதியின் புலிக் கர்ச்சனையைக் கேட்டதுமே... வில்லில் இருந்து விடுபட்ட அம்பு போல் போராளிகள் முன்னேறி எதிரிகளின் நிலைகளைத் தாக்குவார்கள். பூனகேரித் 'தவளை' நடவடிக்கையின்போது பங்குபற்றிய ஓர் இளம் போராளி சிலகாலம் என்னுடன் நின்றவர் தவளை நடவடிக்கையின் போது அவரையும் அனுப்பும்படி எனக்கு வேண்டுகோள் வந்ததும் அந்தப் போராளி மகிழ்வுடன் துள்ளிக் குதித்தான்... இதுதான் புலிகள் அமைப்பின் சிறப்புக் குணம்!

எமது போராளிகளுக்கு தாக்குதல் நடவடிக்கையில் பங்கு பற்றுவது என்றால் கரும்பு தின்னுவது போன்றது! 1993 இல்... பூநகரி தாக்குதல் (தவளை பாய்ச்சல் )நடந்தபோது அதில் பங்கு பற்ற எமது போராளிகள் ஒவ்வொருவருமே ஆர்வத்துடன் இருந்தார்கள்... சிலவேளை தாக்குதல் நடவடிக்கைக்கு ஓர் போராளிக்கு அழைப்பு வரவில்லை என்றால் தலையை தொங்கப் போட்டுக் கொண்டு எதையோ பறிகொடுத்தவர்கள் போல் இருப்பார்கள். அந்த நேரத்தில் நாங்கள் அவர்களுக்கு எது சொன்னாலும் அவர்களின் காதுகளில் அது ஏறுவதில்லை.

அதற்கு ஓர் சிறு உதாரணம் சொல்கிறேன் படியுங்கள்.

ஒரு தாக்குதல் நடவடிக்கையில் பங்குபெறும் முன்களப் போராளிகளுக்கு பெரும்பாலும் சில வாரங்களுக்கு முன்னரே அவரின் பொறுப்பாளர் மூலம் அழைப்பு போய்விடும். ஆனால் எங்கே தாக்கப் போகிறோம்?

அல்லது எப்போது அந்த முகாமை தாக்கப் போகிறோம்? என்பதை புலிகள் பெரும்பாலும் இறுதி நேரத்தில்தான் சொல்வர். ஆயினும் முன்கள வீரர்கள் சிலருக்கு சில விசேட பயிற்சிகள் கொடுக்க வேண்டும் என்பதால் முன்பே அழைத்து இராணுவ வரைபடம் பற்றியும் தாக்குதலின் இலக்கு பற்றியும் விளக்கமாகச் சொல்லப்படுவதுடன் அதற்கான சிறப்பு பயிற்சியும் அளிக்கப் படும்.

என்னுடன் இருந்த அந்தப் போராளிக்கு இறுதி நேரத்தில்தான் அழைப்பு வந்தது... ஆனால் அவருடன் பயிற்சி பெற்ற சில போராளிகள் ஏதோ ஓர் நடவடிக்கைக்கு என்று சொல்லி ஏற்கனவே அழைக்கப் பட்டிருந்ததை அறிந்த அந்த இளம் போராளி எப்போதும் சோர்வாகவே காணப்பட்டார். ஒருநாள் எனது காருக்கு எண்ணெய் பார்த்து 'ரேடியேட்டருக்கு' தண்ணீர் விடும் பணியை அவர் செய்து கொண்டிருந்த போது தண்ணீர் விடும் 'ரேடியேற்றருக்குள்' எண்ணெயை விடச் சென்றார்... இதை எதேச்சையாக கண்ட நான் ஓடிச் சென்று தடுத்துவிட்டேன்... தாக்குதலுக்கு அழைப்பு வரவில்லையே என்ற ஏக்கத்தால் யோசனையால் விளைந்த சம்பவம் இது! எனவே புலிகள் என்பவர்கள் உண்மையிலேயே நிஜப் புலிகள் போன்றவர்கள் தான்.

இரையைப் பிடிப்பதுதான் புலிகளின் இலக்கு என்றால் எங்கள் புலிகளின் இலக்கு அதைவிட கூர்மையானது. வெளியில் இருந்து பார்ப்பவர்களுக்கு புலிகள் என்றால் ஆயதங்களைக் கட்டிக் கொண்டு காட்சி காட்டுபவர்கள் என்று சில வேளை எண்ணம் வரலாம். ஆனால் அவர்களின் இதயத்துக்குள் எப்



போதும் சிங்கள இராணுவத்தை பழிவாங்கவேண்டும் என்ற உணர்வே உண்டு.

அதிலும் பிரிகேடியர் சொர்ணம் போன்றவர்கள் சிறுவயதில் திருகோணமலை மாவட்டத்தில் சிங்களவர்களோடு சேர்ந்து வாழ்ந்தபோது பட்ட அடிகளின் வலியைப் பற்றி அவர்களுக்கு நன்கு தெரியும்... அதனால்தான் அவர்களின் கைகள் எப்போதும் போராட தாக்குதல் நடாத்த துடிக்கின்றன!

பிரிகேடியர் சொர்ணம் அந்த ரகத்தில் இருந்து இன்னும் வேறுபட்டவர். போராடிய வேளை ஆயுதத்தை எந்தியதுடன் தலைமை தாங்கும் பண்பையும் மிகச் சிறப்பாக பெற்ற ஒருவர் என்று கூட சொல்லலாம்... 'தவளை நடவடிக்கையின் போது நாகதேவன்துறை கடற்படை முகாமைத் தாக்கும் பணி தளபதி சூசை தலைமையில் கடற்புலிகளிடம் ஒப்படைக்கப் பட்டிருந்தது... அப்போது கடற்புலிகளின் அரசியல் வேலை என் தலைமேல் விழுந்த நேரம் என்பதால் பின்கள வேலைகளின் சில பாரிய பொறுப்புகளை என்னிடம் ஒப்படைத்திருந்தார் தளபதி சூசை. அதில் நான் வெளியேயும் உள்ளேயும் ஓட வேண்டியிருந்தது.

அதிக அளவில் மக்களை தாக்குதல் நடக்கும்போதே கொண்டு சென்று களத்துக்கு அண்மையில் சேர்க்கவேண்டி இருந்தது. கைப்பற்றப் படும் சிறியரக நீரூந்து போர்க் கப்பல்கள் பலவற்றை கைப்பற்றி எமது முகாமுக்கு டிராக்டர்களில் ஏற்றிக் கொண்டு செல்வதற்கு பாரிய மனித வலு அன்று தேவை பட்டது. அதைச் செய்யும் பணியில் அன்று நான் மிகுந்த வெற்றி பெற்றேன் என்றால் அந்த அதிகாலைப் பொழுதில் மக்கள் நூற்றுக்கணக்கில் தாக்குதல் நடந்த இடத்துக்கு எம்முடன் வரத் தயாராக இருந்தது தான் பெரும் வெற்றிகளில் ஒன்றாகும்! ஆனால் தளபதி சொர்ணம் எமது இடத்தில் இருந்து தெற்கே தன்... தரைபிரிவுப் படையோடு அப்போது இருந்தார்.

கடற்புலிகளின் தாக்குதல் ஆரம்பித்து அதன்மூலம் பூநகரிக்கு அரணாக இருந்த நாகதேவன் துறையில் உள்ள சிங்களக் கடற்படை முகாம் கடற்புலிகளிடம் விழுந்த பின்னர்தான் பூநகரியைச் சுற்றி நின்ற எமது தரைபடைப் பிரிவுகள் பூநகரி முகாம் மீது தாக்குதலைத் தொடுத்துக் கொண்டு முன்னேற வேண்டும் என்பதே புலிகளின் திட்டம். அழகிய வைகறைப் பொழுதுக்கு







முன்னர் கடற்புலிகளின் அதிரடிப் பிரிவு நாகதேவன்துறை கடற்படை முகாமை தாக்கி அழித்து சின்னா பின்னப் படுத்தி விட்டனர். அப்போதுதான் எதிர்பார்த்தவாறு தளபதி சொர்ணம் உட்பட பல தளபதிகள் தத் தம் குழுக்களை முன்னேறித் தாக்கும் பணியில் ஈடுபடுத்தினர்… ஆம்… அந்த நடவடிக்கைகள் யாவும் வைகறை பொழுதுக்குள் முடிந்து எண்ணிறைந்த ஆயுதங்களை அந்த முகாமுக்குள் இருந்து புலிகள் அள்ளி எடுத்தனர்… அவைகளில் முக்கியமானவை இராணுவத்தின் கனரக டாங்கிகள் சில மற்றும் சில ஆட்டிலறிகள் ஆகம்… தானியங்கி துப்பாக்கிகளோ நூற்று கணக்கில் இருந்தன. பிரிகேடியர் சொர்ணனின் படை அணியும் அதில் ஒன்று.

கனரக டாங்கிகளை கைப்பற்றுவோம் என்ற நம்பிக்கையுடன் தான் ஏற்கனவே சில போராளிகளுக்கு அவற்றை எப்படி இயக்க வேண்டும்? என்பது பற்றி பயிற்சி கொடுக்கப் பட்டிருந்தது… இராணுவ வேவு நடவடிக்கைகள் நூறு வீதம் வெற்றி அளித்ததால்தான் அன்று ‘தவளை’ நடவடிக்கை மாபெரும் வெற்றியை ஈட்டியதுடன் நூற்றுக் கணக்கான இராணுவத்தினரும் மாண்டு போக அது காரணம் ஆயிற்று.!

தளபதி சொர்ணனின் பங்களிப்பு ஒப்பரேசன் ‘தவளை’ நடவடிக்கையில் மறக்க முடியாத ஒன்று ஆகம்!

தளபதி சொர்ணம் பங்கெடுத்த சிலமுக்கிய தாக்குதல்கள் பின்வருவன ஆகும்!

(1) ஆகாய கடல் வெளிச் சமர்
(2) மாங்குளம் தாக்குதல்
3) ‘தவளைப் பாய்ச்சல்’ தாக்குதல்
(4) மண் கிண்டி மலைத் தாக்குதல்
(5) புலிப் பாய்ச்சல் தாக்குதல்
(6) இதய பூமி தாக்குதல்
(7)முல்லை முகாம்தாக்குதல்
(8) சூரியக் கதிர் நடவடிக்கை
(9) ஓயாத அலைகள்’ நடவடிக்கை
(10)ஜெய சிக்குறு நடவடிக்கை முறியடிப்பு’
(11) எல்லாளன்’ நடவடிக்கை
(12) மண்டைதீவு முகாம் தாக்குதல்
(13) திருகோணமலை மாவட்டத்தில் நடைபெற்ற பல தாக்குதல்கள்.

இப்படி இன்னும் ஏராளமான தாக்குதல் நடவடிக்கைகள் உண்டு. எதை எழுதுவது? எதை விடுவது? நிச்சயம் பிரிக்கேடியர் சொர்ணனின் வீர வரலாறு தனி நூலாக எழுதப் பட வேண்டிய ஒன்றே! பிரிகேடியர் சொர்ணத்தை திருமணம் செய்யும்படி தலைவர் வேண்டிக் கொண்டபோது ஒ என்னும் பெண் போராளியை மணந்து கொண்டார். தலைவர் எது சொன்னாலும் தட்ட மாட்டார் சொர்ணம் .

இயக்கத்தில் தலைவரின் பிரதான மெய்ப் பாதுகாவலராக மட்டும் அல்ல… உயிர்க் கவசமாக இருந்தவர்தான் பிரிக்கேடியர் சொர்ணம்… தலைவரின் சொற்படி சொர்ணம் திருமணத்துக்கு சம்மதித்து திருமணம் நடக்க இருந்த வேளை… திருமணத்துக்கு தலைவர் நிச்சயம் வருவார் என்பதால் திருமணத்துக்கு உடுத்தியிருந்த தன் வேட்டிக்குள் தன் கைத் துப்பாக்கியை மறைத்து வைத்துக் கொண்டே திருமணம் செய்தார்… ஏன் தெரியுமா? அப்போதும் கூட தலைவரின் பாதுகாப்பு முக்கியம் என்பதால்! இப்படி ஓர் தலைவரின் மீது விசுவாசம் மிக்க ஓர் வீர மெய்ப் பாதுகாவலரின் கதையை நான் எங்கும்கேட்டதில்லை. படித்ததும் இல்லை… சுமார் ஆறரை அடிக்கு மேல் உயரம் உள்ள… வீரத்தின் இலக்கணமாக விளங்கிய தளபதி சொர்ணம் 2009 இறுதி முள்ளி வாய்க்கால் போரின்போது தலைவரை தன் சிறகுகளுக்குள் வைத்து காத்து தன் விடுதலைப் போராட்டப் பணியை கடைசி வரை நிறைவேற்றி 15.5.2009 இல் வீரச் சாவை தழுவிக் கொண்டார்.

மூன்று பிள்ளைகளுக்கு தந்தை ஆன தளபதி சொர்ணனின் வரலாற்றை, வீரத்தை, செயல்பாடுகளை, அர்ப்பணிப்பு உணர்வுகளை தமிழ் உலகம் உள்ளவரை எவராலும் நிச்சயம் மறக்க முடியாது! இது ஓர் பூரண வரலாறு இல்லை என்பதால் என்னால் சில சம்பவங்கள் எழுதப் படாமல் விடுபட்டிருக்கலாம்… ஆனால் ஒரு காலத்தில் தளபதி சொர்ணனின் வரலாறு நிச்சயம் யாராவது ஒரு முன்னாள் புலியால் நிச்சயம் எழுதப் படும்போது அனைத்தும் வெளியில் வரும்! அப்போது ஓர் வரலாற்று நாயகனின் வரலாறு பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படும் என்பது மட்டும் உண்மை!..

★★★

## கந்தகத் தீயினில் கரைந்த செந்தமிழ் வீரன்

தங்கத் தலைவனின் அடிச்சுவட்டில் உன் பாதம்பதித்து, கந்தகத் தீயினில்கரைந்த செந்தமிழ் வீரனே! இன்று உன் வீரவணக்க நாள். மூத்த புலியொன்றின் மூச்சடங்கிய நாள். அண்ணை அண்ணை என உச்சரித்த உன் நாவின் பேச்சிழந்த நாள். இன்று தமிழீழ மக்கள் நாம், கண்ணீர் சிந்திக் காணிக்கை செலுத்தி, வண்ணமலர் கொண்டுவந்து உன்பாதம் பணிகின்றோம்.

புல்லர்கள் அழிந்திடப் புனிதப்போர் புரிந்தவனே, வல்ல உன் துணிவுதனை வரலாறு சொல்லும். நாம் பெறும் வெற்றியின் வேரே, வீரத்தின் விளைநிலமே, வீழ்ந்தாலும் நீ விதையாகிப் போனாய். ஈழதேசத்தின் தூணாய் நிமிர்ந்து நின்றவனே உன் உயிரின் துடிப்பு அடங்கும்போதும்,

எங்கள் உரிமைகேட்டல்லவோ அடங்கியது. சோதனை பல சந்தித்து சாதனை படைத்தவனே, துணிவு உன் காலடியில் துவண்டுகிடந்தது. அச்சத்திற்கு உன்னை அண்டுவதற்கே அச்சம், அதனால் உன்னிடம் அச்சமில்லை. உன் செயலில் உயிர்ப்பிருந்தது, அதனால் உன் கடமையில் துடிப்பிருந்தது. விடுதலை எனும் இலட்சியப் பசி உனக்குள்ளே தீயாய் எரிந்ததால், மரணம் உன் காலடியை மண்டியிட்டது.

மலையென உயர்ந்து தமிழர் மனங்களில் நிறைந்து, மலரும் நினைவாய் வாழும் மூத்த தளபதியே, எங்கள் தலைவன் புன்முறுவலுடன் உச்சரிக்கும் பெயர் உன் பெயர்தானே. அந்த சொர்ணத்தை எங்கள் நெஞ்சத்து நினைவுக் கருவறையிலிருந்து மறப்போமா? அல்லது மறைப்போமா? இல்லவே இல்லை. அது எங்கள் இதயத்தில் எழுதப்பட்ட சரித்திரம். என்றென்றும் தமிழீழ தேசத்தில் ஒலிக்கப்படும் வேதம்.

உறங்கிக் கிடந்தவர்களைத் தட்டியெழுப்பிய ஈழத்தின் வெற்றிச் சங்கொலியே, மீட்கப்படும் எம் தேசத்தில் உன் கல்லறை நிமிர்ந்து நிற்கும். அது எங்கள் கண்ணீர் அஞ்சலிக் காகவோ, அன்றேல் மலர்வளைய மரியாதைக்காகவோ அல்ல,மாறாக எங்கள் மண்ணின் நிலைவாழ்விற்கு உனது மனவுறுதி மகுடம் சூட்டவேண்டும் என்பதற்காகவே.

நீ சுமந்த விடியலின் கனவுகளும், எங்கள் தேசத்திற்காக வெகுண்டெழுந்த உணர்வுகளும், தமிழீழ வரலாற்றில் என்றென்றும் நிலைத்துநிற்கும். என்றென்றும் தமிழீழ தேசம் உன் நினைவைச் சுமந்திருக்கும்.






# அளம்பில் துயிலுமில்ல காணியை சுவீகரிக்க எடுத்த முயற்சிக்கு மக்கள் கடும் எதிர்ப்பு!

மே 02, 2024

முல்லைத்தீவு - அளம்பில் மாவீரர் துயிலும் இல்ல காணியினை, 23 ஆவது சிங்க ரெஜிமென்ட் இராணுவத்தினருக்கு சுவீகரித்து வழங்க எடுத்த முயற்சி இன்றைய நாள் வியாழக் கிழமை தடுத்து நிறுத்தப்பட்டது.

நில அளவை திணைக்களத்தினர் மற்றும் கரைதுறைப்பற்று காணி உத்தியோகத்தர் உள்ளிட்டவர்கள், மாவீரர் துயிலுமில்ல காணியினை அளவீடு செய்ய வருகை தந்திருந்தனர்.

இந்நிலையில், மாவீரர்களின் பெற்றோர், அப்பகுதிமக்கள் மற்றும், அப்பகுதி அரசியல் கட்சிப் பிரமுகர்கள் காணிசுவீகரிப்பு நடவடிக்கைக்கு கடுமையான எதிர்ப்பினை தெரிவித்திருந்தனர்.

இராணுவத்திற்காக காணி சுவீகரிக்கும் நடவடிக்கையினை அனுமதிக்க முடியாதென நில அளவைத்திணைக்கள அதிகாரியிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து காணி சுவீகரிக்கும் முயற்சி கைவிடப்பட்டு, நில அளவை திணைக்களத்தினர் அங்கிருந்து சென்றிருந்தனர்.









# புங்குடுதீவில் மனித எச்சங்கள் மீட்பு!

மே 02, 2024

யாழ்ப்பாணம் - புங்குடுதீவு பகுதியில் மனித புதைகுழி அகழ்வு பணிகள் இன்றைய நாள் வியாழக்கிழமை ஆரம்பிக்கப் பட்டுள்ளது.



ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்ற நீதவான், சட்ட வைத்திய அதிகாரி உள்ளிட்ட துறைசார் அதிகாரிகள் முன்னிலையில் அகழ்வு பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

புங்குடுதீவு 10 ஆம் வட்டாரத்தில் அரசினர் வைத்தியசாலையை அண்மித்த பகுதியிலுள்ள தென்பெருந்துறை சதானந்தசிவன் ஆலயத்தின் புனரமைப்பு பணிகள் முன்னெடுக்கப்பட்டு வரும் வேளையில், ஆலய சூழலில் கிடங்கொன்றினை வெட்டிய போது, மனித எலும்பு கூட்டு எச்சங்கள் அண்மையில் வெளி வந்தன.

அதனை தொடர்ந்தே கிடங்கு வெட்டும் பணிகளை இடை நிறுத்தி அது தொடர்பில் ஊர்காவற்துறை பொலிஸ் நிலையத்





திற்கு அறிவிக்கப்பட்டதை , அடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த சிறீலங்காப் பொலிசார், அவ்விடத்தினை தமது கட்டுப்பாட்டுக்குள் எடுத்த நிலையில் அவ்விடத்தில் அகழ்வு பணிகளை முன்னெடுக்க , ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்றில் அனுமதி கோரி விண்ணப்பம் செய்தனர்.

அதன் அடிப்படையில் இன்றையநாள் நீதிமன்றத்தின் அனுமதியுடன் அவ்விடத்தில் அகழ்வு பணிகள் முன்னெடுக்கப்படுகிறது.

# முல்லை. அளம்பில் மாவீரர் துயிலுமில்ல காணி பிடிப்பு நல்லிணக்கமாம்!

மே 02, 2024

ஒருபுறம் நல்லிணக்கம் பேசியவாறு முல்லைத்தீவு மாவட்டத்தின் அளம்பில் மாவீரர் துயிலும் இல்ல காணியினை, சிறீலங்கா சிங்கள இராணுவத்தின் சிங்க ரெஜிமென்ட் பத்தாவது பட்டாலியன் தலையகத்துக்கு வழங்குவதற்கு நான்காவது தடவையாகவும் எடுக்கப்பட்ட முயற்சி இன்று (02) தடுத்து நிறுத்தப் பட்டுள்ளது.

இலங்கை நில அளவை திணைக்களத்தினர், மாவீரர் துயிலுமில்ல காணியினை அளவீடு செய்ய வருகை தந்திருந் தனர்.

இந்நிலையில் மாவீரர்களின் பெற்றோர், பொது மக்கள் காணி சுவீகரிப்பு நடவடிக்கைக்கு கடுமையான எதிர்ப்பினை தெரிவித் திருந்தனர்.

அத்துடன் குறித்த காணியினை அளவீடு செய்து, இராணுவத் திற்காக சுவீகரிக்கும் நடவடிக்கையினை அனுமதிக்க முடியாதென அப்பகுதி மக்களாலும் மக்கள் பிரதிநிதிகளாலும் அங்கு வருகைதந்த நில அளவைத்திணைக்கள அதிகாரியிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.



அதனைத் தொடர்ந்து சிங்கள இராணுவத்தினருக்காக காணி சுவீகரிக்கும் முயற்சி கைவிடப்பட்டு, நில அளவை திணைக் களத்தினர் அங்கிருந்து சென்றிருந்தனர்.

குறிப்பாக அளம்பில் மாவீரர் துயிலுமில்ல காணியினை தற் போது சிறீலங்கா சிங்கள இராணுவத்தின் சிங்க ரெஜிமென்ட் பத்தாவது பட்டாலியன் தலையகத்தினர் கையகப்படுத்தி வைத் துள்ளனர்.

அதனால் துயிலுமில்லக் காணியின் வெளிப்புறத்திலேயே வருடா வருடம் மாவீரர் நாளில் உறவுகளால் மலர் வணக்கம் மேற் கொள்ளப்பட்டு வருகின்றது.

# ஊடக சுதந்திரத்தை வலியுறுத்தி யாழில் போராட்டம்!

மே 04, 2024

சர்வதேச ஊடக சுதந்திர தினத்தை முன்னிட்டு, யாழ்ப்பாணத்தில் போராட்டம் முன்னெடுப்பப்பட்டது.

யாழ். ஊடக அமையத்தின் முன்பாக இன்றைய தினம் வெள்ளிக்கிழமை மாலை 3 மணியளவில் யாழ். ஊடக அமையத்தின் ஏற்பாட்டில் குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டத்து.







யாழ்ப்பாணத்தை சேர்ந்த ஊடகவியலாளர் போராட்டத்தில் கலந்து கொண்டு, படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதி கோரி கோசங்களை எழுப்பினர்.

அத்துடன், ஊடக நிறுவனங்கள் மீது மேற்கொள்ளப்பட தாக்குதல் சம்பவங்கள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் எனவும் கோரினர்.

அத்துடன், அரச அதிகாரிகள், அரச பலங்களை பிரயோகித்து ஊடகவியலாளர்களை நெருக்கடிக்கு உள்ளாக்கி, அச்சுறுத்துவது உள்ளிட்ட செயற்பாடுகளை நிறுத்த வேண்டும் எனவும், ஊடக சுதந்திரம் பாதுகாக்கப்பட வேண்டும் எனவும் போராட்டத்தில் ஈடுபட்ட ஊடகவியலாளர்கள் கோரிக்கை விடுத்தனர்.

# 2024 பத்திரிகை சுதந்திர குறிகாட்டியில் இலங்கைக்கு 150வது இடம்!

மே 03, 2024

2024ம் ஆண்டிற்கான பத்திரிகை சுதந்திர குறிகாட்டியை வெளியிட்டுள்ள எல்லைகள் அற்ற செய்தியாளர்கள் அமைப்பு இலங்கையை 150 வது இடத்தில் பட்டியலிட்டுள்ளது.

2023ம் ஆண்டு இலங்கை 135வது இடத்தில் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் பத்திரிகை சுதந்திர விடயங்கள் 2009ம் ஆண்டு வரை அந்த நாட்டில் காணப்பட்ட உள்நாட்டு யுத்தத்துடன் தொடர்புபட்டவையாக காணப்படுகின்றன என தெரிவித்துள்ள எல்லைகள் அற்ற செய்தியாளர்கள் அமைப்பு தமிழ்கிளர்ச்சி ஒடுக்கப்பட்டவேளை பல பத்திரிகையாளர்களிற்கு எதிராக இடம்பெற்ற இன்னமும் தண்டிக்கப்படாத வன்முறைகுற்றங்களிற்கும் பத்திரிகை சுதந்திரத்திற்கும் தொடர்புள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

ஊடகத்துறையில் பன்முகத்தன்மை இன்மை ஊடகத்துறை அரசியல் உயர் குழாத்தினை சார்ந்துள்ளமை போன்றவற்றின் காரணமாக 22 மில்லியன் மக்கள் வசிக்கும் இலங்கையில் இதழியல்துறை இன்னமும் ஆபத்தில் உள்ளது எனவும் எல்லைகள் அற்ற செய்தியாளர்கள் அமைப்பு தெரிவித்துள்ளது.

RSF REPORTERS WITHOUT BORDERS

கடந்த இரண்டு தசாப்தங்களாக ஊடக தொழில்துறையினர் கொல்லப்பட்டனர் அல்லது காணாமலாக்கப்பட்டனர் என தெரிவித்துள்ள எல்லைகள் அற்ற செய்தியாளர்கள் அமைப்பு 2015ம் ஆண்டின் பின்னர் எந்த பத்திரிகையாளரும் கொல்லப்படவில்லை ஆனால் முந்தைய கொலைகளுக்கானவர்கள் இன்னமும் தண்டிக்கப்படவில்லை எனவும் தெரிவித்துள்ளது.

பத்திரிகையாளர்கள் இன்னமும் இராணுவத்தினர் பொலிசாரினால் திட்டமிட்ட முறையில் கண்காணிக்கப்படுகின்றார்கள் துன்புறுத்தப்படுகின்றார்கள் உள்நாட்டு யுத்தம் இடம்பெற்ற பகுதிகளிற்கு செல்வதற்கு சுயாதீன ஊடகங்களிற்கு அனுமதி மறுக்கப்படுகின்றது எனவும் எல்லைகள் அற்ற செய்தியாளர்கள் அமைப்பு தெரிவித்துள்ளது.

# பலாலி வடகிழக்கு ஒட்டகப்பிலவு திரு ஞானவைரவர் ஆலயமும் சிறீலங்காப்படைகளினால் விடுவிப்பு!

மே 04, 2024





பலாலி வடகிழக்கு ஒட்டகப்பிலவு திரு ஞானவைரவர் ஆலயமும் விடுவிக்கப்பட்டுள்ளது.

இவ்ஆலயத்தின் பூசை வழிபாடுகள் ஆலயத்தின் முன்றலில் மிக அருகில் முன்னர் விடுவிக்கப்பட்ட பகுதியில் தற்காலிகமாக அமைக்கப்பட்ட இடத்தில் நடைபெற்று வந்தது.

ஆலயத்தினை முழுமையாக விடுவிக்குமாறு ஆலய நிர்வாகத்தினர் பலமுறை கோரிக்கை விடுத்திருந்த நிலையில் தற்போது ஆலயம் முழுமையாக சிறீலங்காப்படையிடம் மிருந்து விடுவிக்கப்பட்டுள்ளது.

# முல்லைத்தீவில் 130 நபர்களுக்கு எதிராக சிறீலங்கா வனஜீவராசிகள் திணைக்களத்தினரால் தொடுக்கப்பட்ட வழக்கு ஒத்திவைப்பு!

மே 04, 2024

கரியல்வயல், சுண்டிக்குளம் பகுதிகளை அண்மித்துள்ள மக்கள் 130 நபர்களுக்கு எதிராக சிறீலங்கா வனஜீவராசிகள் திணைக்களத்தினரால் தொடுக்கப்பட்ட வழக்கு 02.04.2024 அன்று முல்லைத்தீவு நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்பட்டது.





1908ஆம் ஆண்டு தொடக்கம் மக்கள் பயிர் செய்து வாழ்ந்து வரும் நிலையில் குறித்த இடத்தில் உள்ள மக்கள் தம் காணிகளை துப்பரவு செய்தமையை அடுத்து சிறீலங்கா வன ஜீவராசிகள் திணைக்களத்தினர் அது தமக்குரிய காணி என முல்லைத்தீவு நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்திருந்தனர்.

சுண்டிக்குளம் தேசிய பூங்காவிற்குள் உட்சென்றமை, தாவ ரங்களை வெட்டி வெளியாக்கியமை , காணிகளை வெளியாக் கியமை, பாதைகளை அமைத்தல் மற்றும் பாதைகளை பயன் படுத்தியமை போன்ற காரணங்களை முன்வைத்து குறித்த வழக்கு பதிவு செய்யப்பட்டிருந்தது.

குறித்த வழக்கானது கடந்த வருடம் 7.12.2023 அன்றையநாள் இடம்பெற்று 02.05.2024 வழக்கு தவணையிடப்பட்டிருந்தது. இதற்கமைய இன்றையதினம் குறித்த வழக்கானது விசா ரணைக்காக முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

வழக்கு தொடுக்கப்பட்ட மக்கள் சார்பில் சட்டத்தரணி சி.தனஞ் சயன் அவர்களும் முன்னிலையாகியிருந்தார். இது தொடர்பாக வழக்கின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போது, இன்றையநாள் புதுக்குடியிருப்பு பகுதியிலே இருக்கின்ற கரியல் வயல் பிரதேசத்திலே வாழும் 100 மேற்பட்ட மக்களின் காணிகள் வனஜீவவராசிகள் திணைக்களத்திற்கு கீழே வருகின்ற காணிகள் என வனஜீவராசிகள் திணைக் களத்தினால் தொடரப்பட்ட வழக்குகள் இரண்டாம் தவணை யாக நீதிமன்றிலே எடுத்துக்கொள்ளப்பட்டன.

இந்த வழக்கிலே சம்பந்தபட்ட மக்கள் ஏற்கனவே தனியார் காணிகளுக்கான நூற்றாண்டு உறுதி வழங்கப்பட்ட மக்களும், தனியார் காணிகளுக்கு சொந்தமான மக்களும் அரச அனு மதிபத்திரம் பெற்றமக்கள் என நூற்றுக்கும் மேற்பட்டவர் களுக்கு எதிராகவே இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டிருந்தது. இந்த வழக்கில் இருக்கும் குறைபாடுகளை ஏற்கனவே நாம் சுட்டிகாட்டி இருந்தோம். அதேபோல் இன்றைய தினமும் இந்த வழக்கில் சுட்டிகாட்டியிருந்தோம். இந்த வழக்கு தொடர்பாக மீள் பரிசீலனை செய்து இவ் வழக்குகள் தொடர்பாக குற்றச்சாட்டு பத்திரம் தாக்கல் செய்ய வேண்டி இருப்பின் தாக்கல் செய்யு



மாறும் நீதிமன்றத்தினால் வழக்கு தொடுனர் தரப்புக்கு அறிவுறுத்தப்பட்டு குறித்த வழக்கானது மூன்றாக பிரித்து வருகின்ற யூலை மாதம் 19 ஆம் திகதி, 25 ஆம் திகதி, 26 ஆம் திகதிகளுக்கும் தவணையிடப்பட்டுள்ளது.

# கொழும்பு வெலிக்கடை சிறையில் தமிழ் கைதிகளை பார்வையிட்ட சிறீதரன் மற்றும் கஜேந்திரன்!

மே 07, 2024

கடந்த பெப்ரவரி மாதம் பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் விசாரணைக்கு அழைக்கப்பட்டு கொழும்பில் வைத்துக் கைது செய்யப்பட்ட வவுனியாவைச் சேர்ந்த முன்னாள் போராளி செல் வநாயகம் ஆனந்தவர்ணன் மற்றும் கடந்த ஒருவருடத்திற்கும் மேலாக நீதிமன்றில் முற்படுத்தப்படாமல் அடைத்துவைக்கப் பட்டிருக்கும் மூதூரைச் சேரந்த எஸ்.சுதாகரன் ஆகிய இருவரை யும் இன்று பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வராசா கஜேந்திரன் மற்றும் சிவஞானம் சிறீதரன் ஆகியோர் கொழும்பு வெலிக்கடை சிறைச்சாலைக்குச் சென்று பார்வையிட்டார்கள்.



அதன்போது தனது விடுதலையை வலியுறுத்தி கடந்த இரண்டு நாட்களாக உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதாக ஆனந்தவர்ணன் பாராளுமன்ற உறுப்பினர்களிடம் தெரிவித் ததாகவும், தனது விடுதலைக்கு அழுத்தம் கொடுக்குமாறு கோரியதாகவும் பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித் துள்ளனர்.

தான் பொய்க்குற்றச்சாட்டுக்களின் கீழ் கைது செய்யப்பட்டு, நீதிமன்றில் தனது தரப்புக் கருத்துக்களை கூறுவதற்கான வாய்ப்புக்கள் எதுவும் வழங்கப்படாமலேயே விளக்கமறியிலில் வைக்கப்பட்டுள்ளதாகவும், அடுத்த வழக்குத தவணை எப் போது என்றுகூடத் தெரியாத நிலையில் தன்னைத் தடுத்து வைத்துள்ளதாகவும் பாராளுமன்ற உறுப்பினர்களிடம் தெரி வித்துள்ளார்.

அதேபோன்று மூதூரைச் சேரந்த எஸ்.சுதாகரன் என்பவரும் இந்தியாவிலிருந்து திரும்பும்போது கைது செய்யப்பட்டு கடந்த ஒருவருடத்திற்கும் மேலாக தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகவும் தனது விடுதலைக்காகவும் நடவடிக்கை எடுக்குமாறு கோரி யுள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த பாராளு மன் உறுப்பினர்கள் ஆனந்தவர்ணன் உடல்நலக்குறைவால் அவதியுறுவதாகவும், உணவு தவிர்ப்புப் போராட்டம் தொடர்ந் தால் அவரது உயிருக்கு ஆபத்து ஏற்படக்கூடும் என்பதனால் அவரது கோரிக்கையை நிறைவேற்ற சம்பந்தப்பட்ட தரப்புக்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென வலியுறுத் தினார்கள். மேலும் இவ்விடயம் தொடர்பில் உடனடியாக சம் பந்தப்பட்ட அதிகாரிகளது கவனத்திற்குக் கொண்டுவர நட வடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார்கள்.



"நான் பெரிது நீ பெரிது என்று வாழாமல் நாடு பெரிது என்று வாழுங்கள்
நாடு நமக்குப் பெரிதானால் நாம் எல்லோரும் அதற்கு சிறியவ்களே,
எமது நிலையற்ற வாழ்விலும் பார்க்க நாட்டின் வாழ்வே பெரிது."

*தமிழீழ தேசியத் தலைவர் மேதகு. வே. பிரபாகரன் அவர்கள்*

# ஆயுர்வேதத் திணைக்களத்தால் 356 சித்த மருத்துவ மாணவர்கள் பாதிப்பு!

மே 07, 2024

ஆயுர்வேதத் திணைக்களத்தின் குளறுபடியான சில நடவடிக்கைகள் மூலம் நாம் பாதிக்கப்பட்டுள்ளோம் என சித்த மருத்துவ மாணவர்களின் பிரநிதியான வர்ணகுலசிங்கம் பிரவீன் தெரிவித்துள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்றைய தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவ்வாறு தெரிவித்தார்.

இலங்கை பூராகவும் 359 சித்த மருத்துவ மாணவர்கள் உள்ளக பயிற்சிக்காக காத்திருக்க வேண்டிய அவல நிலை ஏற்பட்டுள்ளது.

ஆயுர்வேதத் திணைக்களத்தின் குளறுபடியான சில நடவடிக்கைகள் மூலமே நாம் பாதிக்கப்பட்டுள்ளோம்.

எங்களுடைய பிரச்சனை தொடர்பில் பேசியிருந்த போது, பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு 60 பேருக்கு மாத்திரம் அனுமதி வழங்கி இருப்பதாக அவர்கள் தெரிவித்தனர்.

உள்ளக பயிற்சி என்பது அனைத்து மாணவர்களுக்குமான உரிமையாகும். எவ்வாறு 60 மாணவர்களுக்கு மாத்திரம் இந்த அனுமதியினை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு வழங்க முடியும்.

அரசாங்கத்தின் நிதி ஒதுக்கீடு காரணமாகவே இந்த தாமதம் ஏற்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளது. அவ்வாறாயின் அது அரசாங்கத்தின் தவறு ஒழிய மாணவர்களுடைய தவறல்ல.

இதற்குக் காரணம் ஆயுர்வேத திணைக்களம் உள்ளிட்ட ஏனைய திணைக்களங்கள். இவர்களுடைய இவ்வாறான நடவடிக்கைகள் மூலம் நமது கற்க நெறியை பூரணமாக நிறைவு செய்ய முடியாத நிலையில் இருக்கின்றோம்.

தற்பொழுது 30 வயதினை எட்டி இருக்கின்ற போதிலும் நீண்ட காலமாக உள்ளகப் பயிற்சியினை முடிக்காததனால் எமது கற்கை பூரணப்படுத்தப்படவில்லை.

உள்ளக பயிற்சி நிறைவு செய்யப்பட்டால் மாத்திரமே ஆயுர்வேத சங்கத்தில் எங்களை ஒரு வைத்தியராக பதிவு செய்ய முடியும்.




எனவே நமது எதிர்காலத்தை கருத்தில் எடுத்து கற்கை நெறியை பூர்த்தி செய்ய ஏதுவாக உள்ளக பயற்சியை பெற நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோருகிறோம் என்றார்.

# வவுனியாவில் பறிபோகும் தமிழர் நிலம் திரைமறைவில் காய் நகர்த்தும் இராஜாங்க அமைச்சர்!

மே 09, 2024

வவுனியாவில் பறிபோகும் தமிழர் நிலம் திரைமறைவில் காய் நவுனியாவில் இராஜாங்க அமைச்சர் ஒருவரின் துனையுடன் தமிழ் கிராமங்கள் ஆக்கிரமிப்பு செய்யப்படும் நிகழ்வு தற்போது திரைமறைவில் அரங்கேறி வருகிறது.


JAMIUL HUDHA JUMMA MOSQUE
Puthukkulam
Cheddikulam


JAMIUL HUDHA JUMMA MOSQUE
Puthukkulam
Cheddikulam


JAMIUL HUDHA JUMMA MOSQUE
Puthukkulam
Cheddikulam

இவ்விடயம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது

வவுனியா மாவட்டத்தில் செட்டிகுளம் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட கூழாங்குளம் பகுதியில் இடம்பெயர்ந்த தமிழ் மக்களின் காணிகள் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு பள்ளிவாசல் அமைப்பதற்கான முயற்சிகள் இராஜாங்க அமைச்சர் ஒருவரின் துணையுடன் அரங்கேறிவருகிறது.

ஆக்கிரமிப்பு செய்யப்படும் இவ் கிராமம் அமைந்துள்ள பிராமணாலங்குளம் கிராமசேவகர் பிரிவானது தொன்று தொட்டு வந்த ஒரு தமிழ் கிராமமாகும். குறித்த பிரிவில் மன்னார் வவுனியா வீதியில் அமைந்துள்ள ஒரு கிராமமே கூழாங்குளமாகும்.

1990க்கு முதல் சுமார் 200க்கும் மேற்பட்ட குடும்பங்களுடன் காணப்பட்ட இக்கிராமம் பாரிய இடம்பெயர்வுகளின் பின் வெறும் 30 குடும்பங்களுடன் காணப்படுவதுடன் இக்கிராமத்தை சேர்ந்த 300க்கும் மேற்பட்ட குடும்பத்தினர் தற்போது இந்திய முகாம்களில் உள்ளனர்.

இந்நிலையில்தான் இக்கிராமத்தின் மன்னார் வவுனியா வீதியை அண்டிய பெரும்பாலான நிலப்பகுதிகள் அருகில் உள்ள கிராமசேவகர் பிரிவு மக்களால் ஆக்கிரமிக்கப் பட்டுள்ளதுடன் இப்பகுதியில் உள்ள பொதுக்காணி ஒன்றும் இராஜாங்க அமைச்சரின் துணையுடன் ஆக்கிரமிக்கப்பட்டு பள்ளிவாசல் கட்டுவதற்குரிய வேலைதிட்டங்கள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

இன்றுவரை தமிழ் மக்கள் தவிர்ந்த ஏனைய சகோதர மக்கள் வாழ்ந்திராத இத் தமிழர் கிராமத்தின் பெரும்பாலான நிலங்கள் அருகில் உள்ள மக்களுக்கு முறையற்ற வகையில் காணி அனுமதிப்பத்திரங்கள், வெளிப்படுத்தல் உறுதிகள் அடாத்து காணி மூலம் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது என்பதை அயல்கிராமத்தின் பள்ளிவாசல் கடிதம் உறுதிப்படுத்தியுள்ளது.

இந்தியாவில் இருந்து ஒரு சில குடும்பங்கள் மீளத் திரும்பிய நிலையில் இம்மக்களுக்கான நிலங்கள் ஆக்கிரமிக்கப்பட்டு ஆலயங்கள் அழிக்கப்பட்டு பள்ளிவாசல்கள் கட்டும் நடவடிக்கை எடுப்பது நாடு திரும்பும் மக்களின் மீள்குடியேற்ற நடவடிக்கையில் தடையை ஏற்படுத்தியுள்ளதாக அப்பகுதி மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

எல்லை நிர்ணயம் மூலம் குறித்த கிராமம் முற்றுமுழுதான தமிழர் வட்டாரத்தில் உள்வாங்கப்பட்டிருந்த ஒரு கிராமமாகும் ஆயினும் கடந்த சில வருடங்களில் முறையற்றவகையில் அரசியல்வாதிகள் மற்றும் அதிகாரிகளின் பக்கசார்புடைய இனரீதியான சிந்தனை காணி நடவடிக்கையில் குறித்த தேர்தல் வட்டாரத்தில் தமிழ் மக்களை சிறுபாண்மை இனமாக மாற்றுவதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்தியுள்ளது.

முறையற்ற அரசியல் தலையீடு இனரீதியான பக்கசார்பான பிரதேச நிர்வாகம் போன்றவற்றால் பாரம்பரிய தமிழ் கிராமம் தனது மக்களின் காணிகளை இழந்துள்ளதுடன் பொதுக் காணியை பயன்படுத்த முடியாத அளவுக்கு அச்சுறுத்தல்களுக்கும் உள்ளாகியுள்ளது.

ஆலயங்கள் இருந்த இடத்தில் பள்ளிவாசல்கள் அமைக்கும் நடவடிக்கை எடுப்பது என்பது வேண்டுமென்றே தமிழர் அடையாளத்தை சிதைப்பது போன்றுள்ளது. இன்னும் ஒருசில வருடத்தில் இக்கிராமம் அமைந்துள்ள உள்ளூராட்சி வட்டாரமானது தனது தமிழர் பிரதிநிதித்துவத்தை இழக்கும் என்பதில் எவ்வித மாற்றுகருத்தும் கிடையாது.

இவ்விடயம் தொடர்பில் ஒரு நடுநிலையான விசாரணை நடைபெற்று தங்களுடைய நிலமும் வாழ்வும் பாதுகாக்கபட வேண்டும் என்கின்ற கோரிக்கை மட்டுமே இம்மக்களிடம் இருந்து வருகின்ற இறுதி மூச்சாகும்.

**முக்கிய அறிவித்தல்**

**தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.**

sangathamilcanada@gmail.com

# “மகாவலி அபிவிருத்தியின் பெயரால் தமிழர் நிலங்களை அபகரிக்காதே” – யாழில் போராட்டம்!

மே 08, 2024

மகாவலி அபிவிருத்தியின் பெயரால் மேற்கொள்ளப்படும் நில ஆக்கிரமிப்பை நிறுத்தக் கோரி கொக்குதொடுவாய், கொக் கிளாய் மற்றும் கருநாட்டுக்கேணி பிரதேச மக்கள் யாழ்ப் பாணத்தில் போராட்டம் ஒன்றினை முன்னெடுத்தனர்.







வட மாகாண ஆளுநர் செயலகத்திற்கு முன்பாக இன்றைய தினம் புதன்கிழமை காலை 10 மணியளவில், குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதனையடுத்து அப்பகுதியில் பொலிசார் குவிக்கப்பட்டு கண்காணிப்பு கடமையில் ஈடுபட்டிருந்தனர்.

மகாவலி எனும் பெயரில் தமிழர்களின் பூர்வீக காணிகளை அபகரிக்காது மகாவலி திட்டத்தை எமது மண்ணில் நிறுத்து, எமது வாழ்வாதாரத்தை பறிக்காதே, மகாவலி அபிவிருத்தி முல்லைதீவில் பௌத்த மயமாக்கலுக்கா, எமக்கு நீதி வேண் டும், மகாவலி திட்டத்தை எமது மண்ணில் நிறுத்து என்ற பதாகைகள் தாங்கியவாறு மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தின் முடிவில் மகாவலி நில ஆக்கிரமிப்பு தொடர்பாக ஆளுநரின் செயலாளரிடம் மகஜர் கையளிக்கப்பட்டது.





# வலி. வடக்கில் சிறீலங்கா இராணுவ கட்டுப்பாட்டில் இருந்த சில வீதிகள் விடுவிப்பு!

மே 08, 2024

யாழ்ப்பாணம் தெல்லிப்பளை ஒட்டகப்புலத்தில் விடுவிக்கப்பட்ட காணிகளுக்குள் பொதுமக்கள் பிரவேசிப்பதற்கான பாதை அனுமதி பெற்றுக்கொடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் தெல்லிப்பளை ஒட்டகப்புலத்தில் அண்மையில் விடுவிக்கப்பட்ட 234.8 ஏக்கர் காணிக்குள் பொதுமக்கள் பிரவேசிப்பதற்கான பாதைகளை திறக்குமாறும், இணைந்த வீதிகளை பயன்படுத்த அனுமதிக்குமாறும் சிறீலங்காவுக்காக வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் பாதுகாப்பு பிரிவினரிடம் கோரினர்.

அதனை அடுத்து ஒட்டகப்புலம் பகுதிக்கு நேற்றைய தினம் செவ்வாய்க்கிழமை விஜயம் செய்த ஆளுநர் விடுவிக்கப்பட்ட காணிகளை பார்வையிட்டத்துடன், காணி உரிமையாளர் களுடனும் கலந்துரையாடினார்.

வசாவிளான் கிழக்கு(J/244), வசாவிளான் மேற்கு(J/245), பலாலி வடக்கு(J/254), பலாலி கிழக்கு(J/253), பலாலி தெற்கு(J/252) ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளுக்குட்பட்ட 234.8 ஏக்கர் காணி அண்மையில் விடுவிக்கப்பட்டது.

இங்கு வசித்த 327 குடும்பங்கள் காணி உரிமை கோரி பதிவு செய்துள்ளதுடன், அவர்களில் 171 குடும்பங்களைச் சேர்த் தவர்கள் தங்களின் காணிகளை அடையாளப்படுத்தி துப்பரவு செய்யும் பணிகளை ஆரம்பித்துள்ளனர்.

இந்நிலையில் விடுவிக்கப்பட்டுள்ள காணிகளுக்குள் இலகுவாக பிரவேசிக்கக்கூடிய வகையில் பாதைகளை திறக்கவும், வீதிகளை பயன்படுத்தவும் அனுமதி தருமாறு பொதுமக்கள் கேட்டுக்கொண்டதற்கு அமைய, குறித்த அனுமதிகளை பாது காப்பு பிரிவினருடன் கலந்துரையாடி ஆளுநர் பெற்றுக் கொடுத்தார்.



அதற்கமைய, பொன்னாலை - பருத்தித்துறை கடற்கரை வீதியில் கண்ணகி அம்மன் கோவில் சந்தியிலிருந்து நாகதம் பிரான் கோவில் வீதி ஊடாக விடுவிக்கப்பட்ட காணிக்குள் பிரவேசிக்க முடியும். அத்துடன் வீரப்பளை வீதியில் பலாலி வீதி நோக்கி 100 மீற்றர் தூரத்திற்குள்ளும், வீரப்பளை சந்தியில் தெற்கு நோக்கி தம்பாளை வீதி (விமான நிலைய வீதி ) ஊடாகவும் விடுவிக்கப்பட்ட காணிக்குள் பிரவேசிக்க முடியும் என தெரிவிக்கப்படுகிறது.

# இனவாத அரசாங்கத்துடன் அரச அதிகாரிகளும் இணைந்து தமிழ் மக்களை முல்லைத்தீவில் இருந்து வெளியேற்ற முயற்சி!

## முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் து. ரவிகரன்

மே 10, 2024

முல்லைத்தீவு மாவட்ட தமிழ் மக்களை மாவட்டத்தில் இருந்து வெளியேற்றுவதற்கு மாவட்டத்தின் அரசாங்க அதிகாரிகள் அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுகிறார்களா என்ற சந்தேகம் எங்களிடம் மேலோங்கியுள்ளது. இதற்கு எதிராக மாவட்ட செயலகத்திற்கு முன்பாக சட்டி பானையுடன் போராட வேண்டிய நிலையில் இருப்பதாக வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் து. ரவிகரன் தொரிவித்தார்.

யாழ். ஊடக அமையத்தில் இடம் பெற்ற ஊடக சந்திப்பிலே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மகாவலி என்றால் தமிழர்களுக்கு மரணபொறி காரணம் முல்லைத்தீவு மாவட்டத்தில் 2018 ஆண்டு மாவட்ட செயலக புள்ளிவிபரத்தின் படி 2,199 ஏக்கர் காணி 625 பயனாளிகளுக்கு என்று மகாவலியால் அபகரிக்கப்பட்டுள்ளது. ஆனால் 2024 ஆண்டு இது 4 ஆயிரம் ஏக்கராக ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. மகாவலியின் ஆக்கிரமிப்புக்குள் முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்கிளாய்,கொக்குத்தொடுவாய் கருவாட்டுகேணிநில் 6 கிராம அலுவலர் பிரிவுகள் அபகரிக்கப்பட்டுள்ளது.

இந்த காணிகள் இலங்கை சுதந்திரமடைந்ததற்கு முன்பிருந்தே தமிழர்களுடைய பூர்விக காணி என்பதற்கு தெளிவான உறுதிகள் ஆவணங்கள் இருக்கின்றன. இது மட்டுமன்றி 1984 ஆண்டு உதியமலை படுகொலை இடம்பெறுவதற்கு சில காலப்பகுதியில் விடுதலைப் புலிகள் நூளைந்து விட்டார்கள் என கூறி இப்பகுதி மக்களை கவச வாகனங்களில் வந்த இராணுவத்தினர் துரத்தினார்கள் அன்று வெளியேறிய மக்கள் 29 வருடத்திற்கு பின்னரே மிள்குடியேறினார்கள் இந்த விரட்டியடுப்பால் விவசாய செய்கைகள் முற்றாக பாதிக்கப்பட்டது. அந்த காலத்தில் இந்த நிலமானது இந்த மாவட்டத்திற்கு மட்டுமல்ல இலங்கை முழுவதற்குமே நெல் உற்பத்தியால் அரிசியை வழங்கி தன்னிறைவு கண்ட மாவட்டமாகும்.

இவ்வாறான நிலப்பரப்புகளை மகாவிலி என்ற பெயரில் ஆக்கிரமித்து விட்டு தமிழர்களை விரட்ட நினைப்பது எத்தகைய நியாயம். ஆட்சிக்குவரும் இனவாத அரசாங்கங்கள்தான் இத்தகைய முயற்சியை மேற்கொள்கிறார்கள் என்றால் மாவட்டத்திற்கு பெறுப்பு கூறவேண்டிய மாவட்ட செயலர், பிரதேச செயலர் அவர்களும் இந்த இனவாத அரசாங்கத்துடன் இணைந்து தமிழ்மக்களை துரத்தும் செயல்பாட்டில் இருக்கிறார்களா? சொந்த மண்ணிலிருந்து அகற்ற நினைக்கும் செயற்பாட்டிற்கு நாம் ஒரு போதும் அஞ்சமாட்டோம். எதிர்வரும் நாட்களில் முல்லைத்தீவு மாவட்ட செயலக முன்றலில் சட்டி பானைகளுடன் தொடர் போராட்டத்தில் ஈடுபடவேண்டியவர்களாக உள்ளோம். எனவே மகாவலி திட்டத்தை கைவிட்டு தமிழ்மக்களின் காணிகளை தமிழ்மக்களிடம் கையளிக்கும் வேலைத்திட்டத்தை முன்னேடுக்க வேண்டும் என்றார்.




# மன்னாரில் தனியாருக்குச் சொந்தமான காணிகள் சட்ட விரோதமான முறையில் இந்திய தனியார் நிறுவனம் ஒன்றிற்கு விற்பனை!

மே 10, 2024

மன்னார் - தலைமன்னார் பிரதான வீதி மற்றும் நடுக்குடா பாவிலான்பாட்டன் குடியிருப்பு பகுதியில் தனியாருக்குச் சொந்தமான சுமார் 160 ஏக்கர் பனை மரங்களை கொண்ட காணிகள் சட்ட விரோதமான முறையில் இந்திய தனியார் நிறுவனம் ஒன்றிற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.



கனிய மணல் அகழ்வுக்கு குறித்த விற்பனை செய்யப்பட்டுள்ளதாக பாதிக்கப்பட்டு வாழ்வாதாரத்தை இழந்து வரும் மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இவ்விடயம் குறித்து பாதிக்கப்பட்டவர்கள் கருத்து தெரிவிக்கையில்,

“குறித்த காணியில் உள்ள பல நூற்றுக்கணக்கான பனை மரங்கள் அழிக்கப்பட்டு கனிய மணல் அகழ்வு இடம் பெற நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதனால் பல குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. தற்போது குறித்த காணிக்கான சுற்று வேலி அமைக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

மேலும் குறித்த காணியின் உரிமையாளர்கள் அங்கு சென்ற நிலையில் பொலிசார் கைது செய்வோம் என அச்சுறுத்துவதாகவும் அடாவடித்தனத்துடன் காணி அபகரிப்பு இடம் பெற்று வருவதாக பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

தமது பூர்வீக காணிகளே அடாத்தாக பிடிக்கப்பட்டு வருவதாக பாதிக்கப்பட்டவர்கள் தெரிவிக்கின்றனர். இவ்விடயம் குறித்து தலைமன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தும் பொலிசார் எவ்வித நடவடிக்கைகள் மேற்கொள்ளவில்லை.

இதனால் எமது சமூகமும் பாரிய அளவில் பாதிப்பை எதிர்நோக்கி வருகின்றனர். பனை உற்பத்தியை நம்பி வாழ்ந்து வந்த நிலையில் தற்போது பனை மரங்கள் உள்ள காணி



அபகரிக்கப்பட்டு பனை மரங்களும் வெட்டப்பட்டு வருகிறது.

தற்போது எமது வாழ்வாதாரத்திற்கான பனை மரங்களும் வெட்டப்பட்டுள்ளது. தனியார் நிறுவனம் ஒன்றிற்கு மணல் அகழ்வுக்காக குறித்த காணியை விற்பனை செய்துள்ள நிலையில் தற்போது எங்களை உள்ளே நுழைய விடாது காணிக்கு சுற்று வேலி அடைக்கப்பட்டு வருகின்றது.

எனவே உரிய உயர் அதிகாரிகள் இவ்விடயத்தில் தலையிட்டு எமக்கு எமது வாழ்வாதாரத்தை கொண்டு செல்ல துரித நடவடிக்கைகளை மேற்கொண்டு குறித்த காணியை மீட்டுத்தர நடவடிக்கை எடுக்க வேண்டும்” என கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

# முள்ளிவாய்க்கால் தமிழினப்படுகொலையின் 15 வது ஆண்டு நினைவேந்தல் நாளுக்கு அழைப்பு!

## முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் பொதுக்கட்டமைப்பு – வடக்குக் கிழக்கு

மே 11, 2024

15 முள்ளிவாய்க்கால் மண்ணில் தமிழினப்படுகொலை உச்சந்தொட்டு இவ்வருடம் 15வது ஆண்டு. ஈழத்தமிழினத்தின் அடக்குமுறைக்கெதிரான விடுதலைப்போராட்டத்தின் ஆயுதப் போராட்டப் பரிமாணத்தை பல்வேறு சக்திகளின் துணை கொண்டு சிறீலங்கா அரசு மௌனிக்கச் செய்து இன்றுடன் 15 ஆண்டுகள் நிறைவடைகின்றது.

தமிழ்த்தேசியத்தின் நம்பிக்கையில் உறுதி கொண்டு தமிழர் விடுதலைப்போராட்டத்தின் வடிவங்களை மாற்றி தொடர்ந்தும் விடுதலைக்காக ஈழத்தமிழினம் பயணிக்கின்றது என்பது, விடுதலையின் மீது கொண்ட பேரவாவின் பிரதிபலிப்பு.

ஈழத்தமிழினத்தின் நீதி வேண்டிய பயணமும், தொடர் போராட்ட முன்னெடுப்புகளும் நீதியின் கதவை எப்போதுமே தட்டிக்கொண்டேயிருக்கப்போகிறது. மனித உரிமைக் காவலர்கள் என்று மார் தட்டிக்கொள்பவர்களின் வெள்ளைச் சாயம் தமிழினப்படுகொலையில் வெளுக்கத்தொடங்கி தற்போது காசாவில் அரங்கேற்றப்பட்டுக்கொண்டிருக்கும் பலஸ்தீனப்படுகொலையில் கட்டங்கட்டமாக அப்பட்டமாக தோலுரிக்கப்படுகிறது.

மனித உரிமை சாசனத்தை ஒரு கையிலும், கொலைக் கருவியை இன்னொரு கையிலும் கொண்டு சனநாயகம் போதிப்பவர்களின் அபத்தம் வெளிக்கிளம்புகிறது. ஈழத் தமிழினம் நினைவுகளை மட்டும் ஆயுதமாக்கவில்லை. விடுதலைக்கனவினை நம்பிக்கை இயங்கியலாக்கி இலக்கு நோக்கிப் பயணிக்கின்றது. நீதிக்கான தொடர் தேடலும் ஓர் ஆயுதமே என்பதை ஆர்மேனியா தொடக்கம் பலஸ்தீனம் வரைக்கும் விடுதலைப்போராட்டங்களின் வரலாறு எமக்கு சொல்லித்தருகின்றது.



பேரவலத்தை நினைவு கூருவதற்கு அப்பால், ஈழத்தமிழினம் விடுதலைக்காய் தியாகித்தவர்களின் கனவுகளின் நினைவு களைச் சுமந்து பயணிக்கின்றது. முள்ளிவாய்க்கால் ஒரு பேரவலத்தின் குறியீடு மட்டுமல்ல. அடக்குமுறை எதிர்ப்பின் நம்பிக்கையின் குறியீடு விடுதலைப்போராட்டத்தை வெற்றி / தோல்வி என இருமைக்குள் வரையறுத்துவிட முடியாது. 15வது ஆண்டின் நினைவேந்தல் ஒழுங்குமுறைகளை தயார் செய்யும் ஈழத்தமிழினம், முள்ளிவாய்க்கால் தரும் விடுதலை நம்பிக்கை யின் நினைவுகளை மக்கள் மயப்படுத்தப்பட வேண்டிய கால கட்டத்துக்குள் தள்ளப்பட்டுள்ளது. விடுதலை நம்பிக்கையின் நினைவுகளை மக்கள் மயப்படுத்துவதென்பது, ஒரு அமைப் பின் நிகழ்ச்சித்திட்டமல்ல.

ஒவ்வொரு ஈழத்தமிழனதும் வரலாற்றுக்கடமையும் உரிமையும் கூட. இதை நினைவில் கொண்டு, இன்றுவரை நீதி வழங்கப்படாத இனப்படுகொலையின் இவ்வாண்டிற்கான நினைவேந்தல் 05. 18 இல் முற்பகல் 10.30 மணிக்கு முள்ளிவாய்க்காலில் அமைந்துள்ள முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் முற்றத்தில் நடைபெறும். எனவே அனைவரும் பேதங்களைத் துறந்து, சுயலாப, சுய விளம்பரப் படுத்தல்களைக் கடந்து எமது பொது நிகழ்ச்சி நிரலில் ஒன்றுபட்டு தமிழர்களாக இந் நினைவேந்தலில் ஒன்றிணையுமாறு அன்புரிமையுடன் கேட்டுக் கொள்கின்றோம். அத்துடன் அன்று மாலை 6மணிக்கு அனைத்து ஆலயங்களிலும் கோவில்களிலும் மணி ஒலி எழுப்புவதுடன் அன்று இயலுமான வரை முள்ளிவாய்க்கால் கஞ்சியையும் பரிமாறி தமிழின அழிப்பினை நினைவு கூருவோம்.

# யாழில் உந்துருளியை விரட்டிச்சென்று பொலிசார் உதைத்ததனால் மின்கம்பத்தில் மோதி ஒருவர் பலி!

மே 11, 2024

யாழ்ப்பாணம், புன்னாலைக்கட்டுவனில் காவலாதுறை விரட்டிச் சென்ற உந்துருளியில் பயணித்த ஒருவர் மின் கம்பத்தில் மோதி உயிரிழந்துள்ளார்.

புன்னாலைக்கட்டுவனில் நேற்று (10) இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றது..

பலாலி போக்குவரத்து பிரிவு காவல்துறை கடமையில் இருந்த போது, நிறுத்தாமல் சென்ற உந்தூருளி ஒன்றை விரட்டிச் சென்ற போது இந்த அனர்த்தம் நிகழ்ந்தது

சுன்னாகம் காவல்துறை பிரிவிலுள்ள பிள்ளையார் கோவிலுக்கு அருகில் இந்த விபத்து நிகழ்ந்துள்ளது. பழைய தபால் நிலைய வீதி, கோப்பாய் தெற்கு என்ற முகவரியில் வசிக்கும் பிரதீபன் (வயது 41) என்பவரே உயிரிழந்தவராவார்.

காவல்துறையினர் அந்த உந்துருளியை விரட்டிச் சென்று, உதைத்து விழுத்தியதாகவும், அதன்போது உந்துருளியில் பயணித்தவர் மின் கம்பத்தில் மோதி விழுந்ததாகவும் பிரதேசவாசிகள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

அந்த இடத்தில் பொதுமக்கள் குழுமியதால் பதற்றம் ஏற் பட்டுள்ளது.



# யாழில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வார்ப்பு; முள்ளிவாய்க்கால் படுகொலை நினைவு ஊர்திப் பவனியும் ஆரம்பம்!

மே 12, 2024

யாழ்ப்பாணத்தில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு இன்றைய நாள் நடைபெற்றது.





தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலை நினைவுத்தூபியின் முன் கஞ்சி காய்ச்சி வழங்கப்பட்டது.

முன்னதாக தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலை நினைவுத் தூபியில் வணக்க நிகழ்வுகள் இடம்பெற்றன. அதனை தொடர்ந்து முள்ளிவாய்க்காலில் உயிரிழந்தவர்களை நினைவு கூர்ந்து நினைவு வணக்கம் செலுத்தப்பட்டதுடன் ஈகை சுடரும் ஏற்றப்பட்டது.

அதனை தொடர்ந்து நினைவு வணக்க நிகழ்வில் கலந்து கொண்டவர்களுக்கு கஞ்சி வழங்கப்பட்டதுடன், வீதியில் சென்ற மக்களுக்கும் கஞ்சி வழங்கப்பட்டது.

அதனை தொடர்ந்து, முள்ளிவாய்க்கால் படுகொலை நினைவு ஊர்தி பவனி ஆரம்பமானது. குறித்த ஊர்தி பவனி ஆனது, நாளை திங்கட் கிழமை தென்மராட்சியிலும், 14ஆம் திகதி வடமராட்சியிலும், 15ஆம் திகதி கோப்பாய், மானிப்பாய், நல்லூர் பிரதேசங்களிலும், 16ஆம் திகதி வட்டுக்கோட்டையிலும், 17ஆம் திகதி வேலணையிலும், 18ஆம் திகதி காரைநகரிலும் பயணிக்கும்.

இறுதிநாள் நினைவேந்தல் சங்கானை பேருந்து தரிப்பிடத்தில் மாலை 5 மணிக்கு இடம்பெறும்.

முள்ளிவாய்க்கால் நினைவு ஊர்தி தங்கள் பிரதேசங்களுக்கு வரும்பொழுது மக்கள் அணிதிரண்டு ஆத்மார்த்தமாக மலர் வணக்கம் செலுத்துமாறு ஏற்பாட்டாளர்கள் கோரியுள்ளனர்.

# சர்வதேச மன்னிப்புச் சபையின் செயலாளர் நாயகம் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலில் பங்கேற்பார்(?)

மே 12, 2024

மூன்று தசாப்த கால யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு 15 வருடங்கள் கடந்திருக்கும் நிலையில், இவ்வாரம் இலங்கைக்கு வருகைதரவுள்ள சர்வதேச மன்னிப்புச் சபையின் செயலாளர் நாயகம் அக்னெஸ் கலமார்ட் எதிர்வரும் 18ஆம் திகதி முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்விலும் கலந்துகொள்ளவுள்ளார்.

யுத்தத்தின்போது இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் மற்றும் மனிதகுலத்துக்கு எதிரான வன்முறைகள் என்பன தொடர்பில் உண்மை, நீதி மற்றும் பொறுப்புக்கூறல் என்பன உறுதிப்படுத்தப்பட வேண்டும் என சர்வதேச மன்னிப்புச் சபை தொடர்ச்சியாக வலியுறுத்தி வருவதுடன், சர்வதேச அரங்கில் இலங்கை மீதான அழுத்தங்களையும் பிரயோகித்துவருகிறது.

அந்த வகையில் யுத்த முடிவின் 15 வருடப் பூர்த்தியையொட்டி லண்டனைத் தளமாகக்கொண்டு இயங்கிவரும் சர்வதேச மன்னிப்புச் சபையின் செயலாளர் நாயகம் அக்னெஸ் கலமார்ட் எதிர்வரும் வியாழக்கிழமை (16) இலங்கைக்கு வருகை தரவுள்ளார். அன்றைய நாள் சர்வதேச மன்னிப்புச் சபையில் கொழும்பு அலுவலக செயற்பாட்டாளர்களைச் சந்தித்துப் பேசவிருக்கும் அவர், வெள்ளிக்கிழமை (17) முள்ளிவாய்க்காலுக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

அங்கு சில முக்கிய இரகசிய சந்திப்புக்களை நடாத்துவதற்கு உத்தேசித்திருக்கும் அக்னெஸ் கலமார்ட், யுத்தத்தில் உயிரிழந்தவர்களை நினைவுகூரும் வகையில் சனிக்கிழமை (18) நடைபெறவுள்ள முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்விலும் பங்கேற்கவுள்ளார்.




அதனைத் தொடர்ந்து எதிர்வரும் 20ஆம் திகதி கொழும்பில் ஊடகவியலாளர்களை சந்திக்கவுள்ள அவர், நாட்டின் சமகால மனித உரிமைகள் நிலைவரம் தொடர்பான தனது அவதானிப்புக்களைப் பகிர்ந்துகொள்ளவுள்ளார்.

அதேவேளை செயலாளர் நாயகம் அக்னெஸ் கலமார்ட் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை சந்திப்பதற்கு நேரம் வழங்குமாறு மன்னிப்புச் சபையின் கொழும்பு அலுவலகம் ஓரிரு மாதங்களுக்கு முன்னரே ஜனாதிபதி செயலகத்திடம் கோரியிருக்கின்ற போதிலும், அதற்கு இன்னமும் உரிய பதில் வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# முள்ளிவாய்க்கால் கஞ்சி: திருமலை – சம்பூர் கிராமத்தில் நால்வர் சிறீலங்கா பொலிசாரினால் கைது

மே 12, 2024

திருகோணமலை சம்பூர் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சேனையூர் பகுதியில் முள்ளிவாய்க்கால் கஞ்சி பரிமாறிய குற்றச் சாட்டில் மூன்று பேரும் பல்கலைக்கழக மாணவி ஒருவருமாக நால்வர் சம்பூர் பொலிசாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.







குறித்த கைது சம்பவம் நேற்றைய தினம் (12) ஞாயிற்றுக் கிழமை இரவு எட்டு முப்பது மணிக்கு பின்னர் இடம்பெற் றுள்ளது.

இச்சம்பவத்தில் பல்கலைக்கழக மாணவி உட்பட 3 பெண் களும் ஆண் ஒருவரும் கைது செய்யப்பட்டு சம்பூர் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

பின்வரும் நபர்களே கைது செய்யப்பட்டு இன்றைய தினம் (13) மூதூர் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட உள்ளதாக தெரிய வருகின்றது. சமூக செயற்பாட்டாளர் கமலேஸ்வரன் விஜிதா (வயது 40), பல்கலைக்கழக மாணவி கமலேஸ்வரன் தேமிலா (வயது 22), சமூக செயற்பாட்டாளர் செல்வவினோத்குமார் சுஜானி (வயது 40), தமிழ் தேசிய மக்கள் முன்னனியின் முன் னாள் பிரதேச சபை முன்னாள் உறுப்பினர் நவரெட்ணராஜா ஹரிஹரகுமார் (வயது 43) ஆகியோரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த கைது நடவடிக்கையின் போது பல்கலைக்கழக மாணவியின் தாயாரான கமலேஸ்வரன் விஜிதா என்பவரை கைது செய்வதற்கு எதிர்ப்பு தெரிவித்து அவரது மகளான தேமிலா தனது கழுத்தில் கத்தி வைத்து மிரட்டியதாகவும் அதனை தடுக்க முயற்சித்த பெண் பொலிசாருக்கு கத்தி வெட்டி காயம் (?) ஏற்பட்டதால் அவர் தற்போது வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார் இதனால் பல்கலைக்கழக மாணவியும் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

முள்ளிவாய்க்காலில் படுகொலை செய்யப்பட்ட பொதுமக்களை நினைவுகூரும் முகமாக நேற்றைய தினம் (12) ஞாயிற்றுக கிழமை சேனையூர் பிள்ளையார் ஆலயத்தில் முள்ளி வாய்க்கால் கஞ்சி பரிமாறும் நிகழ்வு பொதுமக்களினால் முன் னெடுக்கப்பட்டிருந்தபோது சம்பூர் பொலிசாரினால் நீதிமன்ற தடை உத்தரவை காண்பித்து குறித்த நடவடிக்கையை நிறுத்து மாறு கூறப்பட்டிருந்த நிலையில் அதில் ஈடுபட்டிருந்தவர்கள் தடை உத்தரவை வாங்காமல் முள்ளிவாய்க்கால் கஞ்சி பரி மாறும் நிகழ்வை முன்னெடுத்ததாகவும், இந்நிலையிலேயே குறித்த கைது சம்பவங்கள் இடம் பெற்றுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

# முள்ளிவாய்க்கால் நினைவேந்தலில் ஈடுபடும் தமிழர்களை துன்புறுத்தியும், அச்சுறுத்தியும், கைதுசெய்யும் சிறீலங்கா அரசாங்கம்!

மே 13, 2024

நினைவேந்தலில் ஈடுபடும் தமிழர்களை துன்புறுத்தியும், அச் சுறுத்தியும் கைதுசெய்யும் சிறீலங்கா அரசாங்கம் நல்லிணக்கத் திற்கான முயற்சிகளில் ஈடுபடுவதாக தெரிவிக்க முடியாது என இலங்கையில் சமத்துவம் மற்றும் நிவாரணத்திற்கான மக்கள் அமைப்பான பேர்ள் தெரிவித்துள்ளது.

பேர்ள் அமைப்பு மேலும் தெரிவித்துள்ளதாவது.

திருகோணமலையில் நினைவேந்தலில் ஈடுபட்டுக்கொண் டிருந்த தமிழர்கள் மீதான தாக்குதலை பேர்ள் கண்டிக்கின்றது.

15 வருடங்களிற்கு முன்னர் சிறீலங்கா அரசாங்கத்தின் ஈவிரக் கமற்ற இனப்படுகொலையை தமிழர்கள் நினைவேந்தும் இந்த தருணத்தில் முள்ளிவாய்க்கால் கஞ்சி என்பது காயங்களை ஆற்றுதல் கூட்டு நினைவேந்தலின் ஒரு பகுதியாக மாறி யுள்ளது.

தங்கள் நேசத்திற்குரியவர்களை நினைவுகூரும் தமிழர்களை துன்புறுத்தும் அச்சுறுத்தும் கைதுசெய்யும் சிறீலங்கா அர சாங்கம் நல்லிணக்கத்திற்கான முயற்சிகளில் ஈடுபடுவதாக தெரிவிக்க முடியாது.

கடந்த வருடம் வெசாக் தினத்தை முன்னிட்டு சிறீலங்கா பொலிசார் உள்ளூர் மக்களிற்கு பிஸ்கட்கள் போன்றவற்றை வழங்கியிருந்தனர் – திருகோணமலை சம்பவம் அவர்களின் போலிநாடகத்தை வெளிப்படுத்தியுள்ளது என பேர்ள் அமைப்பு தெரிவித்துள்ளது.





"நான் பெரிது நீ பெரிது என்று வாழாமல் நாடு பெரிது என்று வாழுங்கள் நாடு நமக்குப் பெரிதானால் நாம் எல்லோரும் அதற்கு சிறியவர்களே, எமது நிலையற்ற வாழ்விலும் பார்க்க நாட்டின் வாழ்வே பெரிது."

*தமிழீழ தேசியத் தலைவர் மேதகு. வே. பிரபாகரன் அவர்கள்*

# தொற்று நோயை காரணம் காட்டி கஞ்சி வழங்க தடையேற்படுத்தியது போல் விசாக பண்டிகை நிகழ்வுகளையும் தடுத்து நிறுத்துவார்களா?

## அருட்தந்தை மா. சத்திவேல்

மே 13, 2024



தொற்று நோய் அபாயத்தை காரணம் காட்டி கஞ்சி வழங்க தடையேற்படுத்திய பொலிசார். அதேபோல் விசாக பண்டிகை நிகழ்வுகளையும் தடுத்து நிறுத்துவார்களா? என சமூக நீதிக்கான செயற்பாட்டாளரும், அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா.சத்திவேல் கேள்வி எழுப்பியுள்ளார்.

அவரால் இன்று (13.05.2024) வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

உப்பு கஞ்சி பகிர்வோடு முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரம் ஆரம்பித்திருக்கையில் சம்பூர் பொலிசார் கஞ்சி பகிருதலை தடுப்பதற்காக மூதூர் நீதிமன்றம் தடை உத்தரவை பெற்றிருப்பதோடு நிகழ்வு ஏற்பாட்டாளர்கள் என இதுவரை நால்வரை கைது செய்துள்ளதாக செய்திகள் வந்துள்ளன. மக்கள் ஒன்று கூடுதல் மூலம் தொற்றுநோய் பரவும் அபாயம் உள்ளது எனவும் காரணம் காட்டி உள்ளனர்.

இது கொரோனா காலத்தில் பயன்படுத்திய சொற் தொடராகும். அதனையே மீண்டும் நினைவேந்தலை தடுத்து நிறுத்தும் ஆயுதமாக கையில் எடுத்திருப்பதும் முள்ளி வாய்க்கால் நினைவேந்தலை தடுப்பதும் இறந்தவர்கள் மற்றும் கொல்லப்பட்டவர்களை நினைவு கூரும் அடிப்படை உரிமையை மறுக்கும் செயலாகும்.

சம்பூர் பொலிசாரின் இத்தகைய அராஜக செயலை அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பு வன்மையாக கண்டிப்பதோடு எதிர்வரும் விசாக பண்டிகையின் போது அதே தொற்று நோய் அபாயத்தை காரணம் காட்டி விசாக பண்டிகை நிகழ்வுகளையும் தடுத்து நிறுத்துவார்களா? எனவும் கேட்கின்றது.

பேரினவாத சிறீலங்கா அரசு சர்வதேச சக்திகள் பேராதரவோடு 2009இல் இனப்படுகொலையை அரங்கேற்றி கொண்டிருக்கையில் ஆண்கள், பெண்கள் என பெரியோர் முதல் சிறுவர் வரை சதை பிண்டங்களாக இரத்த வெள்ளத்திலும் கொல்லப்பட்டும் காயங்களோடும் உயிருக்காக போராடிக் கொண்டிருக்கையில் இன்னும் ஒரு பக்கம் மக்கள் பட்டினியோடு வெறும் உப்பு கஞ்சிக்காக நீண்ட வரிசையில் மக்கள் காத்துக் கிடந்த பேரவலத்தை தமிழர் வரலாற்றில் மறக்க முடியாது.

இவ் வரலாற்று பேரவலத்தினை நினைவு கூறவும் அநியாயமாக கொல்லப்பட்டவர்களுக்கு, காணாமலாக்கப்பட்டவர்களுக்கு நீதி கேட்கவும் கடந்த 15 வருட காலமாக தமிழர் தாயகம் எங்கும் முடிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தில் கஞ்சி பகிர்வதோடு மே 18ஆம் தேதி நினைவேந்தல் நடத்தப்படுகின்றது. உப்பு கஞ்சி மக்களின் நீதிக்கான குரலின் அடையாளமும், ஆயுதமும் ஆகும். இதற்கு எதிராக செயற்படுவதற்கு பொலிசார் நீதியை மடக்கி தம் பக்கம் சாய்ப்பதும் தமிழர்களின் நீதியின் ஆயுதமான கஞ்சியை தட்டிப்பறித்து நீதி குரலை அடக்க நினைப்பது அராஜகமாகும். சம்பூர் பொலிசார் பெற்றிருக்கும் நீதி மன்ற தடையுத்தரவை மீளப்பெற வேண்டுமெனவும் கோரிக்கை விடுக்கின்றோம்.

அத்தோடு முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் கஞ்சி பகிர்வு காரணமாக இதுவரை கைது செய்யப்பட்டுள்ள தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் திருகோணமலை மாவட்ட உதவி செயலாளர் ஹரிஹர குமார் அவர்களையும் பாடசாலை மாணவி உட்பட பெண் சமூக செயற்பாட்டாளர்களையும் உடனடியாக வேலை செய்ய வேண்டும் கூறுகின்றோம். இத்தகைய கைதுகள் கஞ்சி நீதியை தடுத்து விட முடியாது என்பதையும் உறுதியாக கூறுகின்றோம்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகள் தொடர்பில் நாம் முல்லைத்தீவு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியோடு உரையாடிய போது சாதகமான பதிலளித்தமை மகிழ்ச்சியே. இவ்வாறு பொலிஸ் நிலையத்தினரும் நடந்து கொள்ள வேண்டும் எனவும் கேட்கின்றோம்.

உப்பு கஞ்சியை சுதந்திரமாக குடிக்கவிடு எனும் மக்களின் நீதி குரலை, அரசியல் குரலை முள்ளிவாய்க்கால் நினைவேந்தலின் 15 வது ஆண்டிலாவது சர்வதேசத்தின் காதுகளுக்கு எட்டியது வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு.

# யாழ். பல்கலைக்கழகம், தீவகம் அல்லைப்பிட்டியென எங்கும் முள்ளிவாய்க்கால் கஞ்சி!

மே 13, 2024

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரமானது தமிழர் தாயகமெங்கும் இடம்பெற்றுவரும் நிலையில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர்களாலும் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கிவைக்கப்பட்டுள்ளது.





இந்நிகழ்வானது இன்று திங்கட்கிழமை யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான பீட நுழைவாயிலில் இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் சாட்சியாக முள்ளிவாய்க்கால் கஞ்சி விநியோகிக்கப்பட்டது.

2009ஆம் ஆண்டு இறுதி யுத்தத்தில் வலிகள் நிறைந்த அந்த நேரத்தில் கஞ்சி தான் இலட்சக்கணக்கான மக்களின் உயிரை காத்தது என்ற அடிப்படையில் முள்ளிவாய்க்கால் கஞ்சி நினைவை கடத்தும் வகையில் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

அதேவேளை தீவகப்பகுதியினில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தின் இரண்டாவது நாளான இன்று (13) யாழ்ப்பாணம் - அல்லைப்பிட்டியில் நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றது.

அல்லைப்பிட்டி சேமக் காலையில் காணப்படும் அல்லைப்பிட்டி படுகொலையின் போது படுகொலை செய்யப்பட்டவர்களின் தூபியில் நினைவுச் சுடர்கள் ஏற்றப்பட்டு மலர் தூவி வணக்கமும் செலுத்தப்பட்டது.

இலங்கை படையினரால் அல்லைப்பிட்டியில் படுகொலை செய்யப்பட்டவர்களது நினைவாகவே வணக்கம் செலுத்தப் பட்டுள்ளது.

# திருமலை சம்பூரில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கிய குற்றச்சாட்டில் கைதானவர்கள் 27.05.2024 வரையில் விளக்கமறியலில்!

மே 13, 2024

திருகோணமலை சம்பூர் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சேனையூர் பகுதியில் முள்ளிவாய்க்கால் கஞ்சி பரிமாறிய குற்றச்சாட்டில் கைதான பல்கலைக்கழக மாணவி உள்ளிட்ட நால்வரையும் எதிர்வரும் 27ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு சிறீலங்கா நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

சம்பூர் பொலிசாரினால், நேற்றைய நாள் ஞாயிற்றுக்கிழமை இரவு கைது செய்யப்பட்ட நால்வரும் இன்றைய நாள் திங்கட்கிழமை மூதூர் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டதை அடுத்து , அவர்களை எதிர்வரும் 27ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு மன்று உத்தரவிட்டுள்ளது.

சமூக செயற்பாட்டாளர் கமலேஸ்வரன் விஜிதா (வயது 40), பல்கலைக்கழக மாணவி கமலேஸ்வரன் தேமிலா (வயது 22), சமூக செயற்பாட்டாளர் செல்வவினோத்குமார் சுஜானி (வயது 40), பிரதேச சபை முன்னாள் உறுப்பினர் நவரெட்ணராஜா ஹரிஹரகுமார் (வயது 43) ஆகியோரே கைது செய்யப்பட்டுள்ளனர்.

முள்ளிவாய்க்காலில் படுகொலை செய்யப்பட்ட பொதுமக்களை நினைவுகூரும் முகமாக நேற்றைய நாள் ஞாயிற்றுக்கிழமை சேனையூர் பிள்ளையார் ஆலயத்தில் முள்ளிவாய்க்கால் கஞ்சி பரிமாறும் நிகழ்வு பொதுமக்களினால் முன்னெடுக்கப்பட்டிருந்த போது சம்பூர் பொலிசாரினால் நீதிமன்ற தடை உத்தரவு வழங்கப்பட்டது.

நீதிமன்ற தடை உத்தரவை வாங்காமல் முள்ளிவாய்க்கால் கஞ்சி பரிமாறும் நிகழ்வை முன்னெடுத்த குற்றத்திற்காகவே




அவர்கள் கைது செய்யப்பட்டனர்.

# வடக்கு மற்றும் கிழக்கில் இனவாத காவல்துறையின் கட்டளைகளுக்கு பணிந்து நீதிமன்றங்கள் செயற்படுகின்றனவா?

### பாராளுமன்ற உறுப்பினர் செல்வராச கஜேந்திரன்

மே 13, 2024

வடக்கு மற்றும் கிழக்கில் நீதிமன்றங்கள் இனவாத பொலிசாரின் கட்டளைகளுக்குப் பணிந்து செயற்படுகின்றனவா? பொலிசார் நீதிமன்றங்களுக்குச் சென்று எதைச் சொன்னாலும் அதை அப்படியே நீதிமன்றங்கள் ஏற்றுக்கொண்டு செயற்படவேண்டிய நிலைக்கு நீதிமன்றங்களின் சுயாதீனம் பறிக்கப்பட்டுள்ளதா ? எனத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் சபையில் கேள்வி எழுப்பினார்.

பாராளுமன்றத்தில் திங்கட்கிழமை (13) இடம்பெற்ற நிதிக்கட்டளைகள் தொடர்பான விவாதத்தில் உரையாற்றும் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியதாவது,

எமது தமிழின தேசத்தின் மீதான ஒடுக்குமுறைகள் ஆரம்பத்திலிருந்து இன்று வரை எல்லை கடந்து செல்கின்றன. எமது தேசத்தின் மீது இலங்கை அரசு இனப்படுகொலையை அரங்கேற்றி 15 ஆண்டுகள் கடந்துள்ளன. ஆனால் இன்றுவரை படுகொலை செய்யப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கவில்லை. இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்ட மற்றும் கருணா, பிள்ளையான், ஈ.பி.டி.பி.யினரால் கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்டவர்களை தேடி அவர்களின் உறவுகள் இன்றும் அலைந்து கொண்டிருக்கின்றனர். தொடர் போராட்டத்தில் ஈடுபடுகிறார்கள்.

இவ்வாறான நிலையில் மே 18 ஆம் திகதியை முன்னிட்டு எங்கள் மீது நடத்தப்பட்ட இனப்படுகொலையை நினைவுகூர்ந்து அதற்கான நீதியினைக்கோரும் விதமாக வடக்கு மற்றும் கிழக்கில் வாழும் தமிழ் மக்கள் இந்த இனப்படுகொலை வாரம் அனுஷ்டிப்பதும் அந்த இனப்படுகொலை, 2009 ஆம் ஆண்டில் உணவை ஆயுதமாகக் கொண்டு கோத்தபாய ராஜபக்சவும் அவரது அண்ணன் மஹிந்த ராஜபக்சவும் தமிழ் மக்களை பட்டினி சாவுக்குள் தள்ளிய போது தமிழ் மக்கள் கஞ்சி குடித்து உயிர் பிழைத்த வரலாறு உள்ளது.

இதனை நினைவு கூறும் விதமாக மக்களுக்கு கஞ்சி கொடுக்கும் நிகழ்வை இந்த வாரம் நாம் அனுஷ்டிப்பது வழமை. அந்த வகையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை திருகோணமலையில் கட்டைப்பறிச்சான் பகுதியில் புவன கணபதி ஆலயத்தில் கஞ்சி கொடுக்கும் நிகழ்வு நடைபெற்ற போது அந்த நிகழ்வில் ஈடுபட்டமைக்காக எமது கட்சியின் திருகோணமலை மாவட்ட உதவி செயலாளர் ஹரிஹர குமார் மற்றும் 3 பெண்கள் கைது செய்யப்பட்டு மூதூர் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டு 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்கள்.

இதுதான் இந்த நாட்டின் நல்லிணக்கம், பிற இனங்கள், மதங்களை மதிக்கும் பண்பு. ஆலயத்தில் கஞ்சி காய்ச்சப்பட்டமைக்காக இந்த தண்டனை வழங்கப்பட்டுள்ளது என்பது மிகவும் வேதனைக்குரியது. அவர்கள் 4 பேரும் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும்.

வடக்கு மற்றும் கிழக்கில் நீதிமன்றங்கள் இனவாத பொலிசாரின் கட்டளைகளுக்குப் பணிந்து செயற்படுகின்றனவா என்ற கேள்வி எழுந்துள்ளது. பொலிசார் நீதிமன்றங்களுக்குச் சென்று எதைச் சொன்னாலும் அதை அப்படியே நீதிமன்றங்கள் ஏற்றுக்



கொண்டு செயற்பட வேண்டிய நிலைக்கு நீதிமன்றங்களின் சுயாதீனம் பறிக்கப்பட்டுள்ளதா? கடந்த ஞாயிற்றுக்கிழமை நீதிமன்றம் வழங்கிய உத்தரவில் பொதுமக்களை ஒன்று கூட்டுவதும் அவர்களுக்கு உணவு, கஞ்சி பரிமாறுவதும் சுகாதார சீர்கேட்டை ஏற்படுத்தும் எனக்கூறி பொலிசார் கோரிய தடை உத்தரவுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது .

அப்படியெனில் எதிர்வரும் வெசாக் தினங்களில் "தன்சல்" உணவு வழங்கும் செயற்பாடுகளைச் சுகாதார சீர்கேட்டை காரணம் காட்டி தடுத்து நிறுத்துமாறு பொலிசார் நீதிமன்றங்களை கோருவார்களா? அதனை ஏற்று நீதிமன்றங்கள் தடையுத்தரவு வழங்குமா? அவ்வாறான உணவு வழங்கலை தடுத்து நிறுத்த உங்களால் முடியுமா? தமிழர்களுக்கு ஒரு நீதி சிங்களவர்களுக்கு ஒரு நீதியா? இந்த இனவாத செயற்பாடுகளை உடனடியாக நிறுத்துங்கள் என்றார்.

# முள்ளிவாய்க்கால் ஆத்மாக்கள் ராஜபக்ஷ குடும்பத்தை நிம்மதியாக வாழ விடாது!

### பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன்

மே 13, 2024

இறுதிக்கட்ட யுத்தத்தின் போது பசியில் வாடி கஞ்சிக்காக வரிசையில் நின்ற குழந்தைகள் மீது குண்டுகளை வீசி கொலை செய்ய கோட்டாபய ராஜபக்ஷ கட்டளை பிறப்பித்தார்.

14 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டதற்குக் காரணமாக இருந்த ராஜபக்ஷ குடும்பத்தை சேர்ந்தவர்கள் ஒரு போதும் நிம்மதியோடு இருக்கப்போவதில்லை.

இறந்துபோன முள்ளிவாய்க்கால் ஆத்மாக்கள், இவர்களை ஒரு போதும் நிம்மதியாக இருக்க விடாது எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் திங்கட்கிழமை (13) இடம்பெற்ற நிதிக்கட்டளைகள் தொடர்பான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியதாவது,

யுத்தம் இடம்பெற்றபோது பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக இருந்த கோட்டாபய ராஜபக்ஷ, யுத்தம் நடக்கின்ற பிரதேசங்களில் 75,000 மக்கள் மட்டுமே உள்ளார்கள் என்று கூறினார்.

ஆனால் யுத்தம் முடிந்த பின்னர் 410,000 க்கும் மேற்பட்ட மக்கள் வவுனியா இடைத்தங்கல் முகாம்களுக்குக் கொண்டு வரப்பட்டார்கள்.

75 ஆயிரம் மக்களுக்கு உணவு அனுப்பி 400,000 மக்களைப் பட்டினியில் போட்டு பட்டினியால் எம் மக்கள் சாகடிக்கப்பட்டார்கள்.

41 ஆயிரம் மக்கள்தான் இடைத்தங்கல் முகாம்களுக்குக் கொண்டுவரப்பட்டார்கள் என்றால் எத்தனை ஆயிரம் மக்கள் அங்கே கொன்றொழிக்கப்பட்டார்கள். கஞ்சிக்காக வரிசையில் நின்ற குழந்தைகள் மீது குண்டுகள் வீசப்பட்டு அவர்கள் கொல்லப்பட்டார்கள். இதனைச் செய்தவர் கோட்டாபய ராஜபக்ஷ.

69 இலட்சம் சிங்கள வாக்குகளினால் நான் வந்தவன். எனக்குத் தமிழ் வாக்குகள் தேவையில்லையென மார்தட்டி வந்த கோட்டாபய ராஜபக்ஷவை அதே சிங்கள மக்கள், அதே சிங்கள இளைஞர்கள் அரகலய போராட்டத்தின் மூலம் ஓட ஓட விரட்டியடித்தார்கள். தர்மம் வென்றது. கர்மம் அவரை நாட்டிலிருந்து அகற்றியது. இருக்க இடமில்லாமல் தெருத்தெருவாக திரிந்தார்.

இறந்துபோன முள்ளிவாய்க்கால் ஆத்மாக்கள் இன்றும் கோட்டாபய ராஜபக்ஷவை நிம்மதியாக உறங்க விடவில்லை. 146, 000 க்கும் மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டதற்குக் காரணமாக இருந்த ராஜபக்ஷ குடும்பத்தை சேர்ந்தவர்கள் எந்தக்காலத்திலும் நிம்மதியோடு இருக்கப்போவதில்லை என்பதையும் உறங்கப்போவதில்லை என்பதையும் கர்மவினையும் வரலாறும் அவர்களுக்குக் கற்பிக்கும்.

75 ஆயிரம் மக்களுக்கு உணவு அனுப்பி அங்கு இந்தளவு மக்கள்தான் இருக்கின்றார்கள் என்று கூறி ஆயிரக்கணக்கான மக்களைப் பட்டினியால் கொன்றவர்களுக்கு இந்த உலகம் என்ன தண்டனை வழங்கப்போகின்றது? மக்கள் அங்குள்ள ஐ.நா.அமைப்புக்கள், செஞ்சிலுவைச் சங்கம் போன்றவற்றின் முன்னால் நின்று எங்களை விட்டுப்போகாதீர்கள் எனக் கதறிய போது இந்த அமைப்புக்கள் மூட்டை முடிச்சுகளுடன் வன்னியிலிருந்து வெளியேறின.



ஆதரவு குரல் எழுப்பிக் கதறிய அந்த மக்களைத் தெருவிலே விட்டு இந்த அமைப்புக்கள் தப்பியோடின. இவர்கள் கைவிட்டு ஓடியதால் அத்தனை ஆயிரம் மக்கள் அந்த மண்ணில் கொல்லப்பட்டார்கள். இதற்கு ஐ.நா.மற்றும் சர்வதேச அமைப்புக்கள் பொறுப்பு சொல்ல வேண்டும்.

வெள்ளைக் கொடியுடன் வந்தவர்கள் கொல்லப்பட்டதற்கு நோர்வே சமாதானத்தூதுவர் எரிக் சொல் ஹெய்மும் பொறுப்புக்கூற வேண்டும். இன்றும் தமிழர் தெருவில் நிற்பதற்கு யார் காரணம்?

யுத்தத்திற்கு இலங்கை அரசுக்கு ஆயுதம் வழங்கிய நாடுகள் யுத்தம் முடிந்த பின்னர் தமிழர் பிரச்சினைக்கு ஏன் தீர்வு வழங்க முன்வரவில்லை? ஏன் இந்த நாடுகளினால் இலங்கைக்கு அழுத்தம் கொடுக்க முடியவில்லை? ஆகவே நாங்கள் பேச முடியாத மனிதர்களாக, அநாதைகளாக, உலகப்பந்தில் ஒதுக்கப்பட்ட ஒரு இனமாக இருக்கின்றோம். தமிழ்த் தேசிய இனம் தொடர்ந்தும் அழிக்கப்படுகின்றது. அந்த இனத்தின் நிலம், உரிமை பறிக்கப்படுகின்றது என்றார்.

# யாழில் முள்ளிவாய்க்கால் தமிழின அழிப்பு வலிசுமந்த நினைவு ஊர்தி தமிழர் தாயகத்தில் வலம் வருகின்றது!

மே 14, 2024

யாழில் முள்ளிவாய்க்கால் தமிழின அழிப்பு வலிசுமந்த நினைவு ஊர்திப் பவனி பல பகுதிகளிலும் வலம் வருகின்றது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் வலம் வரும் குறித்த ஊர்தியின் முன்பாக படையினரின் கெடுபிடிகளுக்கு மத்தியில் மக்கள் நினைவேந்தி மலர் வணக்கம் செலுத்தி வருகின்றனர்.






# தமிழீழ தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களது பூர்வீக விட்டிற்கு அருகில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு!

மே 14, 2024

முள்ளிவாய்க்கால் கஞ்சி விநியோகமும் முள்ளிவாய்க்கால் நினைவு ஊர்தி பவனியும் இன்றைய நாள் செவ்வாய்க்கிழமை வல்வெட்டித்துறை பகுதியில் இடம்பெற்றது.





தமிழீழ தேசியத் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களது பூர்வீக வீட்டிற்கு அருகில், ஆலடிச்சந்தியில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.

அதன் போது, முள்ளிவாய்க்கால் நினைவு ஊர்தியில் முள்ளிவாய்க்கால் மண்ணில் உயிர்நீத்தவர்களை நினைவுகூறி இரு மாவீரர்களின் தந்தையான தங்கேஸ்வரனால் பொதுச் சுடரேற்றி வைக்கப்பட்டு தொடர்ச்சியாக ஈகைச்சுடரேற்றி அகவணக்கம் செலுத்தி மலர் வணக்கமும் செலுத்தப்பட்டது.

# முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகளை முன்னெடுத்தவர்களுக்கு சிறீலங்காப் பொலிசார் எச்சரிக்கை!

மே 14, 2024

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் அம்பாறை பெரிய நீலாவணை பாண்டிருப்புப் பகுதியில் நினைவேந்தல் நிகழ்வுகளை முன்னெடுப்பதற்கு சிறீலங்காப் பொலிசார் தடை ஏற்படுத்தியுள்ளனர்.

முள்ளிவாய்க்காலில் உயிர் நீத்தவர்களின் நினைவாக முள்ளி வாய்க்கால் கஞ்சிகாய்ச்சி பரிமாறப்பட்டு வடக்கு கிழக்கில் நினை வேந்தல் நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் இன்றைய நாள் செவ்வாய்க்கிழமை கல் முனை பாண்டிருப்பு அரசடி அம்மன் ஆலய முன்றலில், அம்பாறை மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட சங்கம் பொதுமக்களுடன் இணைந்து முள்ளிவாய்க்கால் கஞ்சி பரி மாறும் நிகழ்வு முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இதன்போது சம்பவ இடத்திற்கு வருகை தந்த பெரிய நீலாவணை பொலிசார் கல்முனை நீதவான் நீதிமன்ற தடை உத்தரவை காண்பித்து குறித்த நிகழ்வினை நிறுத்துமாறு தடையேற்படுத்தியுள்ளனர்.



# முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை அடக்கினால் மீண்டும் இருண்ட யுகம் உருவாகும்!

## முன்னாள் வடக்கு மாகாணசபை உறுப்பினர் சபா குகதாஸ்

மே 14, 2024

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை அடக்கினால் மீண்டும் இருண்ட யுகம் உருவாகும் என முன்னாள வடக்கு மாகாணசபைப் உறுப்பினர் சபா குகதாஸ் தெரிவித்துள்ளார்.

அவரால் இன்றையதினம் (14.05.2024) வெளியிடப்பட்ட ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

தமிழர்கள் மீது சிங்கள ஆட்சியாளர்கள் ஏவி விட்ட வன் முறையும் அதனால் ஏற்பட்ட பாரிய இனவழிப்பும் முழு நாட் டையும் அதள பாதாளத்தில் தள்ளியது.

அத்துடன், வாக்களித்த சொந்த மக்களால் வரலாற்றில் ஒரு ஜனாதிபதி ஓட ஓட துரத்தப்பட்டதை பேரினவாத ஆட்சியாளர்கள் சிறிது காலத்தில் மறந்து விட்டார்கள் என்பது மீண்டும் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்துள்ள வன்முறைகள் காட்டுகின்றன.

முள்ளிவாய்க்கால் இனவழிப்புப் போரில் ஐந்து மாதங்கள் உணவு விநியோகம் முற்றாக தடுக்கப்பட்டு, அப்பாவிப் பொது மக்களும் குழந்தைகளும் பட்டினிக்கும் நோய் வாய்ப்பிற்கும் உட்படுத்தப்பட்டனர்.

அதனையடுத்து, சில ஆண்டுகளில் முழு நாட்டையும் பிச்சை ஏந்த வைத்த வரலாற்றை மறந்து மீண்டும் பாதிக்கப்பட்ட மக்கள் தங்கள் உறவுகளை நினைத்து மேற்கொள்ளும் நினைவேந்தல்கள் தடுக்கப்படுகின்றன.

அவற்றில் பங்கு கொள்பவர்களை கைது செய்வது மீண்டும் இந்த நாட்டை ஒரு இருண்ட யுகத்திற்கு கொண்டு செல்லும் என்பதை ஆட்சியாளர்கள் மறந்து விடக்கூடாது.



இலங்கைத் தீவின் மீள் எழுச்சி என்பது பாதிக்கப்பட்ட மக்க ளுக்கு நீதி வழங்கப்படுவதன் மூலமும் தேசிய இனப் பிரச் சினைக்கு பொருத்தமான அரசியல் தீர்வு வழங்குவதன் மூலமுமே வெற்றி பெறும் இல்லையேல் மீண்டும் மீண்டும் இருண்ட யுகம் தான் - என்றுள்ளது.

# திருகோணமலை சம்பூரில் பெண்கள் பொலிசாரால் தாக்கப்பட்ட விவகாரம் குறித்து இளம் பத்திரிகையாளர் சங்கம் மனித உரிமை ஆணைக்குழுவிற்கு கடிதம்; பொலிசாருக்கு எதிராக விசாரணைகளை முன்னெடுக்குமாறு வேண்டுகோள்!

மே 14, 2024

திருகோணமலை சம்பூரில் முள்ளிவாய்க்கால் கஞ்சியை தயாரித்து வழங்கிய பெண்களிற்கு எதிராக இலங்கை பொலிசார் செயற்பட்ட விதம் குறித்து இலங்கை மனித உரிமை ஆணைக்குழு விசாரணைகளை முன்னெடுக்கவேண்டும் என இலங்கை இளம் பத்திரிகையாளர்கள் சங்கத்தின் தரிந்து ஜெயவர்த்தன வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் தலைவருக்கு எழுதியுள்ள கடிதத்தில் தரிந்து ஜெயவர்த்தன இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

சம்பூர் விவகாரம் தொடர்பில் - இலங்கை பொலிசாரின் நடவடிக்கைகள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளவேண்டும் இலங்கை அரசமைப்பின் பல பிரிவுகளின் கீழ் நடவடிக்கை எடுக்கவேண்டும் என வேண்டுகோள் விடுக்கின்றோம் என தரிந்து ஜெயவர்த்தன வேண்டுகோள் விடுத்துள்ளார்

இலங்கை அரசமைப்பினால் உறுதிப்படுத்தப்பட்ட அடிப்படை உரிமைகளை மீறும் விதத்தில் இலங்கை பொலிசார் நடந்து கொண்டனர் என இலங்கை மனித உரிமை ஆணைக்குழு தீர்ப்பளிக்கவேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பொலிஸ்மா அதிபரும் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவும் மனித உரிமைகளை மீறிய அதற்கு உதவிய பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என மனித உரிமை ஆணைக்குழு பரிந்துரை செய்யவேண்டும் எனவும் அவர் தனது கடிதத்தில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பெண்களை ஈவிரக்கமற்ற விதத்தில் மனிதாபிமானமற்ற விதத்தில் இழிவான விதத்தில் நடத்திய பொலிசாருக்கு எதிராக சித்திரவதை சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்கவேண்டும் என பொலிஸ்மா அதிபருக்கும் சட்டமா அதிபருக்கும் மனித உரிமை



ஆணைக்குழு பரிந்துரை செய்யவேண்டும் எனவும் தரிந்து ஜெயவர்த்தன வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# சிறீலங்கா பொலிசாரின் தடைகளின் மத்தியில் மூன்றாவது நாளாகவும் தொடரும் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு!

மே 14, 2024

இனப்படுகொலை வாரத்தின் மூன்றாம் நாளான இன்று மட்டக்களப்பில் முள்ளிவாய்க்கால் கஞ்சி பரிமாறும் நடவடிக்கைகள் பொலிசாரின் பல்வேறு தடைகளையும் அச்சுறுத்தலையும் மீறி நடைபெற்றது.



இன்றைய நாள் மட்டக்களப்பு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கம் மற்றும் சிவில் சமூக செயற பாட்டாளர்கள் இணைந்து மூன்றாவது நாளாகவும் முள்ளிவாய்க்கால் கஞ்சி பரிமாறும் நிகழ்வு மட்டக்களப்பு நகரில் விமான நிலைய வீதியில் உள்ள ஸ்ரீபரிபூர்ண விநாயகர் ஆலயத்திற்கு முன்பாக நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்க தலைவி திருமதி அ.அமலநாயகி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஞா.சிறிநேசன், ஜேசுசவை துறவி அருட்தந்தை ஜோசப்மேரி, சிவில் சமூக செயற்பாட்டாளர் வி.லவகுமார், தமிழரசுக்கட்சியின் மகளிர் அணி செயலாளர் திருமதி ஆர்.ஜெயபிரகாஸ் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது ஆலயத்திற்கு முன்பாக கஞ்சி செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்ட நிலையில் அங்கு பெருமளவான பொலிசார் குவிக்கப்பட்டதுடன் பெருமளவு புலனாய்வாளர்களும் குவிக்கப்பட்டிருந்தனர்.

அங்கு வந்த மட்டக்களப்பு பிராந்திய உதவி பொலிஸ் அத்தியட்சகர் தலைமையிலான பொலிசார் அங்கு கஞ்சி வழங்கும் செயற்பாடுகளை செய்யவேண்டாம் என்று அங்கிருந்து அனைத்தையும் எடுத்துக்கொண்டு செல்லுமாறும் பணித்த நிலையில் அதற்கு மறுப்பு தெரிவித்த ஏற்பாட்டாளர்கள் தொடர்ந்து தமது செயற்பாடுகளை முன்னெடுத்தனர்.

இந்த நிலையில் சுகாதார நடைமுறையினை பின்பற்றவும் பொதுச்சுகாதார பரிசோதகர்களின் ஆலோசனைகள் இன்று கஞ்சி செயற்பாடுகளை முன்னெடுக்கமுடியாது என மீண்டும் தடைகளை ஏற்படுத்துவதற்கு பொலிஸார் முயற்சித்த நிலையில் அங்கு பொதுச்சுகாதார பரிசோதர் ஒருவரையும் அழைத்துவந்து நிகழ்வினை தடுப்பதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன.

இந்த நிலையில் அங்குவந்த பொதுச்சுகாதார பரிசோதகர் சுகாதார நடைமுறைகளைப்பேணி செயற்பாடுகளை முன்னெடுக்குமாறு தெரிவித்ததை தொடர்ந்து சுகாதார நடைமுறைகளை பேணியவாறு கஞ்சி காய்ச்சும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

இதன்போது கஞ்சியை பரிமாறும் நடவடிக்கைகள் முன்



னெடுக்கப்பட்டபோது விமான நிலைய வீதியின் இரு மருங்கிலும் போக்குவரத்து பொலிசார் நிறுத்தப்பட்டு வீதியில் செல்வோருக்கு கஞ்சியை பரிமாறும் செயற்பாடுகளை தடுப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

கஞ்சியை பருக வாகனங்களை நிறுத்தியவர்களை அச்சுறுத்தும் வகையிலான செயற்பாடுகளை பொலிஸார் முன்னெடுத்திருந்த நிலையிலும் பெருமளவான மக்கள் கஞ்சியை வாங்கி பருகும் நிலைமையை காணமுடிந்தது.

# முள்ளிவாய்க்கால் கஞ்சி தயாரிக்க முற்பட்டவர்களை தடுக்க கல்முனை பாண்டிருப்பில் சிறீலங்கா பொலிசார் குவிப்பு!

மே 14, 2024

அம்பாறை மாவட்டம் பெரிய நீலாவணை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாண்டிருப்பு பகுதியில் முள்ளிவாய்க்கால் கஞ்சி தயாரிக்க முற்பட்டவர்களை தடுப்பதற்கு நூற்றுக்கணக்கான பொலிசார் குவிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த சம்பவம், இன்று செவ்வாய்க்கிழமை (14) காலை 8.30 மணிக்கு இடம்பெற்றுள்ளதுடன் இச்சம்பவத்தில் தமிழ் தேசிய மக்கள் முன்னணி கட்சியின் மாவட்ட அமைப்பாளர் புஸ்பராஜ் துஷானந்தன், அம்பாறை மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட சங்க தலைவி தம்பிராசா செல்வராணி ஆகியோருக்கு பொலிசாரினால் எச்சரிக்கை விடுக்கப்பட்டு குறித்த நிகழ்வு தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.

இதன் போது, கல்முனை பாண்டிருப்பு அரசடி அம்மன் ஆலய முன்றலில் தமிழ் தேசிய மக்கள் முன்னணி கட்சி ஏற்பாட்டில் அம்பாறை மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட சங்கம் பொதுமக்களுடன் இணைந்து முள்ளிவாய்க்கால் கஞ்சி பரிமாறும் நிகழ்வினை முன்னெடுத்திருந்தது.

எனினும், சம்பவ இடத்திற்கு வருகை தந்த பெரியநீலாவணை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஜே.எஸ். கே.வீரசிங்க தலைமையிலான பொலிசார் கல்முனை நீதிவான் நீதிமன்ற தடை உத்தரவை காண்பித்து தமிழ் தேசிய




மக்கள் முன்னணி கட்சியின் மாவட்ட அமைப்பாளர் புஸ்பராஜ் துஷானந்தன் என்பவருக்கு தடை உத்தரவு உள்ளதாகவும் எனவே முள்ளிவாய்க்காலில் படுகொலை செய்யப்பட்ட பொது மக்களை நினைவுகூரும் முகமாக ஏற்பாடு செய்துள்ள குறித்த நிகழ்வினை நிறுத்துமாறு கூறி தடை உத்தரவை வழங்கினர்.

அத்துடன், அம்பாறை மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட சங்க தலைவி தம்பிராசா செல்வராணிக்கு பொலிஸாரினால் எச்சரிக்கை விடுக்கப்பட்டு அவ்விடத்தில் இருந்து செல்லுமாறு தெரிவித்தனர்.

# மன்னாரில் கனிய மணல் அகழ்வுக்கு மக்கள் தொடர்ந்தும் எதிர்ப்பு!

மே 14, 2024

மன்னார் மாவட்டத்தில் அவுஸ்திரேலியாவை தளமாகக் கொண்டு இயங்கும் டைட்டானியம் சான் லிமிடெட் நிறுவனத்தினரால் மேற்கொள்ளப்படவுள்ள கனிய மணல் அகழ்வு தொடர்பாக பொது மக்களின் விருப்பத்தைப் பெற்றுக்கொள்வதற்கான ஒரு அவசர கூட்டம் திங்கட்கிழமை (13) மதியம் 2 மணி முதல் மன்னார் மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றது.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் கே.கனகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற குறித்த கூட்டத்தில் மன்னார் பிரஜைகள் குழு, பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், மீனவ அமைப்புகள், சமூக மட்ட அமைப்புகள் திணைக்கள தலைவர்கள், கலந்து கொண்டிருந்தார்கள்.

இதன் போது அவுஸ்திரேலியாவை தளமாகக் கொண்டு இயங்கும் டைட்டானியம் சான் லிமிட்டெட் நிறுவனத்தினரால் மேற்கொள்ளப்படவுள்ள கனிய மணல் அகழ்வு தொடர்பாக திட்டம் தொடர்பாக மக்களுக்கு முன் வைக்கப்பட்டது. இதன் போது மன்னாரிற்கு குறித்த திட்டத்தினால் பாரிய பாதிப்புகள் உள்ளமை குறித்து மக்களாலும்,பொது அமைப்புகளின் பிரதிநிதிகளினாலும் சுட்டிக்காட்டப்பட்டது.







குறித்த கலந்துரையாடலில் கலந்து கொண்டிருந்த புவியியல் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் நாகமுத்து பிரதீபராஜா குறித்த திட்டம் மன்னாரில் அமுல் படுத்தும் பட்சத்தில் மன்னாரில் பாரியைப் பாதிப்புகள் ஏற்படும் என்ற விடையத்தைச் சுட்டிக்காட்டினார்.

அவரது கருத்தை வருகை தந்த பொது அமைப்புக்கள் மற்றும் கிராம மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள், பிரஜைகள் குழுவினர் வரவேற்றனர்.

இதேவேளை மன்னார் தீவில் குறித்த திட்டத்தை அமுல்படுத்துவதை மக்கள் ஏற்றுக் கொள்ளாத காரணத்தால் மன்னார் தீவைத் தவிர்த்து வேறு நிலப்பரப்பில் குறித்த திட்டம் தொடர்பான ஆய்வை மேற்கொள்ள அனுமதி வழங்குவது என்றும் மன்னார் தீவில் கனிய மணல் அகழ்வுக்கு ஆதரவு வழங்காத நிலையில் சுற்றுச்சூழல் தாக்கம் தொடர்பான மதிப்பீட்டை மேற்கொள்வதற்கு அனுமதி வழங்க முடியாது எனப் பொதுமக்கள் உறுதிய உள்ள காரணத்தினால் குறித்த கூட்டம் நிறைவுக்குக் கொண்டு வரப்பட்டது.

அவுஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் டைட்டானியம் சான் லிமிடெட் நிறுவனத்தின் இயக்குனர் சாலிய உள்ளடங்களாக குறித்த நிறுவனத்தின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டிருந்தனர்.

சுற்றுச்சூழல் தாக்கம் தொடர்பான மதிப்பீட்டை பெற்றுக் கொள்ளும் வகையில், குறித்த நிறுவனத்தினர் தெரிவு செய்யப்பட்ட இடங்களுக்கு செல்லும் போது மக்கள் தொடர்ச்சியாக எதிர்ப்பையும் கண்டனத்தையும் வெளிப்படுத்தி வந்தனர்.

இந்த நிலையில் ஜனாதிபதி செயலகத்தின் வேண்டுகோளுக்கு அமைய, பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக குறித்த கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது.

மன்னார் தீவில் குறித்த திட்டத்தை நடைமுறைப்படுத்த முடியாததன் காரணத்தைச் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு அறிக்கை மூலம் தெரியப்படுத்த உள்ளதாக அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் தெரிவித்தார்.

குறித்த கலந்துரையாடலில் மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் மாக்கஸ் அடிகளார், பொது அமைப்புக்களின் ஒன்றிய தலைவர் வி.எஸ்.சிவகரன் உட்பட சமூக மட்ட பிரதிநிதிகளும் கலந்து கொண்டிருந்தனர்.

# முள்ளிவாய்க்கால் தமிழின அழிப்பை நினைவு கூர்ந்து யாழ். பல்கலைக்கழகத்தில் குருதிக் கொடை!

மே 14, 2024

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பில் 2009 ஆம் ஆண்டு முள்ளிவாய்க்காலில் இன அழிப்புச் செய்யப்பட்ட தமிழ் மக்களை நினைவேந்தி குருதிக் கொடை நிகழ்வு இன்று (14.05.2024) செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் கட்டடத் தொகுதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.




பல்கலைக்கழக மாணவர்கள், ஊழியர்கள், விரிவுரையாளர்கள் என பலரும் குருதிக்கொடை வழங்கி வரும் நிலையில் பொதுமக்கள் உள்ளிட்ட அனைவரும் பங்கேற்க முடியும் என்பதோடு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தவிர்ந்த ஏனைய பல்கலைக்கழக மாணவர்களும் குருதிக் கொடையில் உணர்வுடன் பங்கேற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது .

கஞ்சியை பருக வாகனங்களை நிறுத்தியவர்களை அச்சுறுத்தும் வகையிலான செயற்பாடுகளை பொலிஸார் முன்னெடுத்திருந்த நிலையிலும் பெருமளவான மக்கள் கஞ்சியை வாங்கி பருகும் நிலைமையை காணமுடிந்தது.












# ரொரான்ரோவில் சந்தேக நபரைத் துரத்திய பொலிசாரால் நான்கு பேர் பலி!

மே 02, 2024

கனடாவில், மதுபானக்கடை ஒன்றில் திருடியதாக சந்தேகத்தின்பேரில் நபர் ஒருவரை பொலிசார் துரத்த, அதனால் ஏற்பட்ட விபத்தில், குழந்தை ஒன்று உட்பட நான்கு பேர் பலியான சம்பவத்தில், பலியானவர்கள் பேரக்குழந்தையைப் பார்க்க கனடா சென்ற இந்திய தம்பதியர் என்றும், அவர்கள் பார்க்கச் சென்ற அந்தக் குழந்தையும் விபத்தில் பலியாகிவிட்டதாகவும், அதிரவைக்கும் தகவல் வெளியாகியுள்ளது.

திங்கட்கிழமை இரவு 8.10 மணியளவில், ஒன்ராறியோவிலுள்ள Clarington என்னுமிடத்தில், மதுபானக்கடை ஒன்றில் ஒருவர் திருட முயல்வதாக தகவல் கிடைத்ததையடுத்து பொலிசார் அந்த நபரைப் பிடிக்க முயல, அவர் வேன் ஒன்றில் ஏறி தப்பிக்க முயன்றுள்ளார்.

அவர் தவறான திசையில் செல்ல, பொலிசாரும் அவரை துரத்தியுள்ளார்கள். அப்போது, அந்த வேன், எதிரே வந்த கார் ஒன்றின் மீது மோதியதில், அந்தக் காரிலிருந்த ஒரு தாத்தா பாட்டியும், அவர்களுடைய பேரப்பிள்ளையான ஒரு கைக்குழந்தையும் பலியானார்கள். வேனை ஓட்டிவந்த அந்த சந்தேக நபரும் சம்பவ இடத்திலேயே பலியாகியுள்ளார்.

இந்நிலையில், பலியானவர்கள், இந்தியாவிலிருந்து தங்கள் பிள்ளைகளையும் பேரப்பிள்ளையையும் காண கனடாவுக்குச் சென்ற ஒரு தம்பதியர் என தற்போது தகவல் வெளியாகியுள்ளது.

முறையே 60 மற்றும் 55 வயதுடைய அந்த இந்தியத் தம்பதியரும், அவர்களுடைய பேரனான முன்று மாதக் குழந்தையும்



அந்த பயங்கர விபத்தில் பலியாகிவிட்டதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

# கனடாவில் சர்வதேச மாணவர்கள் இனி 20 மணி நேரம் மட்டுமே வேலை செய்ய அனுமதி!

## கனடா புலம்பெயர்தல் துறை அமைச்சர் மார்க் மில்லர்

மே 02, 2024

கனடாவில் கல்வி கற்க வரும் மாணவர்களை பணி செய்ய அனுமதிப்பதால், அவர்களில் சிலர் கனடாவுக்கு வரும் நோக்கமே கல்வி கற்பதற்காக அல்லாமல் பணி செய்வதற்கான என மாறிவிடுகிறது என்று கூறியுள்ளார் கனடா புலம்பெயர்தல் துறை அமைச்சர்.

கனடாவில் கல்வி கற்க வரும் மாணவர்கள், தங்கள் பணத் தேவைகளுக்காக, வார்த்தில் 20 மணி நேரம் வேலை செய்யலாம் என அனுமதியளிக்கப்பட்டிருந்தது.

கோவிட் காலகட்டத்தில் கனடாவில் பணியாளர்கள் தட்டுப்பாடு ஏற்பட்டதால், அதை சமாளிக்க, மாணவர்கள் கூடுதலாக சில மணி நேரம் பணி செய்ய அனுமதிக்கப்பட்டது. அதாவது, கல்வி கற்கும் மாணவர்கள் 20 மணி நேரம் மட்டுமே வேலை செய்யலாம் என்னும் கட்டுப்பாடு அகற்றப்பட்டது.

ஆனால், அந்த விதி, இன்றுடன், அதாவது, ஏப்ரல் மாதம் 30ஆம் திகதியுடன் முடிவுக்கு வருகிறது. இனி, கல்வி கற்கும் சர்வதேச மாணவர்கள், வாரத்துக்கு 20 மணி நேரம் மட்டுமே வேலை செய்ய அனுமதி உண்டு.

கனடாவுக்கு சர்வதேச மாணவர்களை அனுமதிப்பதன் நோக்கமே, அவர்களுக்கு கல்வி அளிப்பதற்காகத்தான். ஆனால், அவர்களை குறிப்பிட்ட நேரத்துக்கு மேல் பணி செய்ய அனுமதிப்பதால், கனடாவுக்கு வரும்போதே, கல்வி கற்கும் நோக்கத்துடன் வராமல், பணி செய்யும் நோக்கத்துடன் வருபவர்கள் இருக்கிறார்கள் என்று கூறியுள்ளார் கனடா புலம்பெயர்தல் அமைச்சரான மார்க் மில்லர்.

இந்த, வாரத்துக்கு 20 மணி நேரம் வேலை செய்யும் அனுமதி, செப்டம்பர் மாதம் வரை அமுலில் இருக்கும். செப்டம்பருக்குப் பிறகு அதை 24 மணி நேரமாக அரசு அதிகரிக்க திட்டமிட்டு



வருவது குறிப்பிடத்தக்கது.

# கனடாவில் சீக்கியத் தலைவர் கொல்லப்பட்ட வழக்கில் மூன்று இந்தியர்கள் கைது!

மே 04, 2024

கனடாவில் சீக்கிய பிரிவினைவாத தலைவர் ஒருவர் கொல்லப்பட்டது தொடர்பாக இரு நாடுகளுக்கும் இடையே பெரும் இராஜதந்திர மோதலைத் தூண்டியதாக மூன்று இந்தியர்கள் கைது செய்யப்பட்டு குற்றம் சாட்டப்பட்டுள்ளனர்.



ஹர்தீப் சிங் நிஜ்ஜார் (வயது45) கடந்த ஜூன் மாதம் வான்கூவர் புறநகர் பகுதியில் உள்ள பரபரப்பான கார் நிறுத்துமிடத்தில் முகமூடி அணிந்த துப்பாக்கிதாரிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, இந்திய அரசு சம்பந்தப்பட்டிருக்கலாம் என்று குற்றம் சாட்டியதைத் தொடர்ந்து, இராஜதந்திர ரீதியிலான மோதல்கள் அதிகரித்தன.

இந்த குற்றச்சாட்டை டெல்லி கடுமையாக மறுத்துள்ளது.

சந்தேக நபர்கள் நேற்று வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டனர். கரன் ப்ரார் (வயது 22), கமல் ப்ரீத் சிங் (வயது 22) மற்றும் கரண் ப்ரீத் சிங் ((வயது 28) எனக் கூறப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட மூவரும் ஆல்பர்ட்டாவின் எட்மண்டனில் வசித்து வந்தனர். அவர்கள் மீது முதல் நிலை கொலை, கொலை செய்ய சதி செய்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இவர்கள் அனைவரும் மூன்று முதல் ஐந்து வருடங்களாக கனடாவில் இருந்ததாக கனேடியக் காவல்துறையினர் தெரி வித்தனர்.

இந்திய அரசாங்கத்துடனான தொடர்புகள் குறித்து விசாரணைகள் தொடர்வதாகக் காவல்துறை மேலும் கூறியது.

இந்த விடயங்களில் தனித்தனியான மற்றும் தனித்துவமான விசாரணைகள் நடந்து வருகின்றன.

புலனாய்வாளர்கள் இந்தியாவில் உள்ள சகாக்களுடன் இணைந்து பணியாற்றி வந்தமையும் தெரியந்துள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த கொலையில் வேறு சிலருக்கு தொடர்பு இருக்கலாம் என்றும், மேலும் கைது அல்லது குற்றச்சாட்டுகள் இருக்கலாம் என்றும் காவல்துறையினர் தெரிவித்தனர்.

நிஜ்ஜர் ஒரு சீக்கிய பிரிவினைவாத தலைவர் ஆவார், அவர் காலிஸ்தானுக்காக பகிரங்கமாக பிரச்சாரம் செய்தார் – இந்தியாவின் பஞ்சாப் பகுதியில் ஒரு சுதந்திர சீக்கிய தாயகம் உருவாக்கப்பட வேண்டும்.



1970 களில், சீக்கியர்கள் இந்தியாவில் ஒரு பிரிவினைவாத கிளர்ச்சியைத் தொடங்கினர். இது அடுத்த தசாப்தத்தில் அடக்கப்படுவதற்கு முன்பே ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டனர்.

இந்தியா கடந்த காலங்களில் திரு நிஜ்ஜாரை ஒரு தீவிரவாத பிரிவினைவாத குழுவிற்கு தலைமை தாங்கிய பயங்கரவாதி என்று கூறியது.

கடந்த ஆண்டு ஜூன் 18 ஆம் தேதி வான்கூவருக்கு கிழக்கே 30 கிமீ தொலைவில் உள்ள சர்ரேயில் உள்ள குருநானக் சீக்கிய குரத் வாராவில் அவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

அவர் “ஹிட் லிஸ்ட்டில்” இருப்பதாகவும், அவரது உயிருக்கு அச்சுறுத்தல்கள் இருப்பதாகவும் அவர் இறப்பதற்கு முன்பு கனேடிய உளவுத்துறையால் எச்சரிக்கப்பட்டதாக அவருக்கு நெருக்கமானவர்கள் கூறியுள்ளனர்.

# கனடா தபால் திணைக்களம் பாரிய நட்டத்தை எதிர்நோக்கி வருகிறது!

மே 06, 2024

கனடிய தபால் திணைக்களம் பாரியளவு நட்டத்தை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

திணைக்களத்தின் நிதி நிலைமைகள் மிகவும் மோசமான நிலையில் காணப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஓராண்டு காலப்பகுதிக்குள் நிதிப் பற்றாக்குறை நிலைமை ஏற்படக்கூடிய அபாயம் காணப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கடந்த 2023ம் ஆண்டில் கனடிய தபால் திணைக்களம் 748 மில்லியன் டொலர் நட்டத்தை எதிர்நோக்கியுள்ளது.

முத்திரைகளின் கட்டணங்களை அதிகரிப்பதன் மூலம் ஏற்பட்டுள்ள நட்டத்தை ஈடு செய்ய முடியாது என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கடந்த 2018ம் ஆண்டு முதல் கனடிய தபால் திணைக்களம் தொடர்ச்சியாக நட்டமடைந்து செல்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதுவரையில் அடைந்துள்ள மொத்த நட்டம் மூன்று பில்லியன் டொலர்கள் என தெரிவிக்கப்படுகின்றது.

தபால் விநியோக எண்ணிக்கைகளும் குறைவடைந்து செல்லும் போக்கினை பதிவு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.




# கனடாவில் வரி கோப்புக்களை பதிவு செய்யாதோருக்கு அறிவுறுத்தல்!

மே 08, 2024

கனடாவில் வரி கோப்புக்களை பதிவு செய்யாதோருக்கு விசேட அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இன்னமும் ஏழு மில்லியன் கனடியர்கள் வரி கோப்புக்களை பதிவு செய்யத் தவறியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கனடிய வருமான முகவர் நிறுவனம் இது தொடர்பில் தகவல் வெளியிட்டுள்ளது.

நாட்டில் சுமார் பத்து வீதமான கனடியர்கள் வரி கோப்புக்களை பதிவு செய்வதே இல்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மொழிப் பிரச்சினை அல்லது அறியாமை காரணமாக இவ்வாறு வரி செலுத்துவதில்லை என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவ்வாறு வரிக்கோப்புக்களை தாக்கல் செய்யத் தவறும் கனடியர்களுக்கு அரசாங்கத்தின் எவ்வித சலுகைகளும் கிடைக்கப் பெறுவதில்லை என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தாக்கல் செய்யப்பட்ட வரிக் கோப்புக்களை பரிசீலனை செய்யும் நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்படும் என கனடிய வருமான முகவர் நிறுவனம் தெரிவித்துள்ளது.




# கனடாவில் ஐந்து மாகாணங்கள் மற்றும் ஒரு பிராந்தியத்திற்கு விடுக்கப்பட்டுள்ள எச்சரிக்கை!

மே 13, 2024

கனடாவின் ஐந்து மாகாணங்கள் மற்றும் ஒர் பிராந்தியத்திற்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

காற்றின் தரம் மாசடைவு குறித்து இவ்வாறு மக்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கனடாவின் மேற்குப் பகுதியில் நிலவி வரும் காட்டுத் தீ பரவுகை காரணமாக இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பிரிட்டிஸ் கொலம்பியா, அல்பேர்ட்டா, சஸ்கற்றுவான், ஒன்ராரியோ, கியூபெக் மாகாணங்களிலும் வடமேற்கு பிராந்தியத்திலும் காற்றின் தரம் மாசடைதல் குறத்து எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கனடாவில் காட்டுத் தீ பரவுகை பருவ காலம் ஆரம்பமாகியுள்ளது.

கனடவில் தற்பொழுது சுமார் 90 இடங்களில் காட்டுத் தீ பரவியுள்ளதாகவும் இதில் 12 இடங்களில் நிலவி வரும் காட்டுத்



தீயானது கட்டுக்கு அடங்காதவை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

# கனடாவில் வாகனத் திருட்டில் ஈடுபடுவோருக்கு புதிய தண்டனை!

மே 14, 2024

கனடாவில் வாகனத் திருட்டில் ஈடுபடுவோருக்கு புதிய தண்டனை விதிக்கப்பது குறித்து பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

வாகனத் திருட்டில் ஈடுபடும் நபர்களின் ஓட்டுனர் உரிமத்திற்கு நீண்ட கால தடை விதிக்க பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

ஒன்ராரியோ மாகாணத்தில் இந்த யோசனை முன்வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மாகாண போக்குவரத்து அமைச்சர் ப்ராம்பீட் சர்காரீயா மற்றும் தலைமை வழக்குரைஞர் மைக்கல் கெரென்ஸீர் ஆகியோர் இந்த புதிய சட்ட ஏற்பாடு குறித்து விளக்கம் அளிக்க உள்ளனர்.

வாகனக் கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடையவருக்கு பத்தாண்டுகள் ஓட்டுனர் உரிமத்தை ரத்து செய்யவும், இரண்டாவது தடவை தவறிழைத்தால் அந்த தடையை 15 ஆண்டுகளாக நீடிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

மூன்றாவது தடவையாக வாகனக் கொள்ளையில் ஈடுபடுவோரது ஓட்டுனர் உரிமத்தை வாழ் நாள் முழுவதிலும் தடை செய்வதற்கு யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

ஒன்ராரியோ மாகாணத்தில் ஒவ்வொரு 14 நிமிடங்களுக்கு ஒரு தடவையும் கார் ஒன்று களவாடப்படுவதாக பொலிசார் தெரிவிக்கின்றனர்.



## முக்கிய அறிவித்தல்

**தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.**

sangathamilcanada@gmail.com

# தமிழ்க் குடியியல் செயற்பாட்டுக் குழுமத்தின் ஏற்பாட்டில் (Tamil Civi Action) தமிழின அறிவூட்டல் மாநாடும், தமிழின அழிப்பு நினைவேந்தல் நிகழ்வும் உணர்வுபூர்வமாக நடைபெற்றது!

மே 11, 2024

தமிழின அறிவூட்டல் மற்றும் தமிழின அழிப்பு நினைவேந்தல் நிகழ்வு 11.05.2024 இல் தமிழிசைக் கலாமன்றத்தில் இளையோர் தலைமையில் முழுவதும் நிகழ்ந்தேறியது.





நிகழ்வை ரொரான்ரோ கல்விச்சபை மேலாளரும், தமிழ்க் குடியியல் செயற்பாட்டுக் குழுமத்தின் இயக்குனர் திரு. நீதன் சண் அவர்கள் ஏற்பாடு செய்திருந்தார்.







நிகழ்வு பூர்வக்குடி மக்களுக்கு நன்றியும், அவர்களுக்கான தோழமையும் தெரிவித்துத் தொடர்ந்து கனேடிய, தமிழீழத் தேசியக் கொடிகள் ஏற்றப்பட்டு, தமிழிழ்த்தாய் வாழ்த்தினை தொடர்ந்து அகவணக்கம், மலர்வணக்கம் செலுத்தப்பட்டு நிகழ்வுகள் ஆரம்பமாகின .

மே 18 முள்ளிவாய்க் கால் தமிழினப்படு கொலை நினைவைச் சுமந்து, நினைவைமீட்டி, தமிழர்களுக்கு சிங்கள பேரினவாத அரசுகளாலும், சிங்கள தேசத் தாலும் 1948ம் ஆண்டிற்கு முன்பிருந்தும், தொடர்ந்து நடைபெறும் இனப்படுகொலைகள் இளைய தலைமுறையால் தெளிவாக மீள நினைவுபடுத்தப் பட்டன.

குமுதினிப்படகு படுகொலை, நவாலி தேவாலயப் படுகொலை, செஞ்சோலைப் படுகொலை போன்ற பலவும், கவிதைகள் மூலமும், நடனம், பாடல்கள் மூலமும் தமிழினப்படு கொலைகள் மீள் நினைவு படுத்தப்பட்டன .

மற்றும் இளையோ ர், சிறுவர்களுக்கான தேசிய சின்னங்கள் வரைதல், வர்ணம் பூசுதல் என்பனவும் தடந்தேறின .

நிகழ்வில் கனேடிய மத்திய பாராளுமன்ற உறுப்பினர் உட்பட பல ஊடக நண்பர்கள் , பொது மக்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

இறுதியாக கனடா, தமிழீழ, தேசியக் கொடிகள் இறக்கப்பட்டு **"தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்"** என்ற உறுதி ஏற்புடன் இனப்படு கொலைக்கு தமிழீழத்தை அடையும் உறுதியுடன் விடை பெற்றுச் சென்றனர்.















































# தமிழக செய்திகள்



## ஈழவேந்தன் காலமானார்! உலகத் தமிழர் பேரமைப்பின் தலைவர் பழ. நெடுமாறன் இரங்கல் அறிக்கை

மே 01, 2024

இலங்கை நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும், ஈழத் தமிழர்களுக்கான தொண்டிற்குத் தன்னை முழுமையாக ஒப்படைத்துக்கொண்டவருமான அருமை நண்பர் ஈழவேந்தன் அவர்கள் கனடாவில் காலமான செய்தி அறிந்து மிக்க வேதனையடைந்தேன்.

தமிழ்நாட்டில் பல காலம் தங்கியிருந்து இந்தியா முழுமையும் சென்று ஈழத் தமிழரின் அவலங்களைக் குறித்து இடைவிடாது பரப்புரை செய்த பெருமைக்குரியவர்.

தொண்டு, துன்பம், தியாகம் ஆகியவற்றின் வடிவமாகத் திகழ்ந்து மறைந்த அவருக்கு உலகத் தமிழர் பேரமைப்பின் சார்பில் வீரவணக்கம் செலுத்துகிறேன். அவரது பிரிவினால் வருந்தும் அவரின் துணைவியாருக்கும் மற்றும் குடும்பத்தினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அன்புள்ள,

பழ. நெடுமாறன்
தலைவர்.



## குவைத் சிறையில் இருக்கும் தமிழக மீனவர்களை மீட்கக் கோரி இராமநாதபும் மீனவர்கள் கடலில் இறங்கி ஆர்ப்பாட்டம்!

மே 06, 2024

குவைத் நாட்டு சிறையில் இருக்கும் இராமநாதபுரம் மாவட்ட மீனவர்கள் 4 பேரை மீட்க வலியுறுத்தி, கடலில் இறங்கி கருப்புக் கொடியுடன் மீனவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

இராமநாதபுரம் மாவட்டம் திருப்பாலைக்குடி கிராமத்தைச் சேர்ந்த கார்த்திக் (22), சேசு (24), மோர்பண்ணை கிராமத்தைச் சேர்ந்த சந்துரு (20), பாசிபட்டினத்தைச் சேர்ந்த வினோத்குமார் (27) ஆகிய 4 மீனவர்களும் குவைத் நாட்டில் மீன்பிடி ஒப்பந்தத் தொழிலாளர்களாகப் பணியாற்றினர்.

இவர்கள் கடந்த ஆண்டு டிசம்பர் 5-ம் தேதி மீன் பிடித்துக் கொண்டிருந்தபோது, போதைப் பொருட்கள் கடத்தியதாக கைது செய்யப்பட்டனர். படகின் ஓட்டுநரான எகிப்து நாட்டைச் சேர்ந்த நபர் போதைப் பொருள் வைத்திருந்ததாகவும், அவர் ஈரான் நாட்டினருடன் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டிருந்ததும் பின்னர் தெரியவந்தது.

போதைப்பொருள் கடத்தலில் தொடர்பில்லாத இராமநாதபுரம் மாவட்ட மீனவர்கள் 4 பேரையும் மீட்க வலியுறுத்தி வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டநாட்டுப்படகு மீனவர்கள், இராமநாதபுரம் அருகே மோர்பண்ணை பகுதியில் கடலில் இறங்கி நேற்று கருப்புக் கொடியுடன் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.



ஆர்ப்பாட்டத்துக்கு, சிஐடியு கடல் தொழிலாளர் சங்க மாவட்டச் செயலாளர் கருணாமூர்த்தி தலைமை வகித்தார். மோர்பண்ணை கிராமத் தலைவர் ராஜதுரை, போராட்ட ஒருங்கிணைப்பாளர் காளிதாஸ், சிஐடியு மாவட்டச் செயலாளர் சிவாஜி, கடல் தொழிலாளர் சங்க மாவட்டத் தலைவர் கணேசன் முன்னிலை வகித்தனர். இதில் நூற்றுக்கணக்கான மீனவர்கள் கலந்துகொண்டனர்.

## பள்ளிக்கல்வித்துறையில் ஆசிரியர் பெருமக்களுக்கு பதவி உயர்வு வழங்கிய பிறகே பணியிட மாறுதல் கலந்தாய்வு நடத்தப்பட வேண்டும்! – சீமான் வலியுறுத்தல்

மே 10, 2024

தமிழ்நாட்டில் திமுக ஆட்சிப்பொறுப்பேற்றது முதல் வழக்கமான நடைமுறைக்கு மாறாக ஆசிரியர் பணியிட மாறுதல் கலந்தாய்வு நடத்திவிட்டு அதன்பிறகு பதவி உயர்வு வழங்கி வருவது வன் மையான கண்டனத்துக்குரியது. இது குறித்து ஆசிரியர் பெரு மக்களும், சங்கங்களும் அரசிடம் பலமுறை முறையிட்டும் அவர்களின் கோரிக்கையை திமுக அரசு ஏற்க மறுப்பது மிகுந்த ஏமாற்றமும், வேதனையும் அளிக்கிறது.

தமிழ்நாட்டில் உள்ள அரசுப்பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர் பெருமக்களுக்கு உரிய காலத்தில் வழங்க வேண்டிய பதவி உயர்வினை திமுக அரசு வழங்க மறுத்து தாமதித்து வருகிறது. அதுமட்டுமின்றி, பதவி உயர்வு வழங்குவதற்கு முன்பாக பணியிட மாறுதல் வழங்குவதால் மிகப்பெரிய குழப்பமும் ஏற்படுகின்றது. முதலில் ஆசிரியர் பெருமக்களுக்கு பதவி உயர்வினை வழங்கிவிட்டால், பதவி உயர்வுக்கு ஏற்ப அதே பள்ளியிலோ அல்லது அருகில் உள்ள அரசுப் பள்ளியிலோ காலியாக உள்ள பணியிடங்கள் எளிதாக நிரப்பப்படும். மேலும், பதவி உயர்வு அளித்ததினால் உருவாகும் காலிப்பணியிடங்களையும் சேர்த்துக் கணக்கிட்டு அதன்பின் பணியிட மாறுதல் கலந்தாய்வு மூலம் நிரப்புவதற்கும் வழி ஏற்படும். ஆனால் திமுக அரசுப் பணியிட மாறுதலிலும், பதவி உயர்வு வழங்குவதிலும் இலட்சக்கணக்கில் முறைகேடாகப் பணத்தைப் பெற்றுக் கொண்டு ஊழல் செய்வதற்காக, முதலில் ஆசிரியர் பணியிட மாறுதல் கலந்தாய்வு நடத்திவிட்டு அதன்பிறகு பதவி உயர்வு வழங்கி வருகின்றது. திமுக அரசின் இவ்வூழல் நடவடிக்கை எவ்வகையிலும் ஏற்புடையது அல்ல.

ஒரே பள்ளியில் காலியாக உள்ள பணியிடத்தைப் பணியிட மாற்றம் மூலம் முதலில் நிரப்பிவிட்டு பின்பு, அதே பள்ளியில் பணியாற்றும் ஆசிரியருக்குப் பதவி உயர்வினை வழங்கி தொலைதூர மாவட்டத்தில் வேறொரு பள்ளிக்கு அனுப்புவதென்பது ஆசிரியர் பெருமக்களுக்குக் கடும் தண்டனையாகவே அமையும்.

ஆகவே, திமுக அரசு இனியாவது ஆசிரியர் பெருமக்களின் நியாயமான கோரிக்கையை ஏற்று, பள்ளிக்கல்வித்துறையில் தகுதி உடைய ஆசிரியர்களுக்கு முதலில் பதவி உயர்வு வழங்கி விட்டு, அதன் பிறகு ஆசிரியர் பணியிட மாறுதல் கலந்தாய்வு நடத்தப்பட வேண்டுமென நாம் தமிழர் கட்சி சார்பாக வலியுறுத்துகிறேன்.

– செந்தமிழன் சீமான்
தலைமை ஒருங்கிணைப்பாளர்
நாம் தமிழர் கட்சி


செந்தமிழன் சீமான்
தலைமை ஒருங்கிணைப்பாளர்
நாம் தமிழர் கட்சி

10-05-2024

பள்ளிக்கல்வித் துறையில் ஆசிரியர் பெருமக்களுக்கு பதவி உயர்வு வழங்கிய பிறகே பணியிட மாறுதல் கலந்தாய்வு நடத்தப்பட வேண்டும்!

தமிழ்நாட்டில் திமுக ஆட்சிப்பொறுப்பேற்றது முதல் வழக்கமான நடைமுறைக்கு மாறாக ஆசிரியர் பணியிட மாறுதல் கலந்தாய்வு நடத்திவிட்டு அதன்பிறகு பதவி உயர்வு வழங்கி வருவது வன்மையான கண்டனத்துக்குரியது. இது குறித்து ஆசிரியர் பெருமக்களும், சங்கங்களும் அரசிடம் பலமுறை முறையிட்டும் அவர்களின் கோரிக்கையை திமுக அரசு ஏற்க மறுப்பது மிகுந்த ஏமாற்றமும், வேதனையும் அளிக்கிறது.

தமிழ்நாட்டில் உள்ள அரசுப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர் பெருமக்களுக்கு உரிய காலத்தில் வழங்க வேண்டிய பதவி உயர்வினை திமுக அரசு வழங்க மறுத்து தாமதித்து வருகிறது. அதுமட்டுமின்றி, பதவி உயர்வு வழங்குவதற்கு முன்பாக பணியிட மாறுதல் வழங்குவதால் மிகப்பெரிய குழப்பமும் ஏற்படுகின்றது. முதலில் ஆசிரியர் பெருமக்களுக்கு பதவி உயர்வினை வழங்கிவிட்டால், பதவி உயர்வுக்கு ஏற்ப அதே பள்ளியிலோ அல்லது அருகில் உள்ள அரசுப் பள்ளியிலோ காலியாக உள்ள பணியிடங்கள் எளிதாக நிரப்பப்படும். மேலும், பதவி உயர்வு அளித்ததினால் உருவாகும் காலிப் பணியிடங்களையும் சேர்த்துக் கணக்கிட்டு அதன்பின் பணியிட மாறுதல் கலந்தாய்வு மூலம் நிரப்புவதற்கும் வழி ஏற்படும்.

ஆனால் திமுக அரசுப் பணியிட மாறுதலிலும், பதவி உயர்வு வழங்குவதிலும் லட்சக்கணக்கில் முறைகேடாகப் பணத்தைப் பெற்றுக்கொண்டு ஊழல் செய்வதற்காக, முதலில் ஆசிரியர்

1 Seeman4TN SenthamizhanSeeman Seeman4TN_Official

# மரம் நடுவதை மாபெரும் இயக்கமாக மாற்ற நடவடிக்கை: அரசுக்கு இராமதாஸ் கோரிக்கை!

மே 07, 2024




தமிழ்நாட்டில் வெப்பம் அதிகம் நிலவும் பகுதிகளில் உள்ள மலைகளில் மரங்களை அதிக அளவில் வளர்ப்பதற்காக ஹெலிகாப்டர்கள் மூலம் விதைப்பந்துகளை வீச வேண்டும். மரங்களை அதிக அளவில் நட்டு வளர்ப்பதன் மூலம் கோடைக்கால வெப்ப நிலையில் 2 முதல் 8 டிகிரி செல்சியஸ் வரை குறைக்க முடியும் என பாமக நிறுவனர் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டிருக்கும் அறிக்கையில், "தமிழ்நாட்டில் காலநிலை மாற்றத்தின் தீய விளைவுகளைத் தடுக்க மரங்களை அதிக எண்ணிக்கையில் நட வேண்டும் என்ற குரல்கள் ஓங்கி ஒலிக்கத் தொடங்கியுள்ள நிலையில், தமிழகத்தின் வனப்பரப்பு வேகமாக குறைந்து வருவதாகவும், அடுத்த 25 ஆண்டுகளில் தமிழகத்தின் வனப்பரப்பு நிலைமை தலைகீழாக மாறிவிடும் என்று ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன. இந்த அச்சுறுத்தலைத் தடுக்கவும், வனப்பரப்பை அதிகரிக்கவும் போர்க்கால வேகத்தில் நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியமாகும்.

தமிழ்நாட்டில் 2014 ஆம் ஆண்டு நிலவரப்படி பசுமைக்காடுகளின் பரப்பளவு 1880.72 சதுர கி.மீயாகவும், இலையுதிர்க் காடுகளின் பரப்பளவு 13,394.73 சதுர கி.மீயாகவும், முள்புதர் காடுகளின் பரப்பளவு 4291.84 சதுர கிலோ மீட்டராகவும் உள்ளது.

அடுத்த 25 ஆண்டுகளில் பசுமைக்காடுகள், இலையுதிர்க் காடுகளின் பரப்பளவு படிப்படியாகக் குறைந்து 2050 ஆம் ஆண்டில் பசுமைக்காடுகளின் பரப்பளவு 1280.8 சதுர கிலோமீட்டராகவும், இலையுதிர்க் காடுகளின் பரப்பளவு 10,941 சதுர கிலோமீட்டராகவும் இருக்கும் என்று அண்ணா பல்கலைக்கழகத்தின் காலநிலை மாற்றம் மற்றும் பேரிடர் மேலாண்மை மையம் நடத்திய ஆய்வில் தெரியவந்துள்ளது.

அதேநேரத்தில் முள்புதர் காடுகளின் பரப்பளவு 71% அதிகரித்து 7344.70 சதுர கிலோ மீட்டராக இருக்கும் என்று ஆய்வில் தெரியவந்துள்ளது. காலநிலை மாற்றம் தான் இதற்குக் காரணம் என்றும், இதன் தாக்கம் மேற்குத் தொடர்ச்சி மலை, கிழக்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகளில் உள்ள 26 தமிழக மாவட்டங்களில் உணரப்படும் என்றும் ஆய்வு தெரிவிக்கிறது.

இந்தச் சீரழிவை தடுப்பதற்காக தமிழக அரசு பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அதுமட்டுமின்றி, தமிழகத்தின் வனப்பரப்பை இப்போதுள்ள 24 விழுக்காட்டில் இருந்து 33 விழுக்காடாக உயர்த்துவதற்கான பசுமைத் தமிழகம் திட்டத்தின் செயலாக்கத்தை தமிழக அரசு தீவிரப்படுத்த வேண்டும். இந்தத் திட்டத்தின்படி மரங்கள் நடப்படுவதை மாபெரும் இயக்கமாக தமிழக அரசு மாற்ற வேண்டும்.

தமிழகத்தின் வனப்பரப்பை அதிகரிக்கும் நோக்கத்துடன் பொது மக்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரிடம் இருந்து விதைகளை வனத்துறையினர் அதிக எண்ணிக்கையில் சேகரிக்க வேண்டும். அவற்றைக் கொண்டு செடிகளை உருவாக்கி, 4 அடி உயரம் வளர்ந்த பிறகு மாநிலம் முழுவதும் பொது இடங்கள், பள்ளிக்கூடங்கள், விளையாட்டுத் திடல்களின் எல்லைப் பகுதிகள் ஆகியவற்றில் அதிக எண்ணிக்கையில் நடச் செய்ய வேண்டும்.

அதுமட்டுமின்றி, பொதுமக்களிடம் வழங்கி அவர்களின் வீடுகள், கடைகள் உள்ளிட்ட இடங்களிலும் மரக்கன்றுகளை வளர்ப்பதை தமிழக வனத்துறை ஊக்குவிக்க வேண்டும். திண்டிவனம் கோனேரிக்குப்பத்தில் உள்ள கல்விக்கோயில் வளாகத்தில் இரு மாதங்களில் மட்டும் 7700 மரக்கன்றுகள் நடப்பட்டு சாதனை படைக்கப்பட்டுள்ளது.

இந்த மரக்கன்றுகள் அனைத்தையும் இலவசமாக வழங்கியது வனத்துறை தான். இதற்காக வனத்துறைக்கு மீண்டும் ஒரு முறை நன்றி தெரிவித்துக் கொள்வதுடன், இதேபோல் அரசு மற்றும் தனியார் கல்வி நிறுவனங்களிலும் மரக்கன்றுகளை இலட்சக்கணக்கில் நடுவதற்கு தமிழக வனத்துறை முயற்சி எடுக்க வேண்டும். இதற்காகவே வனத்துறையில் சிறப்பு அதிகாரிகளை நியமிக்கவும் வனத்துறை நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

தமிழ்நாட்டில் வேலூர், சேலம், திருத்தணி, திருவண்ணாமலை, திருச்சி, அரக்கோணம் உள்ளிட்ட நகரங்களை சுற்றியுள்ள மலைப் பகுதிகளையும், சமுதாயக் காடுகளையும் பசுமைப் பகுதிகளாக மாற்றி, அவற்றில் அதிக மரங்களை வளர்க்க வேண்டும். அதன் மூலம், மலையோர நகரங்களின் வெப்பத்தை குறைக்க முடியும்.

சென்னை போன்ற மக்கள் அடர்த்தி மிக்க நகரங்களில் காடுகளை வளர்க்க முடியாது என்றாலும் கூட, அடுக்கு மாடி கட்டிடங்கள் கட்டப்படும் போது ஒதுக்கப்படும் திறந்தவெளி பரப்புக்கான நிலங்களில் மியாவாக்கி முறையில் நகர்ப்புற அடர் வனங்களை உருவாக்கலாம். சிங்கப்பூரில் இருப்பதைப் போன்ற சாலைகளின் மையங்களிலும், பாலங்கள் உள்ளிட்ட கட்டமைப்புகளில் தாவரங்களை வளர்ப்பதன் மூலம் பசுமைப் போர்வையை ஏற்படுத்தி வெப்பத்தின் தாக்கத்தைக் கட்டுப்படுத்த முடியும்.

தமிழ்நாட்டில் வெப்பம் அதிகம் நிலவும் பகுதிகளில் உள்ள மலைகளில் மரங்களை அதிக அளவில் வளர்ப்பதற்காக ஹெலிகாப்டர்கள் மூலம் விதைப்பந்துகளை வீச வேண்டும். மரங்களை அதிக அளவில் நட்டு வளர்ப்பதன் மூலம் கோடைக்கால வெப்ப நிலையில் 2 முதல் 8 டிகிரி செல்சியஸ் வரை குறைக்க முடியும்.

மேலும், கட்டங்களுக்குள் தேவைப்படும் குளிர்சாதனத் தேவையில் 30 விழுக்காட்டைக் குறைக்க முடியும். இந்த உன்னத நிலையை அடைவதற்காக அரசும், மக்களும், சமூக அமைப்புகளும் போட்டிப்போட்டுக் கொண்டு மரங்களை வளர்க்கத் தொடங்குவோம். மரம் நடுவதை மாபெரும் இயக்கமாக மாற்றுவோம்.

அதன் மூலம், நடப்பு பத்தாண்டில் இல்லாவிட்டாலும், அடுத்த பத்தாண்டிலாவது வெப்பத்தின் கடுமையின்றி இதமான வெப்ப நிலையில் வாழ்வதற்கான சூழலை ஏற்படுத்த உறுதியேற்போம்" எனத் தெரிவித்துள்ளார்.

# அருட்பெருஞ்சோதியார் சர்வதேச மையம் அனைத்து அனுமதிகளையும் பெற்றே கட்டப்படும்!

## தமிழக அரசு

மே 10, 2024

அனைத்து அனுமதிகளையும் பெற்ற பிறகே, வடலூரில் அருட்பெருஞ்சோதியார் சர்வதேச மையம் கட்டும் பணிகள் தொடங்கப்படும் என்று தமிழக அரசு சென்னை உயர் நீதிமன்றத்தில் உறுதி அளித்துள்ளது. மேலும், சத்தியஞான சபைக்கு சொந்தமான 106 ஏக்கர் இடத்தில் உள்ள ஆக்கிரமிப்புகள் அகற்றப்படும் என்றும் தமிழக அரசு தெரிவித்துள்ளது.

கடலூர் மாவட்டம், வடலூரில் உள்ள அருட்பெருஞ்சோதியார் தெய்வ நிலையத்தின் சத்திய ஞான சபை முன்பு இருக்கும் 70 ஏக்கர் பரப்பில் உள்ள பெருவெளியில் சுமார் 100 கோடி ரூபாய் செலவில் அருட்பெருஞ்சோதியார் சர்வதேச மையம் அமைக்க ஒப்புதல் அளித்து, தமிழக அரசு 2023-ம் ஆண்டு அக்டோபர் 5-ம் தேதி அரசாணை வெளியிட்டது. பெருவெளியில் அருட்பெருஞ்சோதியார் சர்வதேச மையம் அமைப்பதற்கு தடை விதிக்கக் கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குகள் தொடரப்பட்டிருந்தன. இந்த வழக்கு கடந்தமுறை விசாரணைக்கு வந்த போத, வடலூரில் அருட்பெருஞ்சோதியார் சர்வதேச மையம் அமைக்கும் பணிகளை தொல்லியல் துறை நிபுணர்கள் அறிக்கை சமர்ப்பிக்கும் வரை, நிறுத்தி வைப்பதாக தமிழக அரசுத் தரப்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் உறுதி அளிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் இந்த வழக்கு நீதிபதிகள் மகாதேவன் மற்றும் ஆதிகேசவலு ஆகியோர் அடங்கிய சிறப்பு அமர்வில் வெள்ளிக்கிழமை விசாரணைக்கு வந்தது. வழக்கை விசாரித்த நீதிபதிகள், அருட்பெருஞ்சோதியார் சர்வதேச மையம் அமைப்பது தொடர்பான அரசாணையை எதிர்ப்பது ஏன்?, அதற்கு என்ன ஆதாரங்கள் உள்ளன?, அருட்பெருஞ்சோதியார் பெயரில் சர்வதேச மையம் அமைந்தால் அருட்பெருஞ்சோதியாரின் தத்துவங்கள், கொள்கைகள் உலகம் முழுவதும் பரவும் அல்லவா?, அருட்பெருஞ்சோதியாரின் தத்துவங்களை ஊக்கவிக்கும் அரசு முடிவில் எந்த தவறும் இல்லையே? என்று கேள்வி எழுப்பினர். அரசின் திட்டம் அருட்பெருஞ்சோதியாரின் தத்துவங்களுக்கு விரோதமானவை என நிரூபித்தால் மட்டுமே அரசு முடிவில் நீதிமன்றம் தலையிட முடியும் என கருத்து தெரிவித்தனர்.

அப்போது மனுதாரர் தரப்பில், "கடந்த 1867-1872ம் ஆண்டுகளில், 106 ஏக்கர் பரப்பில் கட்டப்பட்ட சத்தியஞான சபை அப்படியே இருக்க வேண்டும் என்பது அருட்பெருஞ்சோதியாரின் விருப்பம். மேலும் பெருவெளியில் கட்டுமானம் மேற் கொள்வது அருட்பெருஞ்சோதியாரின் விருப்பத்துக்கு முரணானது. இதற்கு சான்றாக, அருட்பெருஞ்சோதியாரின் ஆறாம் திருமுறை, உத்திர ஞான சிதம்பர மான்மியம் உள்ளிட்ட பாடல்கள் மேற்கோள்காட்டப்பட்டது. மேலும் பெருவெளியில் புராதன சின்னங்கள் இருப்பதாக தொல்லியல் துறை அறிக்கையில் தெரிவித்திருப்பதால், அங்கு கட்டுமான பணிகள் மேற்கொள்ளக்கூடாது" என வாதிடப்பட்டது.

அப்போது தமிழக அரசுத்தரப்பில் ஆஜரான அரசு சிறப்பு பிளீடர், "தொல்லியல் துறை ஆய்வில், இப்பகுதியில் சில கட்டுமானங்களின் எச்சங்கள் கண்டறியப்பட்டுள்ளன. அந்தப் பகுதிகளில் எவ்விதமான கட்டுமானங்களும் மேற்கொள்ளப்படாது" என்று தெரிவித்தார்.

அப்போது குறுக்கிட்ட நீதிபதிகள், "சத்தியஞான சபையில் கட்டப்பட்ட இந்த கட்டிடங்களை பராமரிப்பதில் ஏன் இவ்வளவு மெத்தனம்?, எப்படி ஆக்கிரமிப்புகள் அனுமதிக்கப்பட்டன?, சர்வதேச மையம் கட்ட திட்ட அனுமதி பெறப்பட்டதா?" என்று கேள்வி



எழுப்பியதோடு, ஆக்கிரமிப்புகளை அகற்ற நடவடிக்கை எடுத்து, மொத்தமுள்ள 106 ஏக்கர் நிலத்தை மீட்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என அரசுக்கு உத்தரவிட்டனர்.

அப்போது அரசுத் தரப்பில், "அனைத்து அனுமதிகளையும் பெற்ற பிறகே, அருட்பெருஞ்சோதியார் சர்வதேச மையம் கட்டும் பணிகள் தொடங்கப்படும். மேலும், ஆக்கிரமிப்புகளை அகற்ற நடவடிக்கை எடுக்கப்படும்" என தெரிவிக்கப்பட்டது. மேலும், சத்திய ஞான சபைக்கு அறங்காவலர் நியமிப்பது குறித்து விளக்கம் அளிக்க அவகாசம் கோரப்பட்டது. இதை ஏற்றுக்கொண்ட நீதிபதிகள், விசாரணையை ஜூன் 24-ம் தேதிக்கு தள்ளிவைத்தனர்.

# உலக செய்திகள்

## அமெரிக்க பல்கலைக்கழகத்தில் மோதல்கள்; காவல்துறை குவிப்பு!

மே 01, 2024

மத்திய கிழக்கில் இசுரவேலுக்கும் ஹமாஸுக்கும் இடையிலான யுத்தம் தொடர்பாக சமீப வாரங்களாக அமெரிக்கப் பல்கலைக்கழக வளாகங்களில் பதற்றம் அதிகரித்து வருகிறது.

லாஸ் ஏஞ்சல்ஸில் உள்ள கலிபோர்னியா பல்கலைக் கழகத்தில் பாலஸ்தீனிய ஆதரவு முகாம்களில் போராட்டக் காரர்களும் இசுரவேல் ஆதரவாளர்களுக்கும் இடையில் மோதல்கள் வெடித்தன.

அப்பகுதியில் காவல்துறையினர் பெருமளவில் குவிக்கப் பட்டு வருகின்றனர். இரும்பு வேலித் தடுப்புகளை காவல் துறையினர் அமைத்து வருகின்றனர்.

பல்கலைக்கழகத்தின் வளைவுக்கு வெளியே ஒரு சில எதிர்ப்பாளர்கள் (இசுரவேலுக்கு ஆதரவானர்கள்) உள்ளனர். உள்ளே பாலஸ்தீன ஆதரவாளர்கள் முகாம் அமைத்து போராடுகிறார்கள். இந்நிலையில் இரு தரப்பினரும் தங்கள் இடத்தை பலப்படுத்துகிறார்கள்.

நூற்றுக்கணக்கான இசுரவேலுக்கு ஆதரவாளர்கள் UCLA இல் பாலஸ்தீனிய ஆதரவு மாணவர் எதிர்ப்பாளர்களின் முகாமைத் தாக்கினர்.

தற்காலிக தடுப்புகளை உடைக்க முயன்றபோது தாக்குதல் நடத்தியவர்கள் முகாம் பட்டாசு வீசினர்.





போராட்டக்காரர்களுக்கும் எதிர் எதிர்ப்பாளர்களுக்கும் இடையே வன்முறை மோதல்கள் ஏற்பட்டன.



தாக்குதலாளிகள் பலர் முகமூடி அணிந்திருந்தனர்.

## பலத்த பாதுகாப்புக்கள் மத்தியில் ஒலிம்பிக் சுடர் பிரான்சை வந்தடைந்தது!

மே 09, 2024

பிரான்சின் தலைநகராக பாரிசில் ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளின் தொடக்க விழாவிற்கு 79 நாட்களுக்கு முன்னதாக, பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் தெற்கு துறைமுக நகரமான மார்செய்லியில் ஒலிம்பிக் சுடர் வந்தடைந்தது.

கிரீஸிலிருந்து 12 நாள் கடல்ப் பயணத்திற்குப் பின்னர் இந்த ஒலிப்பிக் சுடர் வந்தடைந்தது. 128 ஆண்டுகள் பழமையான மூன்று மாஸ்ட் பாய்மரக் கப்பலான Belem இல் ஒலிம்பிக் சுடர் கொண்டு வரப்பட்டது. 1000 படகுகள் ஒலிம்பிக் சுடர் கொண்டு வரப்பட்ட கப்பலை வரவேற்றன.

ஒலிப்பிக் சுடரை பிரான்சின் 2012 ஒலிம்பிக்கில் ஆண்கள் பிரிவில் 50 மீ ஃப்ரீஸ்டைல் நீச்சல் சாம்பியனான ஃப்ளோரன்ட் மானாடோ தரையிறக்கினார்.

மார்சேயில் பிறந்த பிரெஞ்சு ராப்பர் ஜுல், பாரீஸ் 2024 ஒலிம்பிக் கொப்பரையை ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோனை உள்ளடக்கிய 150,000 மக்கள் முன்னிலையில் ஏற்றி வைப்பதற்கு முன்பு, ரியோ 2016 இல் 400 மீட்டர் சாம்பியனான பாராலிம்பிக் தடகள தடகள வீரர் நான்டெனின் கீதாவிடம் ஒப்படைக்கப் பட்டது.

ஒலிம்பிக் சுடர் ரிலே வியாழன் அன்று மத்தியதரைக் கடலோர நகரத்திலிருந்து புறப்பட்டு, ஜுலை 26 ஆம் தேதி தொடக்க விழாவிற்கு பாரிஸ் வருவதற்கு முன்பு பிரான்ஸ் மற்றும் ஆறு வெளிநாட்டுப் பகுதிகளுக்குச் செல்லவுள்ளது.



6,000 சட்ட அமலாக்க அதிகாரிகள், நாய் பிரிவுகள் மற்றும் உயரடுக்கு படை துப்பாக்கி சுடும் வீரர்கள் ரோந்து பணியில் ஈடுபடுவார்கள் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

## 200க்கும் அதிகமான சிறீலங்காப் படையினர் ரஸ்ய உக்ரைன் போர்முனையில் பலி!

மே 09, 2024

சிறீலங்காவிலிருந்து வெளிநாட்டு வேலைக்காக சேர்க்கப்பட்ட நூற்றுக்கணக்கான சிறீலங்காப் கூலிப்படைகள் ரஸ்ய எல்லையில் உள்ள கொலைகளங்களில் உயிரிழக்கின்றனர் என அங்கிருந்து தப்பிய சிறீலங்கா கூலிப்படையின் ஒருவர் தெரிவித் துள்ளார்.

தொலைக்காட்சியொன்றின் பேட்டியில் கருத்து தெரிவித்துள்ள அவர் சிறீலங்காவைச் சேர்ந்த 200க்கும் மேற்பட்ட கூலிப்படையினர்கள் உயிரிழந்துள்ளனர் இதே எண்ணிக் கையிலானவர்கள் டொனெட்ஸ்க் போன்ற பிராந்தியங்களில் உள்ள மருத்துவமனைகளில் சிகிச்சைபெற்றுவருகின்றனர் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

ஓய்வுபெற்ற முன்னாள் சிறீலங்கா அதிகாரிகளே என்னை ரஸ்ய உக்ரைன் போர்முனையில் பணியாற்ற தெரிவு செய்தனர் அதற்காக 1.6 மில்லியன் செலுத்தினேன்(?) முகாமில் உதவியாளராக பணியாற்றும் வேலை என தெரிவித்தனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சுற்றுலாபயணிகளுக்கான விசாவில் செல்லும் சிறீலங்கா படையினரை வாக்னெர் கூலிப்படையில் இணைத்துக் கொள்ளப்படுவதற்காக ரஸ்ய மொழி ஆவணமொன்றில் கைச்சாத்திட வேண்டும் என கேட்டுக்கொள்ளப்படுவார்கள் என தெரிவித் துள்ளனர். சிறீலங்காப் படைவீரர் சட்டத்தரணி போன்று தோற்றமளித்த இந்திய பெண் ஒருவர் எங்களிற்கு உதவினார் அவர் முகாம் உதவியாளராக பணிபுரிவதற்கான ஒரு வருட கால ஒப்பந்தம் என தெரிவித்தார் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

என்னையும் 33 சிறீலங்கா படையினரை ரொஸ்டொவ்வில் உள்ள முகாமிற்கு கொண்டு சென்றார்கள் அங்கு 14 நாட்கள் பயிற்சி அளித்தார்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

நான் அந்த முகாமிலிருந்தவேளை 70 சிறீலங்கா படையினரை அங்கு காணப்பட்டனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.



# AstraZeneca கோவிட் – 19 தடுப்பூசி உலகம் முழுவதும் மீளப்பெற தீர்மானம்!

மே 08, 2024

பிரித்தானியாவைத் தளமாகக்கொண்ட மருந்து தயாரிப்பு நிறுவனமான அஸ்ட்ராஜெனிக்கா (AstraZeneca) தனது கோவிட் - 19 தடுப்பூசிகளை உலகம் முழுவதும் இருந்து மீளப்பெற தீர்மானித்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அஸ்ட்ராஜெனிக்காவின் கோவிட்-19 தடுப்பூசி, அரிதான மற்றும் ஆபத்தான பக்க விளைவை ஏற்படுத்தும் என நீதிமன்ற ஆவணங்களின் ஊடாக அண்மையில் ஒப்புக்கொள்ளப்பட்டது.

இந்நிலையிலேயே, உலகம் முழுவதும் இருந்து தடுப்பூசிகளை மீளப்பெற்றுக்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதன்படி, தடுப்பூசி இனி தயாரிக்கப்படவோ அல்லது விநியோகிக்கப் படவோ மாட்டாது என நிறுவனம் அறிவித்துள்ளதாக கூறப் படுகின்றது.

அதேவேளை தடுப்பூசிகளை மீளப்பெறுவதற்கான விண்ணப் பம் மார்ச் ஐந்தாம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட நிலையில், மே ஏழாம் திகதி முதல் நடைமுறைக்கு வந்துள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.




# பூமியை தாக்கிய சக்தி வாய்ந்த சூரியப்புயல்!

மே 11, 2024

கடந்த 20 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு சக்தி வாய்ந்த சூரியப்புயல் பூமியை தாக்கியது.



ஏற்கனவே பூமியை கடும் சூரிய காந்த புயல் தாக்கும் அபாயம் உள்ளது என்றும் இதனால் கலிபோர்னியா முதல் தெற்கு அலபாமா வரை அரோரா என்ற துருவ ஒளி ஏற்படும் என்றும் அமெரிக்க கடல், வளிமண்டல ஆய்வகம் தெரிவித்தது.

துருவ ஒளி என்பது இரவு வானத்தில் பிரகாசமான, சுழலும் திரைச்சீலைகள் போல் தோன்றும். பச்சை நிறத்தில் இருந்து இளஞ்சிவப்பு மற்றும் கருஞ்சிவப்பு நிறத்தில் இருக்கும்.

அதன்படி வானத்தில் கண்கவர் வான ஒளிக் காட்சிகள் ஏற் பட்டன. ஆஸ்திரேலியாவின் டாஸ்மேனியா முதல் இங்கிலாந்து வரை வான ஒளிக் காட்சிகளை பார்க்க முடிந்தது.

லிவர்பூல், கென்ட், நார்போக் உள்பட இங்கிலாந்து முழுவதும் துருவ ஒளி தெரிந்தது. சூரியப்புயல் தாக்கிய பிறகு அமெரிக்கா, கனடா, ஸ்காட்லாந்து, வடக்கு அயர்லாந்து ஆகிய நாடுகளிலும் துருவ ஒளி வானில் தோன்றியது.

இதை பார்த்து மக்கள் பரவசமடைந்தனர். சூரியப்புயலின் தாக்கம் நீடிக்கும் என்பதால் செயற்கைக்கோள்கள், மின்கட்டமைப் புகள் பாதிக்கப்படக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# அமெரிக்காவில் பன்றியின் சிறுநீரகத்தை பொருத்திக் கொண்ட நபர் உயிரிழந்துள்ளார்!

மே 14, 2024

அமெரிக்க நாட்டில் மரபணு மாற்றம் செய்யப்பட்ட பன்றியின் சிறுநீரகத்தை பொருத்திக் கொண்ட நபர் உயிரிழந்துள்ளார். அவருக்கு கடந்த மார்ச் மாதம் பன்றியின் சிறுநீரக உறுப்பு உடலில் அறுவை சிகிச்சை மூலமாக பொருத்தப்பட்டது.

62 வயதான ரிக் ஸ்லேமேன் எனும் நபர்தான் உலகில் முதன் முதலாக பன்றியின் சிறுநீரகத்தை பொருத்திக் கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது. பாஸ்டன் நகரில் உள்ள மாசசூசெட்ஸ் பொது மருத்துவமனையில் சுமார் 4 மணி நேரம் அவருக்கு உறுப்பு மாற்று சிகிச்சையின் மூலம் பன்றியின் சிறுநீரகத்தை மருத்துவர்கள் பொருத்தி இருந்தனர். மருத்துவ துறையில் இது முக்கிய மைல்கல் சாதனையாக பார்க்கப்பட்டது.

இந்தச் சூழலில் உறுப்பு மாற்று சிகிச்சை மேற்கொள்ளப்பட்ட இரண்டு மாத காலத்துக்குள் அவர் உயிரிழந்தார். உறுப்பு மாற்று சிகிச்சையின் விளைவுதான் அவரது மரணத்துக்கு காரணம் என சொல்வதற்கான எந்த அறிகுறியும் கண்டறியப் படவில்லை என அவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

"ரிக் உயிரிழந்தது மிகவும் வருத்தம் அளிக்கிறது. ஆனாலும் மாற்று உயிரின உறுப்பு மாற்று சிகிச்சை மேற்கொள்ள அவரது செயல் பலரையும் ஊக்கப்படுத்தும்" என அவரது குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.

கடந்த 2018-ல் இதே மருத்துவமனையில் அவருக்கு சிறுநீரக உறுப்பு மாற்று சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. இருந்தும் ஐந்து ஆண்டுகளில் அது செயலிழந்துள்ளது. அதன் காரணமாக அவ ருக்கு உடல் ரீதியான பாதிப்பு தீவிரமடைந்துள்ளது. தொடர்ந்து டயலஸிஸ் சிகிச்சை பெற்று வந்த அவருக்கு கடந்த மார்ச் மாதம் பன்றியின் சிறுநீரகம் பொருத்தப்பட்டது.



கடந்த 2022-ல் அமெரிக்காவின் மேரிலேண்ட் மருத்துவ மனையில் பன்றியின் இதயம் நோயாளி ஒருவருக்கு பொருத்தப் பட்டது. அவரும் அறுவை சிகிச்சை மேற்கொண்ட இரண்டு மாத காலத்தில் உயிரிழந்தார் என்பது நினைவுகூரத்தக்கது.

# இந்திய மத்திய உட்துறை அமைச்சு தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான 05 ஆண்டுகளுக்கு தடை நிட்டிப்பு!

மே 14, 2024

இந்திய மத்திய உட்துறை அமைச்சு தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் மீதான தடையை மேலும் 05 ஆண்டுக ளுக்கு நீட்டித்து உத்தரவிட்டுள்ள நிலையில் தமிழ் மக்க ளிடையே இந்தியா மீதான வெறுப்பு மேலும் அதிகரிக்கலாமென அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

ராஜீவ் காந்தி படுகொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து கடந்த 1991ஆம் ஆண்டு இந்தியாவில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தடை செய்யப்பட்டது. அதன் பிறகு குறிப்பிட்ட கால இடைவெளி யில் இந்த தடை உத்தரவு நீட்டிக்கப்பட்டு வருகிறது. கடைசியாக கடந்த 2019ஆம் ஆண்டு தடை நீட்டிப்பு உத்தரவு பிறப் பிக்கப்பட்டது. தற்போது தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை மேலும் 05 ஆண்டுகளுக்கு நீட்டித்து மத்திய உள்துறை அமைச்சு உத்தரவிட்டுள்ளது.

தடை குறித்த அறிவிப்பில், "தமிழீழ விடுதலைப் புலிகள் இன்னும் இந்தியாவின் ஒருமைப்பாடு மற்றும் பாதுகாப்புக்கு பாதகமான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாக மத்திய அரசு கருதுகிறது. இலங்கையில் நடைபெற்ற போரில் கடந்த 2009ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு தோற்கடிக்கப்பட்ட போதிலும், தனி ஈழம் என்ற கருத்தை அவர்கள் கைவிடவில்லை. பிரச் சாரம் மற்றும் நிதி சேர்க்கை நடவடிக்கைகள் என தனி ஈழத் துக்கான நடவடிக்கைகள் தொடர்ந்து ரகசியமாக நடை பெறுகின்றன.

போரில் உயிர் தப்பிய தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் நிர்வாகிகள் இலங்கையிலும் சரி, சர்வதேச அளவிலும் சரி தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பினை மீண்டும் கட் டமைக்க தேவையான முயற்சிகளை ஆரம்பித்துள்ளனர். தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான குழுக்கள் மக்கள் மத்தியில் பிரி வினைவாதப் போக்கைத் தொடர்ந்து வளர்த்து வருவதோடு, இந்தியாவிலும் குறிப்பாகத் தமிழகத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கான ஆதரவுத் தளத்தை மேம்படுத் துகின்றன.

அது இந்தியாவின் பிராந்திய ஒருமைப்பாட்டுக்கு பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும்" என்று கூறி தடைக்கான காரணங் களாக மத்திய உள்துறை சுட்டிக்காட்டியுள்ளது.



MINISTRY OF HOME AFFAIRS

NOTIFICATION

New Delhi, the 14th May, 2024

S.O. 1983(E).—WHEREAS the Liberation Tigers of Tamil Eelam (hereinafter referred to as the LTTE), is an association based in Sri Lanka but having its supporters, sympathisers and agents in the territory of India;

AND WHEREAS the LTTE's objective for a separate homeland (Tamil Eelam) for all Tamils threatens the sovereignty and territorial integrity of India, and amounts to cession and secession of a part of the territory of India from the Union and thus falls within the ambit of unlawful activities;

AND WHEREAS, in exercise of the powers conferred by sub-sections (1) and (3) of section 3 of the Unlawful Activities (Prevention) Act, 1967 (37 of 1967), the Central Government declared the LTTE as an unlawful association, vide notification number S.O. 1730(E), dated the 14th May, 2019.

AND WHEREAS the Unlawful Activities (Prevention) Tribunal, constituted under section 5 of the Unlawful Activities (Prevention) Act 1967 for the purpose of adjudicating whether or not, after finding that there was sufficient cause for declaring the LTTE as an unlawful association, by its order published, vide notification No. S.O.4233 (E), dated the 21st November, 2019 had confirmed the declaration, so made;

AND WHEREAS the declaration of ban under sub-section (1) of section 6 of the Unlawful Activities (Prevention) Act, 1967 (37 of 1967) ceases on the 13th May, 2024

AND WHEREAS the Central Government is of the opinion that LTTE is still indulging in the activities which are prejudicial to the integrity and security of the country, inter-alia, on the following grounds, namely: -

(i) even after its military defeat in May, 2009 in Sri Lanka, LTTE has not abandoned the concept of 'Eelam' and has been clandestinely working towards the 'Eelam' cause by undertaking fund raising and propaganda activities and the remnant LTTE leaders or cadres have also initiated efforts to regroup the scattered activists and resurrect the outfit locally and internationally;

(ii) the pro-LTTE groups/elements continue to foster a separatist tendency amongst the masses and enhance the support base for LTTE in India and particularly in Tamil Nadu, which will ultimately have a strong disintegrating influence over the territorial integrity of India;

(iii) the LTTE sympathizers living abroad continue to spread anti-India propaganda among Tamils holding the Government of India responsible for the defeat of the LTTE, which, if not checked, is likely to develop a sense of hate among Tamil Populace towards the Central Government and the Indian Constitution;

(iv) despite the ban in force, the activities of pro-LTTE organisations and individuals have come to notice and, attempts have been made by these forces to extend their support to the LTTE;

(v) the LTTE leaders, operatives and supporters have been inimically opposed to India's policy on their organisation and action of the State machinery in curbing their activities;

(vi) cases have been registered under the Unlawful Activities (Prevention) Act 1967, against LTTE, pro-LTTE groups or elements since the last notification published vide number S.O. 1730 (E), dated the 14th May, 2019 which indicate that LTTE and its remnant cadres, followers and supporters are involved in various criminal activities, including smuggling of illegal drugs, arms for furtherance of objective of the LTTE;

AND WHEREAS the Central Government is of the opinion that the aforesaid activities of the LTTE continue to pose a threat to, and are detrimental to the sovereignty and territorial integrity of India as also to the public order and, therefore, it should be declared as an unlawful association;

AND WHEREAS the Central Government is further of the opinion that – since LTTE continues –

(i) with its disruptive, separatist and secessionist activities, which are prejudicial to the integrity and sovereignty of India; and

(ii) its strong anti-India posture thereby posing a grave threat to the security of Indian nationals,

it is necessary to declare LTTE as an unlawful association with immediate effect;

NOW, THEREFORE, in exercise of the powers conferred by sub-sections (1) and (3) of section 3 of the Unlawful Activities (Prevention) Act, 1967 (37 of 1967), the Central Government hereby declares the Liberation Tigers of Tamil Eelam (the LTTE) as an unlawful association and directs that this notification shall, subject to any order that may be made under section 4 of the said Act, have effect for a period of five years from the date of its publication in the Official Gazette.

[F.No.11034/2/2024-CT-II]

ABHIJIT SINHA, Jt. Secy.

# MORTGAGE

- நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)
- லைன் ஒப் கிரெடிட்(HELOC)
- ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்
- Private Mortgage (No Income Verification)
- 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)
- பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்
- பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட
- எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

**கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?**

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC

www.mortgageclinicanada.com

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.

416-613-2788 / 416-816-9011

ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP

Team Leader/Mortgage & Real Estate Broker

**Cell : 416-624-4843**

எமது முகவரி

305 Milner Ave, Unit 301
Toronto ON M1B 3v4
(Markham & HWY 401)



RIGHT AT HOME REALTY INC.

MORTGAGE ALLIANCE

RIGHTBROKER=RIGHTMORTGAGE

Lic # 10530

Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3

Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4




சங்கத்தமிழ்

ஒவ்வொரு தனி நபரினதும் வளர்ச்சியில் தான்
ஒரு நாட்டின் வளர்சி தங்கி நிற்கின்றது...!

**உங்கள் அறிவித்தல்கள் - விளம்பரங்கள்**
**சங்கத்தமிழ் மின் இதழில் வெளியிட வேண்டுமா?**

விளம்பரம் இன்றி வியாபரம் இல்லை
உங்கள்
விளம்பரங்கள்
அறிவித்தல்கள்
துயர்பகிர்வுகள்
விற்பனை
வாடகை
மற்றும்
வரி விளம்பரங்களுக்கும்

437.345.4203

# “எமது மாவீர்கள் மகத்தான மனிதப் பிறவிகள். அவர்களது வாழ்வும் வரலாறும் எமது வீர விடுதலைக் காவியத்தின் உயிர் வரிகள்”

**–தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் –**



விடுதலை என்பது வாழ்வின் அதியுயர்ந்த விழுமியம். அந்த விழுமியத்தை இலட்சியமாக வரித்து, அதற்காக வாழ்ந்து, அதற்காகப் போராடி, அதற்காக மடிந்த எமது மாவீர்கள் மகத்தான மனிதப் பிறவிகள். அவர்களது வாழ்வும் வரலாறும் எமது வீர விடுதலைக் காவியத்தின் உயிர் வரிகள்.

மாவீர்களே, தமிழர் தேசம் உங்களுக்குத் தலைவணங்குகிறது. உங்களது தற்கொடையால் தமிழீழம மக்கள் இன்று தலைநிமிர்ந்து நிற்கின்றார்கள். உங்களது இரத்தத்தாலும், வியர்வையாலும், உங்களது இலட்சிய உறுதியாலும் கட்டியெழுப்பப்பட்ட எமது விடுதலை இயக்கம், இன்று யாராலும் வெற்றி கொள்ள முடியாத மாபெரும் போராட்ட சக்தியாக உலகப் புகழீட்டி நிற்கிறது. போர் அரங்கில் நீங்கள் படைத்துச் சென்ற மகத்தான சாதனைகளையே இன்று உலகரங்கில், நாம் அரசியல் வெற்றிகளாக அறுவடை செய்து வருகின்றோம்.

இன்று உலகம் மாறி வருகிறது. உலக ஒழுங்கும் மாறி வருகிறது. உலக நாடுகளின் உறவுகளும் மாறி வருகின்றன. மனித சமுதாயம் முன்னென்றும் காணாத புதிய சவால்களுக்கு முகம் கொடுத்து நிற்கிறது.

இன்றைய உலக நிதர்சனத்தை, அதன் யதார்த்தப் புறநிலைகளை நாம் உதாசீனம் செய்ய முடியாது. இன்றைய காலத்தையும், இக் காலத்தில் கட்டவிழும் சூழலையும் நாம் ஆழமாகப் புரிந்து, கால நிலை மாற்றங்களுக்கு ஏற்ப, எமது விடுதலைப் பாதையை செப்பனிடுவது அவசியம். இன்றைய காலத்தின் தேவை அது. உலகப் போக்குடன் முரண்படாது, உலக வரலாற்றின் ஓட்டத்திற்கு இசைவாக, நாமும் எமது போராட்ட வரலாற்றை முன்நகர்த்திச் செல்வதே விவேகமானது. இன்றைய வரலாற்றின் கட்டாயமும் அதுவே.

எமது விடுதலைப் போராட்டம் கால் நூற்றாண்டுகால வரலாறாக நீட்சிபெற்றுச் செல்கிறது. இருபது ஆண்டுகளுக்கு முன் இன்றைய நாளில், எமது முதலாவது மாவீரன் களப் பலி ஆகியதைத் தொடர்ந்து இன்று வரை பல்லாயிரக் கணக்கில் எமது போராளிகள் விடுதலைப் போரில் களமாடி வீழ்ந்திருக்கிறார்கள். எமது இனத்தைப் பேரழிவிலிருந்து பாதுகாத்து, எமது தாயக நிலத்தை அந்நியனிடமிருந்து மீட்டெடுக்க எமது விடுதலை இயக்கம் அளப்பரிய அர்ப்பணிப்புகளைச் செய்துள்ளது. எமது மாவீரர்களின் இம் மகத்தான தியாகங்களால், எத்தனையோ தடவைகள் நாம் பேரழிவுகளின் விளிம்பிலிருந்து மீண்டிருக்கின்றோம். மரணத்தின் வாயிலுக்குச் சென்று மறுபிறவி எடுத்திருக்கின்றோம். வல்லாதிக்க சக்திகளின் தலையீடுகளைத் தனித்து நின்று தகர்த்திருக்கின்றோம். எமது விடுதலை இயக்கம் இன்று வானளாவ வளர்ந்து நிற்கிறது. நிமிர்ந்து நிற்கிறது. எமது இயக்க விருட்சத்தின் வேர்களும் விழுதுகளுமாக நிற்பவர்கள் எமது மாவீர்களே.

*2002 ஆம் ஆண்டு தமிழீழ மாவீரர் நாளை முன்னிட்டு தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து.*


மரகதம்
வைரம்
முத்து
புஷ்பராகம்
மாணிக்கம்
பவளம்
வைடூரியம்
நீலம்
கோமேதகம்
உங்கள் இராசிக்கேற்றபடி
அதிஸ்டக் கற்களில் பலவகையான
டிசைன்களில் மோதிரம் செய்து தரப்படும்
லஷ்மி பொற்சாலை
Inside of Majestic City Plaza
அழையுங்கள்
416 - 587 - 8000
G9 - 2900 Markham Road, Scarborough ON M1X 1E6


PSP
PSP MOTORS
QUALITY USED CARS
Dealers in all kinds of used Motor Vehicles
பல வருடம் அனுபவம் கொண்ட நம்பிக்கையான ஸ்தாபனம்
தரமான பாவித்த ஜப்பானிய வாகனங்கள்
நியாயமான விலையில் கிடைக்கும்
WE'LL BUY YOUR USED VEHICLE EVEN IF YOU DON'T WANT TO BUY OURS!
T. Udayakumar
PSP MOTORS 416.871.0450
30 Old Kennedy Road Unit B Markham ON. L3R 0L6
www.pspmotors.com I info@pspmotors.com


HIGH EFFICIENCY HEATING
& COOLING AIR SOLUTIONS
24h EMERGENCY SERVICES
ALL MAKES & MODEL
★ Furnance ★ Air Conditioner
★ Tankless Water Heater ★ Heat Pump
★ Duct Less ★ Airmax Velocity ★ Air Handlers
★ Boilers ★ Fire Places ★ HRV ★ Attic Insulation
★ Gas Line for BBQ, Stove & Dryer
LENNOX
WHY UPGRADE TO TANKLESS?
Endless Supply of Hot Water
No Up-front Equipment Cost
Save Up To 40%
Save Money & Space Design
15 Years Warranty
No More Risk of Flooding or Explos
KD Navien
The Leader in Condensing Tankless Technology
FREE ESTIMATE
Sales, Service & Repair
S.Kumar
416-993-8001
Airehvac70@gmail.com
FINANCING WITH $0 DOWN
HOME ENERGY LOAN
$15,000



நான் பெரிது நீ பெரிது என்று
வாழாமல்
நாடு பெரிது என்று
வாழவேண்டும்
தமிழீழத் தேசியத் தலைவர்
தமிழீழம்
விடியலை நோக்கி




# மண்சுமந்தோர் கனவு!

துயிலுமில்ல விதைப்பொன்றின் பின்னர்
வீடு திரும்பினேன்
படுக்கை விரித்துவிழி சாமக்கோழி கூவிற்று.
வித்துடல் தோளேற்றி நடந்ததால்
வலித்தது தோளும் மனமும்
தூக்கம் தொலைவாகிப் போனது.
கவிதையொன்று எழுதலாம்
எழுதலாம் தான் எப்படித் தொடங்குவது?
எழுதிச்சென்று எங்கே முடிப்பது?
பாட்டெழுதிப் பாட்டெழுதி
நான்படும் துயர் யாரறிவார்?
கூட்டுக்குள் கிடந்து குமைகிறது உயிர்
பூ அளிப்போட்டே புண்ணானது கைகள்.
நிதம் அழுதழுது
நீர் வற்றிப்போனது விழிகள்.
கண்மலரும் காலை ஒவ்வொன்றும்
வீரச்சாவுடன் தானே விடிகிறது.
இமை மூடும்பொழுதும்
இடிவிழுத்தித்தானே இருள்கிறது.
நிலவு முகந்திருந்திய நிர்மலப் பூங்குடிகளை
இழவு எடுத்து செல்கிறது நாளாந்தம்.
எத்தனை காலத்துக்கென்றுதான் இது?
பத்துப்பரப்பில் விதைக்கத் தொடங்கிய வயல்
ஏக்கர் கணக்காக நீகிறது இன்று.
விதைக்கக் குழிதோண்ட வியர்க்கிறது நிலம்
காற்றின் விழிகலும்.
வெள்ளையடித்த கல்லறைக்குள்ளே
பள்ளி கொள்கின்றனர் பரமாத்துமாக்கள்.
நூல்பித்து ஓடியநேராய்
வரிசையான நாற்று நடுகை.
எல்லாம் முளைக்குமெனும் எதிர்ப்பார்ப்பு
பொய்க்கவில்லை
கங்கும் களைமாக எங்கும் அரும்புகள்.
ஒருநாள் வந்து
உள்ளே புகுந்து ஒரு பூவைத்துப்பாரும்.
குழியிலிருந்து கேட்கும் குரல்
பார்க்கும் விழி
துடிக்கும் உயிர்.
எவர் சொன்னது இவர்களை இறந்துபோனவர் என்று?
எவர் சொன்னது எலும்பும் உக்கி எருவானார் என்று?
வெளியே வருவதில்லையே தவிர
குழிக்குள்ளேயே ஒரு ராஜாங்கமே நடக்கிறது.
கார்த்திகை இருபத்தேழு
தேசத்துக்கு உயிரபெழுதும்நாள்.
சில்லிட்டுக்போகும் நிலம்.
பூக்கொண்டு நடப்போம் புனிதரிடம்.
மெல்ல அருகமர்ந்து
கல்லறைகள் கழுவுவோம் கண்ணீரால்,
நெய்விளக்கு ஏற்றும் நேரம்
செல்வங்கள் விழிதிறப்பர்.
செவிகேட்க சிரிப்பர்.
மௌனமொழியில்
பெற்றமனம் குரப்பேவர்
அதில் ஆயிரம் அர்த்தங்கள் அவிழும்.
“மொழியாகி எங்கள் மூச்சாகி” என்று
என்புருக வழியும் பாடலில்
சிலிர்த்துப்போய் சிலையாவோம்.
“பணிமுடித்து உறங்குகின்றோம்
மீதிவழி முன்செல்வீர்” என
தேவகுமாரனின் அசரீரி கேட்கும்.
“எமக்கானது பூவல்ல
எமக்கானது டரல்ல
எமக்கானது இந்தப்பாடல் மட்டுமல்ல
எமக்கானது விடுதலை
எமக்கானது தேச்தின் விடிவு.”
காற்றிலேறும் இந்தப் பேரொலியுடன்
கல்லறைகள் மூடிக்கொள்ளும்
ஒளிபெறும் திசியல் பாதை தெளிவுறும்.
வாசல் கடந்துவெளியேவர
நிலம் விந்திருக்கும்.
எம் பயணம் தொடரும்
மண்மடிந்தோர் கனவு நனவாகம்வரை.

— புதவை இரத்தினதுரை




# தமிழீழ விடுதலைப் புலிகளின் புலிப்பாய்ச்சலும் பின்னோக்கிப் பாய்ந்த சிங்கள இராணுவமும்! 14.07.1995

சிறீலங்கா அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில், இதுவரை காலமும் நடைபெற்ற சண்டைகளில், யாழ் குடாநாட்டைக் கைப்பற்ற அரசாங்கம் நடத்திய "முன்னோக்கிப் பாய்தல்" இராணுவ நடவடிக்கை பல்வேறு காரணங்களினால் முக்கியத்துவம் பெறுகிறது.

இந்திய இராணுவம் குடாநாட்டின் மீது நடத்திய "பவான்" இராணுவ நடவடிக்கையை விட இது அழிப்பிலும், ஆக்ரோஷத்திலும் குறைவாகவும், சிறீலங்காவின் "ஒப்பரேஷன் லிபரேஷனை" விடப் பாரியதாகவும் இருந்துள்ளது.

"பவான்" நடவடிக்கையில் உலங்குவானூர்த்திகளால், ஏவப்பட்ட எறிகணைகளாலும், பீரங்கித் தாக்குதல்களாலும், முன்னேறிய படையினராலும் ஏராளமான பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

இந்திய ஆக்கிரமிப்புக் காலத்தில் கொல்லப்பட்ட, 6000 - 8000 கும் இடைப்பட்ட பொதுமக்களில், "பவான்" நடவடிக்கையின் போதே பெரும்பாலானோர் கொல்லப்பட்டனர்.

யாழ்ப்பாண வைத்தியசாலையில் வைத்தியர்கள், தாதிகள், ஊழியர்கள், நோயாளிகள் தரைப்படையினரால் கொடூரமாகக் கொல்லப்பட்டது எல்லாக் கொலைகளுக்கும் சிகரமாய் அமைந்தது.

"முன்னோக்கிப் பாய்தல்" நடவடிக்கையில், ஷெல் வீச்சுக்களினாலும் ஏராளமான பொதுமக்கள் கொல்லப்பட்டனர். ஒரு நிமிடத்துக்கு ஒரு ஷெல்லாவது விழுந்து வெடித்ததாகக் கூறப்படுகிறது.

நவாலி சென்பீற்றர் தேவாலயத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதல் கொலைச் செயல்களுக்கு மகுடம் வைத்தது போல் இருந்தது.



இந்திய அரசாங்கத்தின் பூரண ஆசியுடனேயே இக்கொலைகளும் நடத்தப்பட்டன என்பது முக்கிய விடயமாக உள்ளது. இவ் இராணுவ நடவடிக்கையின் போது 247 பொதுமக்கள் கொல்லப்பட்டு, ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் காயம் அடைந்தனர்.

அவர்களில் 470 பேர் படுகாயம் அடைந்து உடல் உறுப்புக்களை இழந்தார்கள். கொல்லப்பட்டவர்களில், 65 பேர் குழந்தைகளாக உள்ளனர். இறந்து, காயமடைந்தவர்களில் அரைவாசிக்கு மேல் பெண்களும், வயது முதிர்ந்தோர்களும் ஆவார்.

தேவாலயம் மீதான தாக்குதலில் மட்டும் 120 பொதுமக்கள் இறந்தனர். அங்கு இறந்த 20 சிறார்களில் 13 பேர் கைக்குழந்தைகளாகவும் உள்ளனர்.

யாழ். குடாநாட்டில் சிறீலங்காவின் கட்டுப்பாட்டிலுள்ள பலாலியிலிருந்து அச்சுவேலி, சங்கானை, சண்டிலிப்பாய், அளவெட்டிக்கூடாக ஒரு பெரும் அணியும், மாதகலிலிருந்து இன்னொரு பேரணி, கரையோரமாக காரைநகருக்கூடாகவும், ஊர்காவற்துறையிலிருந்து அராலிக்கூடாகவும் இன்னொரு அணியும் வந்து வட்டுக்கோட்டை, துணாவி ஆகிய இடங்களில் சந்திப்பதே முதற்கட்ட நடவடிக்கையாகும்.

பின்னர் அராலியிலிருந்து, அனைத்து அணிகளும் கல்லுண்டாய் வெளி, பொம்மை வெளிக்கூடாக யாழ். நகரை நோக்கி வந்து அதனைக் கைப்பற்றுவதாக இராணுவ திட்டம் இருந்தது.

ஞாயிற்றுக்கிழமை 09ம் திகதி காலை "முன்னோக்கிப் பாய்தல்" என்ற குறியீட்டுப் பெயருடன், 4 பிரிகேட் படைப் பிரிவுகளைக் கொண்டதான 10000க்கு மேற்பட்ட இராணுவத்தின் இராணுவ நடவடிக்கை ஆரம்பமாகியது. அப்போதே இப்போர் நடவடிக்கையின் தோல்வியைத் தேசியத் தலைவர் பிரபாகரன் தீர்மானித்து விட்டதாகக் கருதுகிறேன்.

பின்னர், எப்படி, எங்கு, எந்த நேரத்தில் இராணுவத் தோல்வியை முற்றுப் பெறச்செய்ய வேண்டும் என்ற அம்சங்களை தலைவர் தீர்மானிப்பதும், அதனை அச்சொட்டாக நடைமுறைப்படுத்துவதுமே எஞ்சி இருந்தன.




சிங்கள இராணுவ நடவடிக்கை தமிழ் இனப்பிரச்சினையோடு மட்டும் தொடர்புடையதாக இருக்கவில்லை. கொழும்பில் உள்ளூர் அரசியலோடும் நெருங்கிய தொடர்புடையதாக இருந்தது.

தென்பகுதியில் போர் ஆயத்தங்களின் விளைவாக ஏற்பட்ட விலைவாசி உயர்வுகள், வேலை நிறுத்தங்கள் ஆகியவற்றைச் சமாளிக்க வேண்டியிருந்தது. மேலும் ஜனாதிபதிப் பதவியை அகற்றப் போவதாக தேர்தல் காலத்தில் பகிரங்கமாக கூறிய போதிலும், சகல வல்லமை பொருந்திய அப் பதவியை விட்டுவிட ஜனாதிபதி சந்திரிக்காவிற்கு மனம் ஒப்பவில்லை.

ஜூலை 15ம் திகதிக்குள் அதனைச் செய்வதான காலக்கெடு நெருங்கிவந்து கொண்டிருந்தது. எனவே இப் பிரச்சினைகளில் இருந்து திசை திருப்பவும், இராணுவ வெற்றி ஒன்றுடன் ஏனைய பிரச்சினைகளைச் சமாளித்து தனது அரசியல் நிலையைப் பலப்படுத்திக் கொள்ளவும் ஜனாதிபதி சந்திரிக்கா விரும்பினார்.

எனவேதான் உக்ரேனிலிருந்து வருவதாக இருந்த AN - 32 துருப் புக்காவும் விமானங்கள் போன்ற இராணுவத் தளபாடங்கள் முழுமையாக வந்திறங்கும் முன்னரே இராணுவ நடவடிக்கையைத் தொடங்க அரசாங்கம் விரும்பியது.

எனவேதான் "இந்தியா டுடே"க்கு அளித்த பேட்டியில் சந்திரிக்கா கூறியிருந்தது போன்று, "ஏராளமான உயிரிழப்புக்கள் ஏற்படும். அப் பகுதியே துடைத்தழிக்கப்படும்" என்று தெரிந்தும் இராணுவ நடவடிக்கையை அவர் அவசரப்படுத்தித் தொடங்கினார்.

இத்தகையதொரு இராணுவ நடவடிக்கை குடாநாட்டின் மீது ஆரம்பமாகப் போவது, மேற்கூறிய உள்ளூர் அரசியல் நோக்குக் காரணமாக ஏற்கனவே வெளிப்படையாகத் தெரிந்திருந்தது.

எந்தத் திகதி என்பது தான் தெரியாது இருந்தது. எனவே இதனை எதிர்கொள்ள புதிய போராளிகள் ஏராளமானோரைச் சேர்த்துக் கொள்ளும் நிர்ப்பந்தத்தையும், சர்ந்தர்ப்பத்தையும் விடுதலைப் புலிகளுக்குக் கொடுத்தது.

மேலும் மண்டைதீவு மீதான முன் எச்சரிக்கையான தாக்குதல், அரசாங்கத்தின் இராணுவ தந்திரோபாயத்தில் பெரும் ஒரு அடியாகவும், ஓட்டையாகவும் அமைந்தது.

எனவே, இராணுவம் பலாலியிலிருந்து பெரும் படை நகர்வை, கிடுக்கி போன்ற வடிவமைப்பில் (Pincer Movement) நடத்த வேண்டியிருந்தது.

மண்டைதீவில் இருந்தோ ஏனைய முகாம்களில் இருந்தோ ஒரே நேரத்தில் புறப்படும் கடந்த கால நடவடிக்கை, இம் முறை கைக்கொள்ளப்படாது, பலாலியிலிருந்து பெரும்படை நகர்வை திட்டமிட்ட ரீதியில் வழிநடத்துவது என்ற நோக்கத்தின் பாற்பட்டதாக இருக்கலாம்.

இங்கு தான் இப்படை எடுப்பின் தோல்விக்கான பலவீனம் இருந்தது. அப்பலவீனத்தை தேசியத் தலைவர் மிக நுட்பமாக, அவகாசமாக பயன்படுத்திக் கொண்டதே, போர் நடவடிக்கையில் திருப்புமுனையாக அமைந்தது.

அது சிறீலங்காவின் "முன்னோக்கிப் பாய்தல்" என்ற தாக்குதல் நடவடிக்கை, தமிழீழ விடுதலைப் புலிகளின் "புலிப்பாய்ச்சல்" என்ற தாக்குதல் நடவடிக்கைக்கு வழிவகுத்தது.

போர் நடவடிக்கையில் விநியோகம் என்பது முக்கியமான இடத்தை வகிக்கின்றது. மரபு ரீதியான போர்முறையில் இதன் பங்கு இன்னும் அதிகமானது. படை எடுக்கும் இராணுவப் பேரணி, எவ்வளவு நீளமாக்கப்படுகின்றதோ, எவ்வளவு பரவலாக்கப்படுகின்றதோ அவ்வளவத்துக்கு விநியோகம் என்பது சிக்கலடைகிறது.

புதிய துருப்புக்கள், புதிய ஆயுத தளபாடங்கள், வெடிபொருட்கள், உணவு வகைகள் ஆகியவை தொடர்ந்து சண்டைக்களத்துக்கு அனுப்பப்பட்டுக் கொண்டிருத்தல் வேண்டும். அல்லது படையணிகளில் சீர்குலைவு ஏற்பட்டு விடும்.

சிறீலங்காவை பொறுத்தவரை, கடற்புலிகளின் செயற்பாட்டால், மிகுந்த பாதுகாப்பு வழங்கப்பட்டே விநியோகங்கள் ஓரிருமுறை குடாநாட்டு முகாம்களுக்கு வழங்கப்பட்டன.

அவ்ரோ(Avro) விமானங்கள் வீழ்ந்ததன் காரணமாக விமானப் போக்குவரத்துக்களும் மட்டுப்படுத்தப்பட்ட நிலையிலேயே இருந்தன. தரைவழிப் போக்குவரத்து முற்றாக இல்லை. எனவே ஓர் அளவில் தென்பகுதியிலிருந்து கொண்டுவரப்பட்ட விநியோகங்கள், படையணிகள் கடக்கிற தூரம், காலம் என்பதைப் பொறுத்து குறையத் தொடங்குகின்றன.

இப்படியான ஒரு நிலையே சிறீலங்கா இராணுவத்துக்கு 14ம் திகதி வெள்ளிக்கிழமை அன்று அதாவது நடவடிக்கை தொடங்கி 6ம் நாள் ஏற்பட்டிருந்தது.

இச் சர்ந்தப்பத்தையும், பொருத்தமான இடத்தையும் தக்கியதில் தான் பிரபாகரனின் போர்த்தந்திரம் அடங்கியுள்ளது.

தாக்கிய இடங்கள், இராணுவப் பேரணியின் கட்டளை, விநியோக மையமாக மாற்றப்பட்டு, தற்காலிக முகாம்களாக அமைந்திருந்த அளவெட்டி, சண்டிலிப்பாய் பகுதிகளாகும். இதில் அடிப்பது தலையிலும், வயிற்றிலும் அடிப்பதைப் போன்றது. இதன் போது 100க்கும் மேற்பட்ட இராணுவத்தினர், 4 அதிகாரிகள் கொல்லப்பட்டனர்.



பாய்ச்சலைத் தயார்ப்படுத்தித் திட்டமிடும் தளபதிகள் (இடது); பாய்ந்திடத் தயாராகி அணிவகுக்கும் புலிகள் (வலது).

17 கனரக கவசவாகனங்கள் இராணுவ விநியோகங்களோடு புலிகளால் கைப்பற்றப்பட்டன. அங்கிருந்த இராணுவ விநோயோகங்கள் அனைத்தையும் புலிகள் எடுத்துச் சென்றுவிட்டதாக இராணுவ அதிகாரி ஒருவர் ஒப்புக்கொண்டார்.

மிகவும் தேவையான நேரத்தில் தமது விநியோகங்களை இழப்பது மட்டுமல்ல, எதிரிக்குக் கொடுப்பதும் இரண்டு தரம் தற்கொலை செய்வதற்கு ஒப்பானது. புலிகளின் இத்தாக்குதலோடு, முதுகெலும்பு முறிந்து நகர முடியாத நிலை அரச படைகளுக்கு ஏற்பட்டுவிட்டது. இதன் பிறகு பின்னோக்கிப் பாய்தலைத் தவிர வேறுவழி இருக்கவில்லை.

முன்னோக்கி மேலும் நகர முடியாத நிலைமைக்கு அன்றைய தினம் புக்காரா குண்டுவீச்சு விமானம் விடுதலைப்புலிகளால் வீழ்த்தப்பட்டதும் முக்கிய காரணம்.

வழமையாக மரபு இராணுவங்கள் செய்வது போன்றே, முன்னேற உள்ள பகுதிகள் மீது இடைவிடாத எறிகணைத் தாக்குதல்களை நடத்திவிட்டு, சிறீலங்கா இராணுவ அணிகளும் முதல் 6 நாட்கள் முன்னேறின.

அரசாங்கம் திட்டமிட்டவாறு, 3 இராணுவ அணிகளும் வட்டுக்கோட்டைப் பகுதியில் சந்தித்துக் கொண்டன. இனிமேல், யாழ் நகர் மீது தாக்குதல் நடத்துவது குறித்த ஆயுதங்களைச் செய்துகொண்டிருக்கும் போதே திருப்புமுனையான, சண்டையின் திசையே முற்றாகத் திரும்பிவிடும்படியான விடுதலைப புலிகள் தாக்குதல் இடம்பெற்றது.

உணவு தளபாட விநியோகம், புதிய துருப்புக்களை பொருத்தமான இடங்களில் இறக்குதல், காயப்பட்டோரை அப்புறப்படுத்தல், இராணுவ அதிகாரிகளின் போக்குவரத்து ஆகியவற்றிற்கு விமானங்களை, உலங்குவானூர்திகளை பயன்படுத்த முடியாத நிலை, புக்காராவின் வீழ்ச்சியுடன் ஏற்பட்டது.

புக்காரா வீழ்ந்ததன் பின்னர், குடாநாட்டு காலப்பகுதிகளில் எவ்வித விமானங்களும் பறக்காதது குறிப்பிடத்தக்கது.

ஒரு சண்டையின் வெற்றிக்கு, எதிர்பாராத திடீர்தாக்குதல் கணிசமான பங்கை வகிக்கிறது. முதற்கட்ட நடவடிக்கை பெரும் இழப்புக்களின்றி முடிவுற்ற திருப்தியில் இராணுவம் இருந்தது. இராணுவ அதிகாரிகளும், அரசியல் தலைவர்களும் யாழ்ப்பாண நகரைப் பிடிக்கும் கனவுகளில் மிதந்தனர்.

“விடுவிக்கப்பட்ட” பகுதிகளுக்கு எண்ணை, மின்சாரம், உணவுப்பொருட்களை, புனர்வாழ்வு அமைச்சரை அனுப்பி அவர் மூலமே விநியோகிக்க அரசாங்கம் முடிவெடுத்தது.

புலிகள் அப்புறப்படுத்தப்பட்ட பகுதிகளில் உணவுப் பொருட்களைக் கொண்டுபோய் வைத்தால், சனங்கள், புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இருந்து, அவர்களை மீறிக்கொண்டு உணவுக்காக இராணுவப் பகுதிகளுக்கு ஓடிவருவார்கள் என்ற கருத்தும் அப்போது சந்திரிக்கா அம்மையாரால் வைக்கப்பட்டது.

புலிகள் எல்லோரும் ஓடிப்போய் அகதி முகாம்களில் இருப்பதாகவும் ஒரு கதை பரப்பப்பட்டது. பிரபாகரன் வெள்ளைக் கொடியைத் தூக்கிக் கொண்டு அரசாங்கத்தின் காலில் விழுவார்



என்றும் எதிர்பார்க்கப்பட்டது.

இவ்வாறு பலூன் போன்று பூரித்த இராணுவத்தின் மீதே தாக்குதல் நடத்தப்பட்டது. பலாலியில் இருந்து புறப்பட்ட பிரதான அணியின் மீது தாக்குதல் நடத்தப்பட்டு, அப்பகுதிகளில் இருந்து விரட்டப்பட்ட பின்னர் கரையோரமாக உள் நுழைந்த அணி மீதும், ஊர்காவற்துறையிலிருந்து அராலிக்கூடாக உள் நுழைந்த இராணுவ அணிமீதும் “புலிப்பாய்ச்சல்” நடவடிக்கை என்ற பேரில் பிரபாகரனின் தலைமையில் தாக்குதல் தொடுக்கப்பட்டது.



இச் சண்டைகள் வலிகாமம் மேற்குப் பகுதியில் நடந்தன. கடுமையான எதிர்த்தாக்குதல்களைத் தாங்கமுடியாத இராணுவம் பின்வாங்கி தமது முன்னைய நிலைகளுக்குள் சென்று முடங்கிக்கொண்டது. இச் சண்டைகளின் போது 150க்கு மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

இத்துடன் சிறீலங்காவின் (முன்னோக்கிப்பாய்தல்) நடவடிக்கை தோல்வியில் முற்றுப்பெற்றது. ஆயினும் 16ம் திகதி ஞாயிறு காலை, “புலிப்பாய்ச்சல்” ன் ஒரு அம்சமாக காங்கேசன் துறை முகத்தினுள் தரித்து நின்ற கடற்படைக் கப்பல்கள் மீது தாக்குதல் தொடுக்கப்பட்டன.

மண்டைதீவுத் தாக்குதல், சிறீலங்கா இராணுவ நடவடிக்கைக்கு முன் எச்சரிககியாக நடத்தப்பட்டது என்று கூறினால், காங்க்கேசந்துரைமுகத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதல், பின்வரக் கூடிய தாக்குதல்களை எச்சரிக்கையாகக் கொண்டு நடத்தப்பட்டது என்று கருதுகிறேன்.

கடற்புலிகள் என்ற படைப்பிரிவு ஆரம்பிக்கப்பட்ட பின்னர் 4 மணித்தியாலங்களுக்கு மேல் நீடித்த மிகப்பெரிய கடற்சண்டை இதுவென வர்ணிக்கப்படுகிறது.

இதனை கடற்புலிகள், கடற்கரும்புலிகள் அணி, சுலோஜன் நீரடி நீச்சல் அணி ஆகியவை இணைந்து நடத்தியுள்ளன. ராடர் பொருத்தப்பட்டு கண்காணிக்கும், கட்டுப்பாட்டுக்கும் பயன்பட்ட “எடித்தாரா” என்ற கட்டளைக் கப்பலும், இராணுவத்தினரை கடல்மார்க்கமாகத் தரையிறக்கும் பாரிய கப்பலுமே தெரிந்தெடுத்து மூழ்கடிக்கப்பட்டுள்ளன.

கடற்சண்டையின்போது பல கப்பல்கள் சேதமாக்கப்பட்டுள்ளன. சிறீலங்காவின் கடல் வழிச்செயல்பாட்டை, இனிவரும் காலங்களில் கணிசமான அளவு குறைக்கும் நோக்குடனேயே இத் தாக்குதல் நடைபெற்றதாக ஊகித்துக் கொள்ளலாம். அரச ஆயதப் படைகளின் மனவுறுதி இவற்றால் தளர்ந்துள்ளதையும் அவதானிக்கலாம்.

இவ் இராணுவ நடவடிக்கையால், அரசாங்கம் சாதித்தது ஒன்றுமில்லை. சிறீலங்காவின் முன்னைய இனவாத தலைமைகளைப் போன்றே, இராணுவத் தீர்வை பரிசீலித்துப் பார்த்து தோல்வி கண்ட நிலையில் சந்திரிக்கா உள்ளார்.

அவரது அரசியல் சத்திரம் மேலும் பலவீனமடைந்துள்ளது. சமாதானத் தூதுவர் என்ற தோற்றம் அகன்று, மரண தேவதை என்ற உண்மைத் தோற்றம் வெளிப்பட்டுள்ளது. தமிழ் மக்களை புலிகளிடமிருந்து பிரித்து, அவர்களின் மனங்களை வென்று, அவர்கள் விரும்பும் தீர்வை வழங்குதல் என்ற என்ற அவரின் வார்த்தைகள் இரத்தக் குளிப்பாள் முழ்கடிக்கப்பட்டுள்ளன.

தமிழ் மக்களை விடுதலை செய்தல் என்பது அவர்களைப் பரலோகத்துக்கு அனுப்புதல் என்றும், அமைதி என்பது தமிழ் பகுதிகளில் மயான அமைதியைத் தோற்றுவித்தல் என்றும் அர்த்தங்களை இந்த இராணுவ நடவடிக்கை தந்துள்ளது. இராணுவத்திற்கு எதிரான நடவடிக்கைகளிலும், அவசரகால பொதுத்தொண்டு நடவடிக்கைகளிலும், தமிழ் மக்களின் செயல்ப்பாடுகள் பூரணமாக இருந்ததாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதியே தெரிவித்துள்ளார்.

சர்வதேச மனித உரிமை, மனிதாபிமான அமைப்புக்கள், அரசாங்கங்கள் ஆகியவற்றின் பலத்த கண்டனத்தை சந்திரிக்கா அரசாங்கம் சம்பாதித்துக் கொண்டது. இனப்படுகொலையும், சிங்கள மேலாதிக்கமும் தான் சந்திரிக்கா அரசாங்கத்தினதும்தீர்வு என்பதை சர்வதேச சமூகம் புரிந்துகொண்டது.

நிலப்பகுதிகளை ஆக்கிரமிக்கும் அதேவேளை, கிளர்ச்சிக்காரரையும் அவர்களது தலைவர்களையும், ஆதரவளிக்கும் பொதுமக்களையும் எவ்வளவு கொல்ல முடியுமோ அவ்வளவுக்கு கொல்ல வேண்டும். இதுவே இறுதி வெற்றிக்கு வழி என்றரீதியில் அரச இராணுவம் செயற்பட்டது.

மிகப்பெரும் படைஎடுப்பை மிகக் குறுகிய நாளில் மிகக்குறைந்த போராளிகளின் (80 போராளிகள்) இழப்புக்களுடன் முறியடித்தது, போர்க்கலை பற்றிய ஆய்வாளர்களின் ஆய்வுக்கு உட்படப் போவது உண்மை. நவீன உலகின் தலை சிறந்த கொரில்லாத் தலைவர் என்ற பெருமையும் எமது தேசியத் தலைவருக்கு இது பெற்றுத்தரும் என்று நிச்சயம் நம்பலாம்.

“முன்னோக்குப் பாய்தல்” நடவடிக்கையின் போது, விடுதலைப் புலிகள் மரபு ரீதியான இராணுவம் போன்று செயல்படவில்லை என்று எதிரான விமர்சனங்கள் முன் வைக்கப்பட்டன. விடுதலைப் புலிகள் தன்னளவில், மரபுரீதியான, ஒழுங்கமைந்த இராணுவமாக வளர்ச்சிபெற்று வருகின்ற போதிலும், சிங்கள இராணுவத்துடனான பாரிய சண்டைகளின் போது கெரில்லா உத்தி ரீதியிலேயே சண்டையிட வேண்டும்.

எப்போதுமே ஆயுதபலம், ஆட்பலம் கூடிய நிலையில் உள்ள சிறீலங்கா இராணுவத்துடன் குறைந்த ஆள், ஆயுத என்னிக்கையுடனான போராளிகள் மரபுரீதியில் மோதுதல் தற்கொலைக்கு ஒப்பாகும். இவ்வாறு சர்ந்தப்பத்துக்கு ஏற்றவாறு உத்திகளை மாற்றும் தன்மை (Flexibility) கொரில்லா இராணுவத்தின் சிறப்புத் தன்மையே தவிர குறைபாடு அல்ல. விடுதலைப் புலிகள், சிறீலங்கா இராணுவம் முன்னேறிய பகுதிகளை விட்டு விலகியது உத்தி ரீதியான (Tactical) பின்வாங்களே தவிர, தந்திரோபாயத் திட்ட அடிப்படையிலான (Strategic) நகர்வே. சிறீலங்கா இராணுவப்படைகள், தமது இராணுவ நடவடிக்கையின் இலக்கை அடையமுடியாது (யாழ் குடாநாட்டைக் கைப்பற்றுதல்) தமது பலாலித் தளத்துக்கு பின்வாங்கியதையே நாம் தந்திரோபாயத் திட்ட அடிப்படையிலான பின்வாங்கல் என்று கூறலாம்.




# தமிழின அழிப்பு நினைவுப் பகிர்வு

# 1981 ம் ஆண்டு மே, யூன் இனப்படுகொலை

1981 ஆம் ஆண்டு மே மாதமும் யூன் மாதமும் வடகிழக்கில் தேர்தல் பரப்புரை பின்னணியில் கொந்தளிப்பான அரசியற் சூழ்நிலைகள் காணப்பட்டன. இந்நிலையில் ஐ.தே.கட்சியின் தலைமைப்பீடம் ஓர் உயர்மட்ட அமைச்சர் குழுவை யாழ்ப்பாணத்திற்கு அனுப்பிவைத்தது. ஜே.ஆர் அரசாங்கத்தால் நயவஞ்சக நோக்கத்தோடு அனுப்பிவைக்கப்பட்ட இந்தக் குழுவில் மகாவலி அபிவிருத்தித்திட்ட அமைச்சர் காமினி திஸாநாயக்கா, விஞ்ஞான கைத்தொழில் அமைச்சர் சிறில் மத்தியூ போன்ற அமைச்சர்கள் யாழ்ப்பாணம் வந்து யாழ்ப்பாணம் சுபாஸ் விடுதியில் தங்கியிருந்தார்கள். இவர்களோடு யாழ்ப்பாண நகர் எங்கும் சிறப்புப் பயிற்சி பெற்ற காவற்றுறையினரும் மேலதிகமாகச் சேர்க்கப்பட்டனர். முப்படைகளும் யாழ்ப்பாண நகர் எங்கும் பரவலாக நிறுத்தப்பட்டிருந்தனர். இவர்களைவிடப் பெருந்தொகையான சிங்களக் குண்டர்கள், காடையர்கள் தென்னிலங்கையிலிருந்து கொண்டுவரப்பட்டு யாழ்ப்பாணம் துரையப்பா ஸ்ரேடியத்தில் தங்கவைக்கப்பட்டிருந்தனர். அவர்கள் யாழ்ப்பாண நகரை எரியூட்டுவதற்கு ஏற்ற வகையில் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தனர்.

இவ்வாறாக யாழ்ப்பாண நகரம் ஒரு கொதி நிலையில் இருந்தபோது 1981ஆம் ஆண்டு மே மாதம் முப்பத்தோராம் திகதி யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை நாச்சிமார் கோயிலுக்கு முன்னால் தேர்தல் பரப்புரைக் கூட்டம் நடைபெற்றக் கொண்டிருக்கும்போது திடீரென வெடிச்சத்தம் கேட்டது. அடையாளம் தெரியாதோர் மேற் கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒரு சிங்களக் காவற்றுறையினன் கொல்லப்பட்டார். இதைத் தொடர்ந்து அவ்விடத்திற்கு வந்த யாழ்ப்பாணக் காவற்றுறை நிலையத்தைச் சேர்ந்த சிங்களக் காவற்றுறையினர் நாச்சிமார் கோயிலுக்குத் தீ மூட்டினார்கள். ஆலய சுற்றாடலில் நின்ற மக்கள் தாக்கப்பட்டார்கள். ஆலயத்திற்கு உள்ளே நின்ற பக்தர்கள் காவற்றுறையினரின் துப்பாக்கிப் பிடிகளாற் தாக்கப்பட்டார்கள். பலர் படுகாயமுற்றார்கள். ஆலயத்திற்குள்ளே இருந்த விக்கிரகங்கள், சுவாமிகாவும் வாகனங்கள் தாக்கப்பட்டன. ஆலயத்திற்கு வெளியே அமைக்கப்பட்டிருந்த தேர் முட்டியும், தேரும் தீ மூட்டி எரிக்கப்பட்டன. நாச்சிமார் கோயில் சுற்றாடலிலிருந்த வீடுகள், கடைகள், வீட்டு வேலிகள் என்பன எரிக்கப்பட்டன. இதன் பின்னர் யாழ்ப்பாண நகருக்குள் நுழைந்த சிறீலங்காக் காவற்றுறையினர் யாழ்ப்பாண நகருக்குத் தீ மூட்டினார்கள். யாழ்ப்பாணம் வைத்தியசாலைக்கு முன்னாலிருந்த மகாத்மா காந்தி சிலை, யாழ்ப்பாணம் நவீன சந்தைக்கு முன்னாலிருந்த சோமசுந்தரப் புலவர் சிலை, யாழ்ப்பாணம் ஹட்டன் நெசனல் வங்கிக்கு முன்னாலிருந்த திருவள்ளுவர் சிலை, யாழ்ப்பாணம் சத்திரச் சந்தியிலிருந்த ஔவையார் சிலை என்பன அடித்து நொருக்கப்பட்டன. யாழ்ப்பாணம் முற்ற வெளியிலிருந்த தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலைகளின் நினைவுத் தூபிகள் சிதைக்கப்பட்டன.

இதன் பின்னர் பருத்தித்துறை வீதி வழியாக அப்போதைய நாடாளுமன்ற உறுப்பினர் வெற்றிவேல் யோகேஸ்வரனின் வீட்டுக்குச் சென்று அவரிடமே அவரைப் பற்றி விசாரித்திருக்கிறாஉகள். நிலைமையைப் புரிந்து கொண்ட யோகேஸ்வரன் தன் வீட்டுப் பின் மதிலால் தன் மனைவியையும் அழைத்துக் கொண்டு ஓடி மயிரிழையில் உயிர்தப்பினார். நாடாளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரனின் வீடும் வீட்டினுள்ளேயிருந்த அவரது காரியாலயமும் சிங்களக் குண்டர்களால் தீயிட்டுப் பொசுக்கப்பட்டன. நாடாளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரனின் வீடு தரைமட்டமாக்கப்பட்டது. யோகேஸ்வரன் அவர்கள் 1981ஆம் ஆண்டு யூன், யூலை மாதம் வெளியான இந்தியா டுடே சஞ்சிகைக்கு அளித்த செவ்வியில் தனது வீட்டைக் கொளுத்தியவர்கள், கட்டைக் காற்சட்டையும் அரைக்கை பெனியனும் அணிந்து மதுபோதையிற் காணப்பட்டார்கள் என்றும், அவர்கள் சிங்களத்தில் கதைத்தார்கள் என்றும் குறிப்பிட்டிருந்தார்.


House and car of Mr. V. Yogeswaran, Jaffna MP, razed as fires burned citywide.

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

# 15.05.1985 குமுதினிப் படுகொலை






யாழ் தீபகற்பத்தின் தனித்துவமானதும், நான்கு பக்கங்களும் கடலால் சூழப்பட்டதுமாக, 47.4 சதுர கி.மீ நிலப்பரப்பில் நெடுந்தீவுப் பிரதேசம் அமைந்துள்ளது. தீவுகளில் பெரும் விசாலமான நிலப்பரப்பைக் கொண்ட இப்பிரதேசத்தில் ஆறாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வந்தார்கள். நெடுந்தீவில் வாழும் மக்கள் தமது அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றக் கடல் கடந்து படகுகளில் பிரயாணம் செய்வது தவிர்க்க முடியாததாக இருந்தது. நெடுந்தீவு மக்களின் கடல் போக்குவரத்திற்கு குமுதினிப் படகுச் சேவையே பெரிதும் உதவியது. இப்படகுச் சேவை நாளாந்தம் காலை 7.00 மணிக்கு நெடுந்தீவு துறைமுகத்திலிருந்து குறிகட்டுவானுக்கும் பின்னர் மாலை 5.00 மணிக்கு குறிகட்டுவானிலிருந்து நெடுந்தீவுத் துறைமுகத்துக்கும் பயணிக்கும்.

1985ஆம் ஆண்டு மே மாதம் பதினைந்தாம் திகதி குமுதினிப் படகு வழமை போல தனது சேவையை ஆரம்பித்தது. அன்று ஏறக்குறைய இப்படகில் அறுபதிற்கும் மேற்பட்ட பயணிகள் பிரயாணம் செய்தார்கள். நெடுந்தீவுத் துறைமுகத்திலிருந்து குறிகட்டுவான் நோக்கி வந்து கொண்டிருந்த சமயம், நயினை நாகபூசணி அம்மன் ஆலயம் அமைந்துள்ள நயினாதீவில் முகாமிட்டிருந்த கடற்படையினரின் பீரங்கிகள் பொருத்தப்பட்ட இரண்டு விசைப்படகுகள் குமுதினிப் படகினை அண்மித்தபோது அதில் பயணித்த மக்கள் அச்சம் கொள்ளத் தொடங்கினர். அவ்விரண்டு விசைப்படகுகளில் கடற்படையினர் தங்களுடன் கோடரி, கத்தி, அரிவாள் போன்ற கூரிய ஆயுதங்களையும் எடுத்து வந்திருந்தனர். இதைப் பார்த்த மக்கள் செய்வதறியாது கதறி அழுதார்கள். வந்த கடற்படையினர் குமுதினிப் படகினுள் இருந்த மூன்ற மாதக் குழந்தை உட்பட அனைத்துப் பயணிகளையும் ஒவ்வொருவராகக் கீழ்தளத்திற்கு அழைத்து மற்றவர்கள் அறியாமல் தாங்கள் எடுத்து வந்த கூரிய ஆயுதங்களால் வெட்டிக் கொன்றனர். இத்தாக்குதலில் நாற்பத்திரண்டிற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தார்கள். இருபத்தைந்திற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தார்கள். காயமடைந்தவர்களில் பெரும்பாலானவர்கள் தமது அங்கங்களை இழந்தார்கள். அவர்கள் அனைவரும் மாலை கரையொதுங்கிய குமுதினிப் படகிலிருந்து யாழ். போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச்






செல்லப்பட்டார்கள் சம்பவம் தொடர்பாக நெடுந்தீவைச் சேர்ந்த எஸ். புஸ்பராணி தெரிவிக்கையில்,
“அனுரதபுரத்தில் நடைபெற்ற கொடூரச் சம்பவத்திற்குப் பதிலடியாகவே இக் குமுதினிப் படுகொலை நடைபெற்றது. இதில் பலர் வெட்டிக் கொல்லப்பட்டார்கள். இதில் எனது உறவினர் பலர் இறந்துள்ளனர். இச் சம்பவத்தில் நான் வெட்டிக் காயப் படுத்தப்பட்டேன். கர்பிணித் தாய்மாரைத் தாக்கும் போது வயிற்றிலுள்ள குழந்தை “கொட்டியா”என்ற கூறித் தாக்கினார்கள். பெண்கள், குழந்தைகள் என்ற பாகுபாடின்றி பலர் தாக்கப் பட்டனர்”.

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோாகளின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

1. பசுபதி நிர்மலாதேவி, 20, -
2. கந்தையா சதாசிவம், 26, ஆசிரியர்
3. ஜேசுதாசன், 46, கடற்றொழில்
4. மாரியம்மா, - , -
5. ஆ.கனகலிங்கம், 34, கடற்றொழில்
6. தில்லைநாதன், 32, கடற்றொழில்
7. ஞானப்பிரகாசம் மரியமாணிக்கம், 45, கடற்றொழில்
8. சடையர் கோவிந்தன், 46, கடற்றொழில்
9. செபமாலை அந்தோனிப்பிள்ளை, 45, கடற்றொழில்
10. செபமாலை கிருக்ஷ்டி, 24, -
11. நிமிலி, 18, -
12. அனுக்ஷியா, 23, -
13. பேர்ணாட் கிறார் பூரணம், -
14. வெ.கந்தையா, 44, கடற்றொழில்
15. செ.சந்திரகுமார், 30, கடற்றொழில்
16. தருமலிங்கம் பாபு, 13, -
17. குமாரசாமி விநாயகம், 38, கடற்றொழில்
18. சபாபதி தெய்வானை, 68, கடற்றொழில்
19. ஞானப்பிரகாசம் தேவசகாயம், 42, கடற்றொழில்
20. வைத்திலிங்கம் சதாசிவம், 45, கடற்றொழில்
21. இராமன் முருகன், 52, கடற்றொழில்
22. கரையூர் சின்னையா, 35, அரச ஊழியர்
23. முத்தன் மணிவண்ணன் , 13, -
24. றொகேசியன் சந்திரகுமார், 18, மாணவன்
25. தொப்பை நாகேந்திரம், 23, -
26. சின்னவன் அந்தோனி, 65, -
27. இராமநாதன், 16, -
28. வேலுப்பிள்ளை புஸ்பராசா, 22, -
29. ஞானசேகரம், 28, தபால்அதிபர்
30. விசுவலிங்கம் சுபாஜினி, 07 மாதம், -
31. கனகம்மா, 55, கடற்றொழில்
32. பழனி மோகநாதன், 27, கடற்றொழில்
33. தர்மலிங்கம் அமிர்தலிங்கம், 18, -
34. பசுபதி நிர்மலாதேவி, 19, மாணவி
35. நவசிவாயம் கந்தையா, 45, ,.போ.சலூட்டுநர்
36. இராமலிங்கம் பரலோகநாதன், 35, கமம்
37. கார்த்திகேசு, 45, -
38. க.பார்வதிப்பிள்ளை, 40, -
39. சி.நாகேந்திரன், 32, கடற்றொழில்
40. குசலகுமாரி, 28, -
41. சாந்தலிங்கம், - , -
42. ஞா.சரோஜாதேவி, 24, ஆசிரியர்



# பெரியபுல்லுமலை படுகொலை – 20 மே 1980

புல்லுமலைக் கிராமமானது, செங்கலடி-மகாஓயா வீதியில் அமைந்துள்ளது. 1985ஆம் ஆண்டு கிழக்கில் யுத்தம் தொடங்கிய பின் புல்லுமலைக் கிராமம் பல இன்னல்களைச் சந்தித்தது. நிகழ்ச்சி ஒன்றில் பங்கு பற்றிய இந்துக் குருக்கள் ஒருவர் கொல்லப்பட்டார். 1980ம் ஆண்டு மே மாதம் இருபதாம் திகதி இராணுவத்தினரும், ஊர்காவற்படையினரும் ஒன்று சேர்ந்து புல்லுமலையிலுள்ள கிராமத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட வீடுகளை உடைத்து எரியூட்டினர். இச் சம்பவத்தின் போது கேணல் வீரதுங்கவினால் இருபத்தைந்து இளைஞர்கள் கைது செய்யப்பட்டு மட்டக்களப்புக்கென அழைத்துச் செல்லப் பட்டனர். அவர்கள் அனைவரும் கொடுவாமடுவில் வைத்துக் கொலைசெய்யப்பட்டனர்.

1986ஆம் ஆண்டு எட்டாம் திகதி அக்கிராமத்திலிருந்த இராணுவத்தினரும், மகாஓயாவிலிருந்து முந்நூறிற்கும் மேற்பட்ட இராணுவத்தினரும் அக்கிராம மக்கள் மீது தாக்குதலை நடாத்தினர். இதன் போது பதினெட்டுப் பொதுமக்கள் நிரலில் நிறுத்தி வைக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்டனர். முத்தையா உட்பட ஐம்பத்தொரு பேர் கைது செய்யப்பட்டுக் காணாமற்போயினர். பலர் குடும்பங்களாகக் கொல்லப்பட்டனர்.

நாகலிங்கம் இராஜரட்ணம் என்பவரின் எட்டு மாதக் குழந்தை, நான்கு சிறுவர்கள், அவரின் மனைவி என்பவர்கள் உயிரிழந்தனர். சிறுவர்கள் சப்பாத்துக் கால்களால் மிதிபட்டு உயிரிழந்தனர். பீற்றர் லக்ஸ்மி என்பவரின் வீட்டில் ஒரு குழந்தை தவிர அனைவருமே கொல்லப்பட்டனர். கந்தசாமி என்பவரும் அவரது மனைவியான ஒரு சிங்களவரும் அவர்களது குழந்தையும் உயிரிழந்தனர். இங்கு தாக்குதலை மேற்கொண்ட இராணுவத்தினர் தனிப்பட்ட முறையில் தெரிந்த இருவரை மட்டும் தப்பியோடும்படி விட்டுவிட்டனர். அவ்வாறு தப்பியவர்கள் செங்கலடியை வந்தடைந்தனர். 1986.11.10 அன்று மூன்று மாத குழந்தை, பெண்கள், இருபத்துமூன்று ஆண்கள் என இராணுவத்தினரின் நடவடிக்கையால் உயிரிழந்தனர். இவ்வாறு உயிரிழந்த ஆறு பெண்களில் இருவர் பாலியல் வல்லுறவிற்கு உட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்டிருந்தனர். கைது செய்து காணாமற்போனோரில் இருபத்துநான்கு பேர் அடங்குகின்றனர். இத்தாக்குதலை நடாத்திய இராணுவத்தினரை அடையாளம் காண்பதற்காக ஒழுங்குபடுத்தப்பட்ட அடையாள அணிவகுப்பு பின்னர் இடைநிறுத்தப் பட்டது.

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

# தோணிதட்டாமடு படுகொலை – 27 மே 1987

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள வாகரை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் தோணி தட்டாமடு என்னும் கிராமம் அமைந்துள்ளது. இந்தக் கிராமத்தின் எல்லைக் கிராமங்களாகச் சிங்களக்கிராமங்கள் அமைந்துள்ளது. இயற்கை வளம் மிகுந்த இக்கிராம மக்கள் தமக்கான தனித்துவமான கலை, கலாச்சார, முறைகளையும் பாதுகாத்து சிறப்பாக வாழ்ந்து வந்தார்கள். குறிப்பாக அயல் சிங்கள கிராமத்திலேயே தமது அத்தியாவசிய தேவைப பொருட்களைக் கொள்வனவு செய்து வந்தார்கள்.

25.05.1987 அங்கு வந்த சிறீலங்கா இராணுவத்தினர் தோணிதட்டாமடு மீது துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்டனர். இதனால் அச்சமடைந்த மக்கள் வீடுகளிற்குள் பதுங்கிக்கொண்டனர்.

பின்னர் 27.05.1987 அன்று இரவு இரண்டு மணியளவில் இக்கிராமத்தை சுற்றிவளைத்து உள் நுழைந்த இராணுவத்தினர் வீடு வீடாகச் சென்று சுட்டும் வெட்டியும் மக்களைப் படுகொலை செய்தனர். இச்சம்பவத்தில் பதின்மூன்று பேர் படுகொலை செய்யப்பட்டதுடன், பலர் காயமடைந்தனர்.

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)



# அல்வாய் வேவிலந்தை முத்துமாரியம்மன் ஆலயம் செல்வீச்சு – 29 மே 1987

யாழ் மாவட்டத்தில் கரவெட்டிப் பிரதேசத்தில் அல்வாய்க் கிராமம் அமைந்துள்ளது. இங்கு அமைந்துள்ள வேவிலந்தை முத்துமாரியம்மன் ஆலயம் இருநூற்றைம்பது ஆண்டுகள் பழமை வாய்ந்தது. விவசாயக் குடும்பத்தை சேர்ந்த வள்ளிநாச்சியார் என்பவர் இந்தியாவிலிருந்து தருவித்த கருங்கற்சிலையைத் தனக்குச் சொந்தமான வேவிலந்தை என்ற காணியில் வைத்து வழிபட்டு வந்தார். ஆரம்பகாலத்தில் அச்சிலையை வழிபட்டு வந்த மக்கள் காலப்போக்கில் பெரிய ஆலயமாகக் கட்டினார்கள். வீதியின் முன்பாக பெருவிருட்ச மரங்கள் காணப்படுவதோடு, வடமராட்சிப் பகுதியில் இந்துக்களின் பிரசித்தமான ஆலயங்களில் இதுவும் ஒன்றாக வுள்ளது.

1987 மே இருபத்தாறாம் நாள் சிறீலங்கா இராணுவத்தினர் வடமராட்சிப் பகுதிமீது கூட்டுப்படைத் தளபதி சிறில் ரணதுங்க மற்றும் இராணுவ அதிகாரிகளான லலித் கொத்தலாவல, கொப்பேகடுவ போன்றோர் தலைமையில் ஒப்பிரேசன் லிபரேசன் என்ற பெயரில் இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டனர். பலாலி இராணுவத் தளத்திலிருந்து எறிகணை வீச்சு, கடற்தாக்குதல், ஆகாய தாக்குதல் என மும்முனைத் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்ட அதேவேளை உலங்கு வானூர்தி மூலம் துண்டுப்பிரசுரங்களைப் போட்டதுடன், பலாலியிலிருந்து ஒலிபரப்புச் செய்யப்பட்ட வானொலிச் சேவை மூலமும் மக்களைப் பாதுகாப்பாக ஆலயங்களில் இருக்கும்படி இராணுவத்தினர் அறிவித்தார்கள்.

29.05.1987 அன்று இராணுவத்தின் இந்த அறிவிப்புகளைச் செவிமடுத்த மக்கள் அச்சமடைந்து, கையில் அகப்பட்டதை எடுத்துக் கொண்டு முத்துமாரியம்மன் கோயிலில் பாதுகாப்புக்காகத் தஞ்சமடைந்தனர். இதில் அல்வாய்க் கிராமத்தை சேர்ந்தவர்கள் மட்டுமன்றி இன்பருட்டி, திக்கம், வதிரி, நெல்லியடி, தம்பசிட்டி, புலோலி, கரவெட்டி ஆகிய இடங்களிலிருந்தும் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் இவ் அம்மன் ஆலயத்தில் தஞ்சமடைந்திருந்தனர். ஆலயம் பெரிய ஆலயமாகவும், விசாலமான வீதிகள், பெரிய மர நிழல்கள் கொண்டிருந்தமையாலும் அத்தனை மக்களும் அங்கு தங்கக் கூடியதாக இருந்தது.

29.05.1987 அன்றையதினம் மாலை 7மணிக்கு அம்மன் கோயில் உள்மண்டபம் மக்களால் நிறைந்திருந்தது. இரவு 9.00 மணியளவில் வெளிவீதி எங்கும் ஒரே மக்கள் கூட்டம். இரவு 11.00மணியளவில் இராணுவத்தினரால் வீசப்பட்ட எறிகணை ஆலயத்தின் முன்னுள்ள வேப்பமரத்தில் வீழ்ந்து வெடித்தது. இதில் சிலருக்குக் காயம் ஏற்பட்டது. அடுத்த எறிகணை உள்மண்டபத்தில் கொடிக்கம்பத்தின் அருகில் வீழ்ந்து வெடித்ததில் அங்கிருந்த பெண்கள், குழந்தைகள் உட்பட பலர் உயிரிழந்தார்கள். பலர் காயமடைந்தனர். இதனைத் தொடர்ந்து வந்த எறிகணை வசந்த மண்டபத்தில் வீழ்ந்ததினால் அவ்விடத்திலிருந்த இளைஞர்கள் உயிரிழந்தார்கள். இவ்வாறு மூன்று எறிகணைகள் ஆலயத்தில் வீழ்ந்து வெடித்ததால், ஆலயத்தில் ஒரே அவலக்குரல் எழுந்தது.

அச்சமடைந்ததால் பாதுகாப்பைத் தேடிய மக்கள் நான்கு திசைகளிலும் சிதறி ஓடினார்கள். ஆலயம் இரத்த வெள்ளமானது. இதில் யார் யார் உயிரிழந்தார்கள் என்று அடையாளம் காண முடியாதளவிற்கு உடல்கள் சிதைந்திருந்தன. இராணுவத்தின் அறிவுறுத்தலின்படி பாதுகாப்பைத் தேடி ஆலயத்தில் தஞ்சமடைந்த பொதுமக்களில் நாற்பது பேர் வரை எறிகணை வீச்சில் உயிரிழந்தாஉர்கள். இருபத்திரண்டு பேர் வரை காயமடைந்தார்கள்.

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோர்களின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01. இரத்தினம் மாணிக்கம் வீட்டுப்பணி 65
02. நாகமுத்து சோதிலிங்கம் கடற்றொழில் 63
03. நற்குணம் சந்திரசேகரம் மாணவன் 08
04. க.சட்டநாதன் கமம் 54
05. கந்தர் மார்க்கண்டு தொழிலாளி 67
06. கதிர்காமு கிட்ணபிள்ளை வியாபாரம் 61
07. கதிர்காமத்தம்பி யோகானந்தன் மாணவன் 12
08. கதிர்காமத்தம்பி செல்வானந்தன் மாணவன் 14
09. கதிரித்தம்பி வள்ளிப்பிள்ளை 77
10. குமாரன் நல்லதம்பி தொழிலாளி 60
11. கணேஸ் அம்பிகாபதி 48



12. கணேசபதி சதாகரன் கமம் 16
13. கணபதிப்பிள்ளை சின்னத்துரை கமம் 60
14. கணபதிப்பிள்ளை சிவகாமி 69
15. பிறேமானந்தராசா தொழிலாளி 27
16. பஞ்சாட்சரம் தா்மகுலராசா கமம் 28
17. துரைசிங்கம் கலாவதி 26
18. தம்பிஜயா நமனன் மாணவன் 18
19. தங்கமயில் சுஜாதா மாணவி 16
20. தவராசசிங்கம் கமலேஸ்வரி 38
21. தவராசசிங்கம் அனுபாமா மாணவி 06
22. தணிகாசலம் தா்மேந்திரம் மாணவன் 08
23. மார்க்கண்டு நகுலேஸ்வரன் தொழிலாளி 34
24. மார்க்கண்டு செல்லம்மா கைப்பணி 58
25. மாசிலாமணி சுதன் குழந்தை 01
26. மாணிக்கம் உசாராணி குழந்தை 03
27. மாணிக்கம் நாகேந்திரராஜா மாணவன் 13
28. மாணிக்கம் மல்லிகாதேவி வீட்டுப்பணி 41
29. யோகராசா ரதி 2.5
30. செல்லையா நாகம்மா வீட்டுப்பணி 50
31. சி.மாணிக்கம் தொழிலாளி 57
32. சிவனடி இராமநாதன் வைத்திய ஊழியர் 22
33. சிவலிங்கம் அன்னம்மா வீட்டுப்பணி 65
34. சண்முகம் பூலோகநாதன் மாணவன் 16
35. வ.மாரிமுத்து தொழிலாளி 54
36. விசுவலிங்கம் இராசகோபால் விவசாயம் 30
37. ரவீந்திரன் செல்லமணி வீட்டுப்பணி 30

இச்சம்பவத்தில் காயப்பட்டோர்களின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில்)

01. இ.குணசேகரன் மாணவன் 12
02. நகுலன் மாணவன் 06
03. கு.இராசலிங்கம் கடற்றொழில் 51
04. க.குணரட்னம் வீ.பணி 32
05. கந்தையா கலைமதி மாணவி 06
06. குலநாயகம் விஜயசோதி வீட்டுப்பணி 35
07. தம்பிஜயா புவனேஸ்வரி வீட்டுப்பணி 46
08. ம.வேல்மணி தொழிலாளி 32
09. மாணிக்கம் யோகராணி வீட்டு வேலை 17
10. மாணிக்கம் சுவேந்திரராஜா மாணவன் 05
11. ஆழ்வாப்பிள்ளை இராஜமலர் மாணவி 09
12. ஆழ்வாப்பிள்ளை சரச்சந்திரன் மாணவன் 13
13. ஜெனார்த்தனன் மாணவன் 07
14. வே.இந்திரராணி வீ.பணி 30
15. வேலுப்பிள்ளை தம்பிஜயா குருதி பரிசோதகர் 46
16. சு.கந்தசாமி தபாலதிபர் 54
17.ச.கண்ணதாசன் மாணவன் 08
18. சு.செல்வதி வீ.பணி 24
19. சு.செல்வராசா மாணவன் 06
20. ச.சண்முகதாசன் மாணவன் 10
21. சி.வசந்தாதேவி வீ.பணி 38
22. விக்கினேஸ்வரன் இந்திராணி வீட்டுவேலை 21

# வற்றாப்பளைப் படுகொலை – 18 மே 1992

வடகிழக்கு மாகாணத்திலேயே சைவ மக்கள் மத்தியில் புகழ்பெற்ற வற்றாப்பளை கண்ணகி அம்மன் கோயில் முல்லைத்தீவு மாவட்டத்தில் நந்திக்கடல் ஓரத்தில் அமைந்துள்ளது. ஆண்டு தோறும் வைகாசியில் வருகின்ற பூரணை தினத்தன்று பொங்கல் நிகழ்வு சிறப்புற நடைபெறுவதும், அதில் சிறீலங்காவின் பல பாகங்களிலிருந்தும் இலட்சக்கணக்கான பக்தர்கள் வந்து பொங்கலைச் சிறப்பிப்பதும் வழக்கமாக இருந்த காலத்தில் 1990ஆம் ஆண்டிலிருந்து இராணுவ அச்சுறுத்தல் காரணமாக குறிப்பிட்ட ஒரு தொகைப் பக்தர்களைக் கொண்டே வருடாந்தப் பொங்கல் நிகழ்வு நடைபெறலாயிற்று.

வழமைபோல 18.05.1992 அன்று வற்றாப்பளைப் பொங்கல்தினம். சுமார் ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் கலந்து கொண்டிருந்தனர் உச்சிக்காலப் பூசை நடைபெற்றுக்கொண்டிருந்த பிப 12:45 மணியளவில் முல்லைத்தீவு இராணுவ முகாமிலிருந்து ஆலயத்தில் வழிபாட்டில் ஈடுபட்டிருந்த மக்கள்மீது மேற்கொள்ளப்பட்ட எறிகணைத் தாக்குதலில் பத்துப் பொதுமக்கள் அவ்விடத்திலேயே உடல் சிதைக்கப்பட்டு உயிரிழந்ததுடன், ஏனைய ஐந்து பேர் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லும் வழியில் உயிரிழந்தார்கள் அறுபது பேர்வரை காயமடைந்தார்கள்.

இத்தாக்குதலில் கணவரையிழந்த யோகேஸ்வரி சம்பவம் தொடர்பாகத் தெரிவிக்கையில்,

"வற்றாப்பளை அம்மன் ஆலயப் பொங்கற் திருவிழா நேரத்தில் காவடிகளை வைத்து வாடகைக்கு வழங்கி வந்தோம். வழமை போல் அன்றும் கணவரும் மகனும் காவடி எடுக்கும் இடத்திலும் நானும் மற்றப் பிள்ளைகளும் கோயிலுக்கு உட்புறத்திலும் நின்றிருந்தோம். அந்த வேளைதான் சிறீலங்கா இராணுவம் முல்லைத்தீவு முகாமிலிருந்து எறிகணைத்தாக்குதலை மேற்கொண்டது. ஓடிச் சென்று பார்க்கும்போது உடல் முழுதும் காயங்களுடன் மகனைக் கிடத்தியிருந்தார்கள். மகனுடன் அழுதுகொண்டிருக்கும் போது தகப்பனைத் தூக்கிக்கொண்டு வந்தார்கள். தகப்பன் இறந்துவிட்டதால் அழுது புலம்பத்தான் முடிந்தது. அப்படியே நானும் மயக்கமுற்று விழுந்துவிட்டேன். கணவர் இறக்கும்போது மூன்று மாதக் கர்ப்பிணியாகவும் மூன்று பிள்ளைகளின் தாயாகவும் இருந்தேன். எல்லோரும் சின்னப் பிள்ளைகள். சரியாகக் கஸ்ரப்பட்டுத் தான் பிள்ளைகளை வளர்த்தேன். தகப்பனின் காவடித் தொழிலையும் விடாமல் கூலி வேலை செய்து சீவித்து வருகின்றோம். பிள்ளைகளும் வளர வளர செலவுகளும் அதிகரித்துக்கொண்டே போகின்றது. தற்போதுகூட சரியான கஸ்ரத்தின் மத்தியிற் சீவிக்கின்றோம்."

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோர்களின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01. நவரத்தினசாமி யுவராசினி மாணவி -
02. நவரத்தினசாமி சிவசேகரம் - -
03. நவரட்ணம் இந்துஜா மாணவர் 12
04. நவரட்ணம் சிவனேசம் வீட்டுப்பணி 32
05. நவரட்ணம் ராஜிதா மாணவர் 10
06. குழந்தைவேலு ஜெகதீஸ்வரன் தொழிலாளி -
07. குழந்தைவடிவேல் ஜெகதீஸ்வரன் விவசாயம் 24
08. கணபதிப்பிள்ளை சிதம்பரநாதன் மாணவர் 17
09. தம்பிராசா சிறீஸ்கந்தராசா விவசாயம் 33
10. மரியபிரகாசம் அந்தோனி தனியார்தொழில் 35
11. யோகராசா வதனி வீட்டுப்பணி 19
12. சதாசிவம் நவரட்ணம் கடற்றொழில் 36
13. சிறிஸ்கந்தராசா மாணவர் 09
14. சண்முகலிங்கம் - 42

காயமடைந்தவர்களின் விபரம் (இல பெயர் தொழில் வயது)

01. இந்துஜா மாணவி 06
02. ஈஸ்வரன் - 21
03. கனகேஸ்வரன் - 20
04. கார்த்திகேசு நித்தியராசா - 18
05. குமாரசாமி கணேசசுந்தரம் - 16
06. கணேசலிங்கம் புனிதா குழந்தை 03
07. முருகையா - 24
08. நேசம் - 32
09. வெற்றிவேலு மதிவதனம் - 13
10. றெஜித் - 27
11. சாந்தினிதேவி - 16
12. சண்முகலிங்கம் சந்திரசேகா் - 16
13. வடிவேலு - 40
14. விஜயரட்ணம் மாணவன் 07



நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

# புல்லுமலை படுகொலை – 1986 … 1990

புல்லுமலைக் கிராமமானது, செங்கலடி-மகாஓயா வீதியில் அமைந்துள்ளது. 1985ஆம் ஆண்டு கிழக்கில் யுத்தம் தொடங்கிய பின் புல்லுமலைக் கிராமம் பல இன்னல்களைச் சந்தித்தது. நிகழ்ச்சி ஒன்றில் பங்கு பற்றிய இந்துக் குருக்கள் ஒருவர் கொல்லப்பட்டார்.

20.05.1980அன்று இராணுவத்தினரும், ஊர்காவற்படையினரும் ஒன்று சேர்ந்து புல்லுமலையிலுள்ள கிராமத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட வீடுகளை உடைத்து எரியூட்டினர். இச் சம்பவத்தின் போது கேணல் வீரதுங்கவினால் இருபத்தைந்து இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டு மட்டக்களப்புக்கென அழைத்துச் செல்லப்பட்டனர். அவர்கள் அனைவரும் கொடுவாமடுவில் வைத்துக் கொலைசெய்யப்பட்டனர்.

1986ஆம் ஆண்டு எட்டாம் திகதி அக்கிராமத்திலிருந்த இராணுவத்தினரும், மகாஓயாவிலிருந்து வந்த முந்நூறிற்கும் மேற்பட்ட இராணுவத்தினரும் அக்கிராம மக்கள் மீது தாக்குதலை நடாத்தினர். இதன் போது பதினெட்டுப் பொதுமக்கள் நிரலில் நிறுத்தி வைக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்டனர். முத்தையா உட்பட ஐம்பத்தொரு பேர் கைது செய்யப்பட்டுக் காணாமற்போயினர். பலர் குடும்பங் களாகக் கொல்லப்பட்டனர்.

நாகலிங்கம் இராஜரட்ணம் என்பவரின் எட்டு மாதக் குழந்தை, நான்கு சிறுவர்கள், அவரின் மனைவி என்பவர்கள் உயிரிழந்தனர். சிறுவர்கள் சப்பாத்துக் கால்களால் மிதிபட்டு உயிரிழந்தனர். பீற்றர் லக்ஸ்மி என்பவரின் வீட்டில் ஒரு குழந்தை தவிர அனைவருமே கொல்லப்பட்டனர். கந்தசாமி என்பவரும் அவரது மனைவியான ஒரு சிங்களவரும் அவர்களது குழந்தையும் உயிரிழந்தனர். இங்கு தாக்குதலை மேற்கொண்ட இராணுவத்தினர் தனிப்பட்ட முறையில் தெரிந்த இருவரை மட்டும் தப்பியோடும்படி விட்டுவிட்டனர்.

அவ்வாறு தப்பியவர்கள் செங்கலடியை வந்தடைந்தனர். 10.11.1986 அன்று மூன்று மாத குழந்தை, பெண்கள், இருபத்துமூன்று ஆண்கள் என இராணுவத்தினரின் நடவடிக்கையால் உயிரிழந்தனர். இவ்வாறு உயிரிழந்த ஆறு பெண்களில் இருவர் பாலியல்வல்லுறவிற்கு உட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்டிருந்தனர். கைது செய்து காணாமற்போனோரில் இருபத்துநான்கு பேர் அடங்குகின்றனர். இத்தாக்குதலை நடாத்திய இராணுவத்தினரை அடையாளம் காண்பதற்காக ஒழுங்குபடுத்தப்பட்ட அடையாள அணிவகுப்பு பின்னர் இடைநிறுத்தப்பட்டது.

# தெல்லிப்பளை ஆலயப் படுகொலை – 30 மே 1992

யாழ்ப்பாணத்தில் வலிகாமத்தின் வடக்குப் பகுதியிலுள்ள தெல்லிப்பளைப் பிரதேசத்தில் துர்க்காபுரம் எனும் கிராமம் அமைந்துள்ளது. இங்கு வரலாற்றுப் புகழ்மிக்க பல ஆணடுகள் பழமைவாய்ந்த தெல்லிப்பளைத் துர்க்கையம்மன் ஆலயம் அமைந்துள்ளது.

பலாலி இராணுவத்தள விரிவாக்கத்திற்காக பலாலி முகாமை அண்மித்த பகுதிகள் மீது எறிகணைத் தாக்குதல், விமானத் தாக்குதல் நடத்தியவாறு சிறீலங்கா இராணுவத்தினர் முன்னேறிப் படைமுகாமை விரிவாக்கினார்கள். இவ்விராணுவ நடவடிக்கைக்கு அஞ்சிய வசாவிளான், குரும்பசிட்டி, தையிட்டி, மயிலிட்டிப் பகுதிகளைச் சேர்ந்த ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் இடம் பெயர்ந்தார்கள். இவர்களில் பல குடும்பங்கள்அகதிகளாக தெல்லிப்பளை துர்க்கையம்மன் ஆலயத்தில் தஞ்சமடைந்ததுடன், ஆலயத்தில் வெள்ளைக்கொடியையும் பறக்கவிட்டனர்.

30.05.1992 நண்பகல் 12மணியளவில் விமானப்படையின் இரண்டு "அவ்ரோ" விமானங்கள் மக்கள் தங்கியிருந்த ஆலயம் மீது ஐந்திற்கும் மேற்பட்ட குண்டுகளை வீசியது. அதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இருவர் உட்பட மொத்தம் ஐவர் உயிரிழந்தனர். பத்திற்கும் அதிகமானோர் பலத்த காயங்களுக்கு உள்ளானார்கள். ஆலயத்தின் கோபுரம், பொங்கல் மண்டபம், வசந்த மண்டபம், ஆலய சுற்றாடலிலுள்ள வீடுகளெனப் பல கட்டடங்கள் பலத்த சேதத்திற்குள்ளானது. மீண்டும் இராணுவத்தினர் 1993ஆம் ஆண்டு ஆவணி மாதம் ஆலய வருடாந்த மகோட்சவ காலப்பகுதியில் சப்பறத் திருவிழா அன்று, பக்தர்கள் கூடியிருந்த வேளை காலை 10.00மணியளவில் ஆலயப் பகுதிநோக்கி பலாலியிலிருந்து எறிகணைவீச்சினை நடத்தினர். அதேநேரம் விமானப் படை விமானத்தாக்குதலை நடாத்தியது.

இத்தாக்குதல்களில் ஒரு பக்தரும், துர்க்காபுரம் மகளிர் இல்லத்தில் தங்கியிருந்த யுவதி, அருகிலுள்ள வீடுகளில் தஞ்சம் புகுந்த ஆசிரியர்களென ஐந்து பேர் உயிரிழந்தார்கள். ஐந்திற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். ஆலயப்பகுதி மீண்டும் பலத்த சேதத்திற்கு உள்ளானது. அன்றையதினம் பலாலியிலிருந்து மேற்கொள்ளப்பட்ட எறிகணை வீச்சினால் ஆலய அன்னதான மண்டபத்தில் சமையலில் ஈடுபட்டவர்களில் ஒருவர் உயிரிழந்ததுடன், மூன்று பேர் காயமடைந்தனர்.

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோகளின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01. இராசதுரை மனோகரன் சுருட்டு வேலை 28
02. ஜயம்பிள்ளை மகேந்திரன் கூலி 31
03. கந்தையா இளையதம்பி ஓய்வூதியர் 65
04. பத்மநாதன் மயூரன் மாணவன் 22
05. வைத்தியலிங்கம் வசீகரா வர்ணம் பூசுபவர் 23
06. செல்லத்துரை செல்வகாந்தராசா – 32
07. வேலாயுதம் நந்தகுமார் மாணவன் 11
08. வேலாயுதம் வினோதகுமார் குழந்தை 1
09. சுப்பிரமணியம் கனகராணி விற்பனையாளர் 38
10. சின்னக்குட்டி காசிப்பிள்ளை கமம் 71

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் – தமிழினப் படுகொலைகள் (1956-2008)

# தம்ப்பிராய் சந்தை குண்டுவீச்சு – 17 மே 1996

கிளிநொச்சி மாவட்டத்தின் மேற்கே இருபது கி.மீ. தூரத்தில் பூநகரி அமைந்துள்ளது. பூநகரிப் பிரதேசத்திற் காணபப்டுகினற் வயலும் வயல் சார்ந்த ஒரு சிறிய கிராமம் தம்பிராய் கிராமம் ஆகும். இங்குள்ளவர்களின் பிரதானதொழில் விவசாயமாகும்.

1996ஆம் ஆண்டு ஏ -9 பிரதான வீதியை மையமாகக் கொண்ட இராணுவ நடவடிக்கை நடைபெற்ற காலப்பகுதியாகும். அக்காலப் பகுதியில் 1996 மே பதினேழாம் திகதி காலை பூநகரி தம்பிராய்ப்பகுதி மக்கள் மீது முற்பகல் பத்து மணியளவில் பூநகரி வான் பரபப்பினுள் வந்த சிறீலங்கா விமானப்படையின் இரண்டு "கிபீர்" விமானங்கள் பல தடவைகள் வானில் வட்டமிட்டன. இதனால் தம்பிராய்ச் சந்தையில் நின்ற மக்கள் அச்சத்தினால் அங்கு மிங்கும் ஓடினார்கள், இவர்களில் சிலர் ஒரு பனங்கூடலினுள் பாதுகாபப்பு தேடி ஒழிந்து கொண்டார்கள். கிபீர் விமானங்கள் வீசிய குண்டுகள் பனங்கூடலினுள்ளும் அதைச்சுற்றியுள்ள பகுதிகளிலும் விழுந்து வெடித்ததால், ஐந்து பொதுமக்கள் உடல் சிதறிப் பலியாகியதுடன், ஒன்பது பேர் காயமடைந்தார்கள். மேலும் படுகாயமடைந்தவர்களில் இரண்டு பேர் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் உயிரிழந்தார்கள்.

இத்தாக்குதலில் கொல்லப்பட்ட தம்ப்பிராயைச் சேர்ந்ந்த்த சூசைப்ப்பிள்ளை பிரான்சிஸ்சின் மனைவியான றீட்ட்டம்ம்மா சம்பவத்தைப் பற்றி குறிப்பிடுகையில்,

"1996ஆம் ஆண்டு மே மாதம் பதினேழாம் திகதி வெள்ளிக்கிழமை என்னுடைய நான்கு பிள்ளைகளில் மூவர்பாடசாலைக்குச் சென்ற நிலையில் கடைசிப் பிள்ளையைக் கூட்டிக் கொண்டு எமது தோட்டத்திற்குப் போனேன். என்னுடைய கணவர் பொருட்கள் வாங்குவதற்காக தம்பிராய்ச் சந்திக்குப் போயிருந்தார். அந்தவேளை வானில் வந்த குண்டுவீச்சு விமானங்கள் தம்பிராய் சந்தியிற் குண்டுகளைப் போட்டன. உடனே கணவர் மற்றும் பிள்ளைகளுக்கு ஏதாவது நடந்திருக்குமோ என்று அஞ்சினேன். அயலவர்கள் வந்து தேற்றிய போதும் எனது பிள்ளையையும் கூட்டிக்கொண்டு சம்பவ இடத்திற்குப் போய்ப் பார்த்தவேளை எனது கணவரின் உடல் முழுதும் குண்டுச் சன்னங்கள் துளைத்த நிலையில் சடலமாக இருந்ததைக் காணக் கூடியதாக இருந்தது. அதைப் பார்த்த நான் என்னசெய்வதென்றே தெரியாத நிலையில் மயக்கமடைந்து விழுந்து விட்டேன். பின்னர் என்னையும் எனது கணவரையும் என்னுடைய அண்ணா வீட்டிற்குக் கொண்டு வந்தார்கள். அதன் பின்னர் கணவரை அடக்கம் செய்தோம். இந்தக் குண்டுத் தாக்குதல் சம்பவத்தில் எனது கணவர் உட்பட ஐந்து பேர் அவ்விடத்திலேயே கொல்லப்பட்டார்கள் என்பதுடன், மற்றும் ஒன்பது பேர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். அதில் இருவர் பின்னர் இறந்துவிட்டனர். பாதிக்கப்பட்ட அனைவரும் எங்களைப் போன்று வறுமையான குடும்பத்தைச் சேர்ந்த அப்பாவிப் பொதுமக்கள்."

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோகளின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01. சூசைப்பிள்ளை பிரான்சிஸ் சீவற்றொழில் -
02. இரத்தினம் பாலச்சந்திரன் கமம் 29
03. கந்தையா தேவராசா கமம் -
04. தங்கவேலு ரவிச்சந்திரன் சீவல் 34
05. அப்புத்துரை சௌந்தார் ராஜன் சீவல் 35
06. சின்னத்துரை கேதீஸ்வரன் கமம் 29
07. வீரகத்தி அலிஸ்ரின் கடற்றொழில் 28

இச்சம்பவத்தில் காயபட்டோர்களின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில்)

01. துரைசாமி. தொழிலாளி 75
02. பொன்னம்பலம் - -
03. செல்லையா பூரணம் வியாபாரி 60
04. சந்திரபாலு ஈஸ்வரன் முகாமையாளர் 24

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் – தமிழினப் படுகொலைகள் (1956-2008)

# பூநகரியில் சிறீலங்கா இராணுவத்தின் பீரங்கி எறிகணைத் தாக்குதலில் மாணவர் படுகொலை 16 மே 2007

பூநகரியில் (பூநகரி) செவ்வாய்க்கிழமை நண்பகல் சிறீலங்கா இராணுவம் (எஸ்.எல்.ஏ) பீரங்கி எறிகணைகளை வீசியதில் 17 வயது சிறுவன் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டார் மற்றும் அவனது தந்தை காயமடைந்தார்.

கிளி. பூநகரி ஸ்ரீ வித்தியாலயத்தில் கல்வி கற்கும் கனகரட்ணம் மோகன்ராஜ் என்ற மாணவனின் சடலமே செவ்வாய்க்கிழமை மாலை மீட்கப்பட்டுள்ளது.

பூநகரி நான்காம் மைல் பகுதியில் உள்ள சிவிலியன் குடியேற்றத்தின் மீது சிறீலங்கா இராணுவத்தினர் எறிகணைகள் வீசிய போது திரு. மோகன்ராஜ் மதிய உணவு இடைவேளைக்காக வீட்டுக்குச் சென்றிருந்தார்.





# திருமுறிகண்டி கிளைமோர்த்தாக்குதல் 23 மே 2008

கிளிநொச்சி இரணைமடு பாரதிபுரம், மலையாளபுரம் கிராமத்தைச் சேர்ந்த மக்களில் ஒரு பகுதியினர் 23.05.2008 அன்று ஹைஎஸ் வாகனம் ஒன்றில் முழங்காவில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த உறவினர் ஒருவரைப் பார்வையிட்டுவிட்டு தமது வீடு திரும்பிக் கொண்டிருந்தனர். வாகனத்தில் பல சிறவர்களும் பயணித்துக் கொண்டிருந்தனர். அவ்வேளை பிற்பகல் 2மணியளவில் திருமுறிகண்டியிலிருந்து அக்கராயன் நோக்கிச் செல்லும் வழியில் சுமார் இரண்டு கிலோ மீற்றர் தூரத்தில் அவர்களின் வாகனம் மீது சிறீலங்கா ஆழ ஊடுருவும் அணியினர் கிளைமோர்த்தாக்குதலினை மேற்கொண்டனர்.
இதன்போது ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 05பேர் உட்பட 15பேர் சம்பவ இடத்திலேயே கொல்லப்பட்டனர். கொல்லப்பட்டவர்களில் நால்வர் சிறுவர்கள். படுகாயமடைந்த மூன்று பேர் கிளிநொச்சி மாவட்ட வைத்திசயாலையில் அனுமதிக்கப்பட்டனர். இதில் மேலும் ஒரு சிறுவன் ஒருவன் உயிரிழந்துள்ளார். இச்சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பான குடும்பநிலமையைப் பார்த்தால் மிகவும் பரிதாப நிலைமையை உணரமுடியும்.

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் வயது)
01. பெரியசாமி விஜயரட்ணம், 40
02. விஜயரட்ணம் லோகநந்தா, 39
03. விஜயரட்ணம் சிவகலா, 16
04. விஜயரட்ணம் தனு, 09
05. விஜயரட்ணம் விதுசன், 07
06. பன்னீர்ச்செல்வம் அழகுராணி, 42
07. கணேசன் தனராஜ், 34
08. சந்திரசேகரன் கீர்த்திகா, 10
09. சாமிக்கண்ணு கறுப்பையா, 40
10. கறுப்பையா அன்னலட்சுமி, 40
11. அழகன் சுப்பிரமணியம், 40
12. சுப்பிரமணியம் சரஸ்வதி, 40
13. செல்வராசா கலாதேவி, 34
14. சுப்பிரமணியம் தனலட்சுமி, 54
15. சந்திரசேகரம் கார்த்திகா, 10
16. இராஜேந்திரம் கலாவள்ளி, 29

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)





































# வடமராட்சி கிழக்கில் சிறீலங்கா விமானப்படையின் குண்டுவீச்சில் இருவர் படுகொலை 23.05.2008

கிளிநொச்சியிலிருந்து வடகிழக்கே 21 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள சுண்டிக்குளம் கல்பாடு என்ற இடத்தில் உள்ள சிவிலியன் குடியிருப்பு மீது சிறீலங்கா விமானப்படையினர் வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் தாக்குதல் நடத்தியதில் 14 வயது சிறுமியும் 3 வயது குழந்தையும் உயிரிழந்தனர். தாக்குதலில் ஒரு பெண் காயமடைந்தார்.

பாதிக்கப்பட்டவர்கள் உள்நாட்டில் இடம் பெயர்ந்தவர்கள்.

03 வயதான ஆர்.விஜித் மற்றும் 14 வயதான பி.கயல்விழி ஆகிய இருவருமே விமானப் படையின் தாக்குதலில் கொல்லப்பட்டுள்ளனர்.

ரவிச்சந்திரன் மகாலட்சுமி (29) என்பவர் படுகாயமடைந்தார்.



# பல்லாயிரம் மக்கள் மருந்தின்றி இறப்பு – 16 மே 2009

2,000 முதல் 3,000 வரையிலான எண்ணிக் கையில் இறந்தவர்களின் உடல்கள் பொது மக்கள் நெரிசல் மிகுந்த பகுதிகளில் எல்லா இடங்களிலும் கிடக்கின்றன, மேலும் பொது மக்கள் அனைவரும் இறந்த உடல்களின் கடுமையான துர்நாற்றத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று முள்ளிவாய்க்காலைச் சேர்ந்த தன்னார்வ மருத்துவர் கூறினார்.



"சிறீலங்கா இராணுவம் இலக்கு வைக்கப்பட்ட தாக்குதல்களால் அனைத்து மருத்துவ வசதிகளையும் அழித்துவிட்டது, மேலும் சிறீலங்கா இராணுவம் ஆனது மனிதாபிமானமற்ற மற்றும் கண்மூடித்தனமான தாக்குதல்களை பொதுமக்கள் மீதான மரணம் அல்லது சரணடைதல் ஆகிய இரண்டே வழிகளை மட்டுமே வழங்கி வருகிறது" என்று அவர் மேலும் கூறினார்.

தன்னார்வ மருத்துவரே சனிக்கிழமை காலை 100 க்கும் மேற்பட்ட இறப்புகளைக் கண்டார். அனைத்து அரசு மருத்துவர்களும் உயர் அதிகாரிகளும் ஷெல் தாக்குதலில் இருந்து தப்பி ஓடிவிட்டனர்.

"காயமடைந்தவர்களுக்கு சிகிச்சை அளிக்க தொடர்ந்து பீரங்கி மற்றும் மோட்டார் தாக்குதல்களில் இருந்து எங்களுக்கு இடை நிறுத்தம் தேவை. பலத்த காயம் அடைந்தவர்களை மருத்துவ கவனிப்பின்றி இறக்க அனுமதிக்கப்படும் வெளிப்புற மருத்துவக் குழுவின் தீவிர தேவை உள்ளது," என்று தன்னார்வ மருத்துவர் தமிழ்நெட் மூலம் தெரிவித்தார். செயற்கைக்கோள் தொலைபேசி.

"அனைத்திற்கும் மேலாக, காயமடைந்தவர்களுக்கும் எஞ்சியிருக்கும் பொதுமக்களுக்கும் அவசரமாக உணவு மற்றும் தண்ணீர் தேவை. பதுங்கு குழிகளுக்குள் உணவு இல்லாமல் மக்கள் இறந்து கொண்டிருக்கிறார்கள்."

இதேவேளை, கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்ட சுகாதார சேவைகளின் பிராந்திய பணிப்பாளர்களான சிரேஷ்ட வைத்தியர்களான டி.சத்தியமூர்த்தி மற்றும் எஸ்.வரதராஜா மற்றும் மேலதிக அரசாங்க அதிபர் கே.பார்த்தீபன் ஆகியோர் சிறீலங்கா இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் பிரவேசித்துள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.







**எமது துன்ப வரலாற்றை நாமே பதிய வேண்டும். நீத்தார் நினைவுச் சின்னங்களை உரிய முறையில் உங்கள் கிராமங்களில் கட்டியெழுப்பும் பொறுப்பு தமிழ் மக்களாகிய எம்முடையது மாத்திரமே.**





# 25, 000 மேல் பட்ட பொது மக்கள் சிகிச்சை இன்றி உயிரிழப்பு - 17.05.2009

சிறீலங்கா இராணுவத்தின் பீரங்கித் தாக்குதலில் காயமடைந்த சுமார் 25,000 பொதுமக்கள் தற்போது மருத்துவ சிகிச்சை பெறாமல் உயிரிழந்து வருவதாக விடுதலைப் புலிகளின் கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை ஞாயிறு நண்பகல் தெரிவித்தார். வட்டுவாகல் அல்லது இரட்டை வாய்க்கால் ஊடாக காயமடைந்தவர்களை வெளியேற்றுமாறு திரு.பத்மநாதன் ஊடாக ஐ.சி.ஆர்.சி யிடம் புலிகள் பலமுறை கோரிக்கை விடுத்தும், அதற்கு ஐ.சி. 2 சதுர கிலோமீற்றர் பரப்பளவிற்குள், எல்லா இடங்களிலும் சடலங்கள் உள்ளன, மீதமுள்ள ஆயிரக்கணக்கானவர்கள் கொழும்பின் படைகளின் ஒவ்வொரு வகையான ஆயுதங்களையும் பயன்படுத்துவதற்கு மத்தியில் பதுங்கு குழிகளில் உள்ளனர். SLA ஆனது மக்களைத் தப்பியோட அனுமதிக்கவில்லை, ஆனால் அவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்த விரும்புகிறது, சூசை கூறினார்.

என்ன நடக்கிறது என்று ஐசி கவலைப் படவில்லை. 25,000 பேரைத் தவிர இன்னும் பல ஆயிரக்கணக்கானோர் இப்போது காய மடைந்து கொல்லப்படுகிறார்கள். குறைந்த பட்சம் இப்போது செயல்பட்டால் அவர்களைக் காப்பாற்ற முடியும். மீட்புக்கான அறிகுறிகள் இருப்பதால் நாங்கள் தொடர்ந்து பாதுகாத்து வருகிறோம், என்றார்.

இதற்கிடையில், வன்னியில் இருந்து வரும் சமீபத்திய தகவல்கள், பல ஆயிரக்கணக்கான பொதுமக்கள் SLA யால் பிடிக்கப்பட்டதாகவும், ஆனால் முதலில் அவர்கள் மீது எதேச்சையாக துப்பாக்கிச் சூடு நடத்தியதன் பின்னரே, பலரின் மரணம் மற்றும் காயம் ஏற்பட்டது.

## 2009ல் தமிழ் மக்களின் தலையில் சிங்கள அரசால் போடப்பட்ட அழிவாயுதங்களின் தடயங்கள் தமிழீழ மண்ணில் இவைகள். உலகம் இன்னும் மவுனமாக ஏன் இருக்கிறது ? தமிழர்கள் என்றபடியாலா?











வெடியகற்றும் பணியில் ஈடுபட்டவர்களால் எடுக்கப்பட்ட ஒளிப்படங்கள் .
(இலங்கை இராணுவம் போரழல் பயன்படுத்திய தடைசெய்யப்பட்ட குண்டுகள் )



**1.RBK – 500 V X 2.5RT** கொத்துக் குண்டு முல்லைத்தீவு.சாலை எனுமிடத்தில் கண்டு பிடிக்கப்பட்டது

Remnants of what appears to be an RBK-500 AO-2-5RT cluster bomb uncovered near Chalai,Sri Lanka. Photograph- Source



2.சுண்டிக்குளம் அருகில் காணப்படும் ஒரு வெடிக்காத ஏஓ 2.5RT கொத்து குண்டு

An image of what appears to be an unexploded AO-2.5RT cluster submunition found near Chundikulam.



3.சுண்டிக்குளத்தில் காணப்பட்ட இதே கிளஸ்டர் குண்டு ஜோர்ஜியா . சூடான் மற்றும் சிரியாவில் பயன்படுததபட்டதாக மனித உரிமைகள் கண்காணிப்பகத்தால் ஆவணப்படுத்தப்பட்டுள்ளது.

An image of what appears to be an unexploded AO-2.5RT cluster submunition found near Chundikulam.



**4. xU VX 2.5**RTகுண்டு கிளிநொச்சி மாவட்டத்தில் குழிதோண்டும் போது காணப்பட்டது.

An image of what appears to be an unexploded AO-2.5RT cluster submunition found near Chundikulam.








# மே 18

# 146,679

# ஈழத்தமிழர் படுகொலை

சுவடுகள்...!




















# மே 18 – முள்ளிவாய்க்கால் சுவடுகள்...!

# 146,679 ஈழத்தமிழர் படுகொலை














Figure Two: Likely Craters in CZ, May 6, 2009



This image shows apparent impact craters in the CZ on May 6, 2009 (Lat: 9.32 N Long: 80.77 E).






















Figure 6-16. Six-mortar star formation.







NO FIRE ZONE
THE KILLING FIELDS OF SRI LANKA



JATHU RENOVATION
Free! ESTIMATES
உங்கள் இல்லத்தை புதுப்பிக்க அழையுங்கள்
★ Basement ★ Carpet ★ Flooring
★ Hardware ★ Kitchen Cabinets
★ Painting ★ Tiles ★ Stairs
★ Moulding ★ Window ★ Garage Door
★ Spotlight ★ Plumping ★ Electrical
RASAN
Cell: 647.532.4162
Off: 647.821.0356
rassan311@gmail.com www:jathurenovation.com




அகரம்
Akaram
வரைகலை வடிவமைப்பு ஆலோசகர்
Graphic Design Consultant
தங்களது அனைத்துவிதமான அச்சுக்கலை வடிவமைத்தல்
(Business Cards, Flyers, Posters, Logo, Banner
Advertisement Designing & Much More)...
இலட்சிணை வடிவமைப்பு (Logo Design)
இவற்றிற்கான ஆலோசனைகளையும்,
தொடர்புகளையும் பெற்றுக்கொள்ள
அழையுங்கள் (Call):
437.345.4203




The ESTATE BANQUET AND EVENT CENTRE
The ESTATE
BANQUET AND EVENT CENTRE
The Estate Banquet and Event Centre can make your event "EXCLUSIVE"
The Estate Banquet and Event Centre is able to host,
• Wedding • Christenings • Baptisms
• Anniversary Parties • Corporate Events
and all other Special Occasions
For all events ranging from 50 - 500 Guests
International Menu with Premium Bar
430 Nugget Ave, Scarborough ON M1S 4A4
Tel:416 400 5993
info@estatebanquets.com www.estatebanquets.com




Call today to Save energy
Broken Glass...?
We will fix it within 24 hour.
Free Estimate!
Call today
$50 OFF
Let us help with...
Replacement (Door & Windows)
Custom Door & Windows
Front Door & Patio Door
Garden Door
Door & Windows Re-Caulking (Important)
Painting Doors & Windows
Basement Separate Entrance Door
Home Painting
Spotlights installation
California Shutters
PTR DOORS & WINDOWS
-Over 10 years experience-
Call Ravi: 416-825-9482
Call Kanna: 647-297-7815
E-mail: ptrrenovation@gmail.com




# தமிழர் வரலாறு: ஈழத் தமிழர்களின் பழங்கால குலதெய்வ வழிபாட்டின் தொல்லியல் ஆதாரங்கள்!

இலங்கையின் வடக்கு பகுதியில் நாக வழிபாட்டை குலமரபுத் தெய்வ வழிபாடாக மக்கள் கொண்டிருந்தமை தொடர்பிலான தொல்லியல் ஆதாரங்கள் தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் வரலாற்றுத்துறை, தொல்லியல் துறையின் மூத்த பேராசிரியர் புஷ்பரட்ணம் இதனை கண்டுபிடித்துள்ளார்.

இந்த நிலையில், நாக பாம்பை பானையில் வைத்து வழிபாடுகளை செய்தமைக்கான ஆதரங்களும் கிடைக்கப் பெற்றுள்ளதாக பேராசிரியர் புஷ்பரட்ணம் தெரிவிக்கின்றார்.

வட இலங்கை மக்களிடையே நாகத்தை பானைகளில் வைத்து வழிபாடு செய்த தொன்மையான வரலாறு தற்போது உறுதிப் படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிடுகின்றார்.

தெற்காசியாவில் தொன்மையான நாட்டுப்புற வழிபாடுகளில் ஒன்றாக நாக வழிபாடு காணப்படுகின்றது.

நாகங்கள் பூமிக்குள் இருந்து வந்து, மீண்டும் பூமிக்குள் மறைந்து போவதனால், ஆதி காலத்து மக்கள் அவற்றை மண் புற்றுக்குள் வைத்து வழிபாடுகளை நடத்தியுள்ளமைக்கான சான்றுகளும் காணப்படுவதாக அவர் கூறுகின்றார்.

கட்டுக்கரை மற்றும் நாகபடுவான் ஆகிய பகுதிகளில் நடத்தப் பட்ட தொல்லியல் ஆகழ்வாய்வுகளின் போதே இந்த விடயங்கள் கண்டறியப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவிக்கின்றார்.

இந்த ஆதாரங்களின் ஊடாக வட இலங்கை மக்கள், நாக வழிபாட்டை குல வழிபாடாக கொண்டிருந்தமை உறுதிப்படுத்தப் படுவதாகவும் கூறியுள்ளார்.

கிளிநொச்சி - பூநகரி பகுதியிலுள்ள முழங்காவில் நகருக்கு அண்மையிலேயே இந்த பகுதிகளில் அமையப் பெற்றுள்ளன.

நாகபடுவான் பகுதியில் கண்டெடுக்கப்பட்ட நாக வழிபாட்டு சான்றுகளில் சில, தெற்காசிய நாடுகளில் இதுவரை கிடைக் கவில்லை என பேராசிரியர் கூறுகின்றார்.



## நாகபடுவான் – ஊரின் பெயர்

நாகபடுவான் என்ற பெயரில் நாகம் இருப்பதுடன், படுவம், படுவான் என்றால் ஆழமான குளம் அல்லது பெரிய குளம் என பொருட்படுகின்றது என கூறப்படுகின்றது.

இதன்படி, நாககுளம் என்ற பொருளை கொண்ட இந்த ஊரின் பெயர் மாற்றம் பெறாது, பண்டைய தமிழ்ச் சொல்லிலேயே நாக படுவான் என அழைக்கப்படுவதாக பேராசிரியர் விளக்கமளிக் கின்றார்.

குறித்த இடத்திலிருந்து ஆதிகால பண்பாட்டுச் சின்னங்கள், சுடுமண்ணிலான நாகச் சின்னங்கள், பீடத்துடன் கூடிய நாகம், நாகினி சிலைகள், சிற்பங்கள், நாக கற்கள் உள்ளிட்ட பழமை வாய்ந்த அடையாள சின்னங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இந்த ஆதாரங்கள், ஆதிகால மக்கள் நாகத்தை தமது குலமரபுச் சின்னமாகக் கொண்டிருந்தார்கள் என்பது உறுதிப்படுத்தப் படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டுகின்றார்.

அத்துடன், நாகச் சிற்பத்தை பானையில் வைத்து வழிபட் டமைக்கான சான்றுகள் தொல்லியல் அறிஞர்களுக்கு புதிய விடயங்களாக உள்ளது எனவும் அவர் கூறுகின்றார்.

குறித்த அகழ்வு குழியொன்றிலிருந்து அகழ்ந்து எடுக்கப்பட்ட, அரைவட்ட வடிவில் செய்யப்பட்ட பெரிய பானை, மண்ணில் புதைக்கப்பட்டு, அதன் மேற்பகுதியில் பாம்பு வந்து போவதற் கான வாய்ப் பகுதி செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவிக் கின்றார்.

அத்துடன், அந்த பானையைச் சுற்றி மூடிய நிலையில் பாம்பு புற்றை அடையாளப்படுத்தும் 4 சிறு கலசங்களும் காணப் படவதாக அவர் குறிப்பிடுகின்றார்.

பானையிலிருந்து மண் அகற்றப்பட்டு ஆய்வு செய்யப்பட்ட போது, நாக பாம்பின் சிலை பானையால் மூடப்பட்டிருந்தமை கண்டறியப்பட்டுள்ளது.

இந்த பானையின் மூன்று திசைகளிலும் தெய்வங்கள் அமர்ந் திருக்கும் பீடங்கள் காணப்படுவதாக அவர் குறிப்பிடுகின்றார்.

அவற்றில் அமர்ந்துள்ள தெய்வங்களின் இடது கால் பானையை முட்டியவாறு உள்ளது.

நான்காவது திசையில் மண் சட்டிகளின் விளிப்புப் பகுதியில் நான்கு திசைகளை நோக்கியவாறு நாகபாம்பு படமெடுத்த நிலையில் இருக்க, அவற்றின் வால் பகுதிகள் சட்டிக்குள் இணைந்து சட்டியின் நடுமையத்தில் ஒரு வட்டமாகக் காணப் படுகின்றது.

இந்த ஆதாரங்கள் பாம்பு புற்று வழிபாடு தோன்றுவதற்கு முன்னோடியாக ஆதியிரும்புக்காலப் பண்பாட்டுடன் தோன்றிய தொன்மையான வழிபாட்டு மரபு எனக் கூறலாம் என பேராசிரியர் குறிப்பிடுகின்றார்.



அத்துடன், ஒன்று மேற்பட்ட நாக வடிவங்கள், மண் சட்டிகளில் வைக்கப்பட்டமைக்கான ஆதாரங்களும் இங்கு கண்டுபிடிக்கப் பட்டுள்ளதாக அவர் தெரிவிக் கின்றார்.

நாக வழிபாட்டு ஆலயங்களில் நாகதோஷம் நீங்க செப்பு அல்லது மண் பாத்திரங்களில் நாக பாம்பை வைத்து ஆலயங் களுக்கு கொடுக்கும் மரபு ஆதிகாலத்திலிருந்து தோன்றியிருக் கலாம் என பேராசிரியர் கருதுகிறார்.

திருகோணமலை உள்ளிட்ட அநுராதபுரம் நகருக்கு வட பகுதியிலுள்ள பிராந்தியம், நாக தீப(ம்), நாகநாடு என வரலாற்று மூலங்களில் தனித்து அடையாளப்படுத்தப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிடுகின்றார்.

இந்த பெயர்கள் கி.பி.13ஆம் நூற்றாண்டு வரை இப்பிராந் தியத்தில் வன்னி, வன்னிப்பற்று என்ற பெயர்களும், 15ஆம் நூற் றாண்டில் யாழ் பாணம், பட்டினம் என்ற பெயரும் தோன்றும் வரை தொடர்ச்சியாகப் பயன்பாட்டில் இருந்து வந்ததற்கான ஆதாரங்கள் காணப்படுவதாக அவர் கூறுகின்றார்.

பண்டைய இலங்கையில் நாக இனமக்கள் வாழ்ந்ததற்கான சான்றுகள் பல பிராந்தியங் களில் காணப்பட்டாலும், அது இலங் கையில் ஒரு பிராந்தியத்தின் பெயராக அடையாளப்படுத்திக் கூறப்பட்டு வந்ததற்கு தற்காலத்தில் வட இலங்கையில் வாழும் தமிழ் மக்களின் பூர்வீக வரலாறு ஆதியிரும்புக்காலப் பண் பாட்டை அறிமுகப்படுத்திய நாக இனக்குழுவோடு தோன்றி வளர்ந்ததையே கட்டுக்கரை, நாகபடுவான் அகழ்வாய்வுகள் உறுதிப்படுத்துகின்றது எனலாம் என யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின் வரலாற்றுத்துறை, தொல்லியல் பேராசிரியர் புஷ்பரட்ணம் தெரிவிக்கின்றார்.

நன்றி: ரஞ்ஜன் அருண் பிரசாத், பிபிசி தமிழ் - 18.10. 2020


AFFORDABLE REFRIGERATION SERVICES INC
Walk - In Freezers
Walk - In Coolers
Reach - In Freezers
Reach - In Coolers
We Sell. Install
used & new
Walk in Cooler
Walk in Freezer
kapil.afr@gmail.com
Kapil: 647.515.8643


வங்கிக் கடன்
தொல்லைகளிலிருந்து
விடுதலை
NEW LIFE FRESH START
PAST DUE NOTICE
Save 80%
கடன் 80% குறைய நடவடிக்கை
Reduce your debts upto 80%.
கடனுக்கு விடுவிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுதப்படும்
Stop all interest on your debts.
கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புகள்,
சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
Stop collection calls, legal action & garnishments.
உங்கள் சொத்துகள் பாதுகாக்கப்படும்.
Protect all your assets (House, Car, RRSP, RESP).
மாதாந்த ரீதியில் அனைத்துக் கடனையும் தீர்க்க வசதி செய்தல்.
Make one monthly patment to all of your creditors.
வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்.
GIve you solutions without bankruptcy.
CRC CREDIT RECOVERY CANADA
10 Milner Business Court, Unit 300
Website: www.creditrecoverycanada.ca
Suren Sornalingam BBA
Post Graduate Diploma In Business Management
Federal Government Registered & Certified (BIA)
Insolvency Counsellor.
Member of Canadian Insolvency Foundation
Over 20 Years Experience
in the field of Insolvency
Tel: 647-274-2832
Email: info@creditrecoverycanada.ca




# தமிழின அழிப்பின் நினைவாக மே 18 அன்று ‘முள்ளிவாய்க்கால் கஞ்சி’ உண்போம்!






நீண்ட இனவழிப்புப் போரின் இறுதி கட்டத்தில் எம் தமிழ்மக்கள் குறுகிய நிலப்பரப்பில் முடக்கப்பட்டார்கள். செல்மழையும், துப்பாக்கிச்சூடும், விமானக்குண்டுத் தாக்குதல்களும் கொத்துக்கொத்தாய் கொண்டிருக்க உணவும் மருந்தும் ஆயுதமாக்கப்பட்ட நிலையில் உண்பதற்கு எதுவுமின்றி நாட்கணக்காக பட்டினி கிடந்து பதுங்குகுழி மக்களாக அவலப்பட்டார்கள். இந்நிலையில் அவர்களின் உயிர்காத்தது போராளிகள் வழங்கிய கஞ்சிதான்.

மாத்தளன், வலைஞன் மடம், முள்ளிவாய்க்கால் என அவலப் பயணம் நகர்ந்த போது பணக்காரன் ஏழை, படித்தவன் படிக்காதவன் என்ற எந்த வேறுபாடுமின்றி அவர்களின் உயிர்காத்த இடங்கள் தான் கஞ்சிக் கொட்டில்கள். ஆரம்பத்தில் பச்சையரிசி, சிறதளவு பால், சீனி என்பன சேர்த்து தயாரிக்கப்பட்ட இக்கஞ்சி நாளடைவில் வெறும் அரிசியும் உப்பும் கலந்த உப்புக்கஞ்சியாயிற்று.

இவ்வாறு லட்சக்கணக்கான மக்களின் உயிர்காத்த இந்த கஞ்சியை “முள்ளிவாய்க்கால் கஞ்சி“ என்ற பெயருடன் அந்த மாபெரும் அவலத்தின் நினைவை வருடாந்தம் உயிர்ப்பிக்கும் உணவாக்கி எமது சந்ததிக்கு கடத்த உலகத்தமிழர் அனைவருக்கும் அழைப்பு விடுக்கிறோம்.

எவ்வாறு யூதர்கள் எகிப்திய அடிமைத்தனத்திலிருந்து புறப்பட்டபோது உண்ட பயண உணவை வருடாந்தம் உண்டு தம் நினைவுகளைத் தக்கவைத்து சீயோனுக்கு திரும்பினார்களோ அதுபோல் எம்மினத்தின் வீரமும் அவலமும் நிறைந்த ஒரு வரலாற்றுக்கட்டத்தை எம்மினத்தின் தேசிய இருப்பை தக்கவைக்கும் நினைவாக உயிர்ப்புடன் பேண வருடாந்தம் தமிழினவழிப்பு நினைவு நாளாகிய மே 18 இல் “முள்ளிவாய்க்கால் கஞ்சியை“ உணர்வுமிகு உணவாக்குவோம்.

ஆகவே உலகெங்கும் வாழ் தமிழ் உறவுகளே!

- அன்றைய நாளில் எமது வீடுகளில் “முள்ளிவாய்க்கால் கஞ்சியை“ ஒரு நேர உணவாக்குவோம். அதை உண்ணும் போது எமது தேசத்தின் வரலாற்றை எமது பிள்ளைகளுக்கு விளக்கி நினைவுகளை அடுத்த சந்ததிக்கு கடத்துவோம்!

- ஆலயங்களிலும் பொது இடங்களிலும் கஞ்சிக்கொட்டில் அமைத்து “முள்ளிவாய்க்கால் கஞ்சியை“ அனைவருக்கும் வழங்கி உணர்வுகளைப்பகிர்ந்து கொள்வோம்!

நினைவுகளின் நீட்சியே தமிழினவழிப்பின் சாட்சி, இச்சாட்சியே எம்மக்களுக்கான மீட்சியின் வழியென உணர்ந்து உணர்வுபூர்வமாக இந்த நினைவேந்தலை முன்னெடுப்போம்.

இனவழிப்பின் ஆயுதமாக பயன்படுத்தப்பட்ட உணவையே நினைவேந்தலின் வடிவமாக்குவோம் மே 18 இல் முள்ளிவாய்க்கால் கஞ்சி உண்போம்!




**தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்**

# முள்ளிவாய்க்கால் தமிழினம் விதைக்கப்பட்ட பலிக்களம்!

இலங்கையில் 2009-ஆம் ஆண்டு நடந்த இறுதிப்போரில் மே 17, 18 ஆகிய தேதிகளில் முள்ளிவாய்க்காலில் இலட்சக்கணக்கான ஈழத்தமிழர்கள் சிங்கள இராணுவத்தால் கொன்று குவிக்கப்பட்டனர்.

உயிர்போகும் வேளையில், உதிரம் வழிந்தோட அவர்கள் அலறிய சத்தம் இன்னும் தங்கள் காதுகளில் எதிரொலித்துக் கொண்டிருப்பதாக, இந்த தாக்குதலில் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பி, தற்போது வீடு, நிலம், உறவுகளை இழந்து, எதிர்காலம் சூனியமாகிவிட்ட நிலையில் உள்ள மக்கள் நினைவு கூறுகிறார்கள். இந்த கொடூரத் தாக்குதலில் பலர் காணாமல் போயினர். பல நூறு பேர் உடல் உறுப்புகளை இழந்து வாழ்க்கையை தொலைத்துள்ளனர். இவ்வாறு 2009-ஆம் ஆண்டு இறுதிக்கட்ட யுத்தத்தின்போது, தமிழ் மக்களின் ரத்தத்தை ஆறாக ஓட விட்ட மண்தான் முள்ளிவாய்க்கால். அதன் 15-ஆம் ஆண்டு நினைவு நாள் இன்று அனுசரிக்கப்படுகிறது.

பௌத்த-சிங்களப் பேரினவாதத்தால் நடத்தப்பட்ட தமிழின அழிப்பு நடவடிக்கையில் உச்சம் தொட்ட நாட்கள் 2009, மே 17, 18, 19 ஆகும்.

2008-ஆம் ஆண்டு தொடக்கத்தில் அரசாங்கத்தின் பதிவேடுகளின்படி மொத்தம் 4 இலட்சத்து 20 ஆயிரம் பேர் வன்னியில் வாழ்ந்து வந்தனர். போர் முடிந்த பிறகு முள்வேலி முகாம்களில் அடைக்கப்பட்டவர்கள 2 லட்சத்து 70 ஆயிரம் பேர். ஆக, மொத்தம் 1 லட்சத்து 50 ஆயிரம் காணவில்லை. அவர்கள் அனைவரும் போரில் கொல்லப்பட்டவர்கள். மூன்றில் ஒரு பங்கு அதாவது 30% தமிழ் மக்கள் ஓராண்டு காலத்திற்குள் கொன்று குவிக்கப்பட்டுள்ளனர். வியட்நாமில் மொத்தம் 15 இலட்சம் பேர் அமெரிக்க ஆக்கிரமிப்பு காலத்தில் படுகொலை செய்யப்பட்டனர். இது பத்தாண்டு காலத்தில் நடந்தது. வியட்நாம் மக்கள் தொகையில் 6% பேர் படுகொலையானார்கள். பத்தாண்டு காலத்தில் 6% பேர் படுகொலை செய்யப்பட்டதையும் ஓராண்டு காலத்தில் 30% பேர் படுகொலை செய்யட்டதையும் ஒப்பிட்டுப் பார்த்தால் ஈழத்தில் தமிழ் மக்கள் சந்தித்துள்ள மனித உயிரிழப்புகளின் கொடூரத்தை உணர முடியும். முள்ளிவாய்க்கால் என்கின்ற போது ஒவ்வொரு தமிழனுக்கும் இதயத்துடிப்பு அதிகரிக்கும், நெஞ்சம் கனக்கும். தமிழீழம் என்ற இலட்சியக் கனவு உயிர் பெற்று வழிநடத்தும்.

உலக வரலாற்றில் மனிதகுலம் பல்லாயிரம் போர்க்களங்களைக் கண்டிருக்கிறது. ஒவ்வொரு போரும் ஒவ்வொரு வகையான செய்திகளை இந்த உலகிற்கு சொல்லிச் சென்றிருக்கிறது. போர்வெறி பிடித்த மங்கோலியன் செங்கிஸ்கான் மத்திய ஆசிய நாடுகள் மீது மேற்கொண்ட போர்வெறி பல்லாயிரம் மக்களைக் கொன்று குவித்தது. நவீன உலகின் நாசி ஹிட்லர் யூதர்கள் மீது ஏவிய போர் பல இலட்சம் யூதர்களை இரையாக்கியது, ஆனால் இவற்றையெல்லாவற்றையும் தாண்டி புதிய உலக ஒழுங்கிலும் ஆர்மேனிய, கொசோவா, அல்பேனியா, சூடான், எரித்திரியா, கிழக்குத் தீமோர் என போர் வெறியர்கள் நிகழ்த்திய மனிதப் படுகொலைகள் மானிட வரலாற்றின் அழியாச் சுவடுகளை பதித்திருந்தாலும் 21ம் நூற்றாண்டில் மிகப்பெரும் மனித இனத்திற்கெதிரான இனப்படுகொலை முள்ளிவாய்க்கால் மண்ணிலேயே நிகழ்ந்தது.

தனக்குச் சொந்தமான நாட்டை அந்த இனத்திடமிருந்து பறித்து, அவர்களை உரிமைக்கு அந்நியமாக்கியதோடு மட்டுமின்றி, ஓர் இனத்தின் வரலாற்றையும் அவர்களின் வாழ்வியல் தொன்மையையும் அழிப்பது உலகின் உச்சக்கட்டமான இன அழிப்பாகும். தங்களின் உரிமைக்குப் போராடியத் தமிழினத்தை முற்றாக அழித்திட சிறீலங்கா அரசு தமிழினத்திற்கு எதிராக கட்டவிழ்த்த கொடுமைகளும் கொடூரங்களும் கொஞ்சம் நஞ்சமல்ல. அது வார்த்தையால் விவரிக்க முடியாது வலி நிறைந்த வரலாறு…

கொலைகளும் பாலியல் வல்லுறவுகளும் மட்டுமல்ல. ஆண்கள், பெண்கள், முதியவர்கள், இளையவர்கள், குழந்தைகள், நோயுற்றவர்கள், நோயற்றவர்கள் என்ற எந்த வேறுபாடுமின்றி படுகொலை செய்யப்பட்டார்கள். சாவின் விளிம்பில் முள்ளிவாய்க்காலை நோக்கி இடம் பெயர்ந்த நாட்களின் நினைவுகளையும் துப்பாக்கிகள் ஏந்திய சிங்கள இராணுவத்திடம் தன் சொந்தங்கள் நிர்வாணம் ஆக்கபட்டு, சாரை சாரையாக சரணடைந்து முள்வேலி முகாம்களில் அடைக்கப்பட்ட நினைவுகளையும் சுமந்தபடி ஈழத் தமிழர்கள் வாழ்ந்து வருகிறார்கள். ஒட்டுமொத்த மனித குலத்தின் மாண்புகளையும், நாகரிகத்தையும் கேள்வி கேட்டப்படி அவர்களின் போராட்டம் தொடர்ந்து கொண்டிருக்கின்றது.

இன அழிப்பு என்பது, மனிதக் குலத்திற்கு எதிராக மேற்கொள்ளப்படும் மிக மோசமான அல்லது கொடூரமான குற்றச் செயலாகும். அரசியல், அதிகாரம் உட்பட ஓர் இனத்தின் ஆளுமையும் அதிகாரமும் மேலோங்கும் நிலையில், அங்கு வாழும் சிறுப்பான்மை இனத்திற்கு எதிரான கொடூரங்களும் கொடுமைகளும் அரங்கேறுவது இயல்பாகிப் போனது. அவ்வாறு தன் இனத்தைக் கொடூரமாக அழிக்கும் இனத்திற்கு எதிராக கிளர்ந்து எழும்போது, புரட்சி வெடிக்கிறது. அது உள்நாட்டுப் போராகவோ அல்லது உள்நாட்டு பிரச்சனையாகவோ உருவெடுக்கிறது. அம்மாதிரியான சூழலில் சிறுப்பான்மை மற்றும் அதிகாரமற்ற நிலையில் இருக்கும் இனத்திற்கு எதிராக



அதிகாரமும் ஆளுமையும் கொண்டிருக்கும் இனம் புரியும் அட்டூழியங்கள் எழுத்துகளில் விவரிக்க முடியாத ஒன்றாக விளங்குகிறது.

இன அழிப்பு என்பது ஓர் இனத்தைப் போரில் கொல்வதிலும் அவர்களை அடித்து துரத்துவதிலும் சித்திரவதை செய்வதிலும் மட்டும் அடங்கிவிடவில்லை. மாறாய், அவ்வினத்திற்கு எதிராக உடல் மற்றும் உளரீதியாக புரியப்படும் கொடூரமான அல்லது கொடுமையான செயல்களும், இனப் படுகொலைதான். முள்ளிவாய்க்காலில் நிகழ்ந்த கொடூரங்களை உலகம் அறிந்திருந்தும், தட்டிக் கேட்கவும் தமிழர்களுக்கு ஆதரவாக குரல் கொடுக்கவும் யாரும் முன் வரவில்லை. ஓர் இனத்திற்கு எதிராக நடத்தப்பட்ட இன அழிப்பிற்கு உலகமே வாய்மூடி கிடப்பது எவ்வளது அவமானம். இலங்கையில் நிகழ்ந்த இன அழிப்பு, அராஜகம், கொடுமைக்கு எப்போது நீதி கிடைக்கும் எனும் கேள்வி இன்னமும் உலகத் தமிழர்கள் மத்தியில் எழுந்து கொண்டுதான் இருக்கிறது.

உறவுகளை இழந்து, உடமைகளை இழந்து, உடல் பாகங்களையும் இழந்து நடைபிணம் போல் உயிரை மட்டும் பிடித்துக் கொண்டு பிற நாடுகளில் நாடோடிகளாகவும் சொந்த நாட்டில் அகதிகளாகவும் வாழும் தமிழர்களுக்கு இந்த உலகம் காட்டும் மனிதாபிமானம் தான் என்ன? பாதிக்கப்பட்டவன் தமிழன் தானே என அலட்சியம் தொடர்ந்தால் மீண்டுமொரு விடுதலை போர் கிளர்ந்தெழுந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை எனலாம். ஆனால் அது ஆயுதமேந்திய போராக இருக்காது மாறாக நவீன உலகின் அரசியல் அதிகாரத்துக்கான, உரிமைக்கான போராக இருக்கும்.

**"விடுதலைக்கான போராட்டங்கள் ஒரே நாளில் தொடங்குவதும் இல்லை, ஒரே தலைமுறையோடு முடிந்து விடுவதும் இல்லை"**

முள்ளிவாய்க்கால் இனபேரழிவுகளுக்கான நீதியைப் பெறுவதும், இதுபோன்ற அழிவுகள் இனிமேல் நிகழாதிருப்பதை உறுதிப்படுத்துவம் தற்போதை அவசியம். போரின் இறுதிக் கட்டத்தில் இடம்பெற்ற கொடூரங்களுக்கும் குற்றங்களுக்கும் நீதியைப் பெற்றுக் கொடுப்பதற்கான முயற்சிகள் இன்னமும் வெற்றி பெறவில்லை. அன்று போருக்கு ஆயுதம் கொடுத்து, ஆலோசனை தந்து, சர்வதேச நாடுகளிடையே ஆதரவு திரட்டி இனப்படுகொலைக்கு துணை நின்ற இந்திய அரசு இன்றுவரை சிங்கள அரசை இனப்படுகொலைக் குற்றத்தில் இருந்து பாதுகாக்கும் வேலையைதான் செய்து வருகிறது. சிறீலங்கா அரசு மீது இனப்படுகொலைக்கானப் பன்னாட்டுப் புலனாய்வு நடத்தப்பட வேண்டும், அரசியல் தீர்வுகான ஈழத்தமிழர்களிடையே பொதுவாக்கெடுப்பு நடத்த வேண்டும், இலங்கை மீது பொருளாதார தடை விதிக்க வேண்டும் என்று தமிழக சட்ட சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களைக் கிழித்து இந்தியப் பெருங்கடலில் வீசியபடி இலங்கைக்கு பயணம் போனார் இந்தியப் பிரதமர் மோடி. சீனாவின் துறைமுகத்தை இடைக்காலமாக நிறுத்தச் செய்துவிட்டு, இந்திய புலனாய்வு அதிகாரிகள் தங்கு தடையின்றி இலங்கைக்கு போய் வர ஏற்பாடு செய்துவிட்டு இலங்கைத் தீவில் இந்தியச் செல்வாக்கை நிலை நிறுத்துவதற்கான ஆரம்பக்கட்ட வேலைகளை முடித்து வந்தார். இலங்கை நாடாளுமன்றத்தில் உரையாற்றிய மோடி தவறியும் தமிழர்களுக்கான அரசியல் தீர்வைப் பற்றிப் பேசவில்லை. ஈழத்தில் நடந்தது இனப்படுகொலைக் குற்றமென்று வடக்கு மாகாண சபை தீர்மானம் நிறைவேற்றி இருந்தும் தமிழர்களின் குரலை எதிரொலிக்கவில்லை. இலங்கை மீதானப் பன்னாட்டுப் புலனாய்வைத் தடுத்து நிறுத்தியதைத் தான் தனது நூறு நாள் ஆட்சிக் காலத்தில் ஆற்றிய மாபெரும் சாதனையாக இலங்கை அதிபர் அறிவித்தார்.

சர்வதேச சமூகம் காட்டுகின்ற மாற்றான்தாய் மனப்பாங்கினால், முள்ளிவாய்க்கால் பேரவலங்களுக்கு நீதியை வழங்கும் செயல்பாட்டில் இருந்து சிறீலங்காவின் இனவாத அரசு தப்பித்துக் கொண்டு வருகிறது.

**"போர் முடிந்தாலும் போருக்கான காரணங்கள் அப்படியே உள்ளது"**

இனப்படுகொலைக்குப் பன்னாட்டுப் புலனாய்வு வேண்டும். உள்நாட்டு விசாரணையை ஏற்க முடியாது.

அரசியல் தீர்வு காணப் பொதுவாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும். 13-ஆவது சட்டத் திருத்தம் ஓர் அரசியல் மோசடி.

தமிழர் பகுதிகளில் இருந்து சிங்கள இராணுவத்தை வெளியேற்ற வேண்டும். தமிழர் பகுதிகளைச் சிங்களக் காலனியாக்குவதைத் தடுத்திட வேண்டும்.

இம்மாதிரியான கோரிக்கைகளை வலியுறுத்தி இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு நீதியைப் பெற்றுக் கொடுப்பதற்காக செயல்படுவதும் கூட முள்ளிவாய்க்காலில் உயிர் நீத்தோருக்காக செலுத்தப்படும் வணக்கம்தான்.

மானிடம் போற்ற மறுக்கும் - ஒரு
மானிடம் தன்னைத்தன் உயிரும் வெறுக்கும்
- கவிஞர் பாரதிதாசன்.

நன்றி: சிவசுப்ரமணியன்

# முள்ளிவாய்க்கால்

## வலி சுமந்த பதிவுகள்...



# எம் மண் உயிர்க்கும்






எங்கும் வெடிமருந்துகளின் மணமும் அழுகிய நாற்றமுமாகக் கிடந்தது. எந்தக் கணமும் உயிரைக் கொண்டுபோகும் எறிகணையொன்று வரலாம். தசைகளைப் பிய்த்துச் சென்று குருதி வடியச் செய்யலாம். ரவைகள் காற்றைக் கிழித்தன. புகை மண்டலம் அடிக்கடி மேலெழுந்து காற்றில் பரவிக்கொண்டிருந்தது.

"எதையோ கொழுத்துகிறான்" பக்கத்திலிருந்த தோழியின் வார்த்தை என்னை உசுப்பிவிட்டது.

அதைத்தான் நானும் பார்க்கிறேன். சுருள் சுருளாகப் புகை கிளம்பி முகிலோடு கலந்தது. இடைக்கிடை அதற்குள் ஏதோ வெடித்துச் சிதறுகின்ற ஒலிகளும் கேட்டன.

எம் இனத்தின் இன்பமான குடியிருப்பு எரிந்துகொண்டிருக்கும். பக்கத்திலிருந்த தோழியைப் பார்த்தேன். அவளது கண்கள் சிவந்திருந்தன. நித்திரை இன்றிய இரவுகளை வெளிக்காட்டினவோ, அல்லது அவற்றைப் பார்த்து அழுகிறாளோ? உண்மையில் மூன்று நாட்கள் தொடர்ந்து நித்திரையில்லை. சிறிது ஓய்வு கிடைக்கின்ற பத்து நிமிடங்களோ, அரை மணித்தியாலமோ மெல்லக் கண்ணயர, மீண்டும் எழுந்து ஊர்ந்து செல்ல, அப்படியே நித்திரை போய்விடும்.

அவளது துப்பாக்கியைப் பற்றி கைகள் அடிக்கடி இறுகவதையும், கை நரம்புகள் முறுக்கேறுவதையும் கண்டேன். மெல்ல மெல்ல அவதானித்து ஓசைப்படாமல் நடந்தோம்.

அவளது அந்தப் பள்ளிக்கூடத்துக் கட்டிடத்தைப் பார்த்தபடி அப்படியே நின்றாள். அவளது கண் கலங்கியிருக்க வேண்டும். அதை மறைக்க அடுத்த பக்கம் திரும்பி வேறுபக்கத்தில் கவனத்தைச் செலுத்துபவள் போல வெறித்தாள்.

"அக்கா இந்தப் பள்ளிக்கூடத்திலதான் நான் படிச்சனான். இஞ்சை யிருந்துதான் நான் இயக்கத்துக்கு வந்தனான்."

அவளது குரல் கரகரத்தது. அந்தப் பெரிய பாடசாலைக் கட்டிடத்தின் அனேகமான இடங்களை எதிரிகள் சிதைத்திருந்தனர். பாடசாலையின் பெயரைப் பதித்த மாடிக்கட்டிடம் எழுத்துகளோடு இடிந்து போயிருந்தது.

***இராணுவ டாங்கிகள் இரைகின்ற சத்தம் கேட்டுக்கொண்டிருந்தது. எதையுமே ஜீரணிக்கமுடியாத நிலை. நடந்து முடிந்துபோன சம்பவங்களை மனம் ஏற்றுக்கொள்ள மறுத்தது. ஊரோடு குடிபெயர்ந்துபோன உறவுகள், ஆசையாய் அழகுபார்த்துக் கட்டிய வீடுகள், வாங்கி நட்ட பூமரங்கள், கடைகள், விளைநிலங்கள் எல்லாம் பேய் புகுந்தது மாதிரிப் போனது.***

"அக்கா அந்த மாடியிலதான் எங்கட வகுப்பு இருந்தது."

அவள் சுட்டிக்காட்டிய இடத்தில் கரும்பலகையில் எழுத்துக்கள் இன்னும் அழியாமல் கிடந்தன. அண்மையில் அவ்விடத்தில் சண்டை நடந்ததற்கு அடையாளமாக ரவைக் கோதுகளும் குன்றும் குழியுமான நிலமும், இன்னும் சன்னங்களால் ஆழமாகக் கிழிக்கப்பட்டு அரைகுறையாய் நின்ற மரங்களும் கிடந்தன.

நாம் சற்றுத் தள்ளியிருந்த அந்தக் காப்பரணுக்கு ஊர்ந்தபோது எம்மோடு அந்த நாய்களும் வந்தன. தோல்கள் ஒட்டி எலும்புகள் துருத்திக்கொண்டு நின்ற நாய்கள் இரண்டும் எம்மிடம் எதையோ யாசிப்பதாகப்பட்டது. அடிக்கடி நாக்குகளைத் தொங்கப் போட்டபடி வழமையான குரலைவிட மெல்லிய முனகலாகக் கத்தின. பசியால்தான் அப்படிக்கத்துவதாக எனது தோழி சொன்னது நினைவுக்கு வந்தது.



சிலவேளை தன்னை வளர்த்த எஜமானை நினைத்துத்தான் அப்படிக்கத்துகிறதோ என்னவோ? அதை வளர்த்த வீட்டுக்காரன் தனது வீட்டைப்போல, தான் விட்டுச் சென்ற பயிர் முற்றி தோட்டத்தைப்போல அதனையும் நினைத்தவாறு வேதனைப் பட்டுக்கொண்டிருப்பான். நெஞ்சு வலித்தது. பாறாங்கல் கொண்டு அமுக்குவது போல வேதனையாக இருந்தது.

எதிரேயிருந்த வீட்டின் முன் விறாந்தை, எறிகணையால் சிதைந்து போயிருந்தது. சுவரிற் கொழுவியிருந்த அழகிய வண்ணக்காட்சிப் படமும் சிதறிப்போய், கொழுவியிரந்த ஆணியோடு விழுந்திருந்தன. கதிரைகளின் மேலே வீட்டின் உடைந்த தூள்கள், "கொங்கிறீற்" துண்டுகள் கிடந்தன.

எதையாவது சாப்பிட வேண்டும்போல இருந்தது. அவ்வளவு பசி, காலைச் சாப்பாட்டு நேரம் கடந்து மதியநேரம். தெருவெங்கும் வெம்மை கொட்டியது. அதைவிட மனம்... இன்னும் சாப்பாடு வருவதற்கான அறிகுறியைக் காணோம். பாதைகளைச் சீராக்கும்போது எவ்விடத்தில் மாமரத்தைக் காணுகின்றோமோ, அவ்விடத்தில் நின்று மாங்காய்களைக் கடித்து வயிற்றை நிறைத்துக் கொள்வதோடு சரி, சாப்பாட்டைக் கண்டு மூன்று நாட்கள் ஆகிவிட்டன. நிலமை அப்படி. வழமையாகச் சாப்பாடு கொண்டுவரும் தம்பி கூட முந்தநாள் நடைபெற்ற எதிரியின் கண்மூடித்தனமான எறிகணை வீச்சில் வீரச்சாவடைந்து விட்டதாகச் சொன்னார்கள்.

இருட்டத் தொடங்கிவிட்டது. யாழ்ப்பாணம் அரையிருட்டில் ஊமையாய்க் கிடந்தது. வீடுகளுக்குள் இருந்த நாய்கள் அங்குமிங்கும் ஓடித்திரிந்து அந்தரித்தபடி ஊளையிட்டன. இராணுவம் அடிக்கடி விடும் பரா வெளிச்சத்தைத் தவிர நகரம் அசைவற்

**எம்மவரின் எண்ணிக்கை குறைவு, ஆனால் ஒவ்வொருவரும் பல கைகள் முளைத்தவர்கள்போலச் சண்டையிட்டனர். ஆனாலும் அவளது கீச்சுக்குரல் எல்லாவற்றையும் மேவிக் கேட்டவண்ணம் இருந்தது. "அக்கா எங்கட தோட்டத்துக்குள்ளால வாறான். உவனைப் புரட்ட வேணும்."**

நிருந்தது. ஒரு பராவெளிச்சம் அந்தரத்தில் நின்று தொங்கிவிட்டு ஏதோ ஓர் உயரமான கட்டிடத்துக்குள் விழுந்து அணைந்து போனது.

"வேம்படிப் பள்ளிக்கூடத்து மாடியில் தான் விழுந்திருக்க வேணும்."

என்னோடு நின்ற தோழி சொன்னாள். நேற்று முன்தினம் நடைபெற்ற அகோரமான எறிகணை வீச்சுக்கள் தாராளமாக வேம்படி மகளிர் பாடசாலையின் உயரமான மாடிக்கட்டிடங்களைப் பதம்பார்த்தன. நேற்றுப் பிற்பகல் அவ்வழியால் வரும்போது "வேம்படி" உருக்குலைந்துபோயிருந்தது.

அந்தப் பாடசாலையில் ஏறத்தாழ மூன்று மாதத்துக்கு முன்னர் "போர்க்காலக் கருத்தரங்கு" வைத்தது எனக்கு ஞாபகத்துக்கு வந்தது. இன்றைய இளைய தலைமுறை போராடவேண்டிய தேவையை நன்றாக உணர்த்தி, அது ஒவ்வொருவர் தலையிலும் சுமத்தப்பட்டுள்ள வரலாற்றுக் கடமை என்பதையும் வற்புறுத்திக் கூறியபோது, எல்லோரும் உணர்வு பூர்வமாகக் கேட்டுக் கொண்டிருந்தனர். இறுதியாக எல்லோரும் ஏழாது விடினும் "இந்தப் பாடசாலையிலும் எதிரி குடியிரக்கலாம்" என்பதைச் சொன்னபோது, நிறையச் சிந்தித்தார்கள். ஒருவரையொருவர் பார்த்து, தங்களுக்குள் பேசி சில மாணவிகள் அன்று எம்மோடு வந்தனர். இப்போது அவர்கள் பயிற்சி எடுத்துக் கொண்டிருப்பார்கள்.

இப்போது அங்கு படித்துக்கொண்டிருந்த மாணவிகள் தங்களது பாடசாலைகளைப் பறிகொடுத்த பின்னரும் எங்காவது இன்னொரு பாடசாலையில், அல்லது உறவினர் வீடுகளில் தஞ்சமடைந்திருக்காலம். இதயத்தின் அடி ஆழத்திலிருந்து மெல்லிய பெருமூச்சு ஒன்று கிளம்பியது.

சரமாரியான எறிகணைகள் கணத்துக்குக் கணம் எம்மை நோக்கி வந்து கொண்டிருந்தன. கந்தகப் புகையும் அதிர்வால் கிளம்பிய புழுதியும் எமது உடுப்புக்களை, பற்றியிருந்த ஆயதங்களைக் குளிப்பாட்டியது.

வழி தவறிய பசுக்கன்று ஒன்று அங்கும் இங்கும் பயப்பிராந்தியோடு பார்த்துக்கொண்டிருந்தது. அது தனது தாய்ப்பசுவை எங்கேனும் எறிகணைக்குப் பறிகொடுத்திருக்கலாம். அல்லது இராணுவம் அதனை இறைச்சியாகப் பயன்படுத்தியிருக்க வேண்டும்.

**எல்லோரும் உணர்வு பூர்வமாகக் கேட்டுக் கொண்டிருந்தனர். இறுதியாக எல்லோரும் ஏழாதுவிடினும் "இந்தப் பாடசாலையிலும் எதிரி குடியிருக்கலாம்" என்பதைச் சொன்னபோது, நிறையச் சிந்தித்தார்கள். ஒருவரையொருவர் பார்த்து, தங்களுக்குள் பேசி சில மாணவிகள் அன்று எம்மோடு வந்தனர். இப்போது அவர்கள் பயிற்சி எடுத்துக்கொண்டிருப்பார்கள்.**

இராணுவ டாங்கிகள் இரைகின்ற சத்தம் கேட்டுக்கொண்டிருந்தது. எதையுமே ஜீரணிக்கமுடியாத நிலை. நடந்து முடிந்துபோன சம்பவங்களை மனம் ஏற்றுக்கொள்ள மறுத்தது. ஊரோடு குடிபெயர்ந்துபோன உறவுகள், ஆசையாய் அழகு பார்த்துக் கட்டிய வீடுகள், வாங்கி நட்ட பூமரங்கள், கடைகள், விளைநிலங்கள் எல்லாம் பேய் புகுந்தது மாதிரிப் போனது.

சில நாட்களின் முன்னர் சுமையோடு ஓடிவந்து களைத்துப் போன ஒரு அம்மா எம்மிடம் தண்ணீர் கேட்டு குடித்துவிட்டு அழுதார். "இந்த முறை தோட்டத்தில் நல்ல விளைச்சல். இரண்டு நாள் கழிச்சு வெங்காயம் கிண்டுவம் எண்டு ஆயத்தப்படுத்தினம் பிள்ளை, ஆமிக்காரர் வந்திட்டாங்கள். எங்கேயோ திரிஞ்சு கடன்பட்டு மாடாய் உழைச்சு அடைஞ்சபலனை எடுக்கிறதுக்கிடையில ஊருக்குள்ள வந்திட்டாங்கள், எல்லாம் போச்சுதம்மா."

அம்மா தலைதலையாய் அடித்துக் குமறினார்.

பிறகு எல்லாம் அடங்கி, சமாதானப்படுத்தி தேறுதல் கூற, கேட்டார், "மெய்யே பிள்ள எப்ப ஊருக்குப் போறது?"

அம்மாவுக்குச் சரியான ஏக்கம், உல்லா அம்மாமாரையும் போல.

வரவரக் கிட்டவாக இராணுவத்தின் டாங்கிகள் இரைகின்ற சத்தம் கேட்டது. இன்னும் முழுமையாக விடியவில்லை. பனி படர்ந்த காலை ஒரு சில நாட்களுக்குள்ளேயே வளர்ந்துவிட்ட புல் பூண்டுகள், மனிதர்கள் இல்லாத வெறுமையைப் பறைசாற்றின. எமது அணிகள் தற்பாதுகாப்பு நிலையெடுத்து எதற்கும் ஆயத்தமாகவே நின்றன. சில எண்ணிக்கையிலான போராளிகள்தான். ஒவ்வொருவருடைய மனங்களிலும் சண்டையை எதிர்கொண்டு முறியடிக்கின்ற உறுதி தெரிந்தது.

என்னோடிருந்த தோழி வழமையைவிட மிகுந்த உற்சாகமாகத்தான் இருந்தாள்.

அடிக்கடி தனது ரவைக்கூட்டுத் தாங்கியிலிருந்த கைக்குண்டுகளைத் தடவிப் பார்த்தாள். சிறிது நேரத்துக்கு முன்னர் அடிக்கடி "பசிக்குது" என்று சிணுங்கிய அந்தக் குரலைக் காணவில்லை. தன் அருகிலிருந்த எல்லா இடத்தையும் சுற்றிப் பார்த்தாள். காப்பகழிக்குள்ளிருந்து குதித்தபடி எழுந்தாள்.

"கவனம் வெளியில வீணா நிக்காதை. அடிக்கடி செல் அடிக்கிறான்."

அவள் காப்பகழியின் மண்மூடையின் மேல் ஏறி நின்றபடி எதிரே தொலைவில் தெரிந்த வீடுகளை உற்றுப் பார்த்தாள். ஒரு புதிய பொருளைக் கண்டுவிட்டாள் போல மகிழ்ச்சி பொங்கக் கூச்சலிட்டாள்.

"அங்க எங்கட வீடு தெரியுது." அவள் காட்டிய பகுதியிலிருந்து இராணுவம் கவசவாகனங்கள் சகிதம் முன்னேறத் தொடங்கியது. மும்முரமாகச் சண்டை நடைபெற்றது. எம்மவரின் எண்ணிக்கை குறைவு. அனால் ஒவ்வொருவரும் பல கைகள் முளைத்தவர்கள்போலச் சண்டையிட்டனர். ஆனாலும் அவளது கீச்சுக்குரல் எல்லாவற்றையும் மேவிக் கேட்டவண்ணம் இருந்தது.

"அக்கா எங்கட தோட்டத்துக்குள்ளால வாறான். உவனைப் புரட்ட வேணும்."

அவள் கத்தியபோது ரவையொன்று அவளது தலையைத் துளைத்தது. அவளது பிஞ்சுப்பருவம் கரைந்த மண்ணிலேயே அவள் விழுந்தாள்.

"அக்கா இந்த றைபிளைக் கவனமாகக் கொண்டு போங்கோ. இந்த ஊரிலையிருந்து இதைத் தூக்கிறத்துக்கு நிறையப் பெட்டையள் வருவாளவை."

அதுதான் அவளது கடைசிக் குரலாக இருக்கவேண்டும். அதற்குப் பிறகும் அங்கு சண்டை நடந்தது.

- தமிழீழத்திலிருந்து சுதாமதி - களத்தில் 29.05.1996




# பிரிகேடியர் சூசை

**தமிழீழ விடுதலைப்போராட்ட வரலாற்றில் அச்சாணியாகச் சுழன்ற கடற்புலிகளின் சிறப்புத்தளபதி பிரிகேடியர் சூசை**



யாழ்.மாவட்டத்தின் வடமராட்சிப் பிரதேசத்தில் தேசியத் தலைவர் வந்துதித்த வல்வை மண்ணுக்கு அண்டியதாக அமையப்பெற்ற செல்வச்செழிப்புமிக்க நெய்தல் நிலமான பொலிகண்டி மண் பெற்றெடுத்த வீரத்தளபதி பிரிகேடியர் சூசை.

திரு திருமதி தில்லையம்பலம் தம்பதியினருக்கு 1963ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் இரண்டாவது மகனாகப்பிறந்த இவருக்கு பெற்றோர் இட்ட பெயர் சிவநேசன். ஏற்கனவே ஒரு அண்ணனை மட்டும் சகோதரனாகக் கொண்ட சிவநேசனை எல்லோரும் செல்லமாக காந்தி என்றுதான் அழைத்தனர். இளமைப்பராயத்தில் பள்ளிப்படிப்புக்களில் சிறப்பாகத் தேர்ச்சி பெற்ற காந்தி உயர் வகுப்புக் கல்விகளை வடமராட்சி வேலாயுதம் மகாவித்தியாலயத்தில் முன்னெடுத்திருந்தார்.

காந்தி அவர்கள் பத்தொன்பது வயதையெட்டிய 1982ம் ஆண்டு காலப்பகுதி. சிங்கள பேரினவாத சக்திகளின் அடக்குமுறைகளுக்கு எதிராக தமிழீழ விடுதலைப்போராட்டம் முளையிடத் தொடங்கிய காலம். பேரினவாத சக்திகள் தமிழ்மக்கள் மீது திணித்த அடக்குமுறைகள் உயர்தரக்கல்வி கற்றுக்கொண்டிருந்த காந்தி அவர்களின் மனதை வெகுவாகப் பாதித்திருந்தது. அந்தக் காலப்பகுதியில் விடுதலைப்புலிகள் இயக்கத்தின் மூத்த தளபதிகளான கப்டன் பண்டிதர், கப்டன் றஞ்சன் லாலா, கேணல் கிட்டு ஆகியோர்களின் அறிமுகத்தைத் தொடர்ந்து 1982-ம் ஆண்டுக் காலப்பகுதியில் காந்தி அவர்கள் தன்னையும் ஒரு முழுநேர விடுதலைப் போராளியாக இணைத்துக்கொண்டார். இயக்கப் பாசறையில்தான் இயக்கப்பெயராக சூசை என்ற பெயரைப் பெற்றிருந்தார்.



தொடக்கநாட்களில் கேணல் கிட்டு அவர்களின் வழிகாட்டலில் இயக்கத்தின் வளர்ச்சிக்காக இராணுவ அரசியல் ரீதியாக அர்ப்பணிப்புடன் செயற்பட்டிருந்தார். இதன்பின்னர் 1983ம் ஆண்டின் பிற்பகுதியில் லெப் கேணல் பொன்னம்மான் தலைமையில் இருநூறு போராளிகளைக் கொண்ட விடுதலைப் புலிகளின் முதலாவது பயிற்சி அணியினர் பயிற்சிக்காக இந்தியாவிற்குச் சென்றபொழுது அந்த அணியில் சூசை அவர்களும் சென்றிருந்தார். இந்தியாவில் உத்தரப்பிரதேசத்தில் அமைந்திருந்த முதலாவது பயிற்சிப்பாசறையில் வழங்கப்பட்ட பயிற்சிகள் அனைத்திலும் மிகச்சிறப்பாகத் தேர்ச்சிபெற்று ஒரு சிறந்த போராளியாக மட்டுமன்றி சிறந்த ஆளுமைமிக்க பொறுப்பாளராகவும் புடம் போடப்பப்பட்டு தனது பயிற்சிகளை சிறந்த முறையில் நிறைவுசெய்திருந்தார் சூசை அவர்கள்.



1984ம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாவது பயிற்சிப்பாசறை நிறைவடைந்ததையடுத்து தாயகம் வந்த சூசை அவர்கள் அதே காலப்பகுதியில் வடமராட்சிக்கோட்டப் பொறுப்பாளராக தேசியத் தலைவர் அவர்களால் நியமிக்கப்பட்டார். சூசை அவர்கள் வடமராட்சிக் கோட்டத்தை பொறுப்பேற்றதைத் தொடர்ந்து வடமராட்சி மற்றும் வடமராட்சிக்கிழக்குப் பிரதேசங்களில் விடுதலைப்புலிகளின் செயற்பாடுகள் முனைப்புப்பெற்றன. விடுதலைப்புலிகள் இயக்கத்தை பலம்மிக்க ஒரு அமைப்பாக கட்டியெழுப்பும் பொருட்டு பெருமளவு இளைஞர்களை போராட்டத்தில் இணைத்து பயிற்சிகள் பெறுவதற்காக கடல்வழியாக தமிழ்நாட்டிற்கு அனுப்பி வைத்திருந்தார்.



அத்துடன் வடமராட்சிக்கிழக்குப் பிரதேசத்தில் மாவிலங்கை காட்டுப்பகுதியிலும் பயிற்சிமுகாம் அமைத்து அங்கும் புதிய போராளிகளுக்கான பயிற்சிகளை வழங்கி இயக்கத்தின் ஆட்பலத்தை விருத்திசெய்து விடுதலைப்போராட்டத்தின் படிக்கல்லாகத் திகழ்ந்தார். அத்துடன் மக்கள் மத்தியில் போராட்டம் தொடர்பான கருத்துக்களை எடுத்துக்கூறி போராட்டத்திற்கான மக்கள் ஆதரவினையும் வலுப்படுத்தினார். கிராமங்கள் தோறும் மக்கள் கடை என்ற பெயரில் வணிக நிலையங்களை நிறுவி மலிவுவிலைகளில் பொருடகள் மக்களுக்கு கிடைக்கக்கூடியவாறான சூழலை ஏற்படுத்திக்கொடுத்திருந்தார்.

அத்துடன் முதலுதவித் தொண்டர்களை உருவாக்கும் முகமாக கிராமங்களிலுள்ள சில படித்த இளைஞர் யுவதிகளை ஒன்று சேர்த்து முதலுதவிப் பயிற்சிகளை வழங்கியதோடு பின்தங்கிய இடங்களில் முதலுதவி நிலையங்களை நிறுவி பயிற்றுவித்த முதலுதவித் தொண்டர்களை அந்த நிலையங்களில் மருத்துவத் தொண்டர்களாகப் பணிக்கமர்த்தி மக்களின் வைத்தியத் தேவைகளை நிறைவு செய்தார்.

அன்றய நாட்களில் அந்த முதலுதவி நிலையங்களின் சேவையால் அநேகமான மக்கள் பெரிதும் நன்மையடைந்ததுவும் குறிப்பிடத்தக்கது. மக்கள் மத்தியில் ஏற்படுகின்ற குடும்பப் பிணக்குகள், காணிப்பிணக்குகள் உட்பட ஏனைய பிணக்குகளுக்கும் தீர்வுகாணும் முகமாக ஒவ்வொரு பிரதேசங்களிலும் படித்த அறிவில் முதிர்ந்ததும் மக்கள் மத்தியில் செல்வாக்குமிக்கவர்களுமான சிலரை இணைத்து இணக்கமன்றங்களை நிறுவி மக்கள் மத்தியில் ஏற்படுகின்ற பிணக்குகளுக்கு அந்த இணக்கமன்றங்கள் ஊடாக உரிய தீர்வுகளை பெற்றுக்கொடுத்தார். அத்துடன் வடமராட்சியில் சிறீலங்கா சிங்கள இராணுவத்தினருக்கெதிராக இடம்பெற்ற தாக்குதல்கள் அனைத்திலும் நேரடியாக பங்கெடுத்திருந்தார்.

1987ம் ஆண்டு சிறீலங்கா ஆக்கிரமிப்பு சிங்கள இராணுவத்தினர் **'ஒப்பரேசன் லிபரேசன்'** இராணுவ நடவடிக்கை மூலமாக வடமராட்சியைக் கைப்பற்றி நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நிலைகொண்டிருந்தனர். இந்தப் படைமுகாமை அழிப்பதற்கென விடுதலைப்புலிகள் 1987ம் ஆண்டு யூலை மாதம் 05ம் திகதி முதன் முதலாக கரும்புலித்தாக்குதலை மேற்கொண்டு நூற்றுக்கும் மேற்பட்ட சிங்கள இராணுவத்தை கொன்றொழித்து நெல்லியடி மத்திய மகாவித்தியாலயப்



படைமுகாமை வெற்றிகொண்டனர்.

இந்த தாக்குதலில் படை முகாமின் பிரதான தடையை உடைத்து, கரும்புலி கப்டன் மில்லர் அவர்கள் வெடிமருந்து நிரப்பிய வாகனத படைமுகாமின்தை முகாமிற்கு உள்ளே கொண்டு செல்வதற்கான பாதையை ஏற்படுத்திக்கொடுக்கும் பொறுப்பு சூசை தலைமையிலான அணியினரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. குறிப்பிட்ட தினத்தன்று சரியாக இரவு 07 மணி 02 நிமிடத்திற்கு சூசை தலைமையிலான அணியினர் முகாமின் தடையை உடைத்து பிரதான பாதையை ஏற்படுத்திக் கொடுக்க 07 மணி 05 நிமிடத்திற்கு கரும்புலி கப்டன் மில்லர் வெடிமருந்து வாகனத்தை முகாமிற்கு உள்ளே கொண்டு சென்று கரும்புலித்தாக்குதலை மேற்கொண்டார். கரும்புலி கப்டன் மில்லர் அவர்களும் சூசை அவர்களின் ஆளுகையின் கீழ் வடமராட்சி அணியில் செயற்பட்டிருந்தவர் என்பதுவும் குறிப்பிடத்தக்கது.

இதன்பின்னரான காலப்பகுதியில அதாவது தமிழீழத்தில் இந்தியப்படையினரின் ஆக்கிரமிப்பைத் தொடர்ந்து விடுதலைப் புலிகள் மணலாற்றுக் காட்டை தளமாகக்கொண்டு செயற்பட்டவேளையிலும் சூசை அவர்களும் இன்னும் சில போராளிகளும் வடமராட்சிப் பகுதியிலேயே மக்களின் உதவியுடன் தலைமறைவு வாழ்க்கையை மேற்கொண்டிருந்தனர். இந்தக் காலப்பகுதியில் இந்தியப்படையினருக்கெதிரான கெரில்லா முறையிலான பல தாக்குதல்களை மேற்கொண்டதோடு தமிழ் நாட்டிலிருந்து கடல்வழியாக படகுகளில் கொண்டுவரப்படுகின்ற படைக்கலங்களையும் ஏனைய பொருட்களையும் பாதுகாப்பாக பத்திரப்படுத்தி வைத்து அவற்றை மணலாற்றுக்காட்டுக்கு அனுப்பிவைப்பது உட்பட அந்த நெருக்கடியான காலகட்டத்திலும் போராட்டப்பாதையில் மிகவும் நேர்மையுடன் பயணித்தார் சூசை.

இதன்பின்னர் ஒரு கட்டத்தில் தேசியத்தலைவரின் அழைப்பையடுத்து தேசியத்தலைவரை சந்திப்பதற்காக மணலாற்றுக் காட்டுப்பகுதிக்கு சென்றுகொண்டிருந்த வேளையில் மணலாறு நித்திகைக்குளம் பகுதியில் இந்தியப்படையினருடன் ஏற்பட்ட மோதலில் காயமடைந்தார். இருப்பினும் மனம் தளராமல் இடர் மிகுந்த பயணத்தைத் தொடர்ந்து தேசியத்தலைவரைச் சந்தித்தார்.

அதன்பின்னர் காயத்திற்கு சிகிச்சை மேற்கொள்வதற்காக தமிழகம் சென்றார். அங்கு காயத்திற்கான சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டு காயம் குணமடைந்து உடல்நிலை தேறிய பின்னர் தாயகம் வந்து தேசியத்தலைவருடன் மணலாற்றுக் காட்டில் செயற்பட்டார்.

1990ம் ஆண்டின் முற்பகுதியில் இந்தியப்படையினர் தமிழீழத்திலிருந்து முற்றாக வெளியேறியவுடன் மீண்டும் வடமராட்சிக கோட்டத்தைப் பொறுப்பேற்று சிறந்த முறையில் நிர்வகித்தார். இந்தக்காலப்பகுதியில் கலை கலாச்சாரப்பிரிவை உருவாக்கி அதனூடாக போராட்டக் கருத்துக்களை மக்கள் மத்தியில் விதைத்து கணிசமான இளைஞர் யுவதிகளை போராட்டத்தில் இணைத்து பலமானதொரு வடமராட்சி அணியைக் கட்டி வளர்த்திருந்தார்.

அந்தக்காலப்பகுதியில் மண்டைதீவில் தேசவிரோதக்கும்பல் மீதான தாக்குதல், யாழ்.கோட்டை முகாம் மீதான தாக்குதல் மண்டைதீவுப்படைமுகாம் மீதான தாக்குதல் 1991ம் ஆண்டு யூலை மாதம் ஆனையிறவுப்படைத்தளம் மீது மேற்கொள்ளப்பட்ட **'ஆகாயக் கடல் வெளிச்சமர்'** உட்பட அனைத்து தாக்குதல்களிலும் சூசை தலைமையிலான தாக்குதலணி பங்கெடுத்திருந்தது. ஆகாயக்கடல்வெளிச்சமர் முற்றுப்பெற்றதையடுத்து சூசை அவர்களுக்கான திருமணம் நடைபெற்றது. முதல் மாவீரர் லெப்ரினனட் சங்கர் அவர்களின் சகோதரி சத்தியதேவி (சுதா) அவர்கள்தான் சூசையின் வாழ்க்கைத் துணைவியாக அமைந்தார். தனது இல்லறவாழ்க்கையில் சிந்து என்ற ஒரு பெண் பிள்ளைக்கும் மணியரசன், சங்கர் ஆகிய இரண்டு ஆண்பிள்ளைகளுக்கும் தந்தையானார்.

மட்டுப்படுத்தப்பட்ட அளவில் செயற்பட்டுக்கொண்டிருந்த கடற்புறா அணி 1991ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 19ம் நாளன்று விடுதலைப்புலிகளின் கடற்புலிகள் என்ற கட்டமைப்பாக பரிணமித்தபோது அதன் சிறப்புத்தளபதியாக சூசை அவர்கள் நியமிக்கப்பட்டார். கடற்புலிகளென்றால் சூசை சூசையென்றால் கடற்புலிகள் என்று சொல்லுகின்ற அளவுக்கு அவரினுடைய செயற்பாடுகள் அமைந்திருந்தன.

அதாவது கடற்புலிகளினுடைய நடவடிக்கைகள் அனைத்திலும் சூசை அவர்களின் பங்களிப்பு மிகப்பிரதானமாகவிருந்தது. கடலும் கடல் சார்ந்த பிரதேசமுமான நெய்தல் நிலத்தை கடற்புலிகள் நிர்வகிப்பதற்காக கடற்புலிகளின் அரசியல்துறை உருவாக்கப்பட்டு மக்களுக்கும் கடற்புலிகளுக்கும் மத்தியிலான ஒரு நெருக்கமான உறவுநிலையை ஏற்படுத்தியிருந்தார். யாழ்.குடா நாட்டுக்கான பாதைகள் தடைப்பட்டு கிளாலிக் கடல்வழியாக மக்களின் போக்குவரத்துக்கள் இடம்பெற்ற பொழுது சிறீலங்கா சிங்கள கடற்படையினரின் தாக்குதல்களிலிருந்து மக்களைப் பாதுகாப்பதற்காக கடற்புலிகளின் சண்டைப்படகுகளை கடலில் இறக்கி மக்களுக்கான பாதுகாப்புக்களை வழங்கி நிறைவான போக்குவரத்துப்பணியை நெறிப்படுத்தினார்.

1993-ம் ஆண்டு நவம்பர் மாதத்தில் பூநகரி - நாகதேவன்துறை படைத்தளம் மீது விடுதலைப்புலிகள் மேற்கொண்ட **'ஒப்பரேசன் தவளை'** நடவடிக்கையில் எதிரியின் ஐந்து நீரூந்து விசைப் படகுகளை கைப்பற்றி போராட்டத்திற்கு வலுச்சேர்த்திருந்தார். இதன்பின்னர் **'ஓயாதஅலைகள்'** நடவடிக்கையில் முல்லைத் தீவுப் படைத்தளம் வெற்றிகொள்ளப்பட்டமை, **'ஓயாத அலைகள் மூன்றில் வடமராட்சிக்கிழக்குப் பிரதேச மீட்புச்சமர்'**, **'குடாரப்பு தரையிறக்கம்'**, தொடராக ஏற்படுகின்ற கடற்சமர்கள், ஆழ்கடல் விநியோக நடவடிக்கைகள் என அவரின் நெறிப்படுத்தல்கள் தொடர்ந்துகொண்டே சென்றன.

2002ம்ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட சமாதானகாலத்தில் யாழ் மாவட்டத்திலுள்ள கடற்தொழிலாளர் சங்கங்கள் மற்றும், சமாசங்களின் பிரதிநிதிகளை தென்மராட்சி-பளைப் பிரதேசத்திற்கு வரவழைத்து கலந்துரையாடல்களை நடாத்தி அவர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகளையும் பெற்றுக்கொடுத்தார். அத்துடன் முல்லைத்தீவு, வடமராட்சிக்கிழக்கு, மன்னார் மாவட்டம் ஆகிய அனைத்து கரையோரப் பிரதேசங்களிலுமுள்ள பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளுடன் தொடரான கலந்துரையாடல்களை நடாத்தி மக்களின் குறை நிறைகளைக்



கேட்டறிந்து அவைகளுக்கெல்லாம் சுமூகமான முறைகளில் தீர்வுகளைப் பெற்றுக்கொடுத்தார்.

நித்திகைக்குளத்தில் காயப்பட்டபோது ரவையின் சிறிய பாகமொன்று அவரின் உடலில் புதைந்திருந்தது. அது உபாதைக்கு உட்படுத்தியதால் சிகிச்சைக்காக 2004-ம்ஆண்டு ஒக்டோபர் மாதம் சிங்கபூர் நாட்டிற்குச் சென்று சிகிச்சைபெற்று ஒரு வாரத்தில் நாடு திரும்பியிருந்தார். 2004-ம் ஆண்டு டிசம்பர் மாதம் ஏற்பட்ட சுனாமி எனும் ஆழிப்பேரலை அனர்த்தத்தில் முல்லைத்தீவு மற்றும் வடமராட்சிக்கிழக்குப் பிரதேசங்கள் நிறையவே அழிவுகளைச் சந்தித்திருந்தன. அந்தச் சந்தர்ப்பத்தில் குறிப்பாக முல்லைத்தீவில் சூசை அவர்கள் நேரடியாக களத்தில் நின்று மீட்புப்பணிகளை நெறிப்படுத்தினார். சுனாமி அனர்த்தம் ஏற்பட்டு தொடராக மூன்று மாதங்களுக்கு மேலாக முல்லைத்தீவிலும் வடமராட்சிக்கிழக்கிலும் ஒவ்வொருவாரமும் பொதுமக்களுடனான கலந்துரையாடல்களை நடாத்தி சுனாமி மீளகட்டுமானப்பணிகளை நெறிப்படுத்துவதில் தனது முழுக் கவனத்தையும் செலுத்தினார்.

2006ம் ஆண்டு நடுப்பகுதியில் சிறீலங்கா சிங்கள இராணுவத்தின ருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் போர் தொடங்கியபோது படையியல் ரீதியான நடவடிக்கைகளை நெறிப்படுத்துவதில் முழுக்கவனத்தையும் செலுத்தவேண்டியவராகவிருந்தார். 2007ம் ஆண்டு யூலை மாதம் 15ம் நாளன்று பகல்வேளையில் புதிதாக தயாரிக்கப்பட்ட படகு ஒன்றைக் கடலில் பரீட்சித்துப் பார்த்தபோது தூரதிஸ்டவசமாக ஏற்பட்ட படகுவிபத்தில் சூசை அவர்கள் கடுமையாக காயமடைந்ததோடு அவரது ஐந்து வயது நிரம்பிய மகன் சங்கரும் அவரது மெய்ப்பாதுகாவலர் லெப்ரினன்ட் சீலனும் அந்தச்சம்பவத்தில் சாவடைந்தனர்.

படுகாயமடைந்த சூசை அவர்கள் உடனடியாக புதுக்குடியிருப்பில் அமைந்திருந்த பொன்னம்பலம் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு தீவிரசிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டதனால் ஒரு மாதத்தில் அவரது உடல்நிலை ஓரளவிற்கு குணமடைந்த நிலையில் அவரது பாதுகாப்பைக் கருத்திற்கொண்டும் அவர் மருத்துவமனையிலிருந்து வெளியேறுவதற்கு மருத்துவர்கள் அனுமதித்திருந்தனர். மருத்துவமனையிலிருந்து வெளியேறியும் அவர் தனது பிரத்தியேக முகாமிற்குத்தான் வந்தார். அங்கிருந்தவாறு கடற்புலிகளின் நடவடிக்கைகள் அனைத்தையும் நெறிப்படுத்திக்கொண்டிருந்தார்.

என்னதான் வேலைச்சுமைகள் இருந்தாலும் பொதுமக்களிடமிருந்தும் போராளிகளிடமிருந்தும் வருகின்ற கடிதங்களை உடனுக்குடன் பார்வையிட்டு அதற்கான பதில்களை சமபந்தப்பட்ட பொறுப்பாள் ஊடாக அனுப்பிவைப்பார்.

போராளிகளை பலதுறைகளிலும் பயிற்றுவித்து ஆளுமைமிக்க போராளிகளாக வளர்த்தெடுப்பதில் அவருக்கு நிகர் அவர்தான். அத்துடன் போராளிகளின் வீரச்சாவு நிகழ்வுகளில் எல்லோரும் கலந்துகொண்டு சிறப்பிக்க வேண்டும், வீரச்சாவு நிகழ்வுகளில் எந்தவிதமான தவறுகளும் இடம்பெறக்கூடாது என்பதில் வலு கண்டிப்பாகச் செயற்பட்டதை அவதானிக்கமுடிந்தது. மேலும் போராளிகளின் தனிப்பட்ட ஒழுக்கம் தொடர்பிலும் மிகவும் கண்டிப்பாகச் செயற்பட்டதோடு தனிப்பட்ட ஒழுக்கம் தவறியவர்கள் அவரது தண்டனைகளுக்கு உள்ளாகியிருந்ததுவும் குறிப்பிடத்தக்கது.

2009ம் ஆண்டின் முற்பகுதிகளில் படையினரின் தாக்குதல்களில் காயமடைந்த மக்களை ஏற்றிச்செல்வதற்கும் போர் வலயத்திற்குள் சிக்குண்ட மக்களுக்கான உணவுப்பொருட்களை கொண்டுவருவதிலும் சர்வதேச செஞ்சிலுவைச்சங்கத்தினர் கப்பல் சேவை மேற்கொண்டிருந்தனர். இந்த கப்பல் சேவையை வன்னிக்கு எடுப்பதில் சம்பந்தப்பட்டவர்களுடன் தொலைபேசி மூலமாகத்தொடர்பு கொண்டு கடமையான பிரயத்தனம் மேற்கொண்டார்.

வன்னியில் இலங்கை அரசாங்கம் மேற்கொண்டிருந்த இனவழிப்புப்போர் தொடர்பாகவும் மக்கள்படும் துன்பங்களையும் தமிழ்நாட்டுத் தலைவர்களுக்கு தொடர்ச்சியாக எடுத்துக்கூறி ஒரு திருப்புமுனையை ஏற்படுத்துவதற்காக அயராது உழைத்திருந்தார். இயக்கத்தின் எந்தவொரு செயற்பாடுகளும் பொதுமக்களை பாதிக்கக்கூடாது என்பதில் மிகவும் குறியாக இருந்தார். போரின் இறுதிநாட்களிலும் எங்களது போராட்டம் தர்மத்துக்கான போராட்டம். அது நிச்சயம் வெற்றிபெறும். என்ற அசைக்கமுடியாத உறுதி அவரிடம் இருந்ததை அவதானிக்கமுடிந்தது.

2009 மேமாதம 15ம் நாளன்றும் அவர் படையினரின் எறிகணை வீச்சில் காயமடைந்தபோதிலும் அவர் தளர்வடையவில்லை. மேமாதம் 16ம் நாளன்று இரவு தமிழகத்திலுள்ள அரசியல் தலைவர் ஒருவருடன் தொலைபேசியில் உறுதி தளராத குரலில் வன்னியின் இறுதிநேர நிலைமைகள் தொடர்பாக அறிவித்துக்கொண்டிருந்ததை என்னால் அவதானிக்கமுடிந்தது.

மறுநாளான 17ம் நாளன்று அதிகாலைப்பொழுதிலும் அவரது மெய்ப்பாதுகாவலர் புரட்சியின் தொலைத்தொடர்பு சாதனத்தில் அவரது கம்பீரமான கட்டளையை கேட்கமுடிந்தது. அதுதான் இறுதியாக எனது செவிகளில் கேட்ட அவரது குரலாக இருந்தது. அந்த உறுதியானகுரல் இன்றும் செவிகளில் ஒலித்துக்கொண்டேயிருக்கின்றது.

# முள்ளிவாய்க்கால் தமிழீழ இலட்சியத்தின் கருத்தரிப்பு!

தணியாத தமிழீழ விடுதலை தாகத்தின் அறை கூவல்… விழ்ந்த இடத்தில் இருந்து தொடரும் விடுதலைப்பயணத்தின் வேட்கை!



முள்ளிவாய்க்கால் படுகொலை தமிழர் தாயகமெங்கும் ஈழத் தமிழர்களின் இரத்தச் சக்தியால் வரையப்பட்ட ஈழத்துக் காவியம் அது. தமிழர் வரலாற்றிலே மறக்க முடியாத நாட்கள் நீண்ட பெரு வலியுடன் ஈழத்தமிழர்களின் இறுதி மூச்சுக்காற்று தாயக மண்ணிலே புதையுண்டு, எரியுண்டு, கதறக் கதற படுகொலை செய்யப்பட்ட இந்த முள்ளிவாய்க்கால் படுகொலை தினம் என்றும் எமது நெஞ்சில் அணையாது எரியும் பெரு நெருப்பு. எத்தனை தடைகள் விதிக்கப்பட்டாலும் இந்த நெருப்பை எவராலும் அணைத்து விடமுடியாது.

உடல் தெறிக்க, சிதை எரிய சிங்கள இனவாத அரசின் கொடூர செயல்கள் அரங்கேறிய அந்த நாட்களின் வலிகள் தமிழர்களின் வாழ்வில் என்றும் எச்சமாய் தொடர்கிறது. 2006இல் மாவிலாற்றில் ஆரம்பித்த ஆற்றுப் பிரச்சினை 2009 இல் முள்ளிவாய்க்கால் படுகொலைகளுடன் ஈழக்கனவுகள் மண்ணில் புதையுண்டு போகும் என சிங்கள அரசு தப்புக்கணக்கு போட்டது .

பொது மக்கள் செறிவாக வாழ்ந்த இடங்களை எறிகணைத் தாக்குதல்களாலும் ஷெல் வீச்சுக்களாலும் கோரத் தாண்டவமாடி கொலைக்களமாக்கியது சிங்களப்படை. துண்டாடப்பட்ட நிலங்களில் திண்டாடிய மக்கள் பாதுகாப்புத் தேடி அலைய, பாதுகாப்பு வலயமென புதுமாத்தளன் முதல் அம்பலவன்பொக்கணை, வலைஞர்மடம், கரையாமுள்ளிவாய்க்கால், வெள்ளைமுள்ளிவாய்க்கால் ஆகிய பகுதிகளை பாதுகாப்பு வலையமாக சிங்கள அரசாங்கம் அறிவித்த இப்பகுதிகளில் மக்கள் கொத்துக் கொத்தாக படுகொலை செய்யப்பட்டார்கள்.

இந்தியா மற்றும் சர்வதேச நாடுகளின் ஆதரவுடனும் பயங்கரவாத்தினைத் தோற்கடித்தல் என்ற பரப்புரையின் கீழ் வரலாறு காணாத தமிழின படுகொலையை நிகழ்த்திவிட்டு தெற்கில் சிங்கள அரசும் அதன் படைகளும் கோலாகலமாக வெற்றி விழாவாகக் கொண்டாடுகிறது. தமிழர் தாயகப்பகுதிகளில் உயிரிழந்த எமது உறவுகளை நினைவு கூர அனுதியில்லை. இது கொடிய இன ஒடுக்கு முறையன்றி வேறு என்னவாக இருக்க முடியும்?

முள்ளிவாய்க்கால் ஈழத்தமிழினத்தின் விடுதலையின் குறியீடு. தமிழீழ மக்களின் விடுதலை வேட்கையின் சாட்சியம். விழ விழ எழுவோம் என்பதற்கு ஆதாரம். பாலையும் நெய்தலும் கலந்த அந்த வறண்ட மண்ணில் மண்ணின் மைந்தர்கள் நிகழ்த்திய தனிச்சமர் தமிழர்களின் மன உறுதிக்குச் தக்கசான்று. அந்த மண்ணில் ஊனுமின்றி உறக்கமுமின்றி ஈழமக்கள் பூவும் பிஞ்சும் காயும் கனியுமாகவல்லவா இறுதிவரை போராடினார்கள். முள்ளிவாய்க்கால் என்கின்ற போது ஒவ்வொரு ஈழத்தமினது நரம்புகளும் முறுக்கேறும். இதயத்துடிப்பு அதிகரிக்கும் நெஞ்சம் கனக்கும் தமிழீழம் என்ற இலட்சியக்கனவு உயிர் பெற்று எம்மை வழிநடத்தும்.

உலக வரலாற்றில் மனிதகுலம் பல்லாயிரம் போர்க்களங்களைக் கண்டிருக்கிறது. ஒவ்வொரு போர்களங்களும் ஒவ்வொருவகையான செய்திகளைச் சொல்லிச் சென்றிருக்கிறது. போர்வெறிபிடித்த மொங்கொலியன் செங்கிஸ்கான் மத்திய ஆசிய நாடுகள் மீது மேற்கொண்ட போர்வெறி பல்லாயிரம் மக்களைக் கொன்றுகுவித்த்து. மதவெறி பிடித்த முடவன் தைமூர் வட இந்தியாவைச் சிதைத்தபோது மடிந்த மக்கள் இலட்சத்தைத் தாண்டினர்.

நவீன உலகின் இனவெறியன் நாசிச ஹிட்லர் யூதர்கள் மீது திணித்த போர் பல்லட்சம் யூதர்களைச் சாம்பலாக்கியது. ஆனால் இவற்றையெல்லாவற்றையும் தாண்டி புதிய உலக ஒழுங்கிங்கிலும் ஆர்மேனிய, கொசோவா, அல்பேனியா, சூடான், எரித்திரியா, கிழக்குத் தீமோர் என போர் வெறியர்கள் நிகழ்த்திய மனிதப் படுகொலைகள் மானிட வரலாற்றின் அழியாச் சுவடுகளை பதித்திருந்தாலும் இந்த 21ஆம் நூற்றாண்டில் மிகப்பெரும் மனித குலத்திற்கெதிரான இனப்படுகொலை முள்ளிவாய்க்கால் மண்ணிலேயே நிகழ்ந்த்து.

உலகத்தமிழினமே முள்ளிவாய்க்காலில் போரின் பிடியில் சிக்குண்ட எமதுறவுகள் இட்ட அவலக்குரல் உன் காதுகளில் கேட்கிறதா? மானிடம் பேசும் மான்புமிகு மானிடவாதிகளுக்கும் எம்முறவுகளின் அவலக்குரல் கேட்கவில்லையே! உலகத் தலைநகரங்களின் வீதிகளில் புலம்பெயர் தமிழர்கள் இறங்கி நீதி கேட்டபோது இராஜதந்திரிகள் சிட்டாகப் பறந்தார்கள். பறந்தவர்கள் பஞ்சாகத் திரிம்பி வந்தனர். கட்டுக்கட்டாய் அறிக்கைகள் வேறு விட்டனர்.

அப்போதும் முள்ளிவாய்க்காலில் மக்கள் மடிந்து கொண்டுதான் இருந்தார்கள். உணவின்றி பட்டிணியால் மடிந்தார்கள் குண்டுபட்டு மடிந்தார்கள் படுகாயமடைந்து மருத்துவச்சிகிச்சையின்றி மடிந்தார்கள். இரசாயணக் குண்டிற்கு இரையாகி மடிந்தார்கள். இவையெல்லாம் உலகின் கண்களுக்குத் தெரியவில்லையே. இப்பெருங்கொடுமையை இந்த உலகம் ஏன் கேட்கவில்லை பார்க்கவில்லை. அல்லது பார்த்தும் பாராமுகமாக நடந்து கொண்டது. எம்மினத்திற்கு ஏன் இந்தக் கொடுமை நிகழ்ந்த்து. எம்மினம் என்னதான் தவறிழைத்த்து? கேட்கக் கூடாத எதையாவது எம்மினம் கேட்டுவிட்டதா? மனிதப்பிறவியின் பிறப்புரிமையான சுதந்திரத்தைத் தானே கேட்டது. சுதந்திரத்தை கேட்டதற்கா இப்பெருந் தண்டணை.

முள்ளிவாய்க்காலில் எம்முறவுகள் எழுப்பிய மரண ஓலங்கள் ஆன்ம ஓலங்களாக தமிழ்த் தேசியத்தின் நெஞ்சில் ஒலித்துக் கொண்டிருக்கிறது. முள்ளிவாய்க்கால் மண்ணில் சிங்களப் படை கொலைவெறியாட்டத்தை நிகழ்த்துவதற்குத் தடையாக ஆனந்தபுரத்தில் எம்மினவீரர்கள் நடத்திய தனிச்சமர் எம்மின விடுதலை இலட்சியத்தின் பற்றுதிக்கு தக்க சான்று.

நாற்புறதும் பல்லாயிரம் எதிரிகள் சூழ்ந்துகொண்டு சர்வதேச நாடுகளின் ஆயுத தொழில்நுட்ப உதவியோடு நிகழ்த்திய கொடும் போரை எதிர்கொண்டு பல்லாயிரம் எதிரிகளை வீழ்த்திய சிலநூறு புலிவீரர்களின் வீரஉடல்கள் அந்தமண்ணிலே வீழ்ந்த்தைத்தான் எப்படி மறப்போம். தம் இறுதி மூச்சுவரை தமிழீழ இலட்சியத்திற்காக அவர்கள் சிந்திய குருதிதான் வீண்போகுமா அந்த இறுக்கமான போரினுள்ளே சிங்களத்தின் சேனைகளைச் சிதைக்க எம் வீர்ர்கள் மனிதக் குண்டுகளாக எதிரிகளினுள்ளே வெடித்துச் சிதறிய அளப்பரிய தியாகங்களைத்தான் எண்ணிப்பார்க்க முடியுமா?

தமிழீழம் என்கின்ற தணியாத இலட்சியத்திற்காக எத்தனை கொடிய துன்பங்களையும் சுமக்கத் தயாராகிய வன்னியின் மூன்றரை இலட்சம் மக்களின் அவலம் தோய்ந்த முள்ளிவாய்க்கால் வாழ்வைத்தான் எப்படி மறப்போம். எல்லாவற்றிற்கும் மேலாக அயல 16, 17,18ஆம் நாட்களில் நிகழ்ந்த கொடுமை உலகில் எங்கேனும் நடந்ததுண்டா? முள்ளிவாய்க்கால் ஜநா வரலாற்றில் படுமோசமான இருள் சூழ்ந்த அத்தியாயமாக அமைகிறது. முள்ளிவாய்க்கால் படுகொலைகள் நடைபெற்றபோது சர்வதேச சமூகத்திற்கு அறைகூவல் விடுக்கப்பட்டது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத் தலைவர் லோறன்ஸ் திலகர் பாதுகாக்கும் பொறுப்பு (Responsibility to Protect - R2P) என்ற கோட்பாட்டின் கீழ் இனப் படுகொலையை தடுத்து நிறுத்தும் படி சர்வதேச சமூகத்தை கேட்டார். ஆனால் போருக்கு எல்லா வகையிலும் உதவிய சர்வதேச சமூகத்தால் அவருடைய கோரிக்கைக்கு செவி சாய்க்க முடியவில்லை.

ஒன்றா இரண்டா மூன்று நாளில் 46.000க்கு மேல் ஈழத் தமிழர்களையல்லவா முள்ளிவாய்க்கால் மண்ணில் புதைத்த்து சிங்களப் பேரினவாதம். தாயின் மடியிலிருந்த குழந்தை குண்டு பட்டு இறந்தது தெரியாமல் இருந்தாள் ஒருதாய். மறுபுறத்தே தாயிறந்தது தெரியாத மகவு பாலூட்டியதே தாய் மடியில். குழந்தையின் இரண்டு கைகளும் இழந்த்தையிட்டுத் துடித்தாள் ஒரு தாய். கருவுற்ற தாயின் வயிற்றில் குண்டு பட்டு வயிற்றின் படுகாயத்தினூடே சிசு வெளித் தொங்கியதை இவ்வையகம் எங்கும் பாத்ததுண்டா?

உலக இராணுவ வரலாற்றில் எந்தவொரு இராணுவமும் செய்யாத மிகக் கீழ்த்தரமான மிருகத்தனமான ஈனச்செயல்களை அங்கே எம்மினத்தின் மீது கட்டவிழ்த்து விட்டிருந்ததல்லவா. அங்கே களத்திலே வீழ்ந்த பெண்களின் துயிலுரிந்த சிங்கள படைவீரர்களையும் பிணத்துடன் புணர்ந்த காமுகர்களையும் இறந்த பெண்களின் மார்பினை அறுத்த சிங்களத்தில் கொடுமையை யாரும் அறிந்துண்டா? மனித மொழிகளில் சொல்லக் கூடிய இன்னும் எத்தனை எத்தனை கொடுமைகள் உள்ளதோ அத்தனை கொடுமைகளும் அந்த முள்ளிவாய்க்கால் மண்ணிலே நடந்தேறியது.

O1. சிறிய மீனை பெரிய மீன் விழுங்கும் : சாணக்கியர்

O2. தகுதியுள்ளவை உயிர்வாழும் : டார்வின்

O3. தற்காப்பு என்பது ஓர் இயற்கையான உணர்வு என்பதுடன் நீடித்த வாழ்க்கைக்கு அது அவசியமுமாகும் : சிக்மன்ட் ப்ராய்ட்

இதை புரியாததன் விளைவுதான் தாயகத்தில் கட்டமைக்கப்பட்டுள்ள இனஅழிப்புக்குள் சிக்கி நாம் இரையாகவேண்டியுள்ளது.

எனவே அபிவிருத்தி, நல்லிணக்கம், ஐக்கிய இலங்கை என்ற நுண்மையயான இன அழிப்பு மாய வலைகளை அறுத்தெறிந்து விட்டு கட்டமைக்கப்பட்ட இன அழிப்புக்கு எதிராக தொடர்ந்து போராடுவோம். தமிழீழம் ஒன்றே இன அழிப்பில் இருந்து எம்மை முழுமையாக பாதுகாக்கும் என்பதை புரிந்து கொள்வோம்.

முள்ளிவாய்க்கால் மண்ணில் தமிழீழத்தின் இராணுவபலம் உடைக்கப்பட்டு தமிழீழ அரசு தற்காலிகமாக வீழ்த்தப்பட்டது. முள்ளிவாய்க்கால் தமிழீழ இலட்சியத்தின் முடிவல்ல. அது தமிழீழத்தின் கருத்தரிப்பு. சிங்களம் முள்ளிவாய்க்காலில் முடிவுரை எழுதியதாக எக்காழமிடலாம் அது எம்மின எழுச்சியின் ஆரம்பம். சர்வதேசம் எங்கும் தமிழர்களால் பாரிய எழுச்சியாக நினைவு கூரப்படும் முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை நினைவு நாள் தாயக மக்களின் விடுதலைக்கான பாதையை திறந்துவிடும் . சர்வதிகாரம் நீண்டநாள் நின்று பிடிப்பதில்லை என்பது உலக வரலாறு.

**ஈழத் தமிழர்களுக்கு முள்ளிவாய்க்கால் தொடர்பான சில முக்கிய கடமைகள் இருக்கின்றன:**

1. முள்ளிவாய்க்கால் படுகொலை தொடர்பான முழு விபரங்களும் திரட்டப்பட்டு ஆவணப் படுத்தப் படவேண்டும். நீதி விசாரணைக்கான பிரசார முயற்சிகளை எடுக்க வேண்டும்.

2. முள்ளிவாய்க்காலில் படுகொலை செய்யப்பட்டோர், காணமற்போனோரின் பெயர், முகவரி விவரங்கள் சேகரிக்கப்பட வேண்டும். ஒரு ஈழத் தமிழனாவது பெயர் முகவரி இல்லாமல் சாகக் கூடாது.

3. முள்ளிவாய்க்காலில் வீழ்ந்தோரின் சடலங்களுக்கு என்ன நடந்தது என்று கண்டறியப்பட வேண்டும்.

தமிழீழ தனி நாட்டுக் கோரிக்கையை முள்ளிவாய்க்கால் நிறுத்தப் போவதில்லை. சுய நிர்ணயக் கோட்பாட்டின் அடிப்படையில் தமிழீழத் தனி நாட்டின் தோற்றம் சாத்தியமே. இதற்கான உழைப்பை உலகத் தமிழினம் சிரமம் பாராது மேற்கொள்ள வேண்டும்.

உலகவரலாற்றில் ஒடுக்கப்பட்ட இனம் ஒடுங்கிக் கிடந்ததான வரலாறு எங்குமில்லையே. அப்படியிருக்க ஒடுக்கிய சிங்களம் ஓய்வெடுப்பதா? முள்ளிவாய்காலில் ஒடுங்கிய தமிழனத்தின் ஆன்ம ஓலம் ஒடுங்கித்தான் கிடக்குமா?

சிங்களதேசத்திற்குமொரு முள்ளிவாய்க்கால் வராமல் தான் போய்விடுமா ?

உலகத்தமிழினமே விழித்திரு… வெறித்திரு… தெளிந்திரு… ஈழவிடுதலையின் மிளச்சிக்காக நாளைய போரை அவர்களுக்காக நாமே நடாத்துவோம்.

– ஈழத்து நிலவன் –

# தமிழ்ப் பொது வேட்பாளர்: சிவில் சமூகங்கள் எடுத்த முடிவு!

06.05.2024



கடந்த மாதம் 30ஆம் திகதி வவுனியாவில் வாடிவீட்டு விடுதியில் தமிழர் தாயகத்தைச் சேர்ந்த சிவில் சமூகங்களும் மக்கள் அமைப்புகளும் கூடிக் கதைத்தன. ஜனாதிபதித் தேர்தலில் ஒரு தமிழ்ப்பொது வேட்பாளரை நிறுத்துவது என்று மேற்படி சந்திப்பில் முடிவு எடுக்கப்பட்டது. ஒரு கூட்டு அறிக்கை வெளியிடப்பட்டது.

அது ஒரு முக்கியமான சிவில் சமூகச் சந்திப்பு. காலை 10 மணியிலிருந்து பிற்பகல் 4 மணி வரை நிகழ்ந்த அச்சந்திப்பில் தமிழர் தாயகத்தைச் சேர்ந்த 32 சிவில் சமூகங்கள் மற்றும் மக்கள் அமைப்புகளைச் சேர்ந்த பிரதிநிதிகளும் அமைப்புகளைச் சாராத செயற்பாட்டாளர்களுமாக மொத்தம் 46 பேர் பங்கு பற்றினார்கள்.

மதத் தலைவர்கள், கருத்துருவாக்கிகள், ஏற்கனவே பொதுத் தமிழ் வேட்பாளர் என்ற விடயத்தை முன்னிலைப்படுத்தி கருத்தரங்குகளை ஒழுங்குபடுத்திய “மக்கள் மனு” என்ற சிவில் அமைப்பு, வெளிநாட்டுத் தூதரகங்களோடான சந்திப்புகளில் தொடர்ச்சியாக தமிழ் நோக்கு நிலையை வெளிப்படுத்தும் “தமிழ் சிவில் சமூக அமையம்” உள்ளிட்ட பலமான சிவில் அமைப்புகள். வலிந்து காணாமல் போகச்செய்யப்பட்டவர்களுக்கான அமைப்பு, அரசியல் கைதிகளுக்கான அமைப்பாகிய “குரலற்றவர்களின் குரல்” அமைப்பு, வடக்கு கிழக்கு பல்கலைக்கழக மாணவ அமைப்புகள், மயிலத்தமடுவில் மேய்ச்சல் தரையை மீட்பதற்காகப் போராடும் அமைப்பு,தமிழ்ப் பகுதிகளில் தொடர்ச்சியாக இயங்கும் செயற்பாட்டு அமைப்புக்கள்… முதலாக பல்வேறு வகைப்பட்ட அமைப்புக்கள் அச்சந்திப்பில் பங்கு பற்றின.

மிகக்குறிப்பாக “பொங்கு தமிழ்” எழுச்சியின் முக்கியஸ்தர்கள், “எழுக தமிழ்” எழுச்சிக்குப் பின்னால் இருந்து உழைத்தவர்கள், “பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலுமான” அமைப்பின் இணைத் தலைவர்கள் என்று, தமிழ்ப் பரப்பில் நிகழ்ந்த மூன்று எழுச்சிகளின் பின்னால் நின்று உழைத்த பிரதிநிதிகளும் அங்கே வந்திருந்தார்கள் என்பது ஒரு சிறப்பம்சம். இம்மூன்று மக்கள் எழுச்சி அமைப்புகளின் முக்கியஸ்தர்கள் அவ்வாறு ஒரு சந்திப்பில் ஒன்றுகூடியமை என்பது கடந்த 15 ஆண்டுகளில் இதுதான் முதல் தடவை. சந்திப்பின் முடிவில் வெளியிடப்பட்ட கூட்டு அறிக்கை வருமாறு…

“தமிழ் மக்கள் ஒரு தேசமாகத் திரள்வதும் சிந்திப்பதும் செயற்படுவதும் காலத்தின் தேவை என்ற அடிப்படையில் 30.04.2024 அன்று வவுனியா வாடிவீடு விடுதியில் ஒன்றுகூடிய தமிழர் தாயகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் சிவில் சமூகத்தினர் பின்வரும் தீர்மானங்களை மேற்கொண்டனர்.

**1.** -தமிழ் மக்கள் ஒரு தேசிய இனம் என்ற அடிப்படையில் தமது இறைமையையும் சுயநிர்ணய உரிமையையும் பிரயோகிப்பதற்கான ஒரு களமாக ஜனாதிபதி தேர்தலை கையாள்வது.

**2.** -சிறீலங்காவின் ஜனாதிபதி தேர்தலை, ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் என்ற அடிப்படையில் நிராகரித்து, அத்தேர்தலை நடைமுறையில் ஈழத்தமிழ் மக்களுக்கான பொது வாக்கெடுப்பாக கையாள்வது.

**3.** -அதற்கு அமைய ஒரு தமிழ்ப் பொது வேட்பாளரை எதிர் வரும் ஜனாதிபதி தேர்தலில் நிறுத்துவது.

**4.** -அதற்காக சிவில் சமூகமும் தமிழ்த் தேசியக் கட்சிகளும் இணைந்து ஒரு பொதுக் கட்டமைப்பை உருவாக்குவது.

**5.** -தமிழ் மக்களின் நீண்ட கால அபிலாசைகளில் ஒன்றான இறைமையுடனான சுயநிர்ணய உரிமையை வெற்றி கொள்வதற்கான பொருத்தமான எதிர்காலக் கட்டமைப்புக்களை நோக்காகக் கொண்டு செயல்படுவது…”

இவ்வாறு சிவில் சமூகங்களும் மக்கள் அமைப்புகளும் தங்களுக்கு இடையே ஒரு பொது நிலைப்பாட்டை எடுத்தபின், அடுத்த கட்டமாக அந்த நிலைப்பாட்டின் அடிப்படையில் தமிழ்த் தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட கட்சிகளோடு இணைந்து ஒரு பொதுக் கட்டமைப்பை உருவாக்குவது என்று தீர்மானிக்கப்பட்டது. அவ்வாறு பொது கட்டமைப்பு ஒன்றை உருவாக்கும் பொருட்டு கட்சிகளோடு உரையாடுவதற்கு என்று ஒரு குழு உருவாக்கப்பட்டது.

பொதுக் கட்டமைப்பானது சிவில் சமூகங்களையும் அரசியல் கட்சிகளையும் கொண்டதாக அமையும். பொதுக் கட்டமைப்பு ஒரு பொதுத் தமிழ் வேட்பாளரை நிறுத்துவதற்கு தேவையான குழுக்களை உருவாக்கும். ஒரு பொதுத் தமிழ் வேட்பாளர் யார் என்பதை தீர்மானிப்பதற்கான ஒரு உபகுழு, தேர்தல் விஞ்ஞாபனத்தை தயாரிப்பதற்கான உபகுழு, நிதி விவகாரங்களை கையாள்வதற்கான உபகுழு, பொதுத் தமிழ் வேட்பாளர் என்ற தெரிவை ஏற்றுக் கொள்ளாத ஏனைய தரப்புக்குளோடு உரையாடுவதற்கும் தென்னிலங்கையில் உள்ள கட்சிகளோடு உரையாடுவதற்கும் ஓர் உபகுழு… என்று வெவ்வேறு உபகுழுக்கள் உருவாக்கப்படும். அதாவது ஒரு தமிழ் பொது வேட்பாளரை முன்னிறுத்துவது தொடர்பாக கட்டமைப்பு ரீதியாக சிந்திக்கப்படுகின்றது என்று பொருள்.

தமிழ்ப் பொது வேட்பாளர் எனப்படுகின்றவர் தமிழ்ப் பொது நிலைப்பாட்டின் குறியீடு. தமிழ்ப் பொது நிலைபாடு எனப்படுவது பிரயோக நிலையில் தமிழ் ஐக்கியம்தான். தமிழ் ஐக்கியம் என்பது இங்கு தமிழ் கட்சிகளின் ஐக்கியம் என்பதைக் கடந்து கட்சிகளும் குடிமக்கள் சமூகங்களும் மக்கள் அமைப்புகளும் இணைந்த ஒரு கட்டமைப்பாகச் சிந்திக்கப்படுகின்றது.

கடந்த 15 ஆண்டுகளில் தமிழ் மக்கள் மத்தியில் நிகழ்ந்த எல்லா எழுச்சிகளும் சிவில் சமூகமும் அரசியல் சமூகமும் இணைந்த ஒரு கட்டமைப்புக் கூடாகவே சிந்திக்கப்பட்டது. எழுத தமிழாகட்டும் பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலுமான பெரெழுச்சியாகட்டும் ஏனைய எந்த ஒரு பெரிய மக்கள் எழுச்சியாக இருந்தாலும், அங்கே தனியாகக் கட்சிகள் அதனை முன்னெடுக்கவில்லை. தனிய சிவில் சமூகங்களும் அதனை முன்னெடுக்கவில்லை. கடந்த 15 ஆண்டுகளிலும் வெற்றி பெற்ற எல்லாப் பேரெழுச்சிகளும் சிவில் சமூகங்களும் அரசியல் சமூகமும் இணைந்து பெற்ற வெற்றிகள்தான்.

அப்படித்தான் கடந்த 15 ஆண்டுகளுக்குள் ஐநாவுக்கு அனுப்பப்பட்ட கூட்டுக் கடிதம், பல்கலைக்கழக மாணவர்களால் உருவாக்கப்பட்ட 13 அம்ச ஆவணம், தமிழகத்தில் சிறப்பு முகாம்களில் உள்ள ஈழத் தமிழர்களை விடுவிக்கக் கோரி தமிழக முதல்வருக்கு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனுப்பிய கூட்டுக் கடிதம்… உள்ளிட்ட பெரும்பாலான முயற்சிகள் கட்சிகளும் சிவில் சமூகங்களும் இணைந்து முன்னெடுத்தவைதான். இதை இன்னும் சரியான வார்த்தைகளில் சொன்னால், கட்சிகளும் சிவில் சமூகங்களும் இணைந்த போதுதான் வெற்றிகள் கிடைத்தன. அந்த அடிப்படையில்தான் இப்பொழுதும் அவ்வாறான ஒரு வெற்றியை நோக்கி சிந்திக்கப்படுகின்றது.

இந்தக் கட்டமைப்பு வெற்றிபெறுமாக இருந்தால் இது ஜனாதிபதி தேர்தலுக்கான ஒரு கட்டமைப்பு என்பதைக் கடந்து தமிழ்ப் பொது விருப்பத்தை வெளிப்படுத்தும் ஒரு பொருத்தமான அரசியல் தளமாக மாற்றப்பட வேண்டும் என்ற விருப்பமும் மேற்படி கூட்டறிக்கையில் கூறப்பட்டிருக்கின்றது. அதன்படி எதிர்காலத்தில் தமிழ் அரசியலை தீர்மானிப்பதற்கு தேவையான ஒரு பலமான மக்கள் அமைப்புக்குரிய பொருத்தமான கட்டமைப்பாக அது வளர்த்தெடுக்கப்பட வேண்டும் என்ற எதிர்பார்ப்பும் உண்டு.

கடந்த 15 ஆண்டுகளிலும் தமிழ் மக்கள் மத்தியில் தமிழ் மக்கள் பேரவை தோன்றியது. தமிழ் மரபுரிமைப் பேரவை தோன்றியது. பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலுமான பேரெழுச்சி இயக்கம் தோன்றியது. ஆனால் இவை எவையுமே அவற்றின் அடுத்தடுத்த கட்டக் கூர்ப்புக்குப் போகவில்லை. இவை எவையுமே தேர்தல்மைய அரசியலைக் கடந்த ஒரு வெகுசன அரசியலை முன்னெடுக்கும் பொருத்தமான ஏற்பாடுகளாகக் கூர்ப்படையவில்லை. இந்த மூன்று கட்டமைப்புகளின் எழுச்சியில் இருந்தும் வீழ்ச்சியிலிருந்தும் அல்லது போதாமைகளில் இருந்தும் கற்றுக்கொண்டு ஒரு புதிய பொருத்தமான கட்டமைப்பை உருவாக்குவதற்கான முதல் அடிவைப்பாக மேற்படி கூட்டறிக்கையில் கூறப்பட்டிருக்கும் பொதுக் கட்டமைப்பை எடுத்துக் கொள்ளலாமா?

கடந்த 15 ஆண்டுகளிலும் கட்சி அரசியல் எனப்படுவது வளர்ச்சியாக இல்லை. தேய்மானமாகத்தான் இருக்கின்றது. பெரிய கூட்டுக்கள் உடைந்து சிறு கூட்டுகள் உருவாகி வருகின்றன. கூட்டுக்கள் உடைந்துடைந்து உருவாகும் தனிக் கட்சிகளும் கூட பின்நாளில் தங்களுக்குள் உடைகின்றன. அதாவது கடந்த 15 ஆண்டு கால கட்சி அரசியல் எனப்படுவது, தேயும் அல்லது சிதறும் ஒரு போக்காகத்தான் காணப்படுகின்றது. வளரும் ஒரு போக்காக அல்லது திரளும் ஒரு போக்காக இல்லை. மக்கள் இயக்கங்களும் தோன்றி மறைகின்றன. தொடர்ச்சியாக அடுத்த கட்ட வளர்ச்சிக்குப் போகவில்லை.

எனவே இந்தப் பாரதூரமான வெற்றிடத்தின் பின்னணியில் சிவில் சமூகங்களும் கட்சிகளும் இணைத்து ஒரு புதிய வளர்ச்சிக்குப் போகவேண்டிய ஒரு தேவை வலிமையாக மேலெழுகின்றது. ஜனாதிபதி தேர்தலைப் பயன்படுத்தி அவ்வாறான ஒரு கட்டமைப்பின் கருநிலைக் கட்டமைப்பை உருவாக்கினால் அது எதிர்கால தேவைகளுக்கு ஏற்ப ஒரு பொருத்தமான வளர்ச்சியை அடையும் என்ற எதிர்பார்ப்பு சிவில் சமூகங்களிடம் காணப்படுகின்றது.

கடந்த 15 ஆண்டுகளிலும் பெரிய கட்சிகள் பலமாக இருக்கும் பொழுது அல்லது பெரிய கூட்டு பலமாக இருக்கும் பொழுது சிவில் சமூகங்களை மதிப்பது குறைவு. 2014 ஆம் ஆண்டு மன்னாரில் நடந்த சந்திப்பு ஒன்றில் சம்பந்தர் அப்போதிருந்த மறைந்த ஆயர் ராயப்பு ஜோசஃப் அவர்களை நோக்கி சொன்ன பதில் அதைத்தான் காட்டுகிறது. “பிஷப் நீங்கள் சொல்லுவதை சொல்லுங்கோ நாங்கள்தான் முடிவெடுக்கிறது” என்று சம்பந்தர் திமிராகச் சொன்னார். ஆனால் 2020ல் கூட்டமைப்பின் ஏக போகம் உடைந்து அதன் ஆசனங்கள் வெளியே போனபோது கூட்டமைப்பு இறங்கி வந்தது. அதன் விளைவுதான் 2021 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஜெனிவாவுக்கு அனுப்பப்பட்ட ஒரு கூட்டுக் கடிதம். அதாவது கட்சிகள் பலமாக இருக்கும் போது அல்லது கூட்டுக்கள் பலமாக இருக்கும் பொழுது அவர்கள் சிவில் சமூகங்களை மதிப்பதில்லை. ஆனால் கட்சிகள் பலவீனமடையும் போது சிவில் சமூகங்கள் கட்சிகளின் மீது தார்மீக தலையீட்டைச் செய்யக் கூடியதாக இருக்கின்றது. அப்படி ஒரு கட்டம் இப்பொழுது தமிழ் அரசியலில் ஏற்பட்டிருக்கிறது.

ஜனாதிபதித் தேர்தல் எனப்படுவது அரசாங்கத்தால் ஏற்படுத்தித் தரப்பட்ட ஒரு வாய்ப்பு. அதைத் தமிழ்த் தரப்பு தனது நோக்கு நிலையில் இருந்து கையாள முடியும். இதை கவித்துவமாகச் சொன்னால், அரசாங்கம் திறந்து விட்டிருக்கும் ஒரு மைதானத்தில் தமிழ் மக்கள் தங்களுடைய விளையாட்டை விளையாடுவது.

நன்றி: நிலாந்தன்




# பிரிகேடியர் பால்ராஜ்

பாலசேகரம் கந்தையா

கொக்குத்தொடுவாய் - முல்லைத்தீவு

(27.11.1965-20.05.2008)

மாரடைப்புக் காரணமாக 20.05.2008 அன்று சாவடைந்தார்.

தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்

# தளபதி பால்ராஜ் களத்தில் நின்றால் இராணுவத்திற்கு இரத்தம் உறையும்!

**20. 05. 2024 பிரிகேடியர் பால்ராஜ் அவர்களின் நினைவு வணக்க நாள். அவர் குறித்து தமிழீழ விடுதலைப் புலிகளின் சிறப்புத்தளபதி பிரிகேடியர் தீபன் அவர்கள் தெரிவித்த நினைவுப் பகிர் மீள்பதிவு...**






சிக்கலாகிவிட்ட களங்களில் தனிவீரம் காட்டி வெற்றிகளை எம் பக்கம் திருப்பிவிட்ட புலி வீரர்களை நான் கண்டுள்ளேன். நாங்கள் எதிர்பார்த்தபடி சண்டையின் போக்கு அமையாமல் எங்களுக்கு எதிராக எதிர்பாராத திருப்பங்கள் ஏற்பட்ட வேளைகளில், கட்டளைப்பீடத்தில் இருந்தபடி, சூழ்நிலைக்கேற்றவாறு சண்டை வியூகங்கள் அமைத்து தன்னம்பிக்கை தெறிக்கும் கட்டளைகளால் போராளிகளை வழிநடாத்திச் சண்டைகளை வென்ற தளபதிகளை நான் கண்டிருக்கின்றேன்.

ஒரு தாக்குதலுக்கு முன், சண்டைக்கான தயார்ப்படுத்தல்களை இரவு - பகல் பாராது ஓடியோடி உழைத்து வெற்றிகளுக்கு அத்திவாரமாகத் திகழ்ந்த தளபதிகளை நான் கண்டிருக்கின்றேன்.

ஆனால் இந்த வீரதீர பண்புகள் அனைத்தையும் ஒருங்கே கொண்டிருந்த புலிவீரர்களில் ஒருவரை நான் கண்டிருக்கின்றேன். அது பால்ராஜ் அவர்கள் தான்.

கெரில்லா வீரனாக போராட்டத்தில் இணைந்து, சண்டைகளின் வளர்ச்சிக்கேற்ப தன்னையும் வளர்த்து, சிங்களப் படை முகாம்கள் மீது பெருந்தாக்குதல்களைத் தலைமையேற்று நடாத்தி மரபுப்போர்களையும் வெற்றிகரமாக நடாத்தி வீர நாயகனாக பிரிகேடியர் பால்ராஜ் வலம் வந்திருந்தார்.

சண்டைகளுக்கு பால்ராஜ் அவர்கள் தலைமை தாங்குகின்றார் என்றால், களத்தில் நின்று போராளிகளுடன் ஒரு போராளியாகச் சண்டையிட்டபடி தலைமை கொடுப்பது அவரின் தனித்துவமான பாணி. களத்தில் அவர் நிற்கின்றார் என்றால் அங்கே இருக்கும் போராளிகள் அனைவருக்கும் இறக்கை முளைத்தது போல் உற்சாகத்தின் உச்சியில் நிற்பார்கள்.

தமிழீழப் போரரங்கில் காட்சி மாற்றங்களை தமிழினத்திற்குச் சார்பாக ஏற்படுத்திய களங்களின் அதிபதியாக பால்ராஜ் இருந்தார் என்பது வரலாற்று உண்மை.

எமது இயக்கம் நடாத்திய பாரிய படைத்தள அழிப்பான மாங்குளம் படை முகாம் தகர்ப்பில் இருந்து - ஆனையிறவுப் படைத்தளத்தின் அழிவுக்கு வித்திட்ட இத்தாவில் பெட்டிச் சண்டை வரை பிரிகேடியர் பால்ராஜின் வீரச் செயற்பாடுகள் ஒரு வீரவரலாறாக விரிந்து செல்லும்.

தலைவரின் போரியல் திட்டங்களை போரியல் சிந்தனைகளை அச்சொட்டாக களத்தில் நடைமுறைப்படுத்திக்காட்டி ஒரு முன்னுதாரண வீரனாக - முன்னுதாரணத் தளபதியாக சாதித்துக் காட்டியவர்.

வெற்றியைத் தவிர வேறெதற்கும் இடமில்லாத சண்டைக் களங்களை வழி நடாத்த ஒரு தளபதியைத் தேர்ந்தெடுக்க வேண்டிய சூழல் எழுந்தால் தலைவரின் தேர்வாக எப்போதும் பால்ராஜ் அவர்கள் இருப்பார். தலைவர் சொன்னதை பால்ராஜ் செய்து காட்டுவார்.

பால்ராஜ் அவர்களையும் அவரின் வீரத்தையும் நான் முதன் முதலில் அறிந்து கொண்டது 1986 இல். அப்போது கிளிநொச்சியில் இருந்த படைமுகாமை நாம் முற்றுகைக்குள் வைத்திருந்த காலம். ஒருநாள் திருநகர் பக்கமாக சிங்களப்படை ஒரு நகர்வைச் செய்து எமது முற்றுகையை உடைக்க முயற்சி எடுத்தது.

முற்றுகையை காவல் காத்த எங்களால் எதிரியின் நகர்வைத் தடுக்கமுடியாமல் போக - பசீலன் அண்ணையின் தலைமையிலான முல்லைத்தீவுப் படையணி உதவிக்கு வந்தது.

நகர்ந்த படையினர் மீது பசீலன் அண்ணை தலைமையிலான அணி வேகமான முறியடிப்புத் தாக்குதலை நிகழ்த்தியது. ஒரு கவச வாகனம் சிதைக்கப்பட்டு சில படையினர் கொல்லப்பட சிங்களப் படை மீண்டும் முகாம்களுக்குள்ளே தஞ்சம் புகுந்தது.

சண்டை முடிந்ததும் பால்ராஜ் என்ற பெயர் எல்லோர் வாய்களிலும் உச்சரிக்கப்பட்டது. அவரது முகம் தெரியாத நிலையிலும் அவரது பெயர் எனது மனதில் பதிந்து விட்டது. அந்தச்சண்டை வெற்றிக்கு பசீலண்ணையுடன் பால்ராஜ் அவர்களும் சேர்ந்து வெளிப்படுத்திய வீரம் தான் முக்கிய காரணமாக இருந்தது.

பசீலன் அண்ணை தான் தனக்கு சண்டை பழக்கியதாக பால்ராஜ் அவர்கள் அடிக்கடி சொல்வார். பால்ராஜ் என்ற வீரன் பசீலன் என்ற வீரனின் சண்டைத் திறனைப் புகழ்ந்து பேசும் போது இந்த வீரனும் அந்த வீராதி வீரனும் எங்களது மனங்களில் புகுந்து நிலையெடுத்துக் கொள்வார்கள்.

இந்தியப் படையினர் யாழ்ப்பாணத்தில் சண்டையைத் தொடங்கிய போது பசீலன் அண்ணை தலைமையிலான முல்லைத்தீவு மாவட்டப் படையணி யாழ்ப்பாணம் வரவழைக்கப்பட்டது. அந்த அணியில் பால்ராஜ் அவர்களும் ஒருவராகச் சென்றார்.

கோப்பாய் சண்டைக்களம் இவர்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்தது. அந்தக் களத்தில் இந்தியரின் டாங்கி ஒன்று அழிக்கப்பட்டது. இந்த டாங்கி அழிப்பிற்கு பால்ராஜ் அவர்கள் காரணமாக இருந்தார் என்று நான் கேள்விப்பட்டேன்.

இந்தக் கோப்பாய்ச் சண்டைக்களத்தின் கடுமையை இந்தியப் படையின் கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் கர்க்கிரத்சிங், தான் எழுதிய நூலிலும் சிறப்பிடம் கொடுத்துக் குறிப்பிட்டுள்ளார்.

கோப்பாய் சமரை முடித்துக்கொண்டு பசீலன் அண்ணை தலைமையிலான அணி முல்லைத்தீவு திரும்பியது. முல்லைத் தீவிலும் இந்தியப்படையுடன் ஒரு நேரடிச் சண்டை தொடங்கியது.

முல்லைத்தீவில் முகாம் அமைத்திருந்த இந்தியப்படைகள் நந்திக்கடலோர வெளிகளைத்தாண்டி தண்ணீர் ஊற்று மக்கள் குடிமனைக்குப் புக முயற்சி செய்த போது பசீலன் அண்ணை தலைமையிலான அணியினர் நடாத்திய மறிப்புச்சண்டைக் கதை விறு விறுப்பானது. அந்தச் சண்டையின் ஒரு கட்டத்தில் மேஜர் பசீலன் வீரச்சாவடைந்து விட்டார். படைத்தளபதியை இழந்த நிலையிலும் சண்டை அதே விறுவிறுப்புடன் நடந்து கொண்டிருந்தது. பசீலனின் இடத்தைப் பொறுப்பெடுத்த பால்ராஜ் அவர்கள் அந்தக்களத்தில் காட்டிய தலைமைத்துவ ஆற்றலும் சண்டைத்திறனும் ஒரு வீரத்தளபதியைத் தலைவருக்கு இனங்காட்டியிருந்தது.

மேஜர் பசீலன் வகித்த முல்லைத்தீவு மாவட்டத் தளபதி என்ற பொறுப்பை பால்ராஜ் ஏற்றார். முல்லைத்தீவு - கிளிநொச்சி - வவுனியா என்ற மூன்று மாவட்டங்களில் முல்லைத்தீவில் தான் இந்தியப் படைக்கெதிரான தாக்குதல்கள் அதிகம் நிகழ்ந்தன. அதற்கு பால்ராஜ் அவர்களின் முயற்சியும் ஆர்வமும் தான் காரணம். பால்ராஜ் அவர்களிடம் இருந்த இந்தத் தலைமைத்துவ ஆற்றல் தலைவரை வெகுவாகக் கவர்ந்தது.

தனது இடத்திற்கு அவரை அழைத்த தலைவர் அவர்கள் இந்தியப் படைக்கெதிரான தாக்குதல்களை வன்னியெங்கும் தீவிரப்படுத்த வேண்டும் என்று கட்டளையிட்டு - போரியல் ஆலோசனைகளையும் வழங்கி வன்னி மாவட்டத்தின் தளபதியாக பால்ராச்சை நியமித்தார்.

முல்லைத்தீவு - வவுனியா - கிளிநொச்சியை உள்ளடக்கிய வன்னி மாவட்டத்தில் தாக்குதல்களைத் தீவிரப்படுத்த ஒரு நடைப்பயணத்தைத் தொடங்கினார் பால்ராஜ்.

இந்தியப்படைக் காலத்தில் வாகனங்களில் போராளிகள் பயணிக்கக்கூடாது என்பது தலைவரின் கண்டிப்பான கட்டளை. தேவையற்ற வகையிலான இழப்புகளைத் தவிர்க்கவே அந்த உத்தரவு இதை பால்ராஜ் முழுமையாக நடைமுறைப்படுத்தினார்.



மணலாற்றின் மையப்பகுதியில் தலைவரைச் சந்தித்துவிட்டு முல்லைத்தீவு கிளிநொச்சி - வவுனியா என்று நடைப்பயணம் செய்து போராளிகளைச் சந்தித்து அவர்களை ஊக்கப்படுத்தி தாக்குதல் திட்டங்களையும் கொடுத்து தலைவரின் கட்டளைகளையும் நினைவூட்டி ஒரு பம்பரம் போல் அவர் சுழன்று திரிந்தார்.

அவர் நடந்து போய் வருகின்றாரா! வாகனத்தில் போய்



வருகின்றாரா! என்று எங்களுக்குள் பகிடி கதைப்பது வழமை. அந்தளவுக்குப் பயணத்தில் வேகம், வேலை முடிந்ததும் உட னடியாகவே அடுத்த பயணம், அவரின் முகத்தில் சோர்வும் தெரிவதில்லை, களைப்பும் தெரிவதில்லை.

படையினர் மீதான தாக்குதல் என்று வரும் போது வேவு பார்த்து திட்டமிட்டுத் தாக்குவது ஒரு போரியல் வழமை. போகுமிடங் களில் எதிரிப்படை எதிர்ப்படும் போது உடனடியாகவே திட்டம் தீட்டித் தாக்குதல்களை நடாத்துவது கடினம்.

ஆனால் இது கடினமானது தவிர்க்கப்பட வேண்டியது என்று பால்ராஜ் நினைப்பதில்லை. எதிரி தென்பட்டால் உடனடியாகத் தாக்கு என்பது அவரின் கருத்து.

வன்னி மாவட்டத்திற்கான பொறுப்பை ஏற்றுக்கொண்டு அக்க ராயன் காட்டுப்பகுதியில் தரித்திருந்த ஒரு அணியைச் சந்திக்க அவர் தன் மெய்ப்பாதுகாவலர் அணியுடன் வந்திருந்தார். கொக் காவிலுக்கும் ஐயன்கன்குளப் பகுதிக்குமிடையே இந்தியர்களின் ஒரு ரோந்து அணியை எதிர்கொள்ள வேண்டி வந்தது. அந்த எதிரி அணிமீது தாக்குவோம், என்று பால்ராஜ் அவர்கள் புறப் பட்டார்.

பால்ராஜ் அவர்களின் மெய்க்காப்பாளர் தவிர நாங்கள் நான்கு, ஐந்து போராளிகள் மட்டும் அங்கு இருந்தோம். பால்ராஜ் அவர் களின் பாதுகாப்பை முன்னிட்டு அவரின் மெய்க்காப்பாளர் அணியை சண்டைக்கு எடுக்க நான் விரும்பவில்லை, சண் டையைத் தவிர்த்து எமது பயணத்தைத் தொடர்வோம் என்று அவருக்கு கூறினேன்.

ஆனால், அந்த ரோந்து அணி மீது தாக்குதல் நடாத்தியே தீர வேண்டும் என்று அவர் விரும்பினார். தானும் சண்டைக்கு வருவதாகக் கூறினார். ஆனால் அவரைப் பாதுகாக்க வேண்டிய கடமை எனக்கு இருந்ததால் நான் மாற்றுத் திட்டம் ஒன்றை அவருக்குக் கூறினேன்.

இரண்டு மூன்று பேருடன் பால்ராஜ் அவர்கள் பாதுகாப்பாக நிற்க மற்ற அனைவரும் ஒரு அணியாகி பதுங்கித்தாக்குதலை நடாத்துவது என்ற முடிவெடுக்க பால்ராஜ் அவர்களும் சம்மதித் தார்.

வெற்றிகரமாகப் பதுங்கித் தாக்குதலை நடாத்தி 15 படை யினரைக் கொன்று ஆயுதங்களையும் கைப்பற்றினோம். எங் களில் ஒருவர் வீரச்சாவு. நானும் காயப்பட்டு விட்டேன்.

அப்போது கொக்காவில் பகுதியில் இருந்து இந்திய அணி யொன்று தனது அணிக்கு உதவவென விரைவாக மக்கள் மூலம் தகவல் கிடைக்க அந்த உதவிப் படையைத் தான் பார்த் துக் கொள்வதாகவும் எமது அலுவல்களை விரைவாக முடிக்கும் படியும் பால்ராஜ் அவர்கள் தொலைத்தொடர்புக் கருவி மூலம் எமக்கு அறிவித்தார்.

பதுங்கித்தாக்குதலில் ஈடுபடுவது சில வேளைகளில் அவருக்கு ஆபத்தாக முடிந்துவிடும் என்று கருதி நாங்கள் அவரைப் பாது காக்க, அவரோ அதைவிட அபாயகரமான வழிமறிப்புத் தாக் குதலில் அதுவும் இரண்டு மூன்று போராளிகளுடன் தானே இறங்கிவிட்டார்.

ஆனாலும், அந்த எதிரிக்கான உதவி அணி வரவில்லை. அவ் விதம் வந்திருந்தால்; அந்த எதிரி அணியை அழித்தொழித் திருப்பார். அல்லது சண்டையில் இவர் வீரச்சாவடைந்தபின் அந்த எதிரி அணி வந்திருக்கும்.

எதிரி அணிவராமல் விட்டது இந்திய அணியின் அதிஸ்டமோ எங்களது அதிஸ்டமோ தெரியவில்லை.



படை முகாம் மீதான ஒரு தாக்குதல் திட்டத்தைத் தலைவர் கொடுத்துவிட்டார் என்றால் பால்ராஜ் ஓய்வு - உறக்கம் கொள்ள மாட்டார். அதே சிந்தனையுடன் திரிவார். முற்தயாரிப்புகள் சரியாக நடைபெறுகின்றனவா என்று நேரே தேடிச்சென்று பார்ப்பார்.

வேவு நடவடிக்கைகளில் ஒரு சிறு சந்தேகம் ஏற்பட்டாலும், அந்த வேவுத் தகவலை உறுதிசெய்ய தானே ஒரு வேவு வீரனாகிக் கடமைக்குச் செல்வார். ஒரு கட்டளைத்தளபதி எதிரி முகாமின் கம்பிவேலி வரை இரவில் சென்று வேவுத் தகவல்களை உறுதிப்படுத்தும் தேவை ஏற்படும் போது பிரிகேடியர் பால்ராஜ் அதையும் செய்தார்.

ஒரு படைமுகாம் மீதான தாக்குதலுக்கு முன் நூற்றுக்கணக்கில் தயார்ப்படுத்தல் வேலைகளைச் செவ்வனே செய்து முடித்திருக்க வேண்டும். இந்த வேலைகளில் தாமதம் ஏற்பட்டால் அல்லது தவறுகள் ஏற்பட்டால் தூக்கம் மறந்து அவற்றைச் சீர்செய்ய உழைப்பார்.

முல்லைத்தள அழிப்பிற்காகத் தயார்ப்படுத்தல் கால வேளை களில் தொடர்ச்சியாக மூன்று நாட்கள் உறக்கம் துறந்து ஓடி யோடி உழைத்ததை நான் கண்டேன். நான்காம் நாள் அதி காலை அவரை நான் கண்டபோது அவரின் முகத்தில் சோர்வு தென்படவேயில்லை. நித்திரை கொண்டு எழும்பியது போல சுறுசுறுப்புடன் காணப்பட்டார். நான் இவர் மீது கொண்ட ஆச்சரியங்களில் இதுவுமொன்று.

இந்தியப்படை வெளியேறிய பின் 1990 யூன் மாதம் சிங்களப் படைகளுடன் சண்டை தொடங்கியது. முதலில் மாங்குளம் முகாம் மீது தாக்குதலை நடாத்தினோம். அந்த முகாமின் ஒரு பகுதி எம்மிடம் வீழ்ந்தது. எனினும் முழுமையாக முகாம் வர வில்லை. எமக்குப் பாதகமாக சண்டை நிலைமை இருந்ததால் தாக்குதலில் இருந்து பின்வாங்கினோம்.



அன்று இரவே அங்கிருந்த போராளிகளை கிளிநொச்சிக்கு இடம் மாற்றினார். கிளிநொச்சி படை முகாம் மீது தாக்குதலை நடாத்த முடிவெடுத்தார். அடுத்த நாளே தாக்குதல் தொடங்கியது. இங்கேயும் அதே கதைதான். மாங்குளம் கிளிநொச்சி முகாம் தகர்ப்புகள் தோல்வியில் முடிந்துவிட்டன. எனவே, கொக்காவில் முகாமை எப்படியும் தாக்கியழித்துக் கைப்பற்ற வேண்டுமென்ற வேட்கையுடன் இருந்தார்.

வன்னி மாவட்டத்தின் தளபதியாக அவர் இருந்தபோது நான் துணைத் தளபதியாக இருந்தேன். கொக்காவில் படைமுகாம் தாக்கி அழிக்கப்பட வேண்டும் அல்லது நாங்கள் இருவரும் வீரச்சாவடைய வேண்டும். இரண்டில் ஒன்று நடக்க வேண்டும் என்று ஓர்மத்துடன் கூறினார். கொக்காவில் படைமுகாமை வெற்றியும் கொண்டார்.

களத்தில் உள்ள போராளிகளுக்கு நெருக்கடிகள் ஏற்பட்டால் அல்லது தாக்குதலில் வெற்றி தாமதப்பட்டால் தளபதிகளுக்கு உரித்தான போர் மரபை உதறிவிட்டு அவர் களத்தில் இறங்கி விடுவார். அத்தகைய வேளைகளில் அவரை எவராலும் தடுத்து நிறுத்த முடியாது.

கொக்காவில் படைத்தள அழிப்பிலும் அதுதான் நடந்தது. அந்த முகாம் தாக்குதலில் தானும் சண்டை அணிகளுடன் இறங்க முடிவெடுத்தார். எப்படியோ அவரைத் தடுத்துவிட்டு நான் அதைச் செய்தேன். முதல்நாள் தாக்குதலில் முகாமின் சில பகுதிகள் மட்டுமே எம்மிடம் வீழ்ந்தன. காயமடைந்த போராளிக ளுள் நானும் ஒருவன். எனவே, இரண்டாம் நாள் தாக்குதலில் தானே இறங்கிவிட்டார்.

களத்தினுள்ளே நின்றபடி சண்டையை நடாத்தினார். சில அரண்களைத் தாக்குவதில் அவரும் பங்கேற்றார். களத் தினுள்ளே நின்றபடி கொக்காவில் படை முகாமைத் துடைத் தெறிந்தார். வரலாற்றுச் சாதனை படைத்தார்.

அவ்விதம் பின்னர் மாங்குளம் படை முகாம் கரும்புலி போர்க் கின் வீரத் தாக்குதலுடன் அழித்தொழித்தார். “வன்னி விக்கிரம” படை நடவடிக்கையின் போதும் அது நடந்தது.

ஓமந்தை முன்னரங்கப் பகுதியிலிருந்து கொக்காவில் நோக்கிய படை நகர்வாக அது இருந்தது. மரபு வழியில் படையினர் படை நகர்த்தினர். டாங்கிகள், கவச வாகனங்களுடன் சிங்களப்படை நகர்ந்தது.

பனிக்கநீராவிப்பகுதியில் எதிர்த்தாக்குதல் பால்ராஜ் அவர்கள் தலைமையில் நிகழ்ந்தது. சண்டை கடுமையாக நடந்தது. எமது போராளிகள் எதிர்கொண்ட பாரிய மரபுச்சமர் அது. எதிரியின் சூட்டுவலுவைக் கண்டு போராளிகள் திகைப்படைந்தனர். அப் போது பால்ராஜ் களத்தில் இறங்கினார். சண்டையிட்டபடி கட் டளைகளை வழங்கினார். அது போராளிகளை உற்சாகம் பெற வைத்தது. எதிர்த் தாக்குதலை ஓர்மத்துடன் தொடுத்தனர். வன்னிவிக்ரம படையை ஓமந்தைக்குள் விரட்டியடித்தனர்.

“யாழ்தேவி” சமரிலும் அதுவே நடந்தது.

ஆனையிறவிலிருந்து கிளாலி நோக்கி நீரேரிப் பக்கமாக ஒரு படை நகர்வைச் சிங்களப்படை செய்தது. அதை முறியடிக்கும்படி பால்ராச்சிற்கு தலைவர் ஆணையிட்டார். வன்னி மாவட்டப் படையணி அங்கே விரைந்தது.

சண்டைத் திட்டத்தை பால்ராஜ் விளக்கினார். நகரும் படை யணியை ஒரு வெட்டவெளியில் வைத்துத் தாக்குவது பிரதான திட்டம். துணிகரமானதும் ஆபத்துக்கள் நிறைந்ததுமான அந்த பிரதான தாக்குதல் அணிக்கு நான் தலைமையேற்றேன். நாங்கள் தாக்குதலைத் தொடங்கியதும் இருபுறத்தின் பக்கவாட் டாலும் இரண்டு தாக்குதல் அணிகளை இறக்கத் தயாரிப்புகள் செய்திருந்தார்.

இரவு 2.00 மணிக்கு அந்த இடத்திற்கு விரைந்த எமது அணி யினர் அதிகாலை 5.00 மணிக்கு முன்பாக குழிகள் வெட்டி உருமறைப்புச் செய்தபடி அந்த வெட்டவெளியில் அணி வகுத்தனர்.

அணிகள் சரியாக நிலையெடுத்துள்ளனவா! என்று பரிசோதிக்க பால்ராஜ் வந்தார். எனது நிலைக்கு வந்தவர் என்னிடம் சொன் னார், “தீபன் நீ இதை கவனமாகப்பார். நான் அடுத்த முனையில் எனது கட்டளைப்பீடத்தை நிறுவுறன்” என்று ஒப்பீட்டளவில் காப் பான ஒரு இடத்தைச் சுட்டிக்காட்டினார். ஆனால் சண்டை தொடங்கினால் அவர் அதில் நின்று கட்டளையிடமாட்டார். களத்தில் இறங்கியே கட்டளையிடுவார் என்று எனக்குத் தெரி யும்.

அவரைக் களத்தினுள் இறங்க விடாது தடுக்கும்படி பால்ராஜ் அவர்களின் மெய்க்காப்பாளரிடம் கூறினேன். அது அவர்களால் முடியாது என்று தெரிந்தும் கூறினேன்.

காலை 7.30 க்கு சண்டை தொடங்கியது. ஒரு டாங்கிப் படை யுடன் எதிரி நகர்ந்ததால் சண்டை கடுமையாக நடந்தது. வெட்டவெளிகளில் உருமறைப்புச் செய்யப்பட்டிருந்த குழிகளில் இருந்து போராளிகள் திடீரென முளைத்தெழுந்து - தாக்கிய போது படையினர் மிரண்டுவிட்டனர். டாங்கிகளை அழித்தபடி நாங்கள் சண்டையில் ஆதிக்கம் செலுத்தினோம்.

அப்போது வந்த செய்தி ஒன்று என்னை முதலில் அதிர்ச்சிக் குள்ளாக்கியது. பின்னர் கோபத்திற்குள்ளாக்கியது. பால்ராஜ் காயப்பட்டுவிட்டார், என்பதே அந்தச் செய்தி.

கட்டளைப்பீடத்திற்குள் இருந்த பால்ராஜ் சண்டை தீவிரம் பெற் றதும் களத்தினுள் இறங்கி - போராளிகளை உற்சாகப்படுத் தியபடி கட்டளைகளை வழங்கியிருக்கிறார். அதில் காயப் பட்டார். பல்வேறு களங்களில் அவர் அடைந்த விழுப்புண்களில் இது பெரியது. அவரை ஆறு மாதங்கள் வைத்தியசாலையில் முடக்கியது.

களத்தினுள் நின்றபடி சண்டைகளை வழிநடத்துவது பால்ராஜ் அவர்களின் தனித்துவமான இயல்பு. அது ஆபத்தானது என்று அந்தப் பெருந்தளபதிக்கு நன்கு தெரியும். வெற்றிக்காக அதை விரும்பிச் செய்தார். இவ்விதம் செய்ய வேண்டாமென்று தலைவர் அவருக்கு அறிவுறுத்தியதை நான் அறிவேன்.

“சிறிய அணிகளுடன் களத்தில் நின்ற படி வெற்றிச் சண்டைகள்



பல நீ செய்து விட்டாய். இனிமேல் பெரிய அணிகளை நெறிப்படுத்திச் சண்டைகளை வழிநடத்து. தேவை ஏற்படும் போது நான் சொல்வேன். அப்போது களத்தினுள் இறங்கிச் சண்டை செய்" என்று பால்ராஜ்சிடம் பல தடவைகள் தலைவர் சொல்லியுள்ளார். அதற்கான தருணங்களும் வந்தன.

'சத்ஜெய' என்ற பெயரில் ஆனையிறவிலிருந்து கிளிநொச்சி வரை நகர்ந்து நிலம் விழுங்கிய சிங்களப் படைகள் அங்கே நிலைகொண்டிருந்தனர். ஒரு விமானக் குண்டைப் போன்ற வடிவத்தில் அந்த ஆனையிறவு - பரந்தன் - கிளிநொச்சி படைத்தளம் நீண்டு - ஒடுங்கி இருந்தது. அதைக் குறுக்கறுத்து கிளிநொச்சித் தளத்தை அழித்தொழிக்க தலைவர் ஒரு அற்புதமான போர்த்திட்டத்தை வகுத்தார்.

பரந்தனுக்கும் – கரடிப்போக்கிற்கும் இடையே ஒரு குறுக்கறுப்புத் தாக்குதலை நடாத்துவது, கிளிநொச்சித் தளத்தை அழிப்பது என்று இரண்டு தாக்குதற் திட்டங்களை தலைவர் வகுத்தார்.

குறுக்கறுப்புத் தாக்குதலை பால்ராஜிடம் கொடுத்தார். மற்றையதை என்னிடம் தந்தார்.

குறுக்கறுப்புத் தாக்குதல் முக்கியத்துவம் வாய்ந்ததும் – அபாயம் நிறைந்ததுமாகும். பால்ராஜ் அவர்களால் அதைச் செய்ய முடியும் என்பது தலைவரின் நம்பிக்கை. அதை திறமையாகச் செய்தார் பால்ராஜ்.

குறுக்கறுத்து உட்புகுந்த அணிகளுடன் பால்ராஜ் அவர்களும் சென்றார். அங்கே புகையிரதப்பாதை இருந்த இடத்திலுள்ள ஒரு மதகுக்குள் தனது கட்டளைப்பீடத்தை வைத்தார். அவரையும் அவரது அணியையும் வெளியேற்ற சிங்களப்படை பெரும் முயற்சி செய்தது. மரத்தில் அறைந்த ஆப்புப்போல அசையாது இருந்து அந்த நீண்ட தளத்தை இரண்டு துண்டுகளாகப் பிளப்பதில் வெற்றிகண்டார். பிளந்த துண்டில் ஒன்றை (கிளிநொச்சியை) நாங்கள் வெற்றிகரமாகத் துடைத்தழித்து 1200 சிங்களப் படையினரையும் கொன்று பெருந்தொகை ஆயுத தளபாடங்களையும் கைப்பற்றினோம். ஒரு வெற்றி வீரனாக பால்ராஜ் அவர்கள் வெளியில் வந்தார். அவருக்கு கைலாகு கொடுத்துப் பாராட்டினார் தலைவர்.

பால்ராஜ் அவர்களின் வீரத்திற்கு மகுடம் சூட்டியது போல் வந்தது இத்தாவில் பெட்டிச்சண்டை.

1991 இல் ஆனையிறவுத் தளத்தை அழித்தொழிக்க முற்பட்டு அறுநூறு போராளிகள் வீரச்சாவடைந்தும் அதைக் கைப்பற்ற முடியாமல் போன இயலாமைக்கு ஒரு சரியான பதிலடி கொடுக்கத் தலைவர் திடசங்கற்பம் பூண்டிருந்தார்.

ஆனையிறவுத் தளத்தின் பூகோள அமைவிடம் நேரடியாக முட்டி மோதி வெல்லத்தடையாக இருந்தது. ஒல்லாந்தரும் ஆங்கிலேயரும் கண்டறிந்து பயன்படுத்திய அந்தத் தற்காப்பிடத்தை சிங்களப்படைகளும் உபயோகித்துக் கொண்டன.

ஆனையிறவுப் பெருந்தளத்தை நேரடியாகத் தாக்காமலே அதைக் கைப்பற்ற தலைவர் திட்டம் போட்டார். அது எவருமே கற்பனை செய்து பார்க்காத துணிச்சலான திட்டம். அபாயமும் – வெற்றியும் ஒருங்கு சேர்ந்திருந்த ஆளுமையான திட்டம். புலிகளா! சிங்களப்படைகளா! யார் வீரர்கள் என்பதை உறுதிசெய்வது போலிருந்த சவால்த் திட்டம்.

5 கிலோமீற்றர் நீளத்திற்கு படகின் மூலம் கடலால் போய் குடாரப்பில் தரையிறங்கி – அங்கே இரு புறமுள்ள படைமுகாம் பகுதிகளுக்கு இடையேயிருந்த சதுப்புநிலப் பகுதிகள் ஊடாக 10 கிலோமீற்றர் தூரம் நடந்து – கடந்து இத்தாவில் பகுதியில் பெட்டி வடிவில் வீரர்களை நிறுத்திவிட்டு ஒரு கிலோமீற்றர் நீளமும் ஒரு கிலோமீற்றர் அகலமும் கொண்ட அந்தப் பெட்டியின் நடுவில் அகழிவெட்டி நின்றார் பால்ராஜ். எதிரியின் இரண்டு கண்களுக்கும் நடுவே நெற்றிப்பொட்டில் கூடாரமடித்துக் குடிபுகுவது போல அது இருந்தது.

பால்ராஜ் அவர்களையும் அவர்களுடன் இருந்த 1200 புலி வீரர்களையும், அந்தப் பெட்டிக்குள் வைத்துச் சமாதிகட்டக் இணைவதும் பிரிவதுமாக எங்கள் போராட்டப் பயணம்.

2001 மார்ச் 25 எங்கள் நட்பு எங்கே பலமாகியதோ அந்தப் படைத்தளத்தை வீழ்த்தும் சுழற்பொறியை செயற்படுத்தும் பொறுப்பை தலைவர் அவர்கள் பால்ராஜிடம் ஒப்படைக்க நாம்



கட்டைக்காடு... வெற்றிலைக்கேணி... சுண்டிக்குளம் கடற்கரை வெளிகளில் சேர்ந்து நடக்கத் தொடங்கினோம்.

போராட்டத்தின் வரலாற்று முக்கியத்துவம் மிக்க குடாரப்புத் தரையிறக்கம். கடலினூடான ஒரு பலப்பயணம். பால்ராஜ் உட்பட ஆயிரத்து இருநூறுக்கும் மேற்பட்ட போராளிகளையும் படையப் பொருட்களையும் தரையிறக்க வேண்டிய பொறுப்பு என்னிடம். போராளிகளோடு தரையிறங்கி ஆனையிறவை வீழ்த்த வேண்டிய பொறுப்பு பால்ராச்சிடம்.

ஒருவேளை ஒன்றாக அந்த வெற்றிலைக்கேணி கடற்கரை மணற்பரப்பில் அமர்ந்திருந்து கிடந்த உணவுப் பொதியைப் பிரித்து ஒன்றாக உணவருந்தி எத்தி... எத்தி மேலெழுந்த அந்த அலைகளின் மடியில் மிதந்த சண்டைப் படகில் பால்ராஜ்சையும், ஏனைய படகுகளில் போராளிகளையும் ஏற்றி வழியனுப்பிவைத்தோம். பால்ராஜ் எப்போதும் போல இப்போதும் திரும்பி வருவார் என்ற நம்பிக்கையோடு.

குடாரப்பில் தரையிறங்கிய பால்ராஜ் இத்தாவில் பகுதியில் பெரும் சமரை வழிநடத்திக் கொண்டிருந்தார். எதிரி ஏவிய பல ஆயிரக்கணக்கான அந்த எறிகணை மழைக்கு மத்தியிலும் எப்போதாவது ஒரு சிறு பொழுதில் களம் அமைதி பெறும் பொழுதில் தொலைத்தொடர்புக் கருவியினூடாக என்னுடன் தொடர்பை ஏற்படுத்திக்கொண்டு களத்திற்கு வெளியில் நிற்பவர்களுக்கு உற்சாகம் ஊட்டும் வகையில் உரையாடினார்.

முப்பத்து நான்கு நாட்களின் முடிவில் எமது நம்பிக்கைக்கு எந்தப் பழுதுமில்லாது பால்ராஜ் மீண்டும் திரும்பி வந்தார். இலங்கைத் தீவை மட்டுமல்ல உலகத்தையே விழி திறந்து பார்க்கும் படி களத்தில் சாதித்துவிட்டு.

மீண்டும் சந்தித்தோம் பிரிந்தோம் மீண்டும் சந்திப்போம் என்ற நம்பிக்கையில்...

தன்னுடைய வாழ்நாளின் பெரும்பகுதியைக் களத்தில் கழித்த தளபதி பால்ராஜ் மக்களின் மீது பரிவு கொண்டவராகவும், அவர்கள் எதிர்கொள்ளும் அன்றாட நெருக்கடிகள் உடனடியாகவே களையப்பட வேண்டுமென்பதில் அதிக விருப்புக் கொண்டவராகவும் காணப்பட்டார்.

முன்பொரு முறை அளம்பில் பகுதி மக்களுக்கும் செம்மலை பகுதி மக்களுக்குமிடையே சிறிய அளவில் ஊர்ப்பிணக்கு ஒன்று ஏற்பட்டுவிட அதனைக் களைவதற்காகத் தன்னுடைய கடமைகளை ஒருபுறம் ஒதுக்கிவைத்து விட்டு தன்னுடைய ஒரு முழுநாள் பொழுதையும் அந்த மக்களுக்காக செலவிட்டு அந்தப் பிணக்கைத் தீர்த்து வைப்பதில் முன்னின்றதை என்றும் மறக்க மாட்டார்கள்.

அந்தளவுக்கு மக்களின் மீது ஆழமான அன்பை தளபதி பால்ராஜ் செலுத்தினார்.

உண்மையில் தளபதி பால்ராஜ் தன்னுடைய இலட்சியத்தில் எவ்வளவு தெளிவு கொண்டிருந்தாரோ அப்படித் தான் மக்களையும் நேசித்தார். அத்தோடு எங்கள் மக்கள் மீதான படை நடவடிக்கைகளை வழிநடத்திய எதிரிப் படைத்தள பகுதிகளையும் அவர்களின் பலம் பலவீனம் என்பவற்றையும் அறிந்து அதற்கேற்ற வகையில் படை நடத்தும் சிறப்பாற்றலை அவர் கொண்டிருந்தார்.

எதிரிகளைப் பற்றி அறிந்து கொள்வதற்காகவும் அவர்கள் குறித்த அறிவைப் பெருக்கிக்கொள்வதற்காகவும் அதிகளவான நேரத்தை அவர் செலவிடுவார். இவரின் இந்த இயல்பு பல தளங்களில் அவர் சிறப்பாக செயற்பட உதவியது.

பின்னர் கடமைகளின் நிமித்தம் வேறு வேறு களங்களில் நாங்கள் இயங்கிக் கொண்டிருந்தோம். அதனால் பால்ராஜை அடிக்கடி சந்திக்க முடியவில்லை. சுகவீனமுற்றிருந்த பால்ராஜ் அப்போதும் எப்போதும் போல இயங்கிக் கொண்டிருந்தார். சந்திப்போம் என்ற நம்பிக்கை இருந்ததால் எங்களுக்கிடையேயான அந்த பிரிவு எனக்கு பெரிதாகத் தெரியவில்லை.

22-05-2008 பால்ராஜ் சாவடைந்துவிட்டார். என்ற செய்தி எங்கும் பரவியது.

பல களங்களில் ஒன்றாக நடந்த அந்தப் பெருவீரன் பிரிந்து விட்டான். என்பதை நம்ப முடியாமலிருந்தது நாம் பலமுறை பிரிந்தோம். ஆனால் மீண்டும்... மீண்டும் சந்தித்திருந்தோம்.

ஆனால், 22-05-2008 இல் ஏற்பட்ட பால்ராஜுடனான பிரிவு மீண்டும் எப்போதுமே நாம் சந்திக்கப்போகாத பிரிவு. அதனால் தான் என்னவோ சொல்லாமலே பிரிந்துவிட்டார் பால்ராஜ்.

-பிரிகேடியர் தீபன்-

























# முள்ளிவாய்க்காலை முழுமையாக அனுபவித்த மனித நேய போராளியின் சாட்சியம்...!

2009 ம் ஆண்டு காலப்பகுதியில் திட்டமிடப்பட்ட தமிழினப் படுகொலையே முள்ளிவாய்க்காலில் அரங்கேறியுள்ளது. இறுதிக் கட்ட யுத்தத்தில் முள்ளிவாய்க்காலில் உயிரிழந்த பல ஆயிரக் கணக்கானமக்கள் ஈழ நிலத்தில் விதைக்கப்பட்டவர்கள்.

எமது உரிமைக்காக எமது வாழ்வியலுக்காக சுயநிர்ணய உரிமைப் போரை ஈழத்தில் தமிழர்கள் நடத்தினார்கள். அதனால்தான் எமது உரிமைப் போராட்டத்தில் நாம் நிம்மதியாக வாழவேண்டும் என்ற ஒரு சிந்தனையை மட்டும் மனதில் சுமந்தவர்களாய் எதையும் எதிர்பார்க்காத மனிதர்களாய் பல ஆயிரக்கணக்கான மக்கள் ஈழ மண்ணில் துடிதுடித்து வீழ்ந்தார்கள்.

அந்த மகத்தான மனிதர்களின் உயிர் உறையும் கதைகள் ஏராளம் ஏராளம்.

இன்று எத்தனையோ பேர் எங்கள் தேசத்தின் இருட்டு மூலைகளுக்குள் முடமாகிப் போயிருக்கின்றார்கள். அடிமைகளாக வாழமாட்டோம் என்றுரைத்தவர்கள் வீதியோரங்களிலும் பற்றைகளிற்குள்ளும் புதையுண்டு போனார்கள். எங்கள் புறநானூற்றுச் சான்றுகள் இடித்து வீசப்பட்டன.

முள்ளிவாய்க்கால் கொடூர நிகழ்வின் போது அதில் சிக்கி தப்பித்து வாழும் எனது உண்மைக் கதை இது.



ஈழத்தில் இடம்பெற்ற யுத்தத்தின் இறுதிக்கட்டத்தில் அறிவிக்கப்பட்டிருந்த போர்த் தவிர்ப்பு வலயப்பகுதியில் நான் ஒரு மனிதநேயப் பணியாளர் ஆவேன்.

உண்மையில் சிறீலங்கா அரசினால் அறிவிக்கப்பட்டிருந்த போர்த்தவிர்ப்பு வலயங்களிலேயே அரச படையினரின் அதிகளவிலான எறிகணை வீச்சுக்களும் விமானத்தாக்குதல்களும் இடம்பெற்றன. பாரிய மனிதப் பேரவலம் அரங்கேறியதும் இங்குதான்.

சிறீலங்கா அரசினால் முதலில் அறிவிக்கப்பட்டிருந்த போர்த் தவிர்ப்பு வலயமாக உடையார்கட்டு, சுதந்திரபுரம், வள்ளிபுனம், தேவிபுரம், ஆகிய பிரதேசங்கள் அடங்குகின்றன. இந்தப் பிரதேசங்களில் படையினர் அகோரமான எறிகணை வீச்சுக்களை மேற்கொண்டனர்.

இதில் சுதந்திரபுரம் விளையாட்டு மைதானத்தில் அரசசார்பற்ற நிறுவனத்தினர் வழங்கிக் கொண்டிருந்த உணவுப்பொருட்களைப் பெற்றுக்கொள்வதற்காக கூடி நின்ற பல நூற்றுக்கணக்கான மக்களை இலக்குவைத்து படையினர் மேற்கொண்ட எறிகணை வீச்சில் பல பொதுமக்கள் அவ்விடத்திலேயே கோரமாகப் பலியாகியது இங்கு குறிப்பிடத்தக்கது.

அதேபோல இரண்டாவது தடவையாக அரசு அறிவித்த போர்த் தவிர்ப்பு வலயமான மாத்தளன், பொக்கணை, வலைஞர்மடம், முள்ளிவாய்க்கால் பிரதேசத்திலேயே உலகத்தின் மனச்சாட்சியை உலுக்கக்கூடிய தமிழினப் படுகொலையை அரச படையினர் மேற்கொண்டனர்.

**மருத்துவமனைகள் மீது தாக்குதல்கள்**



அரச படையினர் கிளிநொச்சி வைத்தியசாலை மீது தாக்குதல் மேற்கொண்டிருந்த வேளையில் அங்கே நான் பணியாற்றி வந்தேன். மருத்துவமனைகளைக் குறிவைத்து தாக்குதல் நடாத்துவது சர்வதேச போர் விதிமுறைகளுக்கு எதிரான செயல் என்றபோதிலும் மருத்துவமனைகளை இலக்கு வைத்து தாக்குதல் நடத்துவதை சிறீலங்கா சிங்கள இராணுவம் ஒரு போர் உத்தியாகவே கையாண்டது.

வன்னியில் யுத்தம் இடம்பெற்ற காலப்பகுதியில் மக்கள் வேறிடங்களுக்கு இடம்பெயர்ந்து சென்ற போதெல்லாம் சிறீலங்கா சிங்கள இராணுவத்தினர் முதலில் வைத்தியசாலைகளைக் குறிவைத்தே தாக்குதல் நடத்தினர்.

புதுக்குடியிருப்பு, இரணைப்பாலை, ஆனந்தபுரம், மந்துவில், புதுமாத்தளன், இடைக்காடு, அம்பலவன் பொக்கணை, வலைஞர்மடம், இரட்டைவாய்க்கால், முள்ளிவாய்க்கால் கிழக்கு, முள்ளிவாய்க்கால் மேற்கு உட்பட்ட பகுதிகளில் பல்லாயிரக்கணக்கானவர்கள் காயமடைந்தனர்.

இத்தாக்குதல்களில் மருந்துப் பொருட்களும் அழிந்தன. இதனால் காயமடைந்தவர்கள் உயிருக்காக போராடிக் கொண்டிருந்தார்கள். சிறீலங்கா இராணுவத்தினரின் தாக்குதல்களினால் மருத்துவப் பணிகள் பாதிக்கப்பட்டன.

**மருத்துவமனையை நோக்கி தாக்குதல்கள் தொடர்ச்சியாக இடம்பெற்றன.**



புதுக்குடியிருப்பு இரணைப்பாலை வீதியில் அமைந்திருந்த பொன்னம்பலம் மருத்துவமனையில் கடுமையான காயங்களுக்கு உள்ளாகி நடக்க முடியாமல் கால்களுக்கு அன்ரனா மற்றும் மண்மூட்டைகள் போடப்பட்டு படுக்கையாகக் கிடந்தவர்களின் விடுதி மீது 2009-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் இரண்டாம் வார காலப்பகுதியில் கிபிர் விமானம் மேற்கொண்ட மிலேச்சத்தனமான குண்டுவீச்சுத் தாக்குதலில் விடுதி முற்றாகச் சிதைவடைந்து சுமார் எழுபதிற்கும் மேற்பட்டவர்கள் பலியாகியதும் அவர்களின் சிதைந்த உடலங்களை கட்டட இடிபாடுகளுக்கிடையில் நான்கு ஐந்து நாட்களாக பல சிரமங்களுக்கு மத்தியில் மீட்டெடுத்து அடக்கம் செய்ததுவும் இங்கு நினைவு கூரப்படுவது அவசியமானது.

இதேபோன்று 2009-ம் ஆண்டு வைகாசி மாதம் முதல் வாரத்தில் முள்ளிவாய்க்கால் மத்தியில் அமைந்திருந்த முள்ளிவாய்க்கால் கனிஷ்ட வித்தியாலயத்தில் செயற்பட்டுக் கொண்டிருந்த பிரதான மருத்துவமனையை இலக்கு வைத்து அரச படையினர் மேற்கொண்ட சரமாரியான எறிகணைத் தாக்குதலில் ஏற்கனவே காயமடைந்து உயிருக்குப் போராடிக் கொண்டிருந்தவர்கள் உள்ளிட்ட பல நூற்றுக்கணக்கானவர்கள் ஸ்தலத்திலேயே துடிதுடித்துப் பலியான துயர்நிறைந்த சம்பவங்களையும் எவரும் எளிதில் மறந்திடமுடியாது.

மருத்துவ உதவியாளர்கள் பலர் கொல்லப்பட்டும் காயமடைந்தும் இருந்ததாலும் பாதுகாப்பற்ற சூழ்நிலை அங்கு உருவாகியிருந்ததாலும் படுகாயமடைந்தவர்களுக்குச் சிகிச்சையளிப்பதில் பெரும் சிரமம் எதிர்நோக்கப்பட்டது. மருத்துவர்களும் மருத்துவப் பணியாளர்களும் தங்களது பாதுகாப்பையும் கருத்திற்கொள்ளாது அர்ப்பணிப்புடன் செயற்பட்டனர்.

மருத்துவமனையை சூழவுள்ள பகுதிகளில் உடல்கள் காணப்பட்டதால் அப்பகுதி மயான பூமியாக காட்சியளித்தது. இங்கு கடமையாற்றிய வைத்தியர்கள் இயந்திர மனிதர்கள் போலவே செயற்பட்டனர். காயமடைந்த மக்கள் ஆகக் கூடியது ஒரு சில நிமிடங்களே சத்திரசிகிச்சை அறைக்குள் அனுமதிக்கப்பட்டனர்.

இதன் பின்னர் காயமடைந்த பிற நோயாளிகளுக்கு தொடர்ந்து சத்திரசிகிச்சை வழங்கப்பட்டது. அதாவது ஒரேயொரு சத்திர சிகிச்சைக் கூடமே மிகவும் குறைந்த வசதிகளுடன் செயற்பட்டுக் கொண்டிருந்தது.

**கொத்துக்குண்டுகள்**

கொத்துக் குண்டுகள் முதலில் பரந்தன் பகுதியிலேயே வீசப்பட்டன. பல வகையான கொத்துக் குண்டுகளை சிறீலங்கா இராணுவத்தினர் பயன்படுத்தினர். கொத்துக்குண்டொன்றின் பிரதான குண்டு வானில் வெடித்துச் சிதறி பல சிறிய துண்டுகளாக உடைந்து அனைத்து திசைகளிலும் சீறிபாயும்.



இரணைப்பாலை என்ற பிரதேசத்தில் வீசப்பட்ட கொத்துக் குண்டொன்று பல வர்ண நாடாக்களைக் கொண்டிருந்தது. இதனால் இவ்வகைக் குண்டானது சிறுவர்களின் கவனத்தை அதிகம் ஈர்த்துக் கொண்டது. சிறுவர்கள் பல வர்ண நிறங்களால் கவர்ச்சிமிக்க வகையில் உருவாக்கப்பட்டிருந்த இக் கொத்துக் குண்டின் பகுதிகளை தொட்ட போது அவை வெடித்துச் சிதறிய சம்பவங்களும் உண்டு.

**பொஸ்பரஸ் குண்டு**

உடையார்கட்டு என்ற இடத்தில் தஞ்சம் புகுந்திருந்த மக்கள் மீது பொஸ்பரஸ் குண்டுகள் வீசப்பட்டன. இந்த வகைக்குண்டுகள் வீசப்பட்டதும் கறுப்பு நிறப் புகை வெளியேறும். அத்துடன் இந்தக் குண்டு எங்கு வீசப்படுகின்றதோ அங்கே உள்ள அனைத்தும் எரிந்து கருகிவிடும்.

இந்த வகைக் குண்டுவீசப்பட்டவுடன் அதன் சுவாலை ‘தறப்பாலில்’ பற்றி அதன் பகுதிகள் மக்கள் மீது விழுந்தவுடன் மக்கள் எரிகாயங்களுக்கு உள்ளாயினர். பொஸ்பரஸ் குண்டொன்று வீசப்பட்ட போது அதன் சுவாலைகள் தற்காலிக கூடாரங்கள் மீது படர்ந்து பின் அங்கிருந்த பலரின் உடலிலும் பற்றிக் கொண்டது.



இதனால் மிக மோசமான முறையில் எரிகாயங்களுக்கு உள்ளாகினார். இதனை நான் நேரில் பார்த்தேன். பொஸ்பரஸ் குண்டுத்தாக்குதலுக்கு உள்ளாகி மிக மோசமான எரிகாயங்களுக்கு உள்ளாகி பலர் இறந்தார்கள்.

மேற்குறித்த கொத்துக் குண்டுகளும் பொஸ்பரசுக் குண்டுகளும் சர்வதேச போர் விதிமுறைகளின்படி தடைசெய்யப்பட்டவையாகும். அத்துடன் யுத்தத்தில் தவிர்க்கப்பட வேண்டிய இரசாயனக் குண்டுகளும் பயன்படுத்தப்பட்டதை யுத்த வலயத்திற்குள் அகப்பட்டிருந்த மக்கள் நன்கறிவர்.

**எறிகணை, உந்துகணைத் தாக்குதல்கள்**

இரட்டைவாய்க்கால், அம்பலவன் பொக்கணை, இடைக்காடு, மாத்தளன் பகுதிகளில் எறிகணை தாங்கிகளின் கனரக துப்பாக்கிச் சூடு மற்றும் ஆர்பிஜி உந்துகணைத் தாக்குதல்கள் அகோரமாக நடத்தப்பட்டன. கடும் மழை பெய்துவந்த நிலையில் இத்தாக்குதல்கள் தொடர்ச்சியாக நடத்தப்பட்டு வந்தமையினால் மக்கள் பெரும் இன்னல்களுக்கு உள்ளாகி அவதிப்பட்டனர்.



முள்ளிவாய்க்கால், புது மாத்தளன் பகுதி இறுதி பாதுகாப்புவலயம் என சிறீலங்கா அரசினால் அறிவிக்கப்பட்டதன் பின்னர் அங்கு வந்து பதுங்கு குழி அமைத்து தங்கி நின்ற மக்கள் மீது பல் குழல் எறிகணைத் தாக்குதல் மற்றும் எரிவாயு பொஸ்பரஸ் குண்டுகளை வீசிய சிங்களம் கோர கொலை தாண்டவத்தை ஆடியது. இதில் பல நூற்றுகணக்கான மக்கள் எரிந்து அடையாளம் தெரியாத நிலையில் சாம்பலாகினர்.



கருகிய நிலையில் அடையாளம் காண முடியாத நிலையில் இனவெறி தாக்குதலினால் மரணித்த நூற்றுக்கணக்கான மக்களின் மனித உடலங்கள் முள்ளிவாய்க்காலில் அமைக்கப்பட்டிருந்த பதுங்கு குழிகளுக்குள் அடக்கம் செய்யப்பட்டன.

முல்லைத்தீவு முள்ளிவாய்க்கால் பிரதேசத்தில் அப்போது பாதுகாப்பற்ற சூழ்நிலையில் அங்கு சிக்குண்டுள்ள மக்களுக்கு எந்த மனிதாபிமான நிறுவனமும் உதவ முன்வராது தங்கள் பாதுகாப்பே முக்கியம் என்பதாக ஒதுங்கிக் கொண்டார்கள். பாவம் மக்கள், தங்களைக் காப்பாற்றிக் கொள்ள தமக்குத் தெரிந்த வழிமுறைகளைக் கைக்கொள்ள நிர்ப்பந்திக்கப்பட்டார்கள்.

**உணவு, குடிநீருக்கு நெருக்கடி**

கற்பனையும் செய்ய முடியாத அளவிலான மனிதப் பேரவலத்தைக் காண நேர்ந்தது. எந்த மனிதாபிமான தொண்டு நிறுவனமும் அங்குள்ள மக்களுக்கு உதவ முடியாத பாதகமான பாதுகாப்புச் சூழலே உருவாகி இருந்தது. குறுகிய நிலப்பரப்பில் சிக்குண்டுள்ள மக்கள் தமது கைகளாலேயே பதுங்கு குழிகளைத் தோண்டி அவற்றுக்குள் பாதுகாப்புத் தேடிக் கொண்டிருக்கின்றனர். அதனால் குடிநீருக்கும் உணவுக்கும் பெரியளவில் தட்டுப்பாடு ஏற்பட்டது.

அந்த மக்களின் உயிர்களைக் காப்பாற்றுவதற்கு சமூகப் பணியாளர்களுக்குப் போதிய பாதுகாப்பும் தடைப்படாத போக்குவரத்து வசதியும் இல்லை. இப்போதைய நிலைமையிலும் மக்களுக்கு தொண்டாற்ற முனைந்த சமூகப் பணியாளர்கள் என்ற வகையில் சாவின் விளிம்பில் இருந்தும் பல உயிர்களைக் காப்பாற்ற முடிந்தது.

யுத்தம், ஈவு இரக்கமில்லாது கோரப் பசியோடு தமிழ் உறவுகளின் உயிர்களை விழுங்கி ஏப்பம் விட்டுக் கொண்டிருந்த காலமது. பட்டினியால் எல்லோரது வயிறுகளும் ஒட்டியிருந்தன. கண்ணீரோடு பதுங்கு குழிக்குள் வேதனை ஒருபுறம், ஆனால் குழந்தைகள் பசி பசி என கதறிய அழுகைக் குரல் தான் என்னுள் பெரிதும் வலியை ஏற்படுத்தியிருந்தது.



**கஞ்சிக்கு கை ஏந்தியவர்களையும் கொன்று குவித்தது சிங்களம்**

துப்பாக்கி ரவைகள் எல்லாத் திசைகளில் இருந்தும் இடையறாது வந்து கொண்டிருந்தன. தனியே செல்லவும் பயமாக இருந்தது. மனதைத் திடப்படுத்திக் கொண்டு சிறிய குழி ஒன்றுக்குள் கையில் ஒரு கிண்ணத்தை எடுத்துக்கொண்டு வெளியே ஓடினேன். அரிசிக் கஞ்சி ஊற்றுகின்ற இடத்துக்குச் சென்று வாங்கிய கஞ்சியின் சூடு ஆறுவதற்கிடையில் ஓட்டமும் நடையுமாக கூடாரத்துக்கு திரும்பி வந்தேன்.



பல் குழல் எறிகணை வீச்சில் சிறுவர்கள் சிதையுண்டிருந்தார்கள். காப்பாற்றுவதற்காக நிறையவே போராட வேண்டியிருந்தது. கையிலிருந்த கிண்ணம் தன்பாட்டிலேயே கீழே வீழ்ந்தது. ஒருவர் தூரத்தே நிற்பதை பார்க்க முடிந்தது. காயம் பட்ட காலோடு இலையான்கள் மொய்த்துக் கொண்டிருக்க ஏக்கப் பார்வையோடு அவர் இருந்த கிடங்கின் அருகில் சென்று பார்த்த பொழுது அதுஒரு மாபெரும் மனித படுகொலைக் கிடங்காகவே காட்சியளித்தது.

ஆங்காங்கே மனிதச் சடலங்கள் குவிக்கப்பட்டு இருந்தமையினால் நாம் காலடி வைக்கும் பொழுது கால்கள் இலகுவில் மண்ணுள் புதையுண்டன. சில கிடங்குகளில் மனிதச் சடலங்கள் அரைகுறையாக எரியூட்டப்பட்டுக் காட்சியளித்தன. உக்கிரத் தாக்குதலின் போது தம்மைப் பாதுகாக்க வேண்டி மக்களால் அவசரமாகத் தோண்டப்பட்ட பாதுகாப்புக் கிடங்குகளினுள் அத்தாக்குதலில் கொல்லப்பட்ட பல நூற்றுக்கணக்கான மக்களின் சடலங்கள் அங்கேயே புதைக்கப்பட்டன.

தொடர்ந்தும் இழப்புக்களை சந்திக்க முடியாத நிலையில் மக்கள் அனைவரும் படையினரிடம் சரணடைந்தனர். வெட்டு வாய்க்கால் (வட்டுவாகல்) பாலத்தினைச் சரணடைந்த மக்கள் கடந்து சென்ற சந்தர்ப்பத்தில் மக்களிலிருந்து போராளிகளைப் பிரித்தெடுத்தனர்.

எல்.ரீ.ரீ.யில் இருந்தவர்கள் ஒருபுறம் வருமாறு கூறி, அவர்கள் ஒரு சின்ன விசாரணைக்குப் பிறகு குடும்பத்துடன் போகலாம் என்று பலமுறை அறிவித்த பின்பு, விசாரணையின் பின் மீண்டும் பழைய வாழ்வுக்குத் திரும்பலாம் என்ற நம்பிக்கையுடன் போராளிகள் பலர் படையினரிடம் சரணடைந்தனர்.

சரணடைந்தவர்களைப் படையினர் வாகனத்தில் ஏற்றும்



Annex II

P.O. Box 372
Telephones 430880 430870
My No. D/1593/SPL/8
Your No.

MINISTRY OF DEFENCE, No. 15/5, Baladaksha Mawatha, Colombo 03, Sri Lanka

Date 20.02.2000

Commander of the Army,

*Purchase of 10,000 Thermoberic Flame Throwers*

I refer to your Sinhala letter MGO/236/2000(59) dated 5.12.2000.

The course of action proposed in para 3 of your letter is approved.

S. Medawewa
Addl. Secretary

SEEN

சமயம் அங்கிருந்தவர்கள் அடக்கி வைத்திருந்த அத்தனை சோகங்களோடும் பெயர் தெரியாத சிப்பாய்களின் கால்களில் விழுந்து கதறினார்கள். அவர்களின் கண்களைக்கட்டி அழைத்து சென்ற இராணுவத்தினர், பின்னர் அவர்களின் ஆடைகளைக் களைந்து சித்திரவதைகளின் பின்னர் படுகொலை செய்தார்கள்.

மக்களில் கதறல்கள் மற்றும் கெஞ்சல்கள் இராணுவத்தினரின் மனங்களைக் கொஞ்சம் கூட அசைக்கவில்லை. மீண்டும் அடிமை வாழ்வு தொடர்ந்தது. பல இடைத்தங்கல் முகாம்கள் பல நலன்புரி நிலையங்கள் பல தடுப்பு முகாம்களும் உருவெடுத்தது. பல்லாயிரக்கணக்கானோர் தம் உறவுகளைத் காண அலைந்து திரிந்தார்கள்.

உடற்காயங்கள், உளக்காயங்கள் என்பவற்றுடன், அன்புக்குரியவர்களைக் காணவில்லை என்பது அச்சுறுத்தல்களுக்குக் கீழான அடிமை வாழ்வும் மக்களை மேலும் உறுத்தின.

தமிழர்களின் பாரம்பரிய பூமியை அபகரித்து அங்கு வாழ்ந்த பூர்விகக் குடிகளை அகதிகளாய் துரத்தி இன்று திறந்த வெளிச் சிறைக்குள் பணயக் கைதிகளாய் தமிழர்களை சிங்களம் இன்னமும் நலன்புரி நிலையங்களில் தடுத்து வைத்திருப்பதும் தமிழர்கள் சொந்த இடங்களிற்கு மீள் திரும்பி சென்று குடியேற முடியாத சூழ்நிலை உள்ளது குறிப்பிடதக்கது.

பல நிலங்கள் இராணுவத்தினதும் கடற்படையினதும் உல்லாச விடுதிகளுக்கு என அரசினாலேயே கவரப்பட்டிருப்பது உலகிற்கே இப்போது தெரிந்திருக்கிறது.

இதற்கிடையில், தமிழர்கள் தமது இழந்த உறவுகளுக்காக துக்கம் கொண்டாட முடியாது என்று இராணுவம் அறிவித்திருக்கிறது. ஆனால், தெற்கில் யுத்த வெற்றி விழா கொண்டாட்டங்களுக்கான ஏற்பாடுகள் பெரும் எடுப்பில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதேவேளை, புத்த மக்கள் அதிகம் வாழாத தமிழர் பகுதிகளில் வெசாக் தினக் கொண்டாட்டங்களை இராணுவத்தின் முழுமையான ஈடுபாட்டுடன் அரசு செய்கிறது. வெசாக் கூடுகளும் புத்தரின் வாழ்க்கைக் கதைகளைக் காட்டும் கொடிகளும் பதாகைகளுமாக இந்த ஏற்பாடுகள் பரபரக்கின்றன. கூடவே, வாள் ஏந்திய துட்டகைமுனுவின் சிங்கக்கொடிகளும் ஆதிக்கத்தின் அடையாளத்தைக் காட்டி நிற்கின்றன.

முள்ளிவாய்க்கால் பேரவலத்தின் பின்னாலாவது அனைத்து தமிழர்களும், அவர் தம் அமைப்புகளும் ஒன்றிணைந்து எமது தேசிய விடுதலைக்காக ஒன்றுபட்டு போராடுவோம். இது வரலாற்றுக் கடமை!

# பிரிகேடியர் சசிக்குமார்

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் சிங்களப் படைமுகாம் மீது தாக்குதல் நடத்துவதற்கு முன்னரும், எதிரிகளின் படைப் பலம், படைக் கட்டமைப்புக்கள் போன்றவற்றினைத் தெரிந்து தகவல் கொடுக்கவும், எதிரியின் அனைத்து நடவடிக்கைகளை யும் கண்காணித்துப் பின் போராளிகளின் நடவடிக்கை சமர் களுக்கான தகவல்களை வழங்குவதற்கும் வேவுப்பிரிவு தேசியத்தலைவரால் உருவாக்கபட்டது. அதற்காக அல்லும் பகலும் தன் உழைப்பாலும் போராளிகளின் ஈகத்திற்க்கு உயிர் கொடுத்து வரைபடைமுலம் உயிரோட்டம் கொடுத்தவர்களில் பிரிகேடியர் சசிக்குமார் மாஸ்ரரின் பங்கும் அளப்பெரியது என் றால் மிகையாகாது.





தேசியத்தலைவரின் வழிகாட்டலில் இத் தளபதியில் வளர்ப்பில் வார்த்தெடுத்த பல போராளிகள், தங்கள் ஈகத்தால் எம் தாய்மண்ணில் பல சரித்திரம் எழுதி சென்றார்கள்.

பின் தளத்தில் சென்று குறைந்த இழப்பில், பல வழிகளை தன் வரைபடம் நேர்த்தியான ஆற்றல் மூலம் வடிவமைத்து திட்ட மிட்டு தலைமையிடம் சமர்பிக்கும் நேர்த்தியான தேசத்தின் மீது கொண்ட உயிரோட்டத்தால் தேசியத்தலைவரிடம் மதிப்பும் - நம்பிக்கையும் கொண்டு விளங்கினார் பிரிகேடியர் சரிக்குமார் அவர்கள்.

போராளிகள் மத்தியில் பிரிகேடியர் "சரிக்குமார் மாஸ்ரர் " என அன்புடன் மரியாதையுடன் அழைக்கப்பட்டு வேவுத்திட் டமிடல்கள் மூலம் பல தாக்குதல் நடத்தியமையாலும் மேலும் வேவுத் திட்டமிடளாலும் பெரும் மதிப்புடன் நாளும் போராளிகள் மனதில் இடம் பிடித்தார். ஆயினும் மக்கள் மத்தியில் அறியா திருந்தும் இப்படியான் ஓர் தளபதி உள்ளார் என்றும் வெளியில் தெரியா வெளிட்சமாக நாளும் தொடர்ந்தார் தேசபணிகள் …

ஆயினும் தன் வாழ்நாளை தாய்நாட்டின் விடியலுக்காக அர் பணித்த பிரிகேடியர் சசிக்குமார் அவர்களின் வாழ்வியல் எப்படி இருக்கும் என்பதற்கு ஓர் உதாரணமாகவும் - அவர் சிறப்புத் தளபதியாக இருந்த வரைபடைத்துறையில்- அவர் வழிகாட் டலில் வேவுப்புலிகள் பிரிவின் ஈகத்தை தியாக உணர்வை அவர்கள் தாய்நாட்டிற்காக அர்பணித்த பெரும் தியாகங்கள் சொல்லில் அடங்காதவை ஆயினும் விடுதலை சுவடுகள் உங்கள் மனதை தாய்மண்ணின் நினைவுடன் ஆளட்டும் என் றுமே, பிரிகேடியர் சசிக்குமார் மாஸ்ரர் விடுதலை பயணத்தில் அவரின் கடமை எவ்வளவு முக்கியம் வாய்ந்தது என்பதையும் வேவுப்புலிகளின் ஈகத்தையும் ஓர் கனம் உணர்ந்து பாருங்கள் பின்வருமாறு விபரிக்கும் வேவுப்புலிகளின் வாழ்வியலி லிருந்து… !



தமிழீழ மண்ணில் பல சிங்களப் படைமுகாம் தாக்குதலின் தார்ப்பரியத்தை விளங்கிக்கொள்ள வேண்டுமானால், எங்களது வேவு வீரர்களைப் புரிந்து கொள்ள வேண்டும்.
அனைத்து தாக்குதல்களையும் பின்னூட்டத்தில் வேவுப்புலி வீரர்கள் பெற்றுத்தந்த வெற்றி யாவும் என்பதை யாவரும் மறந்ததில்லை ஆயினும் வெளிட்சத்திற்கு இந்த விடுதலை உரங்கள் தெரிவதில்லை என்பதே உண்மை …

எங்களது வேவு வீரர்கள் அபூர்வமான் மனிதர்கள். சாவுக்கும் அஞ்சாத அவர்களது வீரத்தை எண்ணிப்பாருங்கள். அது போற்றுதற்குரியது. பகைவனின் நெஞ்சுக்கூட்டுக்கு மேலேறி வேவு பார்த்துவிட்டு மீளும் அந்த மனத்துணிவு அபாரமானது; அது ஒரு இணைதேட முடியாத நெஞ்சுறுதி !

தாங்கள் கொண்ட இலட்சியத்தில் அவர்கள் எத்துணை பற்றுக் கொண்டவர்களாக இருக்கிறார்கள் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள். அந்த இலட்சியத்திற்காகத் தங்களது இன்னுயி ரையே துச்சமெனத் தூக்கி எறிய மனமுவந்து நிற்கும் அவர் களது தியாக உணர்வு , மேன்மை மிக்கது உன்னதமானது !

தாயகத்தின் மீதும் தாயகத்து மக்கள் மீதும் அவர்கள் கொண் டிருந்த நேசம் இருக்கிறதே… அது சாதாரணமானதல்ல. அது ஒரு அளவு கடந்த காதல் தளர்ச்சியற்ற பிணைப்பு !

எத்தனை எத்தனை மாபெரும் அந்த வீரர்களின் ஒவ்வொரு அசைவுக்குப் பின்னால் இருந்தும், எதிரியின் வலைப்புகளிற்கு மத்தியில் நின்று அவர்கள் எடுத்த ஒவ்வொரு முடிவிற்குப் பின்னால் இருந்தும், அவர்களை இயக்கிக்கொண்டிருந்த உந்துவிசை - அவர்களுடைய அந்த "மனநிலை " தான்.

எங்கள் அன்னைபூமியை ஆக்கிரமித்தி நிற்கும் சிங்களப் படை களின் மிகப் பெரியதும், மிகவும் பாதுகாப்பானதுமான பல தலைமையகப் படையரனுக்குள் வுவுப்புளி வீரர்களின் தடம் பதிந்துள்ளது.

பன்னாட்டு சக்திகளும் - சிறீலங்கா அரசும் இணைந்து எம் மக்களைக் கொன்று குவித்து இனவழிப்பை அரங்கேற்றிய இனவெறியர்களுக்கு எதிராக விடுதலை தாகத்துடன் பல போராரிகளுடன் இணைந்து களமாடி முள்ளிவாய்க்கால் மண்ணில் 2009ம் வருடம் வைகாசி 15ம் நாள் ஆயிரம் ஆயிரம் மாவீரர்களுடன் இணைந்தார்.

இன்றும் தமிழீழ தேசம் மாபெரும் தளபதியை இழந்து தகிக்கும் தகிப்பை உணர்ந்து நாளை ஆயிரம் ஆயிரம் சசிக்குமார்கள் உருவாக்கி அவரின் விட்டுசென்ற பணியை ஏற்று தமிழீழம் மலர வைப்போம்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் முதன்மைத் தளபதிகளில் ஒருவராக விளங்கிய சசிக்குமார் "சசி மாஸ்டர்" என்று அழைக்கப்படும் பிரிகேடியர் சசிக்குமார் அவர்கள். 15.05.2009 அன்று முள்ளிவாய்கால் பகுதியில் சிறீலங்காப் படையின ருடனான மோதலின்போது வீரச்சாவடைந்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு சிங்களப் படைமுகாம் மீது தாக்குதல் நடத்துவதற்கு முன்னரும், எதிரிகளின் படைப் பலம், படைக் கட்டமைப்புக்கள் போன்றவற்றினைத் தெரிந்து தகவல் கொடுக்கவும், எதிரியின் அனைத்து நடவடிக் கை களையும் கண்காணித்துப் பின் போராளிகளின் நட வடிக்கை சமர்களுக்கான தகவல்களை வழங்குவதற்கும், வேவுப்பிரிவு தேசியத்தலைவரால் உருவாக்கப்பட்டது.

அதற்காக அல்லும் பகலும் தன் உழைப்பாலும் போராளிகளின் ஈகத்திற்க்கு உயிர்கொடுத்து வரைபடை மூலம் உயிரோட்டம் கொடுத்தவர்களில் பிரிகேடியர் சசிக்குமார் மாஸ்ரரின் பங்கும் அளப்பெரியது என்றால் மிகையாகாது. தேசியத்தலைவரின் வழிகாட்டலில் இத் தளபதியில் வளர்ப்பில் வார்த்தெடுத்த பல போராளிகள், தங்கள் ஈகத்தால் எம் தாய்மண்ணில் பல சரித் திரம் எழுதி சென்றார்கள். பின் தளத்தில் சென்று குறைந்த இழப்பில், பல வழிகளை தன வரைபடம் நேர்த்தியான ஆற்றல் மூலம் வடிவமைத்து திட்டமிட்டு தலைமையிடம் சமர்பிக்கும் நேர்த்தியான தேசத்தின் மீது கொண்ட உயிரோட்டத்தால் தேசியத்தலைவரிடம் மதிப்பும் - நம்பிக்கையும் கொண்டு விளங்கினார் பிரிகேடியர் சசிக்குமார் அவர்கள்.

நன்றி: இசைவழுதி

# CANADIAN TAMIL COLLECTIVE
# கனேடியத் தமிழர் கூட்டு

CANADIAN TAMIL COLLECTIVE
கனேடியத் தமிழர் கூட்டு

May 08, 2024

## ஊடக அறிக்கை !

1. இலங்கை அரசின் இனவழிப்புப் போரில் பலியாகியுள்ள ஆயிரக்கணக்கான உயிர்களுக்கு இச்சந்தர்ப்பத்தில் நினைவு வணக்கத்தைச் செலுத்துவதோடு, கனேடியத் தமிழர் கூட்டாக எமது மக்கள் மீதி மேற்கொள்ளப்பட்ட இனவழிப்பில் பாதிக்கப் பட்டவர்களுடனும், உயிர் பிழைத்தவர்களுடனும் ஒரு கூட டாகவும், ஒற்றுமையாகவும் மிகவும் உறுதியாகவும் நாம் நிற்கிறோம்.

2. கடந்த வருடம் டிசம்பரில் கனேடியத் தமிழர் பேரவை (Canadian Tamil Congress - CTC), உலகத் தமிழர் பேரவை யுடன் (Global Tamil Forum - GTF) இணைந்து 'இமயமலைப் பிரகடனம்' என்ற பெயரில் ஆரம்பித்தபோது, கனேடியத் தமிழர் பேரவை மேற்கொண்ட ஒருதலைப்பட்சமான நடவடிக் கைகளால் நாங்கள் அனைவரும் மிகுந்த அதிர்ச்சியும் ஏமாற் றமும் அடைந்தோம்.

3. CTC எமது சமூகத்துடன் எவ்வித ஆலோசனைகளையும் நடத்தாமல், இமயமலைப் பிரகடனத்தை பௌத்த மதத் தலைவர்களுடன் இணைந்து மேற்கொண்டமை மற்றும் இலங்கை அரசாங்கத்துடனான அவர்களின் ஈடுபாடு, குறிப்பாக மஹிந்த ராஜபக்ஷவுடனான அவர்களின் சந்திப்பு என்பன, மிகவும் கவலை தரக்கூடியதாகவும், எமது மக்களின் அரசியல், சமூக விருப்புக்களைக் கருத்தில் கொள்ளாதமை என்பது எமது மக்களுக்கு மிகுந்த கரிசனையையும் உண்டு பண்ணி இருந்தது.

4. கனேடியத் தமிழர் பேரவை, கனேடியத் தமிழர்களை அர்த்த முள்ள வழியில் ஈடுபடுத்தத் தவறியதன் காரணமாகவே, இத் தகைய ஒரு தவறான நடவடிக்கை பேரவைக்கு சாத்தியமானது என்பதை ஒரு கூட்டாக நாங்கள் அடையாளம் கண்டுகொண் டோம்.

5. CTC தனது உறுப்பினர்களை ஈடுபடுத்துவதற்கும், அவர் களது சொந்த உறுப்பினர்களுக்கும் பொது சமூகத்திற்கும் பொறுப்புக் கூறுவதற்கும், அமைப்புக்குத் தேவையான கொள்கை, நடைமுறைகள் மற்றும் கட்டமைப்புகள் உள்ளன என்பதை உறுதிப்படுத்த, CTC சீர்திருத்தப்படவேண்டும் என் பதையும் நாங்கள் கண்டறிந்தோம். அவர்களின் செயல்களில் வெளிப்படைத்தன்மை இருக்கவேண்டும் என்பதை நாம் வலியுறுத்துகின்றோம்.

6. கனேடியத் தமிழர்கள் கூட்டாக ஒன்றிணைவதன் நோக்கம், CTC யினது ஜனநாயகம், பொறுப்புக்கூறல் மற்றும் வெளிப் படைத்தன்மை ஆகியவற்றை மேம்படுத்துவதற்கும், அதன் இலக்குகள், குறிக்கோள்கள் மற்றும் முன்னுரிமைகளை அமைப்பதில் சமூகத்துடன் தொடர்ந்து ஈடுபாட்டை உறுதிப்படுத் துவதற்கும், அது கட்டமைப்பு மாற்றங்களுக்கு உள்ளாகியிருப் பதை உறுதிசெய்வது மட்டுமே.

7. மேலும், இச்செயற்பாட்டில், தொடர்ச்சியாக மக்களின் கருத் துக்களை உள்வாங்கி CTC தம்மை சீர்திருத்தி, உண்மை யாகவே கனேடியத் தமிழர்களின் குரலாக மாறுவதற்கு தேவை யான நடவடிக்கைகளை எடுக்குமாறு CTC க்கு அழைப்பு விடுத் துள்ளதால், சமூகத்தின் குரல் எங்களோடு உள்ளடக்கப் படுவதை உறுதிசெய்யத் தொடர்ந்தும் நாம் கவனம் செலுத்தி வருகிறோம்.

8. இமயமலைப் பிரகடனத் திட்டத்தை தாங்கள் இலங்கையில் உள்ள அமைப்புகளிடம் ஒப்படைத்ததாக CTC பகிரங்கமாக ஒப்புக்கொண்டுள்ளதை நாங்கள் கவனத்தில் எடுத்திருக் கின்றோம். இமயமலைப் பிரகடனத்தின் தொலைநோக்கு, இலங்கை மக்களுடன் கலந்தாலோசித்து வடிவமைக்கப்படும் என்றும் CTC யின் அறிக்கை மேலும் வலியுறுத்தியுள்ளது. அவ்வாறு இலங்கையில் உள்ள தமிழ் மக்களின் பூரணமான பங்குபற்றுதலுடன் மட்டுமே எந்த ஒரு நல்லிணக்க முயற்சியும் முன்னெடுக்கப்படவேண்டும் என்பதில் நாங்கள் மிகவும் உறுதி யாக உள்ளோம்.

9. மிகச் சமீபத்தில் CTC அதன் உறுப்பினர்கள் மற்றும் கனே டிய நாடளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோருக்கு ஒட்டாவாவில் உள்ள பார்லிமென்ட் ஹில்லில் (Parliament Hill) ஒரு நினைவு வணக்க நிகழ்விற்கான அழைப்பை அனுப்பியது. அவ்வறிக் கையில், தமிழர்கள் மீது இனவழிப்பு மேற்கொள்ளப்பட்டது என் பதை ஒப்புக்கொள்ளவில்லை என்பது மட்டுமல்லாமல், மிக முக் கியமாக, இனவழிப்பாளர்களான இலங்கை அரசாங்கம் பற்றிய எந்தக் குறிப்பும் அதில் உள்ளடக்கப்படவில்லை.

10. இது போன்ற அறிக்கைகள் மற்றும் செயல்கள் ஆகியன நீதியைப் பெறுவதற்கும், இனவழிப்பாளர்களைப் பொறுப்புக் கூறவைப்பதற்கும் மேற்கொள்ளப்பட்டுவரும் முயற்சிகளை குறைமதிப்பிற்கு உட்படுத்தும் சாத்தியக்கூறுகள் உள்ளதால், இவ்விடயத்தில் மக்களின் உடனடிக் கவனம் அவசியமானது என்று நாங்கள் உணர்ந்துள்ளோம்.

11. கனேடியத் தமிழர் பேரவை வெளிப்படையாக எமது மக்கள் மீதான இனவழிப்பை முன்நிறுத்தி குறித்த நினைவு நிகழ்வை நடத்த முயலாதமை, இனவழிப்புப் போரில் உயிர் பிழைத் தவர்களுக்கும், பாதிக்கப்பட்டவர்களுக்கும் அதிக வலியை ஏற்படுத்தியதாக நாங்கள் உணர்ந்தோம்.

12. இவ்விடயத்தில் கனடாவில் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட அரசியல் பிரதிநிதிகள் மற்றும் நமது சமூகம் என்பவற்றின் ஒன்றுபட்ட குரல் என்பன, மிக முக்கியமான இவ்விவகாரத்தில் CTC சரியான பாதையை தேர்ந்தெடுக்க உதவும் என்று நாங்கள் நம்புகிறோம்.

13. வெவ்வேறு துருவங்களாக செயல்பட்டு வரும் எமது சமூக அமைப்புக்களை ஒன்றிணைத்து செயல்படுவதற்கான வழி களைக் கண்டறிய எங்கள் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் போராடி வருகின்றனர். மேலும், ஒரு கூட்டாக எங்கள் செயல்பாடுகள் எப்போதும் எங்கள் நிறுவனங்களின் போதாமையை முன் னிலைப்படுத்தும் நோக்கத்துடன் இருந்தன. எமது செயல் பாடுகள் ஒருபோதும் சமூகப் பொலிஸாராகவோ அல்லது எமது சமூக அமைப்புக்களை சேதப்படுத்தவோ கூடாது என்பதில் நாங்கள் மிகவும் உறுதியாக உள்ளோம்.

14. இந்நேரத்தில், கனேடியத் தமிழர் பேரவை நாடாளுமன் றத்தில் தமது நிகழ்வை இரத்து செய்ய தீர்மானித்துள்ளது என்ற அறிவிப்பை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்கின்றோம். எனினும், தமிழர்கள் மீதான இனவழிப்பு விவகாரத்தில் தங்களின் நிலைப்பாட்டை தெளிவாக எடுத்துரைக்கும் ஒரு அறிக்கையை யும் CTC வெளியிடும் என்றும் நாம் நம்பிக்கையுடன் காத்திருக் கின்றோம்.

15. மே 18, 2022 அன்று, கனேடிய நாடாளுமன்றம் தமிழர்கள் மீதான இனவழிப்பை அங்கீகரித்துள்ளது. மேலும், எண்ணற்ற தனிமனிதர்களின் தொடர்ச்சியான உழைப்பால் தமிழர்கள் மீதான இனவழிப்பை, கனடாவில் பல்வேறு மட்டங்களில் உள்ள ஆட்சி மன்றங்களும் அங்கீகரித்துள்ளமை குறிப்பிடத் தக்கது.

16. 70 ஆண்டுகளுக்கும் மேலாக தொடர்ச்சியான கட்டமைப்பு, கலாச்சார, அரசியல் அடக்குமுறைகளாலும், படுகொலைகள், இனக்கலவரங்கள், கொலைகள், வலிந்து காணாமல் ஆக்கப் படுதல் மற்றும் மனித உரிமை மீறல்களின் வலிமிகுந்த வரலாற்றையும் உள்ளடக்கிய, இனவழிப்பு என்பது, குறிப்பாக எமது சமூகத்திற்கு, ஒரு வாழ்வியல் அனுபவமாக உள்ளது என்றே நாங்கள் நம்புகிறோம். தமிழர்களின் மனதில் இது பற்றிய எவ்வித குழப்பமும் இல்லை.

17. எங்கள் சமூக அமைப்புக்கள் இப்பிரச்சினையின் தீவிரத்தை புரிந்துகொண்டு, பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் உயிர் பிழைத் தவர்கள் சார்பாக ஆற்றுப்படுத்தல் , நீதி மற்றும் பொறுப்புக்கூறல் ஆகியவற்றிற்காக திறம்பட செயட்பட வேண்டும் என்பதை நாங்கள் உறுதிப்படுத்த விரும்புகிறோம்.

18. இந்த நேரத்தில் CTC இன் சீர்திருத்தத்திலும் நாங்கள் தொடர்ந்து ஈடுபடுவோம். எங்களின் இந்த முயற்சிக்கான சமூ கத்தின் ஆதரவுக்கு நன்றி தெரிவிக்கவும், நாங்கள் சரியான திசையில் செல்கிறோம் என்பதை சமூகத்திற்கு நினைவூட்டவும் இவ்வேளையில் நாங்கள் விரும்புகின்றோம். ஆனால், செய்ய வேண்டிய வேலைகள் எங்களிடம் இன்னமும் நிறைய இருக் கிறன. அவ்வகையில் சமூகத்தின் தொடர்ந்த ஆதரவு எமக்கு தேவை.

19. பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் உயிர் பிழைத்தவர்களுக்கான நீதியைப் பெறுவதற்கும், எங்கள் சமூக அமைப்புகள் திறம்பட, பொறுப்புணர்வுடனும், வெளிப்படைத்தன்மையுடன் தொடர்ந்து செயல்படுவதை உறுதிசெய்வதற்கும், நாங்கள் தொடர்ந்தும் உறுதியுடன் இருக்கிறோம் என்பதை 'கனேடியத் தமிழர் கூட்டு' சார்பில் நாங்கள் உங்களுக்கு உறுதியளிக்க விரும்புகிறோம்.

மேலதிக தொடர்புகளுக்கு்

தொலைபேசி: (+1) 647-560-7013

மின்னஞ்சல்: canadiantamilcollective@gmail.com

உண்மையுள்ள,

கனேடியத் தமிழர் கூட்டு



# குருதி நனைந்த கைகளுடன் மக்களின் உயிரைக் காப்பாற்ற போராடிக்கொண்டிருந்த மருத்துவ போராளி...!



குருதி நனைந்த கைகளுடன் மக்களின் உயிரைக் காப்பாற்ற போராடிக்கொண்டிருந்த மருத்துவ போராளி செவ்வானத்தின் உயிரையும் பறித்து போட்டது! அசுரத்தனமாக போர் நிபந்தனைகளை தகர்த்து மருத்துவமனை மீது போடப்பட்ட குண்டுகள்!

பல இடப்பெயர்வுகளையும் சந்தித்து அதிக மருத்துவ உபகரணங்களையும் இழந்து வன்னிப் போரின் இறுதி நாட்களிலும் முள்ளிவாய்க்கால் பாடசாலையில் இயங்கிக்கொண்டிருந்த மருத்துவமனை அது.

அங்கு மண் போட்டால்... மண் விழாத அளவிற்கு நோயாளிகள் நிறைந்து வழிந்தனர்.

ஆனாலும், அதனைச் சமாளிக்கும் அளவிற்கு மருத்துவ துறையினரோ, வைத்தியர்களோ மற்றும் மருந்துகளோ இருக்கவில்லை! பீரங்கி வாயினில் புறா கூண்டினைக் கட்டி குடிபுகுந்து வாழ்வதைப் போலவே மருத்துவமனையின் சூழலும் இருந்தது!

மருத்துவமனையின் அமைதி காணாமல் போயிருந்தது. மக்களின் அலறல் ஒலிகள் காதைப் பிய்த்துக் கொண்டிருந்தன.! அந்தச் சோகக் குரல்கள் பீரங்கி வேட்டுக்களை விட மோசமாக மனதைத் தாக்கியது!

அதுவரை நோயாளிகளை அனுமதிக்கும் பகுதியில் தனியொருவராக நின்று வேலைகள் செய்து கொண்டிருந்த மருத்துவப் போராளி தகவல் அனுப்புகின்றார்.

அதிக மக்கள் காயமடைந்து கொண்டுவரப்பட்டுக்கொண்டே இருந்தார்கள்...!

சத்திர சிகிச்சை அறைக்கு முன்னால் மாமரத்தடியில் தறப்பாளினால் (Tent) போடப்பட்டும், சன்னங்களால் சல்லடையாக்கப்பட்டுக் கிடந்த நோயாளர்களை அனுமதிக்கும் பகுதியில் கால்களை வைக்கின்றோம் நானும் செவ்வானம் அக்காவும்... வேறு சிலரும் ...

குழந்தைகளின் கெஞ்சுதல்கள் நெஞ்சறைக் கூட்டை கீறிப் பிளக்கின்றது!, “அக்கா இஞ்ச வந்து பாருங்கோ”, “தம்பியைப் பாருங்கோ” யாரைப் பார்ப்பது? யாரை தரம்பிரித்து முன்னுரிமை கொடுப்பதென்றே அடையாளம் காணமுடியவில்லை...!

எங்கும் ஓரே ஓலம்! மருத்துவ போராளிகள் வேகமானார்கள்...

நடுத்தர வயது மதிக்கத்தக்க தாயொருவர் வயிற்றில் காயத்துடன் குடல்கள் வெளியில் கொட்டிக்கிடக்க கிடத்தப்பட்டிருந்தாள்..!

காயமடைந்த பலரையும் தாண்டி ஆங்காங்கே கிடந்த இறந்தவர்களின் உடலங்களையும் கடந்து அந்த அம்மாவின் நிலமை மோசமாக இருக்கும் என எண்ணியவாறு அருகில் செல்கின்றேன்...

இறந்தவர்களின் உடலைக்கூட அகற்ற முடியாத சூழல். குண்டுகளும் சன்னங்களும் இடைவெளியற்று தொடர்ந்து கொண்டிருந்தன

* யாரின் உயிருக்கும் உத்தரவாதம் இருக்கவில்லை.

* தமிழீழ காவால்துறையும், தமிழர் புணர் வாழ்வு கழகத்தினரும் அந்த கொடூரமான வேளையிலும் காயமடைந்த மக்களை மருத்துவ மனைவரை கொண்டுவந்து சேர்ப்பித்துக் கொண்டேயிருந்தனர்...

காயமடைந். திருந்த நடுத்தரவயதினை உடைய ஒரு அம்மா “என்ர பிள்ளை”, “பிள்ளை’ என்றே முனகிக்கொண்டிருந்தாள்.

குருதி அதிகளவு வெளியேறி உடம்பு விறைத்து வெளிறிக் கிடந்தது.

கை கால் குளிர்ந்து நடுங்கியது...!

மார்பை மறைக்க ஓர் கிழிந்த சட்டையும் உள்பாவாடையும் அணிந்திருந்தாள். கைகளில் மட்டும் ஒரு சிறிய பை வைத்து இறுகப் பற்றியிருந்தாள். அதை என்னிடம் காட்டி ஏதோ சொல்ல துடித்தாள் முடியவில்லை...

உடல் பலம் இழந்திருந்தது. எவ்வளவோ கதற முயற்சித்தும் குரல் வெளியே ஒலிக்கவேவில்லை.!

அந்த அம்மாவின் குருதியை இரத்த வங்கிக்கு பரிசோதனைக்காக அனுப்பிவிட்டு வேகமானேன். மாமரக்கிளையொன்றில் சேலைன் போத்தலைக் தொங்க விட்டு சேலைன்களை “வென்புளோன்” ஊசியுடாக வேகமாக ஏற்றி கொண்டிருக்க...

மெல்ல மெல்ல அம்மாவும் மீண்டும் உயிர்பெறத் தொடங்கினாள்...! முனகிக்கொண்டிருந்த அம்மாவிற்கு சற்று உடலில் தெம்பு வர “தங்கச்சி எனக்கு பக்கத்தில் மூத்த பிள்ளையின் உடல் சிதறிட்டு, என்ர மூன்று வயது பிள்ளையைக் காணவில்லை நான் காயப்பட்டவுடன் ஆரோ என்னை இங்கு கொண்டு வந்திட்டாங்கள்” என அம்மா பல முறை கூறினாள்.

ஆனாலும், அவளிற்கு ஆறுதல் கூற அங்கு யாரும் இருக்கவில்லை. எல்லோருமே அந்த நிலைமைதான். என்னாலும் நின்று கதைக்க முடியவில்லை உயிருக்குப் போராடும் மற்றவர்களை காப்பாற்ற வேண்டியிருந்தது..!

அனைத்து இடங்களிலும் இதே ஓலம் தான்...!

அம்மாவை சத்திர சிகிச்சைக் கூடத்திற்கு கொண்டு செல்ல முனைந்தபோது..., அம்மா வரமறுத்தாள். “என்ர பிள்ளை வந்தால்தான் நான் வருவன்” என்று அம்மா கெஞ்சினாள்.

அப்போது சூரியன் உச்சத்தை தொட்டிருக்கவேண்டும் வெப்பம் எம்மை நெருங்கவேயில்லை பல நூறு மக்களின் கண்ணீராலும், செங்குருதியாலும் மருத்துவமனை இயங்கிய இடம் நனைந்துகொண்டிருந்தது.

சிறிது நேரத்தில் “படார்” என்ற சத்தத்துடன் விழுந்த எறிகணையால் அந்த இடமே புகை மண்டலமாகியது் கண்களை மூடிக் கொண்டு விழுந்து படுக்கவும் அவகாசம் கிடைக்கவில்லை...!

இந்தச் சத்ததுடன் எம்முடன் ஒன்றாக வேலை செய்து கொண்டிருந்த மருத்துவப் போராளி செவ்வானம் அக்காவின் உயிர் அடங்கியிருக்குமென்று நாம் நினைக்கவில்லை.

செவ்வானம்... அவள் பெயரைப்போலவே மனமும் விசாலமானது எப்போதும் சிரித்த முகம்... நெடிய உருவம். சுறுள் விழுந்த முடிகள். எப்போதும் சுறுசுறுப்பான செயற்பாடுகள்... நோயாளருடன் மட்டுமன்றி எல்லோருடனும் அன்பாக பழகும் ஒரு கருனை உள்ளம் .

தமிழீழ மருத்துவப் பிரிவின் மருத்துவ தாதியாக தன் கடமையை தொடங்கியவள் ...

2001 ஆண்டின் பின்னர் மக்களுக்கான மருத்துவ பணிக்கு தெரிவு செய்யப்பட்டு முல்லைத்தீவு செம்மலையில் இயங்கிய தியாக தீபம் தீலிபன் மருத்துவமனை வைத்தியராக சென்றவள்... நீண்ட காலம் அங்கு நற் சேவை செய்து அக்கிராம மக்களின் மனங்களில் ஆழமாய் பதிவாகின்றாள்.

இறுதியாக மாஞ்சோலை மருத்துவமனை இயங்கிய பாடசாலையில் தூக்கம் துறந்து, உணவை மறந்து மக்களின் உயிர்களை காப்பாற்ற ஓடி ஓடி உழைத்தாள். ஆனால் குருதி நனைந்த கைகளுடன் ஓர் உயிரைக் காப்பாற்ற போராடிக் கொண்டிருந்த அவள் உயிரையும் பறித்து போட்டது! அசுரத்தனமாக போர் நிபந்தனைகளை தகர்த்து மருத்துவமனனமீது விழுந்த குண்டுகள்!

தொடையில் காயமடைந்து கொண்டுவரப்பட்ட ஒருவரின் குரதிப் பெருக்கை கட்டுப்படுத்தி கொண்டிருக்கையில், சரிந்துவிழுந்த செவ்வானம் அக்காவை காப்பற்ற முடியவில்லை. எத்தனையோ மக்களின் உயிர்களைக் காப்பாற்றிய அதே மருத்துவ மனை மண் செவ்வானத்தின் செங்குருதியால் சிவந்து போனது.

நினைத்துப் பார்க்க முடியாத அளவிற்கு மனம் சின்னா பின்னமாகியிருந்தது. வேதனை, கோபம் மற்றும் உணர்ச்சிகள் ததும்ப கண்களில் வழிந்த நீருடன் மீண்டும் எம் கடமையைத் தொடர்ந்த நாள்

நன்றி: மிதயா கானவி - 05.05.2020

# தமிழ்ப் பொது வேட்பாளர்: ஏன் இவ்வளவு வன்மம்?

12.05.2024

இராஜதந்திரி ஒருவர் சில ஆண்டுகளுக்கு முன்பு என்னிடம் கேட்டார் “உங்களுடைய கட்டுரைகளை உள்நாட்டில் வாசிப்பவர்களை விடவும் புலம்பெயர்ந்த தமிழர்கள்தான் அதிகமாக வாசிக்கிறார்களா” என்று.

தமிழ்ப் பொது வேட்பாளர் தொடர்பான வாதப்பிரதிவாதங்களைப் பார்க்கும் பொழுது உள்ளூரில் கட்டுரைகளை வாசிப்பவர்கள் குறைவு என்றுதான் கருத வேண்டியுள்ளது. வேட்பாளரை ஆதரிப்பவர்களும் எதிர்ப்பவர்களும் கூறும் கருத்துக்களைத் தொகுத்துப் பார்த்தால் அவர்களிற் பலர் அது தொடர்பாக இதுவரையிலும் வந்திருக்கக்கூடிய கட்டுரைகளை காணொளிகளை வாசிக்கவில்லையா? கேட்கவில்லையா? என்று யோசிக்கத் தோன்றுகிறது. ஈழத் தமிழர்கள் மத்தியில் ஒரு விடயத்தைக் குறித்த ஆழமான வாசிப்போ விளக்கமோ இன்றிக் கருத்து கூறுபவர்களின் தொகை அதிகரித்து வருகிறது. இந்த விடயத்தில் அரசியல் ஆர்வமுடைய வாக்காளர்கள் மட்டுமல்ல, பத்திரிகை ஆசிரியர்கள், புலமையாளர்கள், காணொளி ஊடகங்களில் கேள்வி கேட்பவர்கள், யுடியூப்பார்கள்…என்று அனைவரும் அடங்குவர். இவர்கள் பொது வேட்பாளர் என்ற ஒரு தெரிவை விளங்காமல் எழுதுகிறார்களா அல்லது எல்லாவற்றையும் நன்கு  விளங்கிக்கொண்டும் ஏதோ ஒரூ சூதான அரசியல் உள்நோக்கத்தோடு, யாருக்கோ தங்களுடைய விசுவாசத்தை நிரூபிப்பதற்காக எழுதுகிறார்களா?



தமிழ்ப் பொது வேட்பாளர் விடயம் தமிழ் அரசியல்வாதிகளையும் ஊடகங்களையும் மிகத் தெளிவாக வகிடு பிரித்துக் காட்டுகிறது. அரசியல்வாதிகள், ஊடகங்கள், யுடியுப்கள் போன்றவை யாருக்கு விசுவாசமாக இருக்கின்றன என்பதனை அது தெளிவாகக் காட்டுகின்றது. தமிழ்ப்பொது வேட்பாளரை எதிர்க்கின்ற பலரும் எங்கேயோ ஒரு விசுவாசப் புள்ளியில் சந்திக்கிறார்கள். அவர்கள் வெளித்தோற்றத்துக்கு ஆளுக்காள் தொடர்பற்ற உதிரிகளாகத் தோன்றலாம். ஆனால் அவர்களில் பலர் ஏதோ ஒரு தரப்புக்கு விசுவாசமானவர்கள் என்பது மட்டும் தெளிவாகத் தெரிகிறது. இதில் அரசியல்வாதிகள், ஊடகவியலாளர்கள், மருத்துவர்கள், பொறியியலாளர்கள் உள்ளிட்ட பலரும் அடங்குவர். பொது வேட்பாளரை எதிர்க்கும் பொழுது அவர்கள் காட்டும் வன்மம், வெறுப்பு, பயன்படுத்தும் வார்த்தைகள் போன்றன அவர்கள் எந்தளவுக்கு தமிழ்ப் பொது வேட்பாளரைக் கண்டு பதட்டமடைகிறார்கள் என்பதைக் காட்டுகின்றது.

தமிழ்ப்  பொது வேட்பாளரை முன்னுறுத்தி எழுதுபவர்கள் மிகத் தெளிவாக கூறுகிறார்கள், ஜனாதிபதித் தேர்தலை ஒரு வாய்ப்பாக பயன்படுத்தி தமிழ் மக்கள் மத்தியில் ஒரு மறைமுக வாக்கெடுப்பை நடத்துவது, அதில் தமிழ் மக்களை ஆகக்கூடிய பட்சம் ஒரு பொது நிலைப்பாட்டுக்குள் கொண்டு வருவது, அதாவது தமிழ்த் தேசிய ஐக்கியத்தை கட்டியெழுப்புவது; தமிழ் மக்களை ஒரு தேசமாகக்  கட்டியெழுப்புவது.

கடந்த 15 ஆண்டுகளாக தமிழ் மக்கள் மத்தியில் வளர்ச்சியை விடவும் தேய்மானமே அதிகம். பெரிய கூட்டுக்கள் உடைந்து சிறிய கூட்டுக்கள் தோன்றியுள்ளன. கட்சிகள் உடைந்து கொண்டே போகின்றன. மக்கள் அமைப்புகள் தோன்றிப் பின் சோர்ந்து விடுகின்றன. தமிழ் மக்களை வடக்கு கிழக்காய் சமயமாய் சாதியாய் இன்னபிறவாய் சிதறடிக்க விரும்பும் சக்திகள் தமிழ் மக்களாலேயே தெரிந்தெடுக்கப்படுகின்றன.

2009க்கு பின்னிருந்து தமிழ் கூட்டு மனோநிலை என்பது கொந்தளிப்பானதாக காணப்படுகிறது. யாரையும் நம்ப முடியாத சந்தேகப் பிராணிகளாக தமிழ் மக்கள் மாறிவருகிறார்கள். எல்லாவற்றுக்கு பின்னாலும் சதிகளையும் சூழ்ச்சிகளையும் தேடும் ஒரு மக்கள் கூட்டமாக மாறி வருகிறார்கள். அதாவது தமிழ் மக்களைப் பிரித்துக்கையாளும்  சக்திகளுக்கு உள்ளூர் முகவர்கள் அதிகரித்து வருவதாக ஒரு கூட்டுப் பயம் ஒரு கூட்டுச் சந்தேகம் ஒரு விதத்தில் ஒரு கூட்டு நோய் அதிகரித்து வருகிறது.

இது ஒரு கூட்டுத் தோல்வி மனப்பான்மையின் விளைவு. தோல்வி மனப் பான்மையிலிருந்து தமிழ் மக்களை விடுவிப்பது என்றால் ஒருவர் மற்றவரை நம்பும் ஒருவர் மற்றவருக்குத் தோள்கொடுக்கும் கூட்டுப் பலத்தில் நம்பிக்கை  வைக்கும் ஓர் அரசியலை முன்னெடுக்க வேண்டும். அதற்கான கடந்த 15 ஆண்டுகாலப் பரிசோதனைகளில் இருந்து கற்றுக்கொண்டு, சிவில் சமூகமும் அரசியல் சமூகமும் இணைந்த ஒரு பொதுக் கட்டமைப்பை உருவாக்க வேண்டும் என்று சிந்திப்பது குற்றமா? தமிழ் மக்களை ஐக்கியப்படுத்துவது குற்றமா? தமிழ் மக்களை ஒரு தேசமாகத் திரட்டுவது குற்றமா? அப்படியென்றால் எமது பள்ளிக்கூடங்களில், பாலர் வகுப்பில் “ஒற்றுமையே பலம்” “ஒன்று திரண்டால் உண்டு வாழ்வு” “அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு” என்று படித்ததெல்லாம் பொய்யா?



தமிழ்ப் பொது வேட்பாளரை ஆதரிக்கும் சிவில் சமூகங்கள் தமிழ் மக்களை ஐக்கியப்படுத்த வேண்டும் என்றுதானே கேட்கின்றன? தமிழ்மக்களை யாரிடமாவது சரணடையச் சொல்லி கேட்கின்றனவா? தமிழ்மக்களை யாருக்காவது விலை கூறி விற்க முற்படுகின்றனவா?  இல்லையே? கடந்த 15 ஆண்டுகளாக வெற்றுக் காசோலைகளாக யாரோ ஒரு தென்னிலங்கை வேட்பாளருக்கு கொடுக்கப்பட்ட வாக்குகளை, தமிழ் மக்களின் பேரபலத்தை உயர்த்தும் வாக்குகளாக மாற்றுவது தவறா? ஜனாதிபதித் தேர்தலை முன்வைத்து உருவாக்கப்படும் பொதுக் கட்டமைப்பு எதிர்காலத்தில் தமிழ் அரசியலில் நிர்ணயகரமான ஒரு கட்டமைப்பாக கூர்ப்படைய வேண்டும் என்று கூடி உழைப்பது குற்றமா?

தமிழ்ப் பொது வேட்பாளர் தோற்றால் எல்லாமே தோற்றுவிடும், அது தமிழ் மக்களைப் புதை குழிக்குள் தள்ளிவிடும்… என்றெல்லாம் எழுதுகிறார்கள். அப்படியென்றால் தமிழ் மக்கள் இப்பொழுது மட்டும் என்ன வெற்றிப் பாதையிலா சென்று கொண்டிருக்கிறார்கள் ?  இல்லையே? கடந்த 15 ஆண்டுகளாக தமிழ் மக்கள் மிகப்பெரிய திருப்பகரமான வெற்றி எதையுமே பெற்றிருக்கவில்லை. இந்த லட்சணத்தில் தமிழ் மக்கள் இனிமேல் தான் தோற்க வேண்டும் என்று இல்லை. கடந்த 15 ஆண்டு கால தமிழ் அரசியல் எனப்படுவது வெற்றியின் அரசியல் அல்ல. சிறிய தேர்தல் வெற்றிகள், சில குறிப்பிட்டுச் செல்லக்கூடிய மக்கள் எழுச்சிகள் என்பவற்றிற்கும் அப்பால் தொடர்ச்சியான வெற்றிகள் அல்ல. அதாவது தமிழ் அரசியலை ஒரு புதிய கட்டத்திற்கு திருப்பக்கூடிய வெற்றிகள் அல்ல. எனவே தோல்வியைக் காட்டி பயமுறுத்தும் அரசியல் வாதிகள் தாங்கள் ஏற்கனவே தோற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்பதனை மறைக்கிறார்களா ?

கடந்த 15 ஆண்டுகாலம் தமிழ் மக்களுக்கு திருப்பகரமான வெற்றி எதையும் பெற்றுத்தரவில்லை. எனினும் காலம் ஒரு அரிதட்டு. அது பலரைத் தோலுரித்துக் காட்டிவிட்டது. பலரை அந்த அரிதட்டு சலித்துக் கழித்து விட்டிருக்கிறது. இப்பொழுது பொது வேட்பாளர் என்ற விடயமும் பலர் எங்கே நிற்கிறார்கள்? யாருக்கு விசுவாசமாக நிற்கிறார்கள்? யாரை சந்தோஷப்படுத்த எழுதுகிறார்கள்? போன்ற எல்லாவற்றையுமே தெளிவாக வெளியே கொண்டு வந்திருக்கிறது.

பொது வேட்பாளர் தோற்கக்கூடாது. உண்மைதான். தோற்கக் கூடாது. அவ்வாறு தோற்கக் கூடாது என்று சொன்னால் அதற்காக தமிழ் மக்கள் கூட்டாக உழைக்க வேண்டும். அதற்குத்தான் ஒரு பொதுக் கட்டமைப்பு உருவாக்கப்படுகின்றது. அரசியல் சமூகமும் சிவில் சமூகமும் இணைந்த ஒரு கட்டமைப்பை உருவாக்கும் பொழுது, இரண்டு தரப்பும் ஒன்றை மற்றொன்று பலப்படுத்தி அந்த முயற்சியை முன்னெடுக்கலாம், அதேசமயம் தேர்தல் அரசியல் எனப்படுவது வெற்றியும் தோல்வியும் கலந்ததுதான்.

கடந்த 15 ஆண்டுகால தோல்விகரமான அரசியல் பாதையில் இருந்து தமிழ் அரசியலை திருப்பகரமான விதத்தில் தடம் மாற்ற ஒரு பரிசோதனை முன்னெடுக்கப்படுகின்றது. அதில் தோற்கலாம் வெல்லலாம். ஆனால் அது பரிசோதனை. இப்போதிருக்கும் தோல்விகரமான பாதையில் இருந்து தமிழரசியலை திசை மாற்ற முயற்சிக்கும் ஒரு பரிசோதனை. எனவே தோல்வியைக் குறித்து அச்சப்படுவோர் அல்லது தோல்வியை காட்டிப்  பயமுறுத்துவோர், தாங்கள் ரகசியமாக “டீல்” செய்ய முயற்சிக்கும் அரசியல்வாதியின் தோல்வியை குறித்து கவலைப்படுகிறார்களா? அல்லது தமிழ் மக்களின் தோல்வியை குறித்து கவலைப்படுகிறார்களா?

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் வேட்பாளர் வெல்லப் போவதில்லை. அவர் ஜனாதிபதியாக வரப்போவதும் இல்லை. ஆனால் அவர் தென்னிலங்கை வேட்பாளர்களின் வெற்றிகளைக் கேள்விக்கு உள்ளாக்குவார். அதைவிட முக்கியமாக, தமிழ்ப் பொது நிலைப்பாடு ஒன்றை நோக்கி தமிழ் மக்களை ஐக்கியப்படுத்துவார். அவர் தமிழ் தேசிய நிலைப்பாட்டை கொண்ட ஒரு வேட்பாளர்தான். இலங்கை முழுவதற்குமான தமிழ் வேட்பாளர் அல்ல.

தமிழரசியல் கடந்த 15 ஆண்டுகளாக பிமுகர் மைய அரசியலாகத்தான் இருந்து வருகிறது. அதனால்தான் யார் அந்தப் பிரமுகர், பொது வேட்பாளராக களமிறங்க போவது ? என்ற கேள்வி எழுகிறது. கட்டாயமாக அவர் ஒரு பிரமுகராக இருக்கத் தேவையில்லை. தேர்தலில் தனக்கு கிடைக்கும் பிரபல்யத்தை அடுத்தடுத்த  தேர்தல்களுக்கு முதலீடு செய்யும் ஓர் அரசியல் விலங்காக அவர் இருக்கக் கூடாது. அவரும் அவர் பயன்படுத்திய பொது சின்னமும் எதிர்கால தேர்தல்களில் பயன்படுத்தப்படக் கூடாது என்ற ஒரு உடன்படிக்கைக்கு  அவர்  கட்டுப்பட்டவராக இருக்க வேண்டும்.

பொது வேட்பாளராக ஒரு பிரமுகரைத் தேடும் அனைவரும் ஏன் மற்றொரு அன்னை பூபதியை உருவாக்குவது என்று சிந்திக்கக் கூடாது? அன்னை பூபதி உண்ணாவிரதம் இருக்கும் வரையிலும் அவரை யாரென்று அநேகருக்குத் தெரியாது. ஆனால் 30 நாட்கள் அவர் உண்ணாவிரதம் இருந்து உயிர் துறந்ததன் மூலம் நவீன தமிழ் வரலாற்றில் அழிக்கப்பட முடியாத இடத்தைப் பெற்றார். அவ்வாறு ஜனாதிபதித் தேர்தலில் ஒரு பொதுத் தமிழ் நிலைப்பாட்டைக் கொண்டவர்கள் எல்லாருமாகச் சேர்ந்து மற்றொரு அன்னை பூபதியைக் கட்டியெழுப்ப முடியாதா? அவர் சாகும் வரை உண்ணாவிரதம் இருக்கப் போவதில்லை. யாரும் உயிர் துறக்கத் தேவையில்லை. உயிரைக் கொடுத்தது போதும். தமிழ் மக்களை ஒரு தேசமாகத் திரட்ட ஒரு வேட்பாளர் வேண்டும்,



தமிழ் அரசியலை கட்சிகளும் சிவில் அமைப்புகளும் இணைந்த ஒரு பொதுகட்டமைப்பானது எதிர்காலத்தில் கூர்ப்படையத் தேவையான ஒரு பொதுத்தளத்தை அவர் பலப்படுத்துவார். அதற்கு ஜனாதிபதித் தேர்தல் ஒரு களமாகப் பயன்படுத்தப் படுகின்றது என்பதுதான் இங்கு முக்கியம். தமிழ்ப் பொது வேட்பாளர் தமிழ்த் தேசிய ஐக்கியத்தைப் பலப்படுத்தும் ஒரு பரிசோதனை. அதில் எத்தனை முறை தோற்றாலும் அதைவிட வேறுவழி தமிழ் மக்களுக்கு உண்டா? ஏனென்றால் ஐக்கியப் படாவிட்டால் தமிழ் மக்களுக்கு அடுத்த கட்டமே இல்லை. அடுத்தகிழமை பதினைந்தாவது மே 18 வருகிறது. கடந்த 15 ஆண்டுகளாகத் தேங்கிப் போயிருக்கும் தமிழ் அரசியலை; கடந்த 15 ஆண்டுகளாகத் தேய்ந்து கொண்டு போகும் கட்சி அரசியலை; கட்சிக்காரர்களிடமிருந்தே கட்சிகளைக் காப்பாற்ற வேண்டிய ஒரு காலகட்டத்தில் வடக்காய் கிழக்காய் சாதியாய் சமயமாய் இன்னபிறவாய் சிதறிக் கொண்டே போகும் ஒரு சிறிய மக்கள் கூட்டத்தை ஒரு தேசமாகத் திரட்டுவதைவிட உன்னதமான ஒரு நினைவு கூர்தல் உண்டா?

நன்றி: நிலாந்தன்






எமக்கு ஒரு நாடு வேண்டும்
எமது மக்களுக்கு விடுதலை வேண்டும்
எமது இனம் சுதந்திரமாக வாழ வேண்டும்
என்ற ஆக்கிரோசமான இலட்சிய வேட்கையுடனே,
மாவீரர்கள் களத்தில் விழுகிறார்கள் எனவே எமது
மாவீரர்கள் ஒவ்வொருவரது சாவும் எமது நாட்டின்
விடுதலையை முரசறையும் வீர சுதந்திரப்
பிரகடனமாகவே சம்பவிக்கின்றது

*தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன்*

## தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்